குரும்பசிட்டி

# சன்மார்க்க சபை




# 30 ஆண்டு நிறைவு

K.K.V.

05

போன் : 281 தந்தி : "ஜுவெல்லர்ஸ்"

**மதிப்பிற் சிறந்த வைரங்கள்**

**அழகிற் சிறந்த ஆபரணங்கள்**

யாவற்றிற்கும்

**ஈழத்திருநாட்டில் இணையற்ற ஸ்தாபனம்**

# தங்க மாளிகை

யாழ்ப்பாணம்

---


## For Super Craftsmanship

*Visit:*

**Lovable**

**Kind**

**Service**




**JEWELLERS OF REPUTE**

# GOLD HOUSE

Jaffna

நயமான விலைக்கு வாங்குவதற்கு நம்பிக்கையான ஸ்தாபனம்

## நியூ பான்சி லெதர் வேக்ஸ்

123/1, சென். யேம்ஸ் ஸ்றீற் :: கொழும்பு 15

* இறக்குமதியாளர்.
* பொருட்களைத் தயாரிப்பவர்கள்.
* விற்பனையாளர்.

**நவீன தயாரிப்புகள், அழகுடையவை,**
**பாவனைக்கு ஏற்றவை, உறுதியானவை.**

இவ்வடையாளம் உள்ளவையைப் பார்த்து வாங்குங்கள்.

*** றவலிங் பாக் * சூட்கேஸ் * பைபர் பெட்டிகள்**




தொகையாகவும், சில்லறையாகவும், மலிவாகவும் கிடைக்கும்

# The New Fancy Leather Works

**Importers, Manufacturers & Dealers in Travel Goods.**

123/1, St. James Street COLOMBO 15

## றேடியோப் பிரச்சனை எதுவாஜலும்

எம்மைக் கலந்துகொள்ளவும்

## றேடியோ மனுயல்

23/4, ஸ்ரான்லி றேட்,

யாழ்ப்பாணம்

## திருப்திகரமான சலவைக்கு

மி
ல்
க்
வை
ற்




நீ
ல
சோ
ப்

பாவியுங்கள்

தந்தி : "மில்க்வைற்" :: போன் : **7233**

# LEYDEN PRODUCTS

- BANIANS
- SPORT SHIRTS
- TEE SHIRTS
- BABY SHIRTS
- SOCKS
  (Nylon-Plain & Design)
- SOCKS (Cotton)

*Unrivalled for Quality*
*Comfort and Style*

**Leyden Industries Ltd.,**

7, HOSPITAL ROAD,

**JAFFNA.**

# N. P. இராஜா அன் கோ.

236, காஸ்வேக் ஸ்றீற்

கொழும்பு 11

ஈழத்தின் மிகப்பெரிய எவர் சில்வர் பாத்திர
வியாபாரிகள்

* இனமல்
* செப்பு
* பித்தளை

சகலவிதமான தேவைக்குரிய பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

எங்கள் ஸ்தாபனத்தினர் நிரந்தரமான விலைகளில்
உயர்தரமான பொருட்களை என்றும் அளிப்பார்கள்.

தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

# N. P. RAJAH & CO.

**IMPORTERS AND GENERAL MERCHANTS**

DEALERS IN ALUMINIUM BRASS, COPPER,
ENAMEL MATERIALS & COTTON ROPES Etc.

236, Gasworks Street,
**COLOMBO 11**

# E. சின்னத்துரை

இல. 112 டாம் ஸ்றீற், கொழும்பு

பல மடங்கு சிறந்த விளைச்சலைப் பெறுவதற்கு

எங்களிடம்

ஏ. போர் அன் கம்பனியாரின்

பசளை இனங்கள்

மொத்தமாகவும் சில்லறையாகவும்

பெற்றுக்கொள்ளலாம்.

காய், கறி வகைகளுக்கு ஏற்ற விதைகளும்

கலவைப் பசளைகளும் உண்டு.

# E. SINNADURAI

Phone : **79487**

**No 112, Dam Street** **COLOMBO 12**

*Branch*:

## S. E. M. HAJIAR & SONS

Import & Export Agents and Dealers in Ceylon Produce.

FORAGE & FERTILISERS.

**112, Dam Street** **COLOMBO 12**

# பீட்டர்ஸ் சூப்பர் மை

ரகரகமாக 5 நிறங்களிலும் கிடைக்கும்

## ஊதா, ஊதா கறுப்பு, சிகப்பு, பச்சை, வைலட்

கழுவக்கூடிய ஒரு நிறத்திலும் **ரோயல் புளூ**

* இலங்கை விஞ்ஞானக் கைத்தொழில் ஆராய்ச்சிக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டது.
* எந்தத் தயாரிப்புப் பவுண்டன் பேனுக்களுக்கும் எவ்வித தீங்கும் விளைவிக்காதபடி A சேர்மானப்பொருள் கலந்தது.
* 100 வீதம் இலங்கையரின் ஆராய்ச்சி.
* சுத்தமாக எழுதும். (மை தடைப்படாது, கெட்டியாகக் கொட்டாது.)
* பிரகாசமாகவே இருக்கும்; மங்காது.
* 100 விகிதம் உள்ளூர்த் தயாரிப்பு.

## பீட்டர்ஸ் சூப்பர் மை

எந்த இடங்களிலும் தயாரிக்கப்படும் எந்தவித மைகளை விட மேலாக எழுதுவது.

ஏக விநியோகஸ்தர்கள்,

## எம். டி. குணசேன & கம்பெனி லிமிட்டெட்.

எல்லாப் பெரிய ஸ்டேஷனரி வியாபாரிகளிடமும் கிடைக்கும்



Telegrams : SELVARATNAMS

Telephone : **7548**

# SELVARATNAM STORES

*Prop*: **V. VAIRAMUTTU PILLAI**

★

- ★ **WHOLESALE**
- ★ **RETAIL GENERAL MERCHANTS**
- ★ **GROCERY IMPORTERS**
- ★ **AND EXPORTERS OF CEYLON TEA**

★

*Branch*:
21. St John's Road
COLOMBO - 11

*Head office*:
No. 13, Old Butcher Street,
COLOMBO - 11

STORE AT 202, SEA STREET.

**COLOMBO - 11**

# 4 important reasons why YOU should be among the millions who use

**1 YOUR gums:** Forhan's will safeguard you against the ravages of gum diseases. Bleeding gums, spongy gums, inflamed and tender gums should be *gently massaged* with Forhan's Toothpaste. Quickly they will return to a firm healthy condition. Forhan's Toothpaste is the *only* dentifrice containing Dr. R. J. Forhan's special anti-pyorrhea astringent.

**2 YOUR health:** Do you realise that gum diseases have harmful effects on the general health? That if there are pus pockets, these will open and infect the blood stream? Don't take chances—use Forhan's Toothpaste and keep your gums free of these dreaded diseases, and your health safeguarded too.

**3 YOUR breath:** Do not be shunned by your friends because you have an unpleasant breath. Forhan's Toothpaste will leave the mouth *absolutely clean*—the breath will be free of odour Remember your tongue and palate should also be clean in order to have a really clean breath. Place a small amount of Forhan's on your tongue and *gently* clean it with a toothbrush or finger; all food particles and bacteria will be quickly removed

**4 YOUR smile:** A set of sparkling white teeth that are healthy and strong is a great asset. Forhan's Toothpaste keeps your teeth sound and healthy because it contains a special ingredient to destroy bacteria and prevent tooth decay. Forhan's Toothpaste is a *smooth creamy* toothpaste that polishes the teeth as nature intended them to be, *without harming the enamel.*

**Forhan's**
**TOOTHPASTE**




The toothpaste created by a Dentist

உ

# குரும்பசிட்டி சன்மார்க்க சபை

## 30 ஆண்டு நிறைவு மலர்

(வரலாற்றுச் சுருக்கம்)

# THE KURUMPASIDDY SANMARGA SABHA

## THE STORY OF 30 YEARS.

**1965**

உ

சிவமயம்

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.

## புராணம்

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

# சமர்ப்பணம்

*மெய்ந்நெறியிலும் உலகியலிலும் பணிபுரியும் குரும்பசிட்டி–**சன்மார்க்கசபையை** உருவாக்கிய வர்களும் **நிலைபெறச்** செய்தவர்களுமாய **பெரியோரனைவருக்கும்** இம் மலரைப் பணி வுடன் சமர்ப்பிக்கின்றோம்.*

**திருவாகசபையார்**

# முகவுரை

சன்மார்க்க சபை நிருவாக சபையினர், சபையின் 30 ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் முறையினை ஆய்ந்து அச் சபையின் 30 வருட வரலாற்றினைத் தொகுத்து அமைக்கவேண்டு மென்றும், அதன் காரணமாக ஒரு வரலாற்று மலரை வெளியிடவேண்டு மென்றுந் தீர்மானித்தனர்.

நிருவாகசபைத் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு நிருவாக சபையில் உப சபை ஒன்று நியமிக்கப்படலாயிற்று. மூன்று மாத காலத்துள் அவ் வுபசபையினர் இம்மலரை ஆக்கிச் சமர்ப்பிக்கின்றனர்.

ஒரு சபையின் வரலாறு, அதன் ஆரம்பம், வளர்ச்சி, சேவை; அதன் அங்கத்தவர்கள் தனித்தும் ஒருமித்தும் ஈட்டியுள்ள செயற்கருஞ் செயல்கள்; அவற்றின் பலாபலன் என்பனவற்றின் வரலாற்றினைக் கூறுவதாகும்.

சபை, சபையின் வளர்ச்சியினாலேற்பட்ட உப சபைகள் அவற்றை ஆரம்பித்தற்குக் காரணராயிருந்தவர்களின் இலட்சிய நோக்கைப் புலப்படுத்துவனவாகும்.

யாழ்ப்பாண வாலிப மகாநாடு, அகில இந்திய தேசிய மகாசபை இவைகளைப்பற்றிய உணர்வு சிறிதளவாயினும் விரவப்பெற்ற குரும்பசிட்டியிலுள்ள ஒரு சிறு குழுவினரின் செயற்படு முறையினால் விளங் ததுவே சன்மார்க்கசபை.

**இம்மலரைத் தொகுப்பதற்கு:** சன்மார்க்க சபையின் கூட்ட அறிக்கைகள், ஆண்டறிக்கைகள், நிருவாகசபை அறிக்கைகள், ஆசிச் செய்திகள், பத்திரிகைச் செய்திகள்;

சன்மார்க்க சபையின் உறுப்பினராக வாழ்ந்து காலஞ்சென்ற தொண்டர்கள், பெரியோர்கள் என்போரின் வரலாற்றுக் குறிப்புக்கள்;

சன்மார்க்க சபையை ஆதரித்துப் போற்றிக் கிராம வளர்ச்சிக்குச் சாதனமாக அமைந்த பெரியோர்களின் கட்டுரைகள்

ஆதியன கருவிச் சாதனங்களாக அமைந்துள்ளன.

**இம் மலர்:** சன்மார்க்க சபை முப்பது வருட வரலாறு — சன்மார்க்க சபையும் குரும்பசிட்டியும் — சன்மார்க்க சபையின் சாதனைகள் — சன்மார்க்க சபைத் தொண்டர்கள்—குரும்பசிட்டிப் பெரியோர்கள் — கட்டுரைகள்

என ஐந்து பகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளது.

**இம் மலரின்கண் உள்ள:** புகைப்படங்கள் சபையின் நிருவாகிகளால் அவ்வக் காலத்திற் சேகரிக்கப்பட்டவை;

விளம்பரங்கள் ஆதரவாளர்களாற் பெற்றுக் கொடுக்கப்பட்டவைகள்.

**இம் மலர்:** பூரணமாவதற்குரிய பிற வரலாறுகள் யாதாயினும் இதில் ஈண்டு இடம் பெறுதிருப்பின் இக்குறுகிய கால எல்லைக்குள் அவ்வரலாற்று விபரங்களைப் பெற்றுக்கொள்ளாமையே காரணமாகும்.

*சன்மார்க்க சபை,*
*குரும்பசிட்டி,*
*9-7-65*

**ஏ. ரி. பொன்னுத்துரை**
**த. க. செல்லையா**
*இணைக் காரியதரிசிகள்*

# பதிப்புரை

**"கங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்**
**தென்க டம்பைத் திருக்கரக் கோவிலான்**
**தன்க டன்அடி யேனையுந் தாங்குதல்**
**என்க டன்பணி செய்து கிடப்பதே"**

என்னும் அப்பர் வாக்கைத் தாரக மந்திரமாகக் கொண்டு மெய்ந்நெறியிலும் உலகியலிலும் சென்ற முப்பது ஆண்டுகளாகத் தொண்டு செய்த சன்மார்க்க சபை, முப்பதாண்டு நிறைவுவிழாவைக் கொண்டாடும் இந்நேரத்தில், தான்வந்த பாதையை ஒரு கணந் திரும்பிப் பார்த்து உள்ளம் பூரிக்கிறது ; உவகையடைகிறது. சாதாரண கிராமமாகிய குரும்பசிட்டியில், பூமிசாஸ்திரப் படத்தில் ஒரு புள்ளியளவுதானுங் குறிப்பிடப்படாமல் இருந்த கிராமத்தில் 1934ஆம் ஆண்டு நன்மனது கொண்டவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இச்சபை, பாலாரிஷ்டம், பொருளாதார நெருக்கடி, காரணமற்ற பொறாமையாளரின் எதிர்ப்பு ஆகிய கண்டங்களுக்குத் தப்பி, தான் பிறந்த கிராமத்தை நன்கு பிரகாசிக்கச் செய்ததோடு சமயம், இலக்கியம், கலை, கிராமத்தொண்டு ஆகிய நான்கு நற்பணிகளிலும் வளர்ச்சிபெற்று ஈழத்திலே குறிப்பிடப்படக்கூடிய சபையாக மிளிர்கிறது என்பதைக் காணப் பெருமையடைகிறது.

சமயம், இலக்கியம், கலை, கிராமசேவை ஆகிய துறைகளில் நாம் சாதித்தவையென்ன ? என்பதைத் தொகுத்துக்கூறும் முகமாக இம் முப்பதாண்டு மலர் வெளியிடப்படுகின்றது. அதோடு சேர்த்துச் சபைதொடங்குவதற்கு முன்னும், சபைக் காலத்தும் சபைக்கு வெளியே இருந்தும் சபையோடு தொடர்பு கொண்டு தொண்டுகள் பல ஆற்றி எம் கிராமத்தைப் பிரகாசிக்கச்செய்த பெரியோர்கள் ஐவரைப்பற்றியும் ஓரளவு எழுதியுள்ளோம்.

'எதிர்வீட்டு மல்லிகை மணந்தராது' என்ற குறுகிய நோக்கம் எங்களுக்கில்லை. எமது சபையிலும் பார்க்க எங்கள் கிராமத்தை நாம் மேலாக நேசிக்கிறோம்.

நம் முந்தையோர் செய்த முறையான தொண்டு நம் பிற்கால சந்ததிகளுக்குத் தெரிய வேண்டும். இவ்வூர் இளைஞர்கள் அவற்றைச் சரியாக அறிந்து பெருமை கொண்டு அவர்வழி தொண்டு செய்யவேண்டும் என்பது எமது பேரவாவாகும்.

நம்மூர்ப் பெரியவர்களை அடுத்து, சன்மார்க்க சபையை ஸ்தாபித்தவர்களில் தாமும் ஒருவராயிருந்து தமது சிறிய வருவாயிலேயே காணி வாங்கிக் கட்டிடம் கட்ட உதவியவர்களும், படிப்பிலும் பேச்சிலும் தொண்டிலும் ஈடுஇணையற்று விளங்கியவர்களும், வாலிபப் பருவத்திலே இறைவனடி சேர்ந்தவர்களுமாகிய முத்திலகங்கள் ஆசிரியர் திரு. வ. பொன்னுக்குமாரு, ஆசிரியர் திரு. க. சுந்தரமூர்த்தி, ஆசிரியர் திரு. தி. இராசிங்கர் பற்றியும் எழுதி அஞ்சலி செலுத்தியுள்ளோம். அவர்களோடு, சன்மார்க்க சபை ஸ்தாபகர்களுள் இருவரான 'ஈழகேசரி' நா. பொன்னையா, கோ. அப்பாக்குட்டி ஆகிய இருவரையுஞ் சேர்த்து ஐவராக்கியுள்ளோம்.

இவ்வூரை நேசித்து ஊரின் வளர்ச்சியே பேச்சாகவும் மூச்சாகவும் கொண்டு வாழ்ந்தவரும் சன்மார்க்க சபை ஸ்தாபகருள் ஒருவருமாகிய ஆசிரியர் திரு. வ. இராமலிங்கம் அவர்களைப் பற்றியும் குறிப்புக்கள் எழுதியுள்ளோம்.

சன்மார்க்க சபையின் இந்த முப்பதாவது வருட மலருக்கென அருட்பெருந்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களும், எம் சபையோடு நெடுங்காலந் தொடர்புகொண்ட பண்டிதமணி, சி. கணபதிப்பிள்ளை அவர்களும், சபை அன்பர் செந்தமிழ்மணி பொ. கிருஷ்ணபிள்ளையவர்களும் மூன்று அருமையான கட்டுரைகள் உதவியுள்ளார்கள். அவர்களுக்கு எங்கள் நன்றி உரியதாகுக.

இம்மலரில் சன்மார்க்கசபை தொடங்கிய வரலாறும் அதன் முதலாவது கூட்டமும் முதலாவதாண்டறிக்கையும், அதைத் தொடர்ந்து முப்பது வருடங்களாகச் செய்த வேலைத்திட்டத்தின் அறிக்கைகளும் வெளியிடப்பெற்றிருக்கின்றன. சில விடயங்கள் முன்வந்தவையே திரும்பத் திரும்ப வந்து வாசிப்போர்க்கு அலுப்பைக் கொடுக்கும் என்பது எமக்குத் தெளிவாகத் தெரியுமெனினும் ஒவ்வொரு விடயங்களின் தொடக்கமும், முயற்சிப்பாடும், முடிவும் தெளிவாக இவ்வூர் மக்களுக்குத் தெரியவேண்டுமென்பதற்காகவே அப்படிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த வருடாந்த அறிக்கைகளை நாம் இப்போது மனம்போனபடி எழுதவில்லை. குறிப்புப் புத்தகத்தில் உள்ளனவும், பத்திரிகைகளில் வந்தவையும், அவ்வப்போது அச்சிட்டு வெளியிட்ட அறிக்கைகளும் அப்படியப்படியே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

நாம் செய்துமுடித்த வேலைகளின் தொகுப்பாகச் சன்மார்க்கசபை செய்து முடித்த நூற்றுக்கு மேற்பட்ட வேலைகள் திகதி வாரியாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சமயம், நாடகம், புத்தகவெளியீடு, நூல்நிலையம் என்பவை பற்றிய தொகுப்பறிக்கை தனியாக வெளியிட்டிருப்பது விடயங்களைச் சுருக்கமாக அறிவதற்குப் பத்திரிகைகாரர்க்கும் பிற கிராமவாசிகளுக்கும் நிச்சயம் பயன்படும்.

எமது சபைக்கு வருகைதந்து எமது பணியைப் பாராட்டி எழுதியவர்கள் அநேகர். அப்படியே அவ்வக்காலங்களில் எமது சபையின் நிகழ்ச்சிகளை வெளியிட்டு முக்கியமான குறிப்புக்களும் எழுதி எம்மை ஊக்கப்படுத்திய பத்திரிகைகளும் எண்ணில. எனினும் அவை எல்லாவற்றையும் வெளியிட்டு இம்மலரைப் பெரிதாக்க நாம் விரும்பவில்லை. முக்கியமாகக் குறிப்பிடக்கூடியவற்றையே இங்கு வெளியிட்டுள்ளோம். எமக்கு ஆதரவு தந்த எல்லாப் பத்திரிகைகளுக்கும் நாம் நன்றி கூறுகின்றோம்.

நல்ல ஒழுங்கை, தார்போட்ட தெரு, கடிதம் போட ஒரு தபாற்பெட்டி, வைத்தியவசதி யுள்ள ஒரு ஆஸ்பத்திரி, ஆங்கிலம் படிக்க உயர்தர பாடசாலை, ஒன்றும் இல்லாமல்—குரும்பசிட்டி என்னும் பெயரே இல்லாமல் மயிலிட்டி தெற்கு என வழங்குவதே சிறப்பென எண்ணிக்கொண்டிருந்த—இந்தக் கிராமத்தில் தார்போட்ட நல்லதெரு, அகலமான ஒழுங்கைகள், மின்சாரவசதிகள், உபதபாற்கந்தோர், பிரசவவிடுதியோடு கூடிய வைத்தியசாலை, மத்திய கல்லூரி, நல்ல நூல்நிலையம்—வாசிகசாலை என்பவற்றை ஆக்கி 'குரும்பசிட்டி' என்ற பெயரை நிலைக்கச்செய்ததில் சன்மார்க்க சபைக்குப் பெரும் பங்குண்டு. அந்தச் சேவையில் கொழும்பு, நீர்கொழும்பு, கெக்கிராவை, பூண்டுலோயா மற்றும் பல இடங்களில் இருக்கும் எமதூர் அன்பர்களும், பெயர் குறிப்பிடப்பட முடியாமல் இருக்கும் எம்மூர் உத்தியோகத்தர்களும் உதவினர்கள். அவர்களுக்கெல்லாம் நாம் நன்றி கூறுகின்றோம். சன்மார்க்க சபைத் தேவைகளை எல்லாம் வேண்டியளவு கவனமெடுத்து ஆதரித்து வரும் திரு. வ. செல்லமுத்தர் அவர்களுக்கும், தமது விளம்பரங்களை உதவி ஊக்கமளித்த வர்த்தகப் பெருமக்களுக்கும், பல்லாற்றனும் நன்கொடையளித்த அன்பர்களுக்கும் எமது பணிவான நன்றி.

இறுதியாக இம்மலர் இத்துணைச் சிறப்பாக அமைய அட்டைப்படத்தைக் கீறியும், வேறுபல போட்டோக்களை எடுத்து உதவியும், அம்பாள்கோவில் தேர்க்காட்சியைச் சினிமாப் படமாக்கி எமது சபையின் பெயரால் வெளியிட்டும் எமக்கு உறுதுணையாய் இருக்கும் திரு. கே. கே. வி. செல்லையா அவர்களுக்கும், இம் மலரை அழகாக வெளியிட்ட சுன்னுகம்: திருமகள் அழுத்தகத்தாருக்கும் நன்றி கூறுகின்றோம்.

சபைக்கு அன்பும் ஆதரவும் அளித்தும் நிதி உதவியும் எல்லா வகைகளிலும் ஒத்துழைத்து எம்மை ஊக்கப்படுத்திய எம்மூர் மக்கள் அனைவருக்கும், சபையில் இருந்து அரும்பணி புரிந்துவரும் திரு. கே. கண்ணப்பசாமி அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். மேலும் மேலும் சன்மார்க்கசபை சிறப்புற்றோங்க எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகிறோம்.

**சன்மார்க்க சபையினர்**

குரும்பசிட்டி,
**9–7–65.**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| சன்மார்க்கம் | ... ... ... | 1 |
| சன்மார்க்க சபை ஆரம்பம் | ... ... | 3 |
| சன்மார்க்க சபை ஆரம்பக் கூட்ட அறிக்கை | ... | 4 |
| முதலாவது வருடாந்தக்கூட்ட அறிக்கை | ... | 5 |
| முதலாவது ஆண்டு அறிக்கை | ... ... | 6 |
| நிரந்தர கட்டிடத் திறப்புவிழா | ... ... | 8 |
| சன்மார்க்க சபையின் உபபிரிவுகள் | ... ... | 12 |
| சன்மார்க்க சபை 30 வருட வரலாறு | ... | 13 |
| சென்ற முப்பது ஆண்டுச் சன்மார்க்க சபை நிருவாகஸ்தர்கள் | | 35 |
| சன்மார்க்க சபை பற்றிய பத்திரிகைச் செய்திகள் | | 38 |
| சன்மார்க்க சபையும் குரும்பசிட்டியும் | ... | 40 |
| மணிவாசக நூல்நிலையமும் வாசிகசாலையும் | ... | 40 |
| சமயம் | ... ... ... | 43 |
| மத்திய வைத்தியசாலை—பிரசவவிடுதி | ... | 45 |
| ‘ஈழகேசரி’ பொன்னையா வீதி | ... ... | 49 |
| உப தபாற்கந்தோர் | ... ... | 54 |
| வயாவிளான் அரசினர் மத்திய மகா வித்தியாலயம் | | 56 |
| நூல் வெளியீடுகள் | ... ... | 57 |
| தம்பையா ஞாபகார்த்த விளையாட்டு மைதானம் | | 59 |
| குரும்பசிட்டிக் கிராமம் | ... ... | 62 |
| ஒப்பந்த வேலைகள் | ... ... | 64 |
| சன்மார்க்க நாடகமன்றம்—1955 — 1965 | ... | 65 |

பக்கம்

சன்மார்க்க சபை 27ஆவது வருடாந்த விழா—தலைமைப் பேருரை 69

சன்மார்க்கசபை—வானொலிப் பேச்சு ... 73

சன்மார்க்க சபைக்கு வருகை புரிந்தோரும் வரவேற்று உபசரிக்கப்பெற்றவர்களும் ... 78

ஆசி உரைகள் ... ... 81

சன்மார்க்கசபை—முப்பது வருடச் சம்பவத்திரட்டு 87

சன்மார்க்கசபைத் தொண்டர்கள் :

ஆசிரியர் க. சுந்தரமூர்த்தி அவர்கள் ... 97

,, வ. பொன்னுக்குமரன் ,, ... 100

'' தி. இராசிங்கர் ,, ... 103

'ஈழகேசரி' நா. பொன்னையா ,, ... 104

திரு. கோ. அப்பாக்குட்டி ,, ... 107

ஆசிரியர் வ. இராமலிங்கம் ,, ... 109

குரும்பசிட்டிப் பெரியோர்கள் :

திரு. ந. சின்னத்தம்பி அவர்கள் ... 110

திரு. S. R. முத்துக்குமாரு ,, ... 112

ஆசிரியர் பொ. பரமானந்தர் ,, ... 115

திரு. R. R. நல்லையா ,, ... 118

திரு. பூ. சுப்பிரமணியம் ,, ... 120

High Lights ... ... 122

**கட்டுரைகள் :**

தமிழர் கண்ட நெறி 125
(சைவப் பெருந்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள்)

புராண மகிமை 128
(பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்)


குகன் சொல்நயமும் வெஞ்சினமும் 130
(செந்தமிழ்மணி பொ. கிருஷ்ணபிள்ளை அவர்கள்)

சன்மார்க்க சபைத் தலைவர் — 1934 - 1951



'சமூகேசரி' நா. பொன்னையா அவர்கள், ஜே. பி., மயிலிட்டிக் கிராமசபைத் தலைவர்.

## வித்துவசிரோமணியும் — குன்றக்குடி அடிகளாரும்



சன்மார்க்க சபை மண்டபத்தில் — குன்றக்குடி அடிகளாருக்கு வித்துவசிரோமணி சி. கணேசையர் அவர்கள் தாம் எழுதிய உரைவிளக்கக் குறிப்புக்களைக் கொண்ட தொல்காப்பியப் பிரதிகளை உபகரிக்கின்றனர். — 11—6—53

உ
சிவமயம்

# சன்மார்க்கம்

சைவப் பெருமைத் தனிநா யகனந்தி
உய்ய வகுத்த குருநெறி யொன்றுண்டு
தெய்வச் சிவநெறி சன்மார்க்கஞ் சேர்ந்துய்ய
வையத் துள்ளார்க்கு வகுத்துவைத் தானே.

சன்மார்க்கம், சகமார்க்கம், சற்புத்திரமார்க்கம், தாசமார்க்கம் ஆகிய நான்கு மார்க்கங்களுள், சன்மார்க்கமே தலையாயது. சன்மார்க்கமே, கடவுளும் ஆன்மாவும் ஒன்றாகி நிற்கும் உண்மை நிலையான ஞானமார்க்கம். உலக விடயங்களில் மிகுந்த பற்றுடையவர்கள் அருள்பெறும் வழியை அடைதற்கு உண்மை நாயன்மார் சரித்திரங் கேட்டலும், சிவபத்தரோடு சேருவதும் முதற்படியாகும். பின் சிவபத்தர்களின் செயலிற் பற்றுண்டாகி அவர்களைப்போல் நடக்க விரும்பித் தேவார திருவாசகங்களை ஓதுதலுங் கேட்டலும் உலகப் பற்றுடையவர்களுடைய உள்ளத்தைக் கவர்ந்து கடவுளிலே செலுத்தும். கடவுளிலே பற்றுண்டாகி நிவிர்த்தி மார்க்கத்தைச் சேர்ந்த பின் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் பாதங்களை அநுட்டித்துத் திருவருளை அடைவார்கள். திருவருளை அருளுவது பராசக்தி. திருவருளை யடையவேண்டியவர், சரியாபாதம் முதலிற் கைவரப் பெற்று அதன் வழிப்பட்டோராவர், என்பது சைவ நன்மக்கள் துணிபு.

சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கையும் அனுட்டித்தோர் முறையே சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என்னும் முத்திகளைப் பெறுவர். உண்மைஞானம் பெற்றோர் சாயுச்சியமாகிய பரமுத்தியை அடைதலே முன் கூறப்பட்ட சன்மார்க்க நெறியின் பயன் என்பர். சன்மார்க்க நெறிநின்று சாயுச்சியமாகிய பரமுத்தியை அடைந்தவர் சைவசமய குரவருள் ஒருவரான மாணிக்கவாசக சுவாமிகள்.

மாணிக்கவாசக சுவாமிகள் மணிவாசகனார் என்று அழைக்கப்படுவர். மணிவாசகம் சுவாமிகளால் ஓதப்பெற்ற திருவாசகமாகிய மந்திரங்களாகும். திருவாசகத்தை ஒத்த சிவநெறி நூல்களைத் தம் மகத்தே உடைய நிலையத்தை 'மணிவாசக நூல் நிலையம்' எனப் பெயரிடுவதும் சாலச்சிறந்ததே. மணிவாசக நூல்நிலையம் சன்மார்க்கத்துக்கு வழிப்படுத்துவதாகும்.

மயிலிட்டி தெற்கிலே, குரும்பசிட்டி என்னும் காணி ஒன்றுண்டு. அக் காணி ஒரு புனித தலமாகும். அங்கு விநாயகர் ஆலயம், காளி தேவி ஆலயம், வைரவர் ஆலயம், அம்பாள் ஆலயம், ஞானவைரவர் ஆலயம் என்பன நிரையாக அமைந்துள்ளன. கோயிற் பிரகாரத்திற்

சிவபூசை எழுந்தருளப் பெற்ற சைவ நன்மக்கள் பல நூற்றுண்டுக ளாக வாழ்ந்து இன்றும் விளங்கு கின்றனர். விநாயகர் ஆலய முன்றி லிலே கலைஞான பீடமாகிய சைவ வித்தியாசாலை உண்டு.

இப் புனித தலத்திற் கோயில் கொண்டுள்ள அம்பாளைத் தரிசனம் செய்யும் அன்பர்கள் ''அன்னை பரா சக்திக்கு அரோகரா'' என்று பாரா யணஞ் செய்யும் ஒலியை எப் பொழுதுங் கேட்கலாம். அவ்விடத் துப் பாலர்கள் கோயிற் பிணுப் பிள்ளைகளாக விளங்குவர். பராசக்தி யும், கோயிற் பிணுப்பிள்ளைகள் சிறு நெறிகள் சேராது திருவருளே சேரும் வண்ணம், எண்ணமிலா அன் பருளி அஞ்சேலென்று ஆண்டருள் புரிவாள். சரியையிலுள்ளோர் கட வுளில் அன்பும் அச்சமுமுடையவரா தலின் சிவநெறியில் வழிப்படுவோர் தாசமார்க்கத்தைப் பேணிச் சன் மார்க்கத்தைக் குறிக்கோளாகக் கொண்டு அமைவர்.

மக்களின் நல்வாழ்வுக்குரிய செல்வத்தையும் கல்வியையும் அளிக்கவல்ல, திருமகளையும், கலை மகளையும் — இலக்குமி, சரஸ்வதி ஆகிய சக்திகளைக் கண்ணுலே தரி சித்துச் சிவசக்தியாக நினைத்து நேரே வணங்கித் தியானிப்பதற் குரிய திருவுருவங்களை உயிரோ வியங்களாக எமக்குதவியவர் ரவி வர்மா ஆவர். ரவிவர்மாவினுற் சித்திரிக்கப்பட்ட இலக்குமி, சரஸ் வதி தேவிகளைத் தியானித்தல் இறைவியைத் தியானிப்பதாகும்; சன்மார்க்க நெறியாகும்.

குரும்பசிட்டி அம்பாள் திருவரு ளினுல் அக் கோயிற் பிணுப்பிள்ளை களாம் வாலிபர் சிலர் சன்மார்க் கமே குறிக்கோளாக வுள்ள சன் மார்க்க சபையையும் சன்மார்க்க நெறிநின்று சாயுச்சிய பரமுத்தியை அடைந்த மாணிக்கவாசக சுவாமி களின் நாமந் தாங்கிய மணிவாசக நூல் நிலையத்தையும் அங்குரார்ப் பணம் செய்து அந் நிலையத்திலே ரவிவர்மாவின் உயிரோவியமான கலைமகள் தேவியை ஸ்தாபனம் செய்து சென்ற முப்பது ஆண்டுக ளாக அக் கலைமகள் தேவிக்குத் திருவிளக்கேற்றுதலாம் சரியா பாதத்தை அனுட்டிக்கின்றமை முத்திநெறியாகிய தூய நெறி யாகும். சன்மார்க்கம் நீடூழி வாழ்க. 'குரும்பசிட்டி சன்மார்க்க சபை' நீடூழி வாழ்க.

தானவ னுகித் தானைந்தா மலஞ்செற்று
மோனம தாமொழிப் பான்முத்த ராவது
மீனமில் ஞானனு பூதியி லின்பமுந்
தானவ னுயற்ற லானசன் மார்க்கமே.

நமது நாட்டின் ஒப்பற்ற வரலாற்றுநூல் தெய்வச் சேக்கிழார் இயற்றிய பெரிய புராணமாகும். வரலாறு என்று சொன்னுல் போர் செய்த காலங் களையும் வெற்றிகொண்ட இடங்களையும் மட்டும் குறிப்பிடுவதல்ல. அவைதான் வரலாறென்று தமிழன் கருதி இருப்பானேயானுல் தமிழ் வரலாற்றுநூல் மிகமிகப் பெரிதாய் இருந்திருக்கும். தமிழன் அதனைச் சரித்திரமாகக் கருதவில்லை. பழந்தமிழன் எண்ணம், வாழ்வு இவற் றையே சரித்திரமாகக் கருதினுன்.

—சன்மார்க்க சபையில் குன்றக்குடி அடிகளார்

# சன்மார்க்க சபை ஆரம்பம்

மயிலிட்டிக் கோவிற்பற்றில் அதன் நடுநாயகமாக விளங்குவது மயிலிட்டிக் கிராமம். அக் கிராமத்தின் பிரிவுகள் மயிலிட்டி வடக்கு, மயிலிட்டி மத்தி, மயிலிட்டி தெற்கு என்பவைகளாகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டு மத்திய காலத்திலே, பிறக்கிராசி சின்னக்குட்டி, சிறுப்பர் கனகசபாபதி, கச்சேரி லிகிதர் மேவின் முருகேசு, முதலித்தம்பி என்பவர்கள் ஆங்கிலக் கல்வியறிவும் பொது நல சேவையும் மிக்கவர்களாய் மயிலிட்டி தெற்கில் விளங்கினர். இங்கு குறிப்பிட்ட பெரியார்களின் பிறப்பிடமாக உள்ளது எமது கிராமம். முதலித்தம்பி என்பவருக்குரிய ஒரு காணிப்பெயரே குரும்பசிட்டியாகும். அக் காணியின் பெயர் அப்பகுதிக் கிராமத்தின் பெயராயிற்று. இன்று குரும்பசிட்டிக் கிராமமென்று அழைக்கப்படுவது, ஒரு சிறு பகுதியைத் தவிர்ந்த மயிலிட்டி தெற்கு ஆகும்.

மயிலிட்டிக் கோவிற்பற்றில், முதன்முதலாக எமது கிராமத்திலேயே சிறந்த சைவப்பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டது; அம்பாள் ஆலயம் விநாயகர் ஆலயம் பிரதிட்டை செய்யப்பட்டன.

இக் காரணங்களால் எமது கிராமத்தில் 'சைவர்' என்னும் மரபினர் தோன்றினர். கிராம முன்னேற்றத்துக்கு அறிகுறியான சங்கங்கள் தோன்றலாயின.

ஸ்ரீமத் சுவாமி விவேகானந்தா அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ் செய்ததன் பேறாக எமது ஊரிலும் முன்னேற்றமுள்ள வாலிபர் சிலரால் ஒரு வாலிபர் சங்கம் தொடங்கப்பட்டது. அது 'மயிலிட்டி தெற்கு இந்துவாலிபர் சங்கம்' என்னும் பெயரால் அழைக்கப்படலாயிற்று. சங்கங்களின் வரிசையில் 'மயிலிட்டி தெற்கு இந்து வாலிபர் சங்கம்' முதன்மை பெற்றது. இச் சங்கம் 1920ஆம் ஆண்டு வரையிலும் நிலைபெற்றது; சமயப் பணியிலேயே தொண்டாற்றியது. இச் சங்கத்தின் பின்னர் 'சைவ வாலிபர் சங்கம்', 'நன்மைவிருத்திச் சங்கம்', 'சனோபகாரசபை' எனப் பல சங்கங்கள் அவ்வப்போது நடைபெறலாயின. 'சனோபகாரசபை'யே பவ ஆண்டு ஐப்பசித்திங்கள் விஜய தசமித் தினத்தன்று [17-10-34] 'மணிவாசக நூல்நிலைய' மண்டபத்தில் 'ஈழகேசரி' பொன்னையா, ஜே. பி. அவர்களின் தலைமையிலே **சன்மார்க்க சபை** என்னும் புதுப் பெயரிடப்பட்டுத் தொடர்ந்துபணி புரிந்து வருகிறது.

இது 'தென்மயிலைச் சன்மார்க்க சபை' என வழங்கப்பட்டுப் பின்னர் குரும்பசிட்டி சன்மார்க்க சபை எனப் பெயர் மாற்றம் பெற்று இன்றும் அப்பெயரோடு வழங்கி வருகின்றது.

> தமிழர் இயல்பாகவே திடமனதுள்ள பண்பாட்டை யுடையவர்கள். இலட்சிய வாழ்வைக் கடைப்பிடித்து அதற்கு ஒப்ப நடக்குந் தமிழர்களை நன்னெறியினின்றும் திருப்ப ஒருவராலும் முடியாது.
>
> —சன்மார்க்க சபையில் கலாநிதி க. கணபதிப்பிள்ளை

# சன்மார்க்க சபை ஆரம்பக்கூட்ட அறிக்கை

நிகழும் பவ ஆண்டு ஐப்பசித் திங்கள் 1ஆந் வ [17-10-34] புதன் கிழமை பிற்பகல் 4 மணியளவில் மேற்படி சபையாரா லாக்கப் பட்ட 'மணிவாசக நூல்நிலய'த் திறப்பு விழா ஆரம்பமாயிற்று. அவ்வமயம் வேதாரணியம் ஸ்ரீமத் சு. சொக்கநாதக் குருக்கள்அவர்கள் சரஸ்வதி தேவியின் திருஉருவப் படத்தைத் தாபித்து மங்கள வாத்திய சகிதமாய்ப் பூசை நடாத்தினர். பின்னர் திரு சீ. கணபதிப் பிள்ளை அவர்கள் தேவாரமோதக் கூட்டம் ஆரம்பமாயது. திரு கோ. நமசிவாயம் அவர்கள் பிரேரிக்க திரு. க. நாகலிங்கம் அவர்கள் அநுவதிக்க திரு. சிவராமலிங்கம் முத்துக்குமாரு முதலியார் அவர்கள் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவரவர்கள் கல்வியைப் பற்றியும் வாசிகசாலை நூல்நிலையம் என்பனவற்றின் பயனைக்குறித்தும் விரிவான ஒரு சொற்பொழிவு நிகழ்த்திய பின் நூல்நிலயத்தைத் திறந்து வைத்தார்கள். பல பெரியோர்கள் சிறிதுநேரம் ஆண்டு வைக்கப்பட்டிருந்த நூல்களை வாசித்து இன்புற்றனர். பின்னர் திரு. வ. இராமலிங்கம் அவர்கள் தலைவர் அவர்களுக்கும் 'ஈழகேசரி'ப் பத்திராதிபர் திரு. நா. பொன்னையா அவர்களுக்கும் வாசிகசாலை ஆக்குவதில் அதிக சிரத்தை காட்டிய வாலிபர்களுக்கும் சமுகம் தந்தும் பணஉதவி செய்தும் உற்சாகப்படுத்திய சபையோருக்கும் துதி கூறினர். அதன் பின்னர் சமுகமளித்த அனைவருக்குஞ் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

திறப்புவிழா இனிது நிறைவேறிய பின்னர் 'சன்மார்க்க சபை'யினர் கூடி அடுத்த ஆண்டுக்குரிய உத்தியோகஸ்தர்களைப் பின் வருமாறு தெரிவு செய்தனர்: திரு. கோ. நமசிவாயம் அவர்கள் பிரேரிக்க திரு. வ. இராமலிங்கம் அவர்கள் அநுவதிக்க திருவாளர்கள்: எஸ். ஆர். முத்துக்குமாரு முதலியார், பூ. சுப்பிரமணியம், வே. தம்பிப்பிள்ளை ஆகிய மூவரும் போஷகர்களாகவும் திரு. க. நாகலிங்கம் அவர்கள் பிரேரிக்க திரு. வ. பொன்னுக்குமாரு அவர்கள் அநுவதிக்க திரு. நா. பொன்னையா அவர்கள் தலைவராகவும், திரு. கோ. நமசிவாயம் அவர்கள் பிரேரிக்க திரு. நா. பொன்னையா அவர்கள் அநுவதிக்க திரு. சீ. கந்தையா அவர்கள் உப

## ஆரம்ப உத்தியோகஸ்தர்கள்
## 17-10-34 — 29-4-35

**போஷகர்கள் :**

சிவ. முத்துக்குமாரு, முதலியார்
பூ. சுப்பிரமணியம், வியாபாரம்
வே. தம்பிப்பிள்ளை, வியாபாரம்

**தலைவர் :**

நா. பொன்னையா, ஈழகேசரி அதிபர்

**உப-தலைவர் :**

சீ. கந்தையா, ஆசிரியர்

**காரியதரிசிகள் :**

க. நாகலிங்கம், தலைமை ஆசிரியர்
க. சுந்தரமூர்த்தி, ஆசிரியர்

**தனாதிகாரி :**

வ. இராமலிங்கம், தலைமை ஆசிரியர்

**கணிதபரிசோதகர் :**

கோ. அப்பாக்குட்டி, லிகிதர்

**நிர்வாகசபை :**

கு. நாகலிங்கம், பென்சனர்
கோ. நமசிவாயம், தலைமை ஆசிரியர்
வ. பொன்னுக்குமாரு, ஆசிரியர்
சீ. தம்பிப்பிள்ளை, ஆசிரியர்
தி. இராசிங்கர், ஆசிரியர்

**நூல்நிலயப் பொறுப்பாளர் :**

[illegible] வலு, ஆசிரியர்

# முதலாவது வருடாந்தக் கூட்ட அறிக்கை

**யுவ** ஆண்டு சித்திரை மாதம் 15ஆந் திகதி (28-4-35) ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் 'மணிவாசக நூல் நிலை' யத்துக்கு அணித்தாய் அமைக்கப்பட்ட அலங்காரப் பந்தரில் மேற்படி சபை ஆதரவில் அப்பர்சுவாமிகளது குருபூசை ஆரம்பமானது.

தேவாரபாராயணத்தின் பின்பு ஆண்டுவிழா திரு. S. R. முத்துக்குமாரு அவர்களது தலைமையில் ஆரம்பமாயிற்று. திரு. வ. இராமலிங்கம் அவர்கள் தலைவர் அவர்களை வரவேற்று வரவேற்புரை நிகழ்த்தினர். பின்னர் காரியதரிசி, தனாதிகாரி, நூல்நிலையப் பொறுப்பாளர் ஆதியோரின் அறிக்கைகள் முறையே வாசிக்கப்பட்டுச் சபையின் அங்கீகாரம் பெற்றன. யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் திரு. S. H. பேரின்பநாயகம், B. A. அவர்களால் 'இளைஞர் இயக்கம்' என்னும் விடயம் உபந்நியாசிக்கப்பட்டது. ஸ்ரீமத் நாகலிங்க சுவாமிகளால் 'காரைக்காலம்மையார்' சரிதம் பக்கவாத்திய சகிதம் கதாப்பிரசங்கஞ் செய்யப்பட்டது. ஆசிரியர் திரு. வ. பொன்னுக்குமாரு அவர்களாற் சபையோருக்கு நன்றி கூறப்பட்டுத் தேவார பாராயணத்துடன் கூட்டம் இரவு 10 மணியளவில் இனிது நிறைவெய்தியது.

மறுநாட் திங்கட்கிழமை மாலை 7 மணியளவில் சபைத்தலைவர் திரு. நா. பொன்னையா அவர்கள் தலைமையில், பிரபல வழக்கறிஞரும், யாழ்ப்பாணம் மலையாளப் புகையிலை ஐக்கிய வியாபாரச் சங்கத் தலைவருமாகிய திரு. T. C. இராசரத்தினம் அவர்களால் 'புகையிலைச் செய்கையும் அதன் விருத்தியும்' என்னும் விடயமாக ஒரு சிறந்த செற்பொழிவு செய்யப்பட்டது. திரு. வ. இராமலிங்கம் அவர்கள் சபையோர் அனைவருக்குந் துதி கூறினர். பின்னர் சபை உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. கூட்டம் 10 மணியளவில் நிறைவெய்தியது.

---

தலைவராகவும், திரு. வ. இராமலிங்கம் அவர்கள் பிரேரிக்க திரு. எஸ். ஆர். முத்துக்குமாரு அவர்கள் அநுவதிக்க திரு. க. நாகலிங்கம் அவர்கள் காரியதரிசியாகவும், திரு. நா. பொன்னையா அவர்கள் பிரேரிக்க திரு. கோ. நமசிவாயம் அவர்கள் அநுவதிக்க திரு. க. சுந்தரமூர்த்தி அவர்கள் உபகாரியதரிசியாகவும், திரு. வ. பொன்னுக்குமாரு அவர்கள் பிரேரிக்க திரு. க. நாகலிங்கம் அவர்கள் அநுவதிக்க திரு. வ. இராமலிங்கம் அவர்கள் தனாதிகாரியாகவும், திரு. வ. பொன்னுக்குமாரு அவர்கள் பிரேரிக்க திரு. எஸ். ஆர். முத்துக்குமாரு அவர்கள் அநுவதிக்க திரு. கோ. அப்பாக்குட்டி அவர்கள் கணித பரிசோதகராகவும், அவர்களுடன் திரு. வ. இராமலிங்கம் அவர்கள் பிரேரிக்க திரு. க. நாகலிங்கம் அவர்கள் அநுவதிக்க திருவாளர்கள் கோ. நமசிவாயம், வ. பொன்னுக்குமாரு, சீ. தம்பிப்பிள்ளை, கு. நாகலிங்கம், தி. இராசிங்கர் ஆகிய ஐவரும் நிர்வாகசபை அங்கத்தினராகவும், திரு. வ. பொன்னுக்குமாரு அவர்கள் பிரேரிக்க திரு. க. நாகலிங்கம் அவர்கள் அநுவதிக்க திரு. சி. கதிரவேலு அவர்கள் நூல்நிலைய மேற்பார்வையாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். கூட்டம் இரவு 8 மணியளவில் இனிது நிறைவெய்தியது.

# முதலாவதாண்டு அறிக்கை

குரும்பசிட்டி என்னும் எங்கள் கிராமத்தின் முன்னேற்றத்தைப் பெரிதும் விரும்பிய அறிஞருட் சிலரது மனதில் நெடுநாட்களாய்க் குடிகொண்டிருந்த நல்லெண்ணங்களே இன்று 'குரும்பசிட்டி சன்மார்க்க சபை'யெனப் பெயரிய ஒரு சபையைத் தந்து எம்மனோர்களையெல்லாம் சன்மார்க்க நெறியின்கட் செலுத்தாநின்றன. இச் சபை பவ ஆண்டு ஐப்பசித்திங்கள் முதலாந் திகதி விஜயதசமித் தினமாகிய புதன்கிழமை பிற்பகல் 4 மணியளவில் 'மணிவாசகநூல்நிலைய' மண்டபத்தில் நிறுவப்பட்டது. இதன் சீரிய நோக்கங்கள் பல பெற்றியன வாகும். மக்கள் உள்ளத்திற் சன்மார்க்கம், சமயம், கல்வி என்பனவற்றை வளரச்செய்வதே அவற்றிலே தலையாயதாகும். இவ் வாண்டில் இச்சபையானது பல வேலைகள் செய்யத் தொடங்கிற்று. கிராம முன்னேற்றத்துக்குரிய விஷயங்களிலீடுபட்டு உழைப்பதிலும் பொது மக்களிடையே தாய்மொழிப் பற்று, தேசப்பற்று, சமயப்பற்று முதலியவற்றை வளரச்செய்வதிலும் இச் சபை இயன்றளவு தொண்டாற்றி வருகின்றது. 'மணிவாசக நூல் நிலையம்' என்னும் பெயருடன் நின்று நிலவுகின்ற நூல்நிலையமும் வாசிகசாலையும் இச் சபையார் ஆற்றிய தொண்டின் பயனாகவே தோன்றியது.

இவ் வாண்டில் 5 பொதுக் கூட்டங்களும், 8 நிர்வாகசபைக் கூட்டங்களும், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களது குருபூசை விழாவும், திருவாளர் திரு. க. சுந்தரமூர்த்தி ஆசிரியருடைய பிரியாவிடை விழாவும் வெகு சிறப்பாக நடாத்தப்பட்டன. உபந்நியாசகர்கள் நல்ல விஷயங்களைத் தேர்ந்தெடுத்துப் பேசினார்கள். அவ்விஷயங்கள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களது திவ்விய சரித்திரம், இராமாயண கார்முகப்படலம், அடியார் பக்தி, சமரச சன்மார்க்கம் கண்ட பெரியார் என்பனவாம். நடந்தேறிய நிர்வாகக் கூட்டங்களிற் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றுள் மிகச்சிலவொழிந்த ஏனையவெல்லாம் சாதனையின்பாற் பட்டுப் பொதுச்சனங்களுக்குப் பலப்பல நன்மைகளை யளித்தன. இரண்டொரு விசேட தீர்மானங்களை மாத்திரம் ஈண்டுத் தருதும்:

> "குரும்பசிட்டியிலுள்ள அம்பாள் ஆலயத்தில் உற்சவகாலங்களில் 'சின்ன மேளம்' தேவையில்லை என்றும், அது கிராமமுன்னேற்றத்துக்கும் சன்மார்க்கத்துக்கும் தடையென்றும், அதை இயன்றவரை இல்லாதொழிக்க முயற்சி எடுத்தல் வேண்டுமென்றும் இச் சபை தீர்மானிக்கிறது."

இவ் விடயத்திற் சபையின் வேண்டுகோளுக்கிணைந்து சபையுடன் ஒத்துழைத்த கோயில் அதிகாரிகளின் நற்செயல்களை நாம் என்றும் மறவோம். இன்னும் இது போன்ற விடயங்களில் அவர்கள் எங்களுடன் ஒருசேர நின்று உதவி புரிவார்கள் என்பதை நினைந்து நாம் அதிக மகிழ்ச்சி அடைகிறோம்.

> "தென்னிலங்கையில் மலேரியாச் சுரத்தாற் கஷ்டப்படுபவர்களுக்கு உதவி செய்வதற்காகப் பணஞ் சேகரிக்க வேண்டுமென்று இச் சபை அபிப்பிராயப்படுகிறது."

பணம் சேகரிக்க எழுந்த உப சபை 22 ரூபா 75 சதம் சேர்த்துத் தென்னிலங்கை வாசிகளுக்குப் பல துளியுடன் இதுவுமோர் சிறுதுளி

யெனச் சேருமாறு அனுப்பிவைத்தது.

இன்னும் இந்தமாதம் நடைபெற்ற கிராமசங்கத் தேர்தலில் மேற்படி சபைத் தலைவர் திருவாளர் நா. பொன்னையா அவர்களைக் குரும்பசிட்டி வட்டாரத்துக்கு ஓர் அபேட்சகராக நிற்கும்படி நிர்வாக சபையார் வேண்ட அவர் அதற்கு இயைந்தனர். இவ் விடயத்திலும் ஊக்கி அன்புகாட்டிய ஊரவர்களெல்லோருக்கும் நாம் அதிகம் கடப்பாடுடையோம்.

எங்கள் சபை வேலைகளைச் செவ்வனே நடாத்துவதற்கு உதவிபுரிந்த உத்தியோகஸ்தர்களுக்கும், சபையைத் தளரவிடாது போஷித்து வந்த போஷகர்களுக்கும் இன்னும் பல்வேறு வகைகளில் உதவி செய்தவர்களுக்கும் நாம் என்றும் நன்றி பாராட்டும் கடமை பூண்டுள்ளோம். எமது சபைத் தலைவர் திருவாளர் நா. பொன்னையா அவர்கள் சபை விஷயத்திலும் வாசிகசாலை நடாத்தும் விஷயத்திலும் சபைக்குச் செய்துவரும் தொண்டுகளுக்காக நாம் அவருக்கு விசேட துதி கூறுகின்றோம்.

சபை உபதலைவர் அவர்களும் நிர்வாகசபை அங்கத்தவர்களும் பெரும் உதவிகளைச் செய்துள்ளார்கள். அவர்களுக்கும் எங்கள் துதியைச் செலுத்துகின்றோம்.

இதுபோன்ற சபைகளை நடாத்துவது கஷ்டமானதோர் செயலேயாயினும் எங்கள் மனச்சாட்சிக்கேற்ப ஒரு குறையுமின்றி எல்லாவற்றையுஞ் செவ்வனே நடாத்தி வந்தோம். ஆனால் இச் சபைக்கு நிலையான ஓர் இடம் இல்லாமையே எங்கள் மனத்தைப் பெரிதும் பாதிக்கின்றது. ஆதலின் தேசமுன்னேற்றத்தை நாடும் பெரியோர்களே! சபைக்கு இயன்ற பொருளுதவி புரிந்து அதற்கென ஓர் இடந் தேடி வைப்பதில் ஊக்கங் காட்டி அதை ஆதரிக்குமாறு அன்பாக வேண்டுகிறோம். இச்சபை முயற்சிகளில் முதியோரும் இளைஞருடன் ஒத்துழைத்து வருவது கிராமமுன்னேற்றத்துக்கு இன்றியமையாததாகும்.

இச் சபை அறிக்கைகளையும் நிகழ்ச்சிகளையும் அன்புடன் ஏற்றுப் பிரசுரித்த பத்திரிகைகளுக்கும் பத்திரிகை ஆசிரியர்களுக்கும் சபையின் பேரால் நன்றி செலுத்துகின்றோம். இச்சபையின் ஓர் அங்கமான பந்தாட்டக்கழகத்தாரும் சபை வேலைகளில் நல்ல உதவி செய்துள்ளார்கள். அவர்களுக்கும் நாம் நன்றி செலுத்துகிறோம்.

இச் சபை குரும்பசிட்டிக் கிராமத்துக்குச் சிறந்தவோர் அணி போல் விளங்கித் தேசத் தொண்டாற்றியும் சன்மார்க்கத்தைவளர்த்தும் தாய்ப்பாஷையை விருத்தி செய்தும் வர எல்லாம்வல்ல இறைவன் திருவருள் புரிவாராக.

சன்மார்க்கசபை இதுபோன்ற ஏனைய சபைகளுக்கு முன்மாதிரியாக இருப்பதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். உங்கள் ஒத்துழைப்பின் சின்னமாக இது விளங்குகிறது. உங்கள் தலைவர் செய்த செயற்கருஞ் செயலுக்காக அவர் உங்கள் மத்தியில் இல்லாவிட்டாலும் அவரைப் பாராட்டவேண்டும்.

—சன்மார்க்க சபையில் கிராமமுன்னேற்றப்பகுதி அதிகாரி, டி. ஜி. தயாநிதி C. C. S.

# நிரந்தர கட்டிடத் திறப்புவிழா

இருபதாம் நூற்றுண்டு சுதந்திர உணர்ச்சியின் தோற்ற கால மாகும். ஐரோப்பிய நாட்டிலே புத்துயிர்க் கிளர்ச்சி தோன்றி— கமத்தொழிற் புரட்சி தோன்றிப் பின்னர் கைத்தொழிற் புரட்சி தோன்றி எங்ஙனும் பரவி அதன் பின்னர் அரசியற் சுதந்திர உணர்ச்சி தோன்றிக் காட்டுத்தீ போல எங்கும் இலகுவிற் பரவியது.

1930ஆம் ஆண்டளவிலே பாரத நாட்டிலே மகாத்மா காந்தி யடிகள் அரசியலிலே தீவிரமாக ஈடுபட்டு பகிஷ்காரம், சட்டமறுப்பு, சத்தியாக்கிரக இயக்கங்கள்மூலம் பாரத மக்களைச் சுதந்திர உணர்ச்சி யடையச் செய்தார். அவர்களுடைய இலங்கை விஜயமும், அவர்களுடைய தொண்டர்களான நேருஜீ, கமலாதேவி சட்டோபாத்தியாய போன்ற அரசியல் மேதைகளின் இலங்கை விஜயமும் இலங்கை மக்களிடையே அரசியற் சுதந்திர உணர்ச்சியை ஏற்படுத்தின. அதோடு வட-இலங்கையில், பேரறிஞர்களான திரு. S. H. பேரின்ப நாயகம், திரு. T. C. இராசரத்தினம் என்போர் தலைமையில் வாலிப மகாநாடு அரசியலிலே தீவிர பங்கெடுத்துத் தொண்டாற்றியது.

இதேகாலத்தில் திருவண்ணுமலை ரமண மகரிஷி அவர்கள், புதுச்சேரி அரவிந்த யோகிகள், கவி அரசர் தாகூர் அவர்கள், இலங்கையில் யோகசுவாமிகள் அவர்கள் ஆகியோரின் ஞான ஒளியும் மக்களிடையே பரவியது. அன்றியும் சங்கானை ஸ்ரீமத் நாகலிங்க அடிகள், திருவாலங்காடு ஸ்ரீமத் சங்கர சுப்பைய சச்சிதானந்த யோகிகள் ஆகியோரின் கதாப்பிரசங்கங்களும் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களின் 'நவசக்தி'ப் பத்திரிகையின் கருத்துமிக்க கட்டுரைகளும் மக்களின் உள்ளத்தைப் பண்படுத்தின. இங்ஙனமான சூழலிலே, கல்லூரி மாணவர்கள் ஆத்மீகத்திலும் அரசியலிலும் உணர்வு மிக்கோராய் விளங்கினர்.

குரும்பசிட்டியிலும் கற்றவர்களிடையே ஏற்பட்ட மன உத்வேகமும் 'சன்மார்க்க சபை' தோன்றுவதற்கு உடன் காரணமானது. ஆனுல் இடம் எங்கே என்ற பிரச்சினை எழுந்தது. தற்காலிகமாக, பழுதடைந்த, சீவிப்பதற்குத் தகுதியற்ற, ஒரு 2 அறை வீடு கிடைக்கப் பெற்றது. அதனை வாடகையாகப் பெற்று அதன் முன்புறத்திலே 25 பேர் கூடி ஒரு சிறு கூட்டம் நடத்தக் கூடிய ஒரு கொட்டகை அமைத்து அக் கொட்டகையிலே 'மணிவாசக நூல் நிலையம்' ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்பட்டது. அக் கொட்டகையே 'சன்மார்க்கசபை'யின் காரியாலயமுமாயிற்று; கூட்டங்கள் அங்கேயே ஒழுங்காக நடைபெற்றன; ஆரம்பத்திலேயே திரிகரண சுத்தியோடு காரியங்கள் அமைதியாக நடைபெற்றமையால் ஏனையோரின் உள்ளத்தையுங் கவர்ந்தது. 23-2-35இல் நடந்தேறிய பொதுக் கூட்டத்தில் ''சபைக்கு நிலையான கட்டிடம் பெறல்வேண்டும்'' என்று தீர்மானிக்கப்பட்டது.

இத் தீர்மானம் நடைமுறையில் செயற்பட ஆரம்பித்தது. அங்கத்தவர்களிடமிருந்து வருட சந்தாப் பணத்தைவிட மேலதிகமாக மாதந்தோறும் 25 சதம் சேகரிக்கப் பட்டது. மாதந்தோறும் அங்கத்

தவர் வீட்டுக்குப் பலமுறையுஞ் சென்று பணம் சேகரிக்கப்பட்டது. எத்தனை அங்கத்தவர்கள்? 20க்குக் குறைந்த தொகை. இங்ஙனமாக 3-8-36இல் சபைக்குரிய நிதி ரூபா 78இல் ரூபா 50ஐ சபையின் காணி வாங்குவதற்குரிய மூலதனமாக மயிலிட்டி தெற்கு ஐக்கியநாணய சங்கத்தில் [இப்போதைய சன்மார்க்க ஐக்கியநாணயசங்கம் J. 64] சேமிக்கப்பட்டது. காணிக்குரிய நிதியின் தோற்றம் ஆரம்பமானதும், இத் துறையில் இன்னும் ஆர்வம் ஏற்பட்டது. வண்ணார்பண்ணை, முதலியார் சிற்றம்பலம் அவர்கள் மறுமலர்ச்சி நோக்குடையவர்கள். அவர்களால் எழுதப்பட்ட '**சுத்த போசன பாகசாஸ்திரம்**', '**வைத்தியக் கைமுறைகள்**' என்பன மக்களின் நல்வாழ்வுக்கு மிகவும் பயன்படுதற்குரியன. வைத்தியக் கைமுறை நாளாந்தச் சுகவாழ்வுக்கு மிகவும் நன்று என அறிந்து அந்த 'வைத்தியக் கைமுறைகள்' என்னும் நூலைப் பதிப்பகத்தாரிடமிருந்து பெற்று விற்றுவரும் இலாபப்பணத்தைக் காணி நிதிக்கு உபயோகிக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் அம்முயற்சி கூடிய அளவு பலனை அளிக்கவில்லை. 'சன்மார்க்கசபை' சென்ற ஆறு வருடங்களிலும் சபைக்குரிய நோக்கங்களைப் பூர்த்திசெய்ய முயற்சித்ததுடன் சபைக்குரிய நிரந்தர இடம் பெறுதற்கான பணம் சேகரிக்கும் முயற்சியிலும் பெரிதும் ஈடுபட்டது. 1940ஆம் ஆண்டு நல்லகாலம் பிறந்தது. இப்போதுள்ள சபைக்குரிய காணியைச் சபைக்குத் தர வேண்டுமென்று சபைத் தலைவரவர்கள் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து அதிற் சித்திபெற்றார். உடனேயே காணி வாங்குவதற்குரிய மிகுதிப் பணத்தை நிருவாகசபையினரே கொடுக்கவேண்டு மென்று தீர்மானிக்கப்பட்டது. [ஆசிரிய கலாசாலைப் பயிற்சிபெற்றஆசிரியர்களின் ஆரம்பச் சம்பளம் ரூபா 43 ஆக இருந்த காலம். நிருவாகசபையினரோ சிறு தொழிலாளர் எனினும் நிருவாகசபை அங்கத்தினர் ரூபா 50 வீதமும் தலைவர் அவர்கள் ரூபா 100ம் உதவிக் காணியை வாங்குதல் வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.] 1940ஆம் ஆண்டு முடிவில் சந்தாப் பணமாகவும் நன்கொடையாகவும் பெற்றுச் சேகரித்தபணம் ரூபா 548 சதம் 40 ஆகும். இத் தொகையில் சன்மார்க்கசபையின் அக்கால நிருவாகசபையினரால் (1940, 41) உவந்தளிக்கப்பட்ட நன்கொடைப் பணம் ரூபா 275 ஆகும்.

குரும்பசிட்டி, திரு. கதிரிப்பிள்ளை நன்னிக்குட்டி அவர்களின் மனைவி செல்லமுத்து அவர்களுக்குரிய 'பரத்தைப்புலம்' என்னும் காணியிற் கிழக்குப்பக்கமாக 3 பரப்பு நிலம் ரூபா 600ஆக வாங்கப்பட்டு புன்னாலைக்கட்டுவன் பிரசித்த நொத்தாரிசு திரு. நா. தம்பையா அவர்களால் 1940ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ஆந் திகதி 584ஆம் இலக்கத்தின்கீழ் உறுதி முடிக்கப்பட்டது.

இரண்டாவது உலக மகாயுத்தம் ஆரம்பமாயிற்று. பணமந்தமும் உணவுப் பொருட் பஞ்சமும் ஏற்பட்டன. விலைவாசி உயர்ந்தது. அரிசிப் பங்கீட்டுப் புத்தகம் ஏற்படலாயிற்று. அயற் றேசங்களிலுள்ள உற்றார் உறவினர்பற்றிச் சஞ்சலமேற்படலாயிற்று. இந்த நிலைமையில் 'சன்மார்க்க சபை'யினர் நிரந்தர கட்டிடம் அமைக்கவேண்டுமென்று மனப்பால் குடித்தனர். 1941ஆம் ஆண்டு ஆனி மாதம் 6ஆந் திகதி நிரந்தர கட்டிடத்துக்குரிய அத்திவாரக்கல் நாட்டு விழா நடந்தேறியது. தொடர்ந்து பத்திரிப்பு மட்டம்வரை கட்டப்பட்

டது. கட்டிடநிதி சேகரிப்பியக்கம் ஆரம்பமாயிற்று. இத்திருப்பணிக்கு அன்பர்கள் மனமுவந்து உதவுவ தாக வாக்களித்த தொகை ரூபா 645ஆகும். இதிற் சேகரிக்கப் பட்டது ரூபா 73 ஆகும். யுத்த அபாய பயங்கர நினைவுகள் எந்த முயற்சிக்குந் தடையாக விருந்தன. கட்டிடத்தை எங்ஙனம் நிறை வேற்றுவது என்பதில் நிருவாக சபையினரிடையே முரண்பாடான கருத்துக்கள் தோன்றின. காரிய மந்தம் ஏற்பட்டது.

5-7-43இல் கூடிய நிருவாகசபை யிற் சபைக் கட்டிடம்பற்றி யோசிக் கப்பட்டது. நிருவாக சபையினர் ரூபா 500 நன்கொடையளிப்பதாக வும், இத் தொகையைக் கொண்டு தலைவர் அவர்கள் கட்டிடவேலையை ஆரம்பிக்கவேண்டுமெனவும், அவர் களே கட்டிடத்தை நிறைவேற்ற வேண்டுமெனவும், இதனாலேற்படும் மீதிக்கடனை வருவாய் வருமிடத்து எடுக்கலாமெனவுந்தீர்மானஞ்செய் யப்பட்டது. ஆனால் இவ்வொழுங் கும் நடைமுறையில் அசாத்தியமா யிற்று. கட்டிடவேலை ஸ்தம்பித் தது. 24-2-45இல் தலைவர் அவர் கள் தாம் கட்டிடவேலையைக் கட்டு வித்துத் தரும் அரும் பணியை ஏற் றுக் கொண்டனர். நிருவாக சபை யினர் சபைக்குரிய தளபாடங்கள் செய்வித்துதவும் பணியை ஏற்றுக் கொண்டனர். நிரந்தர கட்டிடப் பிரவேச விழா விய ஹு புரட்டாதி மீ 16 ஆந் திகதி (5-10-46) சனிக் கிழமை விஜயதசமியன்று காலை 6-30 மணிக்குத் தேவார பாராய ணத்துடன் ஆரம்பமாயிற்று. நமது கிராமத்திற் தொன்று தொட்டு வசித்துவரும் வேதாரணியக் குரு பரம்பரையின் வழிவந்த உயர்திரு. சு. வேதையாக்குருக்கள் அவர்கள் சைவசமய ஆசார முறைப்படி கட்டிடப் பிரவேச விழா வைப வத்தை நடாத்தி வைத்தார்கள். சபையின் ஆரம்ப நாளன்று தாபிக் கப்பட்ட இலக்குமிதேவி, சரஸ்வதி தேவி திருவுருவப் படங்கள் மங்கள வாத்திய சகிதமாய்ப் பூசை செய் யப்பெற்றன. பிரவேச விழா காலை 8 மணியளவில் இனிது நிறை வேறிற்று. யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை, கலைப்புலவர் திரு. க. நவ ரத்தினம் அவர்கள் அனுசரணை யுடன் நடைபெற்ற 'கலாநிலையம்' போன்று 'சன்மார்க்க சபை'யும் அமைய வேண்டுமென்பதே 'சன்மார்க்க சபை' யினரின் கனவாகும். சபைமண்ட பத் திறப்புவிழா வியவருடம் புரட்டாதி மாதம் 26ஆம் திகதி (12-10-46) சனிக்கிழமை மாலை 6 மணியளவில் தமிழர் பண்பாட் டின் வழி வந்தவரும் சிங்கள மக்க ளின் பிரதிநிதிகளாலும் ஏகமன தாக அங்கீகரிக்கப்பட்டு அரசாங்க சபைத் தலைவராக அரும்பணி புரிந் தவருமான சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி அவர்கள், தேவார பாராயணத்தின் பின் மங்கல வாத்தியம் ஒலிக்க, அலங்கார மாக அமைக்கப்பட்ட மண்டபத் தைத் தீபமேற்றித் திறந்து வைத் துத் தமது திறப்புரையை நிகழ்த் தினர்.

நமது கிராமத்திற் பிறந்து வளர்ந்து நியாயதுரந்தரராகத் தொழில்புரியும்நோக்கமாக யாழ்ப் பாணத்தில் வசித்துவந்தவரும், யாழ்ப்பாணம்நகரசபைத்தலைவரா யமர்ந்து, இன்று காட்சி தரும், மாநகர சபைக் கட்டிடத்திற்கு அத்திவார மிட்டவருமான, திரு. R. R. நல்லையா, J. P., U. P. M., M. B. E. அவர்கள் விழாவுக்குத் தலைமை தாங்கி தலைமைப் பேருரை நிகழ்த் தினர். சைவசமயத்திலும் தமிழி லும் புலமைபெற்ற சேர் பொன். இராமநாதனின் மருமகனும் அர சாங்கசபை அங்கத்தவருமாகிய

திரு. சு. நடேசபிள்ளை, B. A., B. L. அவர்கள், காந்தீயவாதியும் பேரறிஞருமான திரு. S. H. பேரின்பநாயகம் அவர்கள், வழக்கறிஞர்களும் சமூக சேவையாளர்களுமான திரு. S. R. கனகநாயகம், திரு. M. பாலசுந்தரம் என்போர் விரிவுரை நிகழ்த்தி ஆசிஉரை வழங்கினர். காரியதரிசி வந்தனோபசாரம் கூறியபின் தேவார பாராயணத்துடன் திறப்புவிழா இனிது நிறைவேறியது.

அவ்வாண்டுத் தொகுப்பறிக்கை:

"சபை வளர்ச்சியிலும் சபைக்குரிய நிரந்தர ஸ்தானத்தை அமைப்பதிலுமே சபை விசேட கவனம் செலுத்தியது. நிருவாக சபையினர் கஷ்டங்கள், நிறைந்த இக்காலத்தில், தம்மால் இயன்றளவு முயற்சி எடுத்து இந்நிலையத்துக்குரிய ஸ்தானத்தைப் பெறத் தம்மாலான பொருளுதவி புரிந்தும், அன்பர்கள் பலரதும் நன்கொடையைப் பெற்றும் கட்டிடத்தின் ஆரம்ப பகுதியை அமைத்தனர். மறுபடியும் இவ்வருடம் தமக்குட் பொருள் திரட்டிப் புதிய கட்டிடத்தின் உபகரணச் சாமான்கள் பலவற்றைப் பெற எடுத்துக்கொண்ட முயற்சிகளும் போற்றப்படற்குரியன.

"இன்னும் நிருவாக சபையினரின் வேண்டுகோட்கிணங்கி, சங்கத் தலைவர் தமது சொந்தச் செலவிற் கட்டிடத்தைப் பூர்த்தியாக்கும் பொறுப்பை ஏற்று இவ்வாண்டிலேயே அதனைப் பூர்த்திசெய்தமை மிகவும் போற்றப்படற்குரிய அரிய பணியாகும். இவ்வரும் பணியை முற்றுவித்த தலைவருக்கு நிருவாக சபையினரின் நன்றியறிதல் என்றும் உரியதாகுக.

"'சன்மார்க்க சபை' வளர்ச்சி கருதி இவ்வாண்டிற் புதிய அங்கத்தவர்களைச் சேகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டு இவ்வூர்வாசிகளில் உள்ளூரிலும் வெளியூரிலுமுள்ள 34 புதிய நண்பர்களை இச்சபை அங்கத்தவர்களாக ஆக்கிக்கொண்டது. அங்ஙனம் புகுந்த ஷெ நண்பர்களை நாம் மனமார வாழ்த்துகின்றோம். இங்ஙனமாக நிருவாகசபையும் முக்கியமாகத் தலைவரும் இச் சபையின் எதிர்கால சேமத்திற்கு இவ்வருடத்தில் அடிகோலினர் என்று கூறுதல் மிகவும் பொருத்தமுடைத்து".

மனப்பண்பு சிதறுண்ட சமுதாயத்திற்கு நல்ல மருந்து சன்மார்க்கமே.

ஜனநாயகம் என்பது மனிதனை மனிதனாக மதிப்பது. இதுவே மாண்புறு ஜனநாயகம்.

மேல்நாட்டார் இலக்கியத்துக்கே இலக்கணங் கண்டார்கள். தமிழன் வாழ்க்கைக்கும் இலக்கணங் கண்டான்.

சேய்நாட்டிற் பிறந்த நாவலர்மூலம் தாய்நாட்டிற் பிறந்த நாம் சைவ விளக்கம் பெற்றோம். அப் பெரியார்போல் மற்றும் பலர் பிறக்கவேண்டும்.

—சன்மார்க்க சபையில் குன்றக்குடி அடிகளார்

# சன்மார்க்க சபையின் உப பிரிவுகள்

ஒன்றாய் முளைத்தெழுந் தெத்தனையோ கவடுவிட்டு
நன்றாக வைத்தென்னை நாய்சிவிகை யேற்றுவித்த
என்றாதை தாதைக்கும் எம்மனைக்குந் தம்பெருமான்
குன்றாத செல்வற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

— திருவாசகம்

## உப பிரிவுகள் :

| | | |
|---|---|---|
| 1. | மணிவாசக நூல்நிலையம், வாசிகசாலை. | 1934 |
| 2. | சன்மார்க்க ஐக்கியநாணய சங்கம். | 1935 |
| 3. | சன்மார்க்க கைப்பந்தாட்டக் கழகம். | 1935 |
| 4. | சன்மார்க்க சனசமூக நிலையம். | 1947 |
| 5. | சன்மார்க்க கிராமமுன்னேற்றச் சங்கம். | 1948 |
| 6. | சன்மார்க்க இளைஞர் சங்கம் விளையாட்டுக் கழகம். | 1951 |
| 7. | சன்மார்க்க மாதர் சபை. | 1953 |
| 8. | சன்மார்க்க மாதர் ஐக்கியநாணய சங்கம் | 1954 |
| 9. | சன்மார்க்க நாடக மன்றம். | 1955 |
| 10. | இந்துசமய விருத்திச் சங்கம். | 1958 |
| 11. | பால் நிலையம். | |

சன்மார்க்க சபையின்


# போஷகர்கள் — 1966




ஸ்ரீமதி நா. பொன்னையா அவர்கள்



திரு. அ. அம்பலவாணர் அவர்கள்



திரு. த. சின்னத்துரை அவர்கள்




திரு. சிவா பசுபதி அவர்கள்

## சன்மார்க்க சபை நிர்வாகஸ்தர்கள் (தொடர்ச்சி)




திரு. [illegible] சபாரத்தினம் அவர்கள்



திரு. சி. இரத்தினம் அவர்கள்



திரு. ஆ. முத்தையா அவர்கள்



திரு. ம. சபாரத்தினம் அவர்கள்

# சன்மார்க்க சபை — 30 வருட வரலாறு

(சுருக்கம்)

## முதலாவது ஆண்டு: 28-4-35 வரை

சன்மார்க்க சபை பவ ஆண்டு ஐப்பசித் திங்கள் முதலாந் தேதி விஜயதசமித் தினமாகிய புதன்கிழமை மணிவாசக நூல் நிலைய மண்டபத்தில் நிறுவப்பட்டது. எமது ஊரிலுள்ள அம்பாள் ஆலயத்தில், தாசியர் நடனம்— சின்னமேளம்— ஒழிக்கப்பட்டது. தென்னிலங்கையில் மலேரியாச் சுரத்தாற் கஷ்டப்படுபவர்களுக்கு 22 ரூபா 75 சதம் சேகரித்துப் பல துளியுடன் இதுவுமோர் சிறு துளியெனச் சேருமாறு அனுப்பி வைக்கப்பட்டது. மயிலிட்டிக் கிராமசபைத் தேர்தலில், சபைத் தலைவர் திருவாளர் நா. பொன்னையா அவர்களைக் குரும்பசிட்டி வட்டாரத்துக்கு ஓர் அங்கத்தவராக நிற்கும்படி வேண்ட, அவர் அதற்கு இசைந்து போட்டியிட்டு ஜெயம் பெற்ருர்.

## இரண்டாவது ஆண்டு: 11-5-36 வரை

7 திருவாசகசபைக் கூட்டங்களும் 5 பொதுக்கூட்டங்களும் நடைபெற்றன. சலவைத் தொழிலாளி ஒருவரைக் குடியிருத்த வேண்டுமென்று முயற்சி செய்யப்பட்டது. ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தாரின் பிரவேச பண்டித பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மாணவர்களை ஒன்று சேர்த்து ஒரு வகுப்பு சபை மண்டபத்தில் ஆரம்பிக்கப்பட்டது. பரீட்சைக்குத் தோற்றிய மூவரில் திரு. ந. சிவகுரு என்பவர் சித்தியடைந்தார். சன்மார்க்கசபைக்கென ஒரு காணி விலைக்கு வாங்கவேண்டுமென்று தீர்மானம் செய்தனர். இரண்டாவது ஆண்டு நிறைவுவிழா, சைவாசிரியகலாசாலை அதிபரும் மயிலிட்டிக் கிராமசபைத் தலைவருமான திரு. சி. சுவாமிநாதன், பி. ஏ. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

## மூன்றுவது ஆண்டு: 25-4-37 வரை

மாணிக்கவாசகசுவாமிகள் குருபூசை, சரஸ்வதி பூசை, குமரகுருபர சுவாமிகள் விழா, மகாத்மாகாந்தி பிறந்ததின விழா, வரகவி சுப்பிரமணியபாரதி விழா, கோபால கிருஷ்ண கோகலே பிறந்ததினவிழா என்பன நடைபெற்றன. இவ்வூரிலுள்ள ஆசிரிய தராதரப்பத்திரப் பரீட்சார்த்திகளுக்கு ஒரு வகுப்பு ஆரம்பித்து ஒழுங்கான வேலை செய்யப்பட்டது. மயிலிட்டிக் கோவிற்பற்றில் அரசினர் வைத்தியசாலை ஒன்று அமைக்கச் செய்தற்கு வேண்டிய மனு சுகாதார மந்திரி, மாகாண அதிபர், பிரதம வைத்திய அத்தியட்சர், அரசாங்க சபைப் பிரதிநிதி, கிராமசபையினர் என்பவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. தேசபக்தர் தூத்துக்குடி திரு. வ. உ. சிதம்பரம்பிள்ளை அவர்களின் பிரிவைக் குறித்து அனுதாபப் பிரேரணை அவர் மகன் ஆறுமுகம்பிள்ளைக்கு அனுப்பப்பட்டது.

## நான்காவது ஆண்டு: 8-5-38 வரை

சன்மார்க்க சபையின் ஆரம்பகால வளர்ச்சியில் அதிகம் பற்றுக்கொண்டு உழைத்த ஆசிரியர் திரு. வ. பொன்னுக்குமாரு அவர்களின் ஞாபகார்த்த விழாவும், ஞாபகார்த்த நூற்ருெகுதித் திறப்புவிழாவும் நடைபெற்றன. மணிவாசக நூல்நிலையத்திலிருந்து அம்பாள் ஆலயம் வரையுமுள்ள ஒழுங்கையிலுள்ள பற்றைகள் வெட்டிச் சுத்தஞ் செய்யப்பட்டன. வருடாந்தக் கூட்டம் யாழ்ப்பாண நகரசபைத் தலைவரும் வழக்கறிஞருமாகிய திரு. சாம் ஏ. சபாபதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 'தமிழ்மகள்' ஆசிரியை ஸ்ரீமதி ம. மங்களம்மாள் 'பெண்களும் தேச ஊழியமும்' என்பதுபற்றி உபந்நியாசம் செய்தார். இவ்வாண்டு அநேக நூல்கள் சேகரிக்கப்பட்டன. இங்ஙனமாக மணிவாசக நூல் நிலையம் சிறந்த நூல்நிலையமாக விளங்க அடிகோலப்பட்டது.

இவ்வருடம் முதலாக நால்வர் குருபூசை விழாக்களும், சரஸ்வதி, விஜயதசமி பூசைகளும், பாரதிதினம், மகாத்மாகாந்தி

யடிகள் பிறந்ததினம், நாவலர் குருபூசை விழா என்பனவும் ஒழுங்காக வருடந் தோறும் நடைபெற்று வந்திருக்கின்றன.

## ஐந்தாவது ஆண்டு: 4-6-39 வரை

இவ்வருடத்தில் சன்மார்க்கசபை பணி யாற்றிய வேலைகளில் இரண்டு குறிப்பிடத் தக்கன. ஒன்று நீண்டகாலமாக மயிலிட்டிக் கோவிற்பற்று வாசிகள் தங்களுக்கு ஒரு மத்திய மருந்துச்சாலையை மயிலிட்டிக் கோவிற் பற்றின் மத்தியஸ்தானத்தில் அமைத்துக் கொடுத்துதவுமாறு அரசினரை வேண்டிக் கொண்டனர். ஆரம்பத்தில் உப மருந்துச் சாலை (Visiting Dispensary) அமைப்பதற்கு அரசினரால் தெரிவு செய்யப்பட்ட இடம் மயிலிட்டி உடையாரின் பகுதியைச் சேர்ந்த தல்ல என்பதையும், மத்தியஸ்தானமல்ல என்பதையும் எடுத்துக் காண்பித்து, மயிலிட்டிக் கிராம சங்கத்தின் மத்தியஸ்தான மொன்றைத் தெரிவு செய்து அவ்விடத்திலேயே உப மருந்துச்சாலை அமைக்கப்பட வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்தும், பேட்டி கண்டு பேசியும் அதன் பலனாக 1939ஆம் ஆண்டில் கிழமைக்கு இரண்டு நாள் உபயோகத்திலிருக்கும் அரசினர் உப மருந்துச்சாலை குரும்பசிட்டி — வவுணத்தம்பைச் சந்தியில் ஸ்தாபிக்கப்பட்டது.

இரண்டாவதாக, தபாற்பெட்டிக்குப் பதிலாக நிலையான தபாற்பெட்டித் தூண் ஒன்று வேண்டுமென்றும் அது எமது கிராமத்தின் மத்தியில் எல்லோருக்கும் வசதியான ஓரிடத்தில் நிறுவப்பட வேண்டுமென்றும் விண்ணப்பஞ் செய்து இப்பொழுதுள்ள நிலையான தபாற்பெட்டி அமைக்கப் பட்டது.

## ஆறாவது ஆண்டு: 30-6-40 வரை

உலக மகா யுத்த பீதி மக்களிடையே தோன்றி வளர்ந்தமை காரணமாக நன் முயற்சிகளிலே ஈடுபடுவது கஷ்டமாயிற்று. எனினும் சன்மார்க்க சபையினர் சபைக் குரிய காணி வாங்குவதற்குரிய பணம் சேகரிக்கும் விடயமாக 'வைத்தியக் கைமுறைகள்' என்ற புத்தகங்களை விற்று நிதி சேகரிக்கும் முயற்சி ஆரம்பிக்கப்பட்டது. யுத்த புதினங்களில் ஆர்வமுள்ள மக்களுக்கு மணிவாசக நூல்நிலையம்— வாசிகசாலை நன்கு உபயோகமாயிற்று.

## ஏழாவது ஆண்டு: 10-8-41 வரை

இவ்வருடம் சன்மார்க்க சபையின் சரித்திரத்திலேயே பொன்னெழுத்துக்களாற் பொறிக்கப்படவேண்டிய வருடமாகும். சபைக்குரிய காணி வாங்கப்பட்டது. நிரந்தர கட்டிடத்துக்குரிய அத்திவாரக்கல் நாட்டப்பட்டது.

## எட்டாவது ஆண்டு: 1-6-42 வரை

இவ்வருடம் புதிய அங்கத்தவர்களைச் சேர்ப்பதற்கு வேண்டியன செய்யப்பட்டன. சன்மார்க்க சபையின் ஆதரவில் சபைத் தலைவரால் ஒரு நெசவுசாலை நிறுவப்பட்டு நடாத்தப்பட்டது. யுத்த காலப் பஞ்சத்தினால் கிராமத்தில் களவுகள் நடைபெற்றமையாற் கிராமப் பாதுகாப்புக்கான ஒழுங்கு முறைகளை ஆராய்ந்து தகுந்த முறையில் இரவு முழுவதும் பாதுகாப்புக் கான 'தொண்டர் சபை'யை நிறுவி ஒழுங்காக நடாத்தியது.

## ஒன்பதாவது ஆண்டு: 13-6-43 வரை

இவ்வருடம் கட்டிட வேலைக்குரிய நிதி திரட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆனால் யுத்த பயங்கர காலம் எனினும் ரூபா 125/- சேகரித்து அப்பணத்திற்குக் கட்டிடத்துக்கு இன்றியமையாது தேவைப் பட்ட 27 அடி நீள இரும்புத் தண்டவாளம் வாங்கப்பட்டது.

## பத்து, பதினொராவது ஆண்டுகள்: 4-3-45

இந்த ஈராண்டு காலமும் சன்மார்க்க சபையின் சாதாரண கஷ்டகாலமாகும். பொதுத் திட்டத்துக்கு அமைய வழமை யாக நடைபெறும் விழாக்களே நடைபெற்றன. கட்டிட நிதி, கட்டிட அமைப்பு இவைகள்பற்றிய விடயங்களே பெரும் பிரச்சினைகளாக இருந்தன. பணமின்மை

ஒருபால்; இலட்சியம் ஒருபால். நிதி சேகரிப்பதற்குரிய வழிவகைகளும் தென்படவில்லை. சன்மார்க்க சபையின் இலட்சியத்தையும் கைவிடுவதற்குத் தயாராக இல்லை. திருவருளால் சபைத்தலைவர் தமது சொந்தச் செலவிற் கட்டிடத்தைப் பூர்த்தியாக்கும் பொறுப்பை ஏற்க, நிருவாகசபையினர் புதிய கட்டிடத்திற்குரிய உபகரணங்களிற் பலவற்றைப் பெறும் பொறுப்பை ஏற்றனர். புதிய அங்கத்தினர் பலர் சேர்க்கப்பட்டனர்.

## பன்னிரண்டாவது ஆண்டு: 22-9-46 வரை

திருவருளால் சபைக்குரிய சொந்தக் கட்டிட வேலை பூர்த்தியாக்கப்பட்டுத் திறப்பு விழாக்களும் நடைபெற்றன. சபைக்குரிய புதிய உபவிதிகள் தயாரிக்கப்பட்டன.

## பதின்மூன்றாவது ஆண்டு : 1-6-47 வரை

சன்மார்க்க சபை நிகழ்ச்சிகள், மணிவாசக நூல் நிலையம், வாசிகசாலை சபைக்குரிய புதிய அலங்காரக் கட்டிடத்திலே நடைபெற்றன. இளைஞர்களால் நடாத்தப்பட்டுவந்த 'கலைமகள் நூல்நிலையம்' என்னும் ஸ்தாபன அங்கத்தினர் தம்மிடமிருந்த புத்தகங்களையும் தளபாடங்களையும் சன்மார்க்க சபைக்கு உதவித் தாமும் இச்சபையின் அங்கத்தவராகச் சேர்ந்தது மிகவும் பராட்டப்படவேண்டிய தொன்று. சபையின் தேவைக்கு வேண்டிய உபகரணப் பொருள்கள், வாங்குகள் பெறப்பட்டன.

## பதினான்காவது ஆண்டு : 13-9-48 வரை

மகாத்மாகாந்தியின் துக்கதின விழாவும் காந்தி அடிகளின் அஸ்தி கரைப்பு விழாவும் சிறப்பானமுறையில் நடைபெற்றன. குரும்பசிட்டிக்கு ஓர் உபதபாற்கந்தோர் அவசியம் வேண்டும் என்று கௌரவ தபால் மந்திரிக்கு விண்ணப்பஞ் செய்யப்பட்டுப் பேட்டியுங் கண்டு பேசப்பட்டது. இவ்வூர் கிராமசங்க ஒழுங்கைகளை D. R. C. தெருக்களாகப் பெருப்பிப்பதற்குரிய முயற்சி ஆரம்பிக்கப்பட்டது. சன்மார்க்க சபையின் உபசபைகளுள் ஒன்றாக 'கிராம முன்னேற்றச் சங்கம்' ஆரம்பிக்கப்பட்டது. அரசினர் வானொலிகளைக் கிராமங்களுக்கு விநியோகஞ் செய்யவிருந்ததை அறிந்து தபால் தந்திப்பகுதி மந்திரிக்கும் ஸ்தல ஸ்தாபன மந்திரிக்கும் விண்ணப்பஞ் செய்யப்பட்டது. 'இலக்கிய மஞ்சரி' பிரசுரிக்கப்பட்டது. வயாவிளான் அரசினர் மத்திய கல்லூரி இடமாற்றம் செய்யப்படலாகாது என்று கல்வி மந்திரிக்கு மனுப்பண்ணியும் நேரே பேட்டி கண்டும் செயற்பாலனவற்றைச் செய்து முடித்தது.

## பதினைந்தாவது ஆண்டு : 11-7-49 வரை

இந்த ஆண்டிலே சன்மார்க்க சபை சமயம், ஒழுக்கம்; நீதி; கலை, கல்வி; கமத்தொழில், கைத்தொழில்; சுகாதாரம்; விளையாட்டு; கிராம பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி; விளம்பரம் ஆகிய உபசபைகளாக வகுக்கப்பட்டு, ஒவ்வோர் உபசபையும் தத்தம்பகுதி வேலைகளைக் கவனித்துச் செயற்பட ஆரம்பித்தது. வருடாந்தக் கூட்டம் 11—7—49ல் நடைபெற்றது. அவ்வாண்டுத் தொகுப்பறிக்கை :

"சன்மார்க்க சபை சென்ற பதினைந்து ஆண்டுகளாக இவ்வூரில் தொண்டாற்றி வருகிறது. ஆயின் இவ்வாண்டிலேயே அரசினரால் ஸ்தாபிக்கப்படும் கிராமமுன்னேற்றச் சங்கத்தை உப சங்கமாகக்கொண்டு சமயம், ஒழுக்கம்; நீதி; கலை, கல்வி; தொழில்; சுகாதாரம்; விளையாட்டு; கிராம பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி; விளம்பரம் என்னும் எட்டுப் பெரும் பிரிவுகளாகத் தன்னை வகுத்து எட்டுப் பகுதிகளாக வேலை செய்து வந்தது. இந்த உற்சாகம் ஏற்பட்டமைக்கு ஒரு முக்கிய காரணம் நம் தேவைகள் அரசினர் உதவியுடன் விரைவிற் பூர்த்தி செய்யப்படும் என நிருவாக அங்கத்தினர்கள் எண்ணியமையே.

"முதலில் இவ்வூரில் இதற்குமுன் எவரும் தொடங்காத ஒரு பெரியவேலையைச் செய்ய ஆரம்பித்தோம். கிராமசங்க ஒழுங்கையே

யன்றி D. R. C. அல்லது P. W. D. தெரு என்பவற்றின் மணமும் வீசப்பெருத இவ்வூர்ச் சிற்றெழுங்கைகளை D. R. C. தெருவின் அளவாக அகல்விக்க முனைந்தோம். அவ்வேலையில் இந் நிருவாகசபையின் ஓர் உபசபையினர் செய்த வேலைகளை ஊர் நன்கறியும். பலவித மனப்பான்மையுள்ள மக்களிடையே, இவ்வேலை செய்வது மிகவும் கஷ்டமாயிருந்தது என்பதை நாம் சொல்லாமலே நீங்கள் அறிவீர்கள். புதிதாகக் கதியால் நடுதல் வேலியடைத்தல் முதலிய செலவுகளுக்காக இச்சபை 539 ரூபா செலவு செய்திருக்கிறது. அதன் பெரும் பகுதி பல உபகாரிகளிடமிருந்தும் இவ்வூர் ஐக்கிய பண்டகசாலை இலாபப்பணத்திலிருந்தும் கிடைத்தது. அவ் வுபகாரிகளுக்கும் பண்டகசாலை உறுப்பினருக்கும் நாம் மிகவுங் கடமைப்பாடுடையவர்களாய் இருக்கிறோம். தொடங்கிய வேலையின் 99%மான வேலையைச் சபை திருப்திகரமாகச் செய்து முடித்துவிட்டது. இதற்கு அயலூர் வாசிகளின் உதவியும் நமக்குக் கிடைத்தது. அவர்களுக்கு இச்சபை மிகுந்த நன்றி தெரிவிக்கிறது.

''நாம் செய்த இவ்வேலையைப் பூரணமாக நிறைவேற்றுமாறு இச்சபை பகிரங்க வேலைப் பகுதியினருக்கும் ஏனையோர்க்கும் மனுச்செய்தது. ஏறக்குறைய 9 மாதங்கள் ஆய்விட்டன; அம்முயற்சிகள் நிறைவேறுதற்குரிய சில அறிகுறிகள் இப்போது தென்படுகின்றன.

i. **சமயப்பகுதியினர்** நாயன்மார் குரு பூசைகளை நாடாத்திவருகின்றனர். பிரதி ஞாயிறுதோறும் சங்கீத ஆசிரியர் ஒருவர் தேவாரப்பாடல்களைப் பண்ணுடன் சிறுவர்களுக்குப் பயிற்றி வருகிறார்.

ii. **கைத்தொழிற் பகுதி** பன்னவேலை அபிவிருத்தியிற் கவனமெடுத்தது. சபைப்பணம் ரூபா 50ஐ மூலதனமாகக் கொண்டு ஊர்ப் பன்னவேலைகளுக்கு ஊக்கமளித்தது. வெங்காயக் கூடை பின்னுதலிற் பலருக்குப் பயிற்சியளித்திருப்பினும் போதிய வருவாய் கொடாமையால் இம் முயற்சியில் ஈடுபடுவார் இலராயினர். பப்படம் செய்வதற்குப் பயிற்சியளிக்க ஆசிரியரை உதவுமாறு அரசினரைக் கேட்டிருக்கிறது.

iii. **சுகாதாரம் — விளையாட்டுப் பகுதி :** இவ்வூரில் மலகூடம் கட்டுவதற்கு உரிய வேலையை இப்போது ஆரம்பித்திருக்கிறது. இப்பகுதியினர் சிறுவர் உதைபந்தாட்ட நிலையம் ஒன்றை நடாத்தி வருகின்றனர்.

iv. **பாதுகாப்புப் பகுதியினர்** தொண்டர் படை அமைத்து ஏழு உபபிரிவுகளாகச் சிறு குழுக்களை அமைத்து கிழமை முழுவதும் பொலீஸ் பகுதியினர் உதவியுடன் பாதுகாப்பை நன்கு நடாத்தி வருகின்றனர்.

v. **கலை, கல்விப் பகுதியினர்** இவ்வாண்டு 8 விசேட கூட்டங்களை நடாத்தினர். இவ்வாண்டு இச்சபையின் வாசிகசாலை பல அன்பர்களின் நன்கொடைப் பண உதவியுடன் திருப்தியாக நடைபெற்றது.

'' பெரிய புராணத் தொகுப்புக்கள் மூன்றை உவந்தளித்த எஸ். எஸ். சண்முகநாதன் புத்தகசாலை அதிபர் அவர்களுக்கும், கணேசையர் தொல்காப்பியப் பதிப்புக்களை உவந்தளித்த தனலக்குமி புத்தகசாலையினருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறோம்.

'' இச் சபையின் வெளியீடாகிய 'இலக்கியமஞ்சரி' என்னும் பாடபுத்தகத்தின் பேரால் தனலக்குமி புத்தகசாலையினர் ரூபா 300 அளித்தனர் என்னும் செய்தியையும் தெரிவிக்கிறோம்.

'' மேலே கூறப்பட்ட வேலைகள் திருப்தியானவை—போதுமானவை என்று நாம் கூறவில்லை. நமக்கு உற்சாகங் கொடுப்பாரில்லை. பொது வேலைகளில் ஈடுபட முன்வருவோர் குறைவு. தம் குடும்பவாழ்வு, சொந்த மனஸ்தாபங்கள் பற்றிப் பலர் பொதுவாழ்வில் ஈடுபட மறுக்கிறார்கள். இந்த மனப்பான்மை ஒழிய வேண்டும். சிறுதுளி பெருவெள்ளமல்லவா? ஏதோ

நம்மாலானதை ஜனநாயக ரீதியிற் செய்வோமென முன்வாருங்கள். ஊரிற் பொது வேலை செய்யப் பலர் முன்வருதல் கிராமம் முன்னேற்றமடையும் என்பதற் கறிகுறி.

"கள் இறக்குதலை ஒழிக்க வேண்டுமென்று விரும்பி அதற்கான காரியங்களைச் செய்தோம். அது சித்திக்கவில்லை. காரணம் என்ன? நமக்குப் போதிய உதவியும் உற்சாகமும் ஊட்டப்படாமை மாத்திரமன்றி, அதனைச் சிலர் எதிர்த்ததும் காரணமாயிற்று. நமது தோல்வியைத் தெரிவிக்க நாம் வெட்கமடையவில்லை.

"இதே சமயத்தில் இவ்வூரிலுள்ள பெருமக்களது பொதுப் பேருதவியைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. இவ்வூரிற் பிரசவ வைத்தியசாலை ஒன்றை அமைக்க நிலம் இலவசமாகக் கொடுக்கச் சில அன்பர்கள் முன்வந்தார்கள். அவ்விடத்தில் நடைபெறவேண்டிய வேலைகளுக்கு இயன்ற பண உதவி செய்யச் சிலர் முன்வந்திருக்கிறார்கள். இவர்களை வாழ்த்திப் போற்றுகிறோம்.

"விளையாட்டுநிலம், வானொலி என்பவற்றைப் பெற இச் சபை விரும்பி மனுச் செய்தது; விளையாட்டுநிலம்பற்றி யாதொரு பதிலும் பெற்றிலேம். பாதுகாப்பான இடமும் போதிய அளவு விசாலமும் அழகான மண்டபமும் உள்ள இச் சபைக்கு வானொலி ஒன்று மிக அவசியம் என்பதை யாவரும் உணருவர். இச் சபை மண்டபத்துக்குச் சமுகமளித்த—இச் சபையுடன் தொடர்பு கொண்ட—உத்தியோகஸ்தர் பலர் இதனைத் தாமே வெளியிட்டனர். அங்ஙனமிருந்தும் பலமுறை நாம் வேண்டுகோள்களை அனுப்பியும் முதலாவது முறையில் நாம் சித்தியடையவில்லை. இரண்டாவது முறையிலாவது உரிய உத்தியோகஸ்தரால் அதற்கு நாம் சிபார்சு செய்யப்படாவிடின் அது மிகுந்த துன்பம் தருவதாகும்.

"எங்கள் சபைக்குப் பல அன்பர்கள் நன்கொடை உதவியுள்ளனர். 539 ரூபா நன்கொடையாகப் பெற்றோம். அவர்களுக்கு நமது மனமார்ந்த நன்றி உரியதாகுக.

"எதிர்காலத்தில் அரசினரிடமிருந்து எதனையும் எதிர்பாராத மனப்பான்மையுடன் கிராமசேவை செய்ய முன்வருமாறு இவ்வூர் வாசிகளாய உங்களை வேண்டுகிறோம்."

## பதினாறாவது ஆண்டு: 20-7-50 வரை

இவ்வருடம் சன்மார்க்கசபைக்கு அரசினர் வானொலி வழங்கினர். எமது கிராமத்திலே பலி நிறுத்தஞ் செய்யப்பட்டது. சமயப் பகுதியினர் தேவாரப் பயிற்சி வகுப்பு, சமயகுரவர் பெரியார் விழாக்கள் கொண்டாடினர். நீதிப்பகுதியினர் 6 தீர்ப்புக்களைச் செய்தனர். அவற்றுள் ஒரு முறைப்பாடு பின்பு நீதிமன்ற வழக்காயிற்று. நீதிப் பகுதியினரின் தீர்ப்புக்குச் சாதகமாகவே நீதிஸ்தலத்திலும் தீர்ப்பளிக்கப்பட்டது. கமத்தொழில் கைத்தொழிற் பகுதியினர் வெண்காயக்கூடை பின்னுதல், பப்படம் செய்தல், கோழிப்பண்ணை வளர்த்தல் என்னும் பகுதிகளில் முயற்சிகள் ஆரம்பித்தனர். சுகாதாரப் பகுதியினர் அரசினரின் ஒத்துழைப்புடன் மலசலகூடம் அமைக்கும் வேலையைச் செய்தனர். கிராம அபிவிருத்திப் பகுதியினர் வவுணத்தம்பை ஒழுங்கையிலிருந்து கடற்கரைக்குப் போகும் ஒழுங்கையைத் துப்புரவு செய்தனர். சபைத் தலைவர் திரு. நா. பொன்னையா அவர்களுக்கு அரசினர் சமாதான நீதிபதிப் பட்டமளித்துக் கௌரவித்தனர்.

## பதினேழாவது ஆண்டு: 29-12-51 வரை

சன்மார்க்கசபை தோன்றிய நாள்முதல் தம் ஆயுட்காலம்வரை சன்மார்க்கசபைத் தலைவராக அமர்ந்து சபைக்குரிய நிரந்தர கட்டிடத்தை நிறுவி அதன்மூலம் கிராமத்துக்கு அரும்பணி புரிந்த சபைத் தலைவர் காலஞ்சென்ற திரு. நா. பொன்னையா, J. P. அவர்களின் உருவப்படத் திறப்பு விழாவில் சென்னை சட்டசபை அங்கத்தினர் திரு. T. S. அவிநாசிலிங்கம் செட்டியார், 'கல்கி' ஆசிரியர் திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி, பன்மொழிப் புலவர் திரு. தெ. பொ. மீனாட்சி

சுந்தரனுர் ஆதியோர் பங்குபற்றிச் சிறப் பித்தனர். திருகோணமலைக் கோணேசர் ஆலயத் திருவுருவங்களை இவ்வூர் அம்பாள் ஆலயத்தில் வரவேற்று விசேட பூசைகள் நடைபெறவேண்டிய ஒழுங்கு செய்யப்பட் டது. சத்தியக்கலட்டி ஒழுங்கை—1 மைல் 1 பெர்லாங் நீளம்—அகல்விக்கப்பட்டது. சன்மார்க்க இளைஞர் சங்கம் புனருத்தார ணஞ் செய்யப்பட்டது. கதம்பக்கச்சேரி நடாத்தப்பட்டது. சன்மார்க்க சபை வள விற் கிணறு வெட்டுவிக்கப்பட்டது.

## பதினெட்டு, பத்தொன்பதாவது ஆண்டுகள் : 9-5-54 வரை

இந்த இரண்டு வருடங்களிலும் மலாயா தமிழ்ப்பண்ணைத் தலைவர் திரு. கே. இராம நாதன், சுவாமி சுத்தானந்த பாரதியார், குன்றக்குடி மகாசந்நிதானம் அருணசல தேசிக அடிகளார், கிராமமுன்னேற்றப்பகுதி அதிகாரி திரு. D. G. தயரத்தின, C.C.S., 'கலைமகள்' ஆசிரியர் கி. வ. ஜகந்நாதன், வரகவி சுப்பிரமணியபாரதியாரின் புதல்வி ந. சகுந்தலா பாரதி என்போர் சபைக்கு விஜயம் செய்து அறிவுரைகள் நிகழ்த்தினர். 'ஈழகேசரி'ப் பொன்னையா வீதியின் ஒரு பகுதியான சத்தியக்கலட்டி ஒழுங்கை 24 அடிக்கு விசாலப்படுத்தப்பட்டு 12 அடி அகலத்துக்குக் கற்பதித்துச் செப்பனிடப் பட்டது. பிரதான தேவைகளுள் ஒன்முன தபாற்கந்தோர் கிடைக்கப்பெற்றது. எங்கள் கிராமத்தின் ஒருபகுதி துண்டாடப் பட்டுப் புன்னுலைக்கட்டுவன் விதானைப் பிரி வில் இருந்தது. அப்பிரிவைக் குரும்பசிட்டி யுடன் சேர்க்கும்படி மனுச்செய்ததனுல் மயிலிட்டிதெற்கு விதானைப் பிரிவுடன் சேர்க்கப்பட்டுக் குரும்பசிட்டியுடன் இணைக் கப்பட்டது. கிராம சேமிப்பு இயக்கம் ஆரம்பித்து 138 சேமிப்புப் புத்தகங்களில் ரூபா 4500 வரை கிராமமக்கள் சேமித் துள்ளனர். சன்மார்க்க கூட்டுறவு வளர்ந் தோர் கல்விப் பாடசாலை ஆரம்பிக்கப்பட் டது. கமக்காரர் சங்கம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. சன்மார்க்க மாதர் கி. மு. சங்கம், சன்மார்க்க மாதர் ஐக்கிய நாணய சங்கம் ஆரம்பிக்கப்பட்டன.

## இருபதாவது ஆண்டு : 30-4-55 வரை


### சபைக்கு விஜயஞ்செய்த பெரியோர்களும் விசேட விழாக்களும்

இவ்வருடத்துள் 11 பொதுக்கூட்டங் களும், 14 நிருவாகசபைக் கூட்டங்களும் நடந்தேறின. காஞ்சிபுரம், சித்தாந்த சிகாமணி உயர்திரு. க. வச்சிரவேலு முதலியார் அவர்கள், வித்துவான் உயர்திரு. அருணைவடிவேல் முதலியார் அவர்கள், உலக சமாதான ஆலயம்—சுவாமி பரிபூரண பரஞ்சோதிமகான் அவர்கள், காரைக்குடி அழகப்பாக் கல்லூரி, (காலஞ்சென்ற) பேரா சிரியர், திரு. ஆ. முத்துசிவன் அவர்கள், திரு. சி. நமசிவாயம்பிள்ளை அவர்கள், நீச்சல் மன்னன் திரு. மு. நவரத்தினசாமி அவர்கள், கலைப்புலவர் திரு. க. நவரத் தினம் அவர்கள், அவர்தம் பாரியார், வட மாகாண அதிபர் திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்கள், வலிகாமம் வடக்குக் காரியாதி காரி திரு. நா. சிவஞானசுந்தரம் அவர்கள், கிராமமுன்னேற்ற அதிகாரி திரு. க. சுப்பிர மணியம் அவர்கள், வடபகுதி உதவி ஸ்தலஸ்தாபன அதிபர் திரு. து. இராசேந் திரா அவர்கள், சனசமூகநிலைய மேற் பார்வையாளர் திரு. வர்ணகுலசிங்கம் அவர்கள், ஐக்கியப்பகுதி அதிகாரிகள், பொற்கரை நாடுகளின் உலகத் தொழிற் சம்மேளன உத்தியோகத்தர் திரு. ஜே. எஸ். அண்ணன் அவர்கள் ஆதியோர் சபைக்கு விஜயஞ் செய்து அறிவுரைகள் நிகழ்த்தினர். இலங்கைச் சுதந்திரதினம், 'ஈழகேசரி'ப் பொன்னையா நினைவுநாள் என்பன சபையாரால் விசேடமாகக் கொண்டாடப்பட்டன.


### சபை பெற்ற விருதுகள்

இவ் வருடம் எங்கள் சபை அன்பளிப்பு களையும், வெற்றி விருதுகளையும் பெற்றதை யிட்டுச் சந்தோஷப்படுகிறது. சபை மேற் கொண்ட சமயப் பணிகளைப் பாராட்டித் தருமபுர ஆதீனம், பத்துத் தேவார இசைத் தட்டுக்களின் தொகுதி யொன்றை எமக் களித்துக் கௌரவித்தது. இத் தட்டுகள் (சிறந்த பாதுகாப்புடன்) யாழ்ப்பாணச் சமய ஸ்தாபனங்களின் பொது விழாக்களின் உபயோகத்திற்கு உதவப்பட்டன.

# வரவேற்பு வைபவங்கள்




பிரதம மந்திரி சேர் ஜோன் கொத்தலாவல அவர்களைச் சிசு—மாதா பராபரிப்பு நிலைய முன்றிலிற் சன்மார்க்க சபையினர் வரவேற்றல்.— 1954





கெக்கிராவாப் பட்டின சபைத் தலைவரானமை பற்றி திரு. க. தம்பிப்பிள்ளை அவர்களை வரவேற்றல்—1955

# சபை பெற்ற விருதுகள் — 1954




1. அதிகார் நாகநாதர் நினைவுக்கேடயம். 2. கிராம முன்னேற்றப் பகுதி அதிபர் (ப. ஈ. ந.) பரிசுக் கிண்ணம். 3. 'ஈழகேசரி' பொன்னையா நினைவுக் கேடயம்.

## 'ஈழகேசரி' பொன்னையா ஞாபகார்த்தப் பேச்சுப் போட்டி விருதுகள்



மேல்: மேற்பிரிவு, கீழ்ப்பிரிவுத் தங்கப் பதக்கங்கள்
கீழ்: மேற்பிரிவு கீழ்ப்பிரிவு வெள்ளிப் பதக்கங்கள்

யாழ்ப்பாணப் பகுதிக் கிராம முன்னேற்றச் சங்கங்களின் போட்டியில் சன்மார்க்கசபையும், வல்லன் கிராம முன்னேற்றச் சங்கமும் சமமான புள்ளிகள் பெற்று இரண்டும் முதலிடம் பெற்றன. அதற்காக எங்கள் கிராம முன்னேற்றச் சங்கத்திற்கு அதிகார் நாகநாதர் நினைவுக் கேடயம் (இல. 1) இலங்கைப் பிரதமர் அதி கௌரவ சேர் ஜோன் கொத்தலாவல அவர்களால் 29-9-54இல் அளிக்கப்பட்டது. (வருடத்தில் 6 மாதம் எங்கள் சபையும் 6 மாதம் வல்லன் கிராம முன்னேற்றச் சங்கமும் வைத்திருக்க ஒழுங்குகள் செய்யப்பட்டன.)

யாழ் — விநோதக் களியாட்ட விழாவிற் பங்குபற்றிய யாழ்ப்பாணப் பகுதிக் கிராம முன்னேற்றச் சங்கங்களின் போட்டியில் சன்மார்க்க கிராம முன்னேற்றச் சங்கமும், சன்மார்க்க மாதர் சபையும் அமைத்த காட்சி முதலிடம் பெற்றமைக்காக கிராம முன்னேற்றச் சங்க அதிகாரி (D. R. D.) ஞாபகப் பரிசுக்கிண்ணத்தை (இல. 2) இலங்கைப் பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவல அவர்கள் எங்கள் சபைக்கு அளித்தார்.

ஸ்ரீமதி நா. பொன்னையா அவர்களால், வலிகாமம் வடக்கில் வருடாவருடம் சிறந்ததாக வரும் கிராம முன்னேற்றச் சங்கம் ஒன்றிற்குப் பரிசாக அளிக்கப்பட வேண்டும் என்று கொடுத்த 'ஈழகேசரி' நா. பொன்னையா, J. P. அவர்களின் நினைவுக் கேடயம் (இல. 3), இம்முறை வலிகாமம் வடக்கில் முதலாவதாக வந்த எங்கள் கிராம முன்னேற்றச் சங்கத்திற்கு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

### சபையின் சேவை

i. 'ஈழகேசரி'ப் பொன்னையா வீதி: சுய முயற்சியாலும், ஆக்கவேலைகளாலும், சேவைகளினாலும் முன்னணி வகுத்து நிற்கும் இக் கிராமத்துக்குப் போக்குவரவு செய்ய ஏற்ற பகிரங்க வீதி ஒன்று இல்லாமையை உணர்ந்த இவ்வூர் மக்களும், சன்மார்க்க சபையும் 15-12-47 தொடக்கம் 6 வருடங்கள் தொடர்ந்து பாடுபட்டு, பொது மக்கள் ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான நிலங்களை உபகரிக்க, சபை கிராம மக்களின் உதவியோடு சபைப் பணத்தில் ரூபாய் 5000 செலவு செய்து 2 மைல் நீளமானதும் 12 அடி அகலமானதுமாயுள்ள கிராம ஒழுங்கையை 24 அடி அகலத்திற்குப் பெருவீதியாகச் செப்பனிட்டது. போக்கு வரவு மிக அதிகமாகவுள்ள இவ்வீதியை, பண வசதிக் குறைவாகவுள்ள மயிலிட்டிக் கிராம சங்கத்தினாலும் பராமரிக்க முடியாமற் போகவே இப்போது பிரயாணத்துக்குத் தகுதியற்ற நிலையில் அது இருக்கிறது. இதனை அரசினர் கையேற்க வேண்டுமென்று பிரதமர் அதி கௌரவ சேர் ஜோன் கொத்தலாவல அவர்கள் யாழ்ப்பாணப் பகுதிக்கு விஜயஞ் செய்தபொழுது 16-10-54இல் சபை அவரை வரவேற்று விண்ணப்பஞ் செய்தது.

முதலமைச்சர் இச் சபையின் வேண்டுகோளுக்குத் தம்மாலான உதவி புரிவதாக வாக்களித்தனர். ஆனால், அம் மனுவுக்கு 13-1-55 இல் போக்குவரவு மந்திரியின் நிரந்தரக் காரியதரிசியிடமிருந்து கிடைத்த பதில் சபைக்கு மிகுந்த ஏமாற்றத்தைத் தந்தது. ஆனாலும் மனந் தளர்வடையாமல், போக்குவரவு மந்திரி கௌரவ மொண்டேகு ஜெயவிக்கிரமா அவர்கள் காங்கேசன் துறைத் துறைமுக அங்குரார்ப்பண வைபவத்துக்கு வந்தபோது இவ் வீதி சம்பந்தமாகப் பேட்டிகாண விழைந்து 15-3-55இல் மனுச்செய்து பேட்டி கண்டது. அத்துடன் எமது பிரதிநிதியும், தபால் வானொலி மந்திரியுமாகிய கௌரவ சு. நடேச பிள்ளை அவர்களுடனும் 23-3-55இல் சபை ஆலோசித்தது. நிதி நெருக்கடி காரணமாக, இப் பேட்டிகள் போதிய பலனை யளிக்கவில்லை. இவ் வீதியைப் பகிரங்க வேலைப்பகுதியார் கையேற்க வேண்டுமென்கின்ற நோக்கோடு தொடர்ந்து முயற்சி செய்கின்றோம்.

ii. **தபாற் கந்தோர்:** இக் கிராமத்தின் பிரதான தேவைகளில் ஒன்றுன தபாற் கந்தோர் வசதி எமக்குக் கிடைத்ததாயினும் C பிரிவுத் தபாற் கந்தோர் எமது கிராமத்தின் தேவையைப் பூர்த்திசெய்ய முடியாமையையும் இந்த உப தபாற் கந்தோர் B பிரிவுக்கு உயர்த்தப்படுதற்குரிய தகுதியுள்ளமையையும் காட்டி 28-7-54இல் தபால் வானெலி மந்திரி அவர்களுக்கு இச் சபை மனுச்செய்தது. இதன்பேருக 1-7-55 தொடக்கம் ஷெ தபாற்கந்தோர் B பிரிவுக்கு உயர்த்தப்படும் என அறிகிறேம். இதனல் வெளியூரில் வசிக்கும் எமது கிராம மக்களின் தபாற்சேவை வசதிக் குறைவுகளும் ஓரளவு நீங்கும் என்பது எமது எண்ணம். ஷெ தபாற் கந்தோரில் தந்தி வசதியும் அமைத்து அதனைப் பூரணப்படுத்துமாறு அரசினரை வேண்டுகின்றேம்.

iii. **பிரசவ வைத்தியசாலை:** மயிலிட்டிக் கிராமசங்கப் பகுதியினர் எமது கிராமத்தில் அமைத்த பிரசவ வைத்திய சாலையைப் படுக்கை வசதிகளுடன் கூடியதாகஅமைக்கவேண்டுமென்றும், விசாலமான நிலப்பரப்பையுடைய அவ் வளவில் (மயிலிட்டிப் பகுதியில் கிழமையில் இரண்டு நாட்கள் உபயோகத்தில்) இருக்கும் உப வைத்தியசாலையை, மத்திய வைத்தியசாலையாக அமைக்கவேண்டுமென்றும் அரசினரை வேண்டியுள்ளோம். இவை அரசினரால் அங்கீகரிக்கப்படவேண்டுமென்று மயிலிட்டிக் கிராம சங்கமும் சிபார்சுசெய்தமை மகிழ்ச்சிக்குரியதாகும். விரைவில் மத்திய வைத்திய சாலையை அரசினர் அமைப்பார்களென எண்ணுகிறேம்.

iv. **தம்பியையா ஞாபகார்த்த விளையாட்டு மைதானம்:** 21-6-53இல் 15 நிலப் பரப்புக் கொண்ட காணி (உறுதி இல. 5272) விளையாட்டு மைதானத்துக்கு வாங்கப்பட்டது. சென்ற வருடம் கல் உடைத்து மண் பரவிச் செப்பனிடப்பட்டது. ஆனலும் விளையாடுவதற்குத் தகுதி போதாத நிலைமையில் இருந்த இம் மைதானத்தை இவ்வருடம் தம்பியையா ஞாபகார்த்த நிதியிலிருந்து மேலும் ரூபாய் 263 செலவு செய்து சீர்திருத்தியுள்ளோம். இப்போது இளைஞர்கள்அதை நன்கு பயன்படுத்துவது மகிழ்ச்சிக்குரியது. எனினும் இக்கால நவீன விளையாட்டு வசதிக்கு இடவசதி போதாது என்பது எங்கள் எண்ணம். இன்னும் இம் மைதானத்தை விசாலிப்பதற்கும், வெயில், மழை இரண்டிலிருந்தும் சிறுவர்களைப் பாதுகாப்பதற்கும் சிறு மண்டப வசதி செய்யப்பட வேண்டும். இதற்குப் பொதுமக்கள் நன்கொடை வேண்டப்படுகிறது.

v. **ஒப்பந்த வேலைகள்:** 'ஈழகேசரி'ப் பொன்னையா வீதியில் மூன்று நீர் வடி கால்வாய் அமைப்பதற்கு அரசினரால் ஒப்பந்தம் கோரப்பட்டது. அவ் வேலையை இச்சபை செவ்வனே நிறைவேற்றி, ஒப்பந்தத் தொகை ரூபாய் 855 பெற்றுக்கொண்டது.

குரும்பசிட்டியில் மயிலிட்டிக் கிராம சங்கத்தினர் அமைத்த சந்தையின் வருடக் குத்தகையைத் தொடர்ந்து சபை எடுத்து, வியாபாரஞ் செய்பவர்களிடம் பணம் பெருது நடாத்தியும், அதன் பரிபாலனங்களில் வேண்டிய உதவியைத் தேவையான காலங்களிற் செய்தும் வருகிறது. அவ் வளவிலுள்ள தூர்ந்த கிணற்றை மயிலிட்டிக் கிராம சங்கத்தினர் செப்பனிட்டு உபயோகிப்பதற்கு ஏற்றபடி செய்யவேண்டுமென்று இச் சபை கோருகிறது.

vi. **மயிலிட்டி தெற்கு விதானைப் பிரிவு அமைப்பு:** கட்டுவன், மயிலிட்டி தெற்கு விதானைப் பிரிவின் புது அமைப்பைச் சபை ஆட்சேபித்து விண்ணப்பித்து, பலமுறை பேட்டி கண்டு பேசியதன் பயனுக, அரசினர் ஆராய்ந்து ஆவன செய்வதாக வாக்

குச் செய்திருந்தும் நீண்டகாலமாகத் தீர்க்கப்படாமை கண்டு இச் சபை ஏமாற்றமடைந்தது; திரும்பவும் தொடர்ந்து 2-11-53இல் எழுதிய மனுவின் சார்பாக 23-2-55இல் கடிதத் தொடர்பு வைக்கப்பட்டிருக்கிறது. இவ் விடயத்தைச் சீக்கிரம் அரசினர் ஆலோசித்து ஆவன செய்வார்களென்று எதிர்பார்க்கிறோம்.

## சமயம், ஒழுக்கம், நீதி

இப்பிரிவு நன்முறையில் வேலைசெய்கிறது. இவ்வருடம் சிறப்பாகச் சமயபாட வகுப்பொன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைதோறும் சித்தாந்த வகுப்பு, ஆசிரியர் உயர்திரு. மு. ஞானப்பிரகாசம், B. A., B. SC. அவர்களால் தொடர்ந்து நடாத்தப்பட்டு வருகிறது. அவர்கள் தொண்டுக்கு இச் சபை மிகவும் கடமைப்பட்டதாகும். வகுப்பில் இவ்வூர், அயலூர் மாணவர்கள் பலர் பாடங்கேட்டு வருகிறார்கள்.

இன்னும் சமயப் பிரசங்கங்கள், சபையிலும் எம்மூர் ஆலயங்களிலும் செய்விக்கப்பட்டன. சமயகுரவர் நால்வர் குருபூசைகளும் விசேடமாகக் கொண்டாடப்பட்டன. இச் சபையின் ஆதரவிலே 1-12-54இல் சு. வேதையாக் குருக்களால் பலருக்குச் சமய தீட்சை வைக்கப்பட்டது. பாடசாலைப் பிள்ளைகளுக்கும் மற்றும் சிறுவர்களுக்கும் பிரார்த்தனைப் பாடல்கள் சொல்லிக்கொடுத்து ஆலயங்களிற் பிரார்த்தனை நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன. எமதூர் அம்பாள் ஆலயத் திருவாதிரை விசேட உற்சவ காலங்களில் மாணவர்களின் பிரார்த்தனை சிறப்புடன் நிகழ்கின்றன. சமயம், தொண்டு, பரஸ்பர ஒத்துழைப்பு இவற்றால் அங்கத்தவர்களதும் கிராம மக்களதும் ஒழுக்கம் வளர்ச்சியடைந்து வருகின்றது.

விசேடமாகச் சபையின் நீதிப்பகுதியினர் இவ்வூரில் நிகழ்ந்த பிணக்குகளை ஆராய்ந்து நீதி செலுத்தியது போற்றக்கூடியதாகும். இதனால் இக் கிராமம் சிறப்புற இருப்பதோடு எவ்வகைச் சிறிய பிணக்குகளும் நீதிஸ்தலங்களுக்குக் கொண்டு போகப்படவில்லை என்பதும், மகிழ்ச்சிக்குரியதாகும்.

## சேமிப்பு, சிக்கனம்

கிராமத்திலே சேமிப்பு இயக்கம் வளர்ச்சியடைய இச்சபை நன்கு முயற்சித்திருக்கிறது. இதனால் இக் கிராமவாசிகள் நல்ல பலனை அநுபவத்திற் பெற்றுவிட்டார்கள். இதனை அறிந்த வலி-வடக்குக் காரியாதிகாரி அவர்களின் சிபார்சுப்படி சபையார் 28-8-54 தொடக்கம் 4-9-54 வரை நடந்த தேசீய சேமிப்பு வாரத்தை நன்கு நடாத்தினார்கள். அக் காலத்திற் சிறு தொகையான சேமிப்புப் பத்திரங்கள், சேம வங்கிப் பாஸ் புத்தகங்கள் என்பவற்றின் மூலம் 2390 ரூபாய் சேமிக்கப்பட்டது. இச் சபையின் முயற்சியால் இவ் வருடம் 189 பாஸ்புத்தகங்கள் உபயோகத்தில் இருக்கின்றன.

## ஐக்கியம், தொழில்

சபை அங்கத்தவர்களுக்கு(ஆண், பெண் இரு பகுதியினருக்கும்) ஐக்கியநாணய சங்கங்கள் மூலம் நேர்மை, சிக்கனம், மட்டான செலவு என்பன பழக்கப்பட்டுள்ளன. இச் சங்கங்கள் மூலம் பலதிறப்பட்டவர்களுக்கும் கடன் உதவி, கமம், பன்னவேலை, கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு என்னும் தொழில்களுக்கு ஆக்கமளித்துள்ளோம். கிராமத்திற் செய்யப்படும் பன்னவேலைப் பொருள்களை எம்மூர்க் கூட்டுறவுப் பண்டகசாலை மூலம் விற்பனவு செய்ய ஒழுங்குசெய்யப்பட்டிருக்கிறது.

வெங்காயத்திற்கு வந்த நோய்க்கும், புகையிலைக்கு வந்த அழுக்கணவன் நோய்க்கும் ஆரம்பத்திலேயே தெல்லிப்பழைப் பகுதி விவசாய போதகரின் உதவியோடு பூச்சி நாசினி தெளிக்க இச் சபை எல்லா முயற்சிகளும் எடுத்துக்கொண்டது. இதன் பயனாக ஜேர்மனிய தேசத்து விவசாயக் கிருமிநாசினி ஆராய்ச்சிப்பகுதிப் பிரதிநிதி எமது கிராமத்துக்கும் விஜயம் செய்து ஆலோசனை கூறினார்கள். இவ் வருடத்தில் சபையின் வேண்டுகோளுக்கு இசைந்து கோழிக்கு நோய்வராமல் ஊசிஏற்றி உதவி புரிந்த உத்தியோகத்தருக்கும், கிருமிநாசினி தெளிக்க உதவிபுரிந்த தெல்லிப்

பழைப் பகுதி விவசாய போதகருக்கும் எமது நன்றி உரித்தாகுக.

### சுகாதாரம், உடற்பயிற்சி

மக்களின் உடல்நல விருத்திக்காக, பல பிரசாரக் கூட்டங்கள் நடாத்தியும், மாதர் சபையின் உதவியுடன் குழந்தை வளர்ப்பு, கெர்ப்பத் தாயார் பராமரிப்பு ஆகிய விடயங்களில் விசேட முயற்சி செய்தும், சுகாதார சம்பந்தமான படங்கள் காட்டியும் இச்சபை சேவை செய்துள்ளது.

அரசினர் நன்கொடைப்பணம் ரூபாய் 50 வீதம் பெற்று 5 மலகூடங்களும், பெருது 10 மலகூடங்களும் இக் கிராமத்தில் அமைக்கப்பட்டன.

இளைஞர்கள் அதிக உற்சாகத்துடன் விளையாட்டுக்களில் ஈடுபட்டு வருவது மகிழத்தக்கது. கைப்பந்தாட்டம், உதை பந்தாட்டம், தாச்சி, 'கிறிக்கெற்' என்பன விசேடமாக விளையாடப்படுகின்றன. இவ்வாண்டு விசேடமாக இளைஞர்கள் இரண்டு இல்லமாகப் பிரிந்து போட்டியிட்டனர். சன்மார்க்க சபையின் ஆரம்ப ஸ்தாபகர்களுள் ஒருவராகிய காலஞ்சென்ற ஆசிரியர் திரு. வ. பொன்னுக்குமாரு அவர்கள் பேரில் ஓர் இல்லமும், இளைஞர் சங்க ஸ்தாபகராகிய காலஞ்சென்ற ஆசிரியர் திரு. க. சுந்தரமூர்த்தி அவர்கள் பேரில் ஓர் இல்லமுமாகச் சிறுவர்கள் பிரிந்து பல விளையாட்டுக்களை நடாத்தினர். இவ் விளையாட்டுப் போட்டியில் சுந்தரமூர்த்தி இல்லமே முதவிடம் பெற்றது. இப் போட்டியின் முடிபாக இவ் வருடம் அ. யோகலிங்கம், ந. தம்பித்துரை, நா. மகாலிங்கம், க. குகப்பிரகாசம், வ. செல்வரத்தினம் என்போர் ஒவ்வொரு பிரிவிலும் கூடிய திறமை காட்டியது மகிழ்ச்சிக்குரியது.

கைப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், 'கிறிக்கெற்' என்ற விளையாட்டுக்கள் இல்லங்களுள்ளும், அயலூரவர்களுடனும் போட்டியாக அமைத்து விளையாடப்பட்டன. கைப்பந்தாட்டப் பகுதியினர் சுதந்திரதினவிழா விளையாட்டுப் போட்டிகளிற் பங்குபற்றி நன்கு திறமைகாட்டினர். இதுகாலவரையும் சொந்த விளையாட்டு நிலமில்லாது சிரமமுற்ற இளைஞர்கள் இவ்வருடம் நா. பத்மநாதன் (அப்புக்குட்டி) அவர்களைத் தலைவராகக்கொண்டு சபை வாங்கிய தம்பியையா ஞாபகார்த்த விளையாட்டு மைதானத்தில் விளையாட்டுக்களைப் பயின்று வருகிறார்கள். அவரின் சேவையை இச்சபை மிகவும் போற்றுகின்றது. விளையாட்டு உபகரணங்களுக்காக இவ்வருடம் சபை 51 ரூபாய் 35 சதம் வரை செலவு செய்தது.

### கலை, கல்வி

சபை அவ்வப்போது சிறந்த கல்விமான்களையும் பேச்சாளர்களையும் அழைத்து அவர்களின் அறிவுரைகளைக் கேட்க ஒழுங்கு செய்தது. மாணவர்களிடையே இரச ஞான உணர்ச்சிக்கு ஆக்கமளிக்கும் பாட்டு, நடனம், நடிப்பு, பேச்சுப் போட்டி, வியாசப் போட்டி என்பன நடாத்தப்பட்டன. இவ்வருட காலத்துள் யாழ்-விநோத களியாட்டு விழாவிலும் கலை, கைப்பணிக் கழகக் காட்சி விழாவிலும் எமது சபையும் கலைத் தன்மை நிறைந்த கைப்பணிப் பொருள்களைக் காட்சிக்கு வைத்துப் பரிசும், பாராட்டுப் பத்திரங்களும் பெற்றது. வானொலி நிகழ்ச்சிகளைக் கிராம மக்கள் ஒவ்வொரு நாளும் கேட்கக்கூடிய வசதிகளெல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன.

### மணிவாசக நூல்நிலையமும், வாசிகசாலையும்

சமயம், இலக்கியம், சரித்திரம், சிறுகதை என்னும் வகைகளில் 300க்கு மேற்பட்ட நூல்கள் இந் நிலையத்தில் உள்ளன. ஆயினும் இக் காலத்தில் வெளிவரும் புதிய நூல்கள் பல இந் நிலையத்துக்குத் தேவை. மணிவாசக நூல் நிலையம் வளர்ச்சியடைய அன்பர்கள் உதவிபுரிவார்களாக. எமது வாசிகசாலைக்கு, தினகரன், வீரகேசரி, 'Times', தினமணி, ஈழகேசரி, சுதந்திரன், இந்துசாதனம், கல்கி, கலைமகள், மஞ்சரி, கண்ணன், ஸ்ரீலங்கா, சமூகத் தொண்டன் என்பன வரவழைக்கப்பட்டுப் பொதுசனங்களால் நன்கு உபயோகப்படுத்தப்படுகின்றன. ஆயினும் நமது வாசிகசாலைக்கு இவை போதுமானவை அல்ல என்பது எங்கள் எண்ணம். பல நல்ல பத்திரிகைகள் வரவழைக்கப்பட அன்பர்கள் உதவிபுரிவார்க

ளாக. வழமைபோல ஈழகேசரி, ஸ்ரீலங்கா முதலிய பத்திரிகைகளை இலவசமாக அனுப்பும் நிலையங்களுக்கு எமது நன்றி உரியதாகுக.

### சன்மார்க்க இளைஞர் சங்கம்

இளைஞர் கழகம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை பொதுக் கூட்டங்கள் கூட்டிப் பல துறைகளிலும் இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கிறது. பேச்சுப் போட்டி, ஆடல், பாடல், விளையாட்டுகள், நாடகம் நடித்தல் என்னும் பகுதிகளிற் சிறப்பாற்றல்களை விருத்தி செய்யச் சந்தர்ப்பங் கொடுக்கப்பட்டிருக்கிறது. இளைஞர்கள் எமது கிராமத்திலன்றி அயற் கிராமங்களிலும் இரண்டு நாடகங்களை நடித்துக் காட்டினர். இளைஞர் சங்கக் கையெழுத்துப் பத்திரிகையாகிய 'சன்மார்க்க தீபம்' மூன்று மாதத்திற்கு ஒரு முறை வெளிவரும். அதன் கலை அமைப்பையும், சிறந்த முயற்சியையும் பாராட்டிக் கிராம முன்னேற்றப் பகுதியினர் 1956ஆம் ஆண்டு, அரசினர் நடாத்தும் விவசாயப் பொருட்காட்சியில், பார்வைக்கு வைக்கவும், அதன் சுருக்கத்தை விவசாயக் காட்சியில் ஒரு பிரிவினராகிய கிராம முன்னேற்றப் பகுதியினர் வெளியிடும் வெளியீட்டில் இடம்பெறச் செய்யவும் முயற்சிகள் எடுக்கின்றனர். இளைஞர் சங்கம் நன்கு இயங்கக் காரண கர்த்தாவாகவும், சன்மார்க்க சபையின் முயற்சிகளில் விருப்புடன் ஒத்துழைப்பவராகவுமுள்ள, இளைஞர் கழக அங்கத்தவர், திரு. அ. குகதாசன் விசேடமாக நற்றொண்டு செய்து வருகிறார். அவரது சேவை கௌரவிக்கப்படத்தக்கதே.

இவ்வாண்டு ச. பழனிவேல், ந. பஞ்சாட்சரம் என்போர், கிராம முன்னேற்றப் பயிற்சிப் பாடசாலையிற் பயிற்சி பெற்றனர்.

### சன்மார்க்க மாதர்சபை

மாதர் சபை 1ஆம் வருடப் பூர்த்தி விழா, 4-9-54 இல் கொண்டாடப்பட்ட போது வாசித்த ஆண்டு அறிக்கை :

'' சன்மார்க்க சபையின் முயற்சியால் 4-7-53 இல் கிராம முன்னேற்ற அதிகாரி திரு. D. G. தயரத்தின, C. C. S. அவர்களால் மாதர் சபை ஆரம்பித்துவைக்கப்பட்டது. ஆரம்ப வருடமாயிருந்தாலும் அது தன்னால் இயன்ற பணிகளைச் செய்ய முயற்சித்திருக்கிறது. இவ் வருடத்தில் 3 பொதுக் கூட்டங்களும் 7 நிருவாகசபைக் கூட்டங்களும் நடைபெற்றன.

''குழந்தை வளர்ப்பு, கிராமசேவையும் பெண்களும், ஐக்கிய இயக்கமும் பெண்களும், வீட்டுத்தோட்டம், குடிசைக் கைத்தொழில் விருத்தி, ஆடு, கோழி வளர்ப்பு என்னும் விடயங்களிற் பெண்கள் ஈடுபட்டுச் சிறந்த முறைகளைக் கையாளச் சபையார் முயற்சி செய்தனர்.

''இவ்வூர் மக்கள் பெருமை கொள்ளக் கூடியவகையில் ஐக்கிய இயக்கத்திற் பெண்கள் ஈடுபட்டுழைத்து, ஒரு மாதர் ஐக்கிய நாணய சங்கத்தை நடாத்தி வருகின்றனர். அங்கத்தவர் ஒவ்வொருவரும் பரஸ்பரம் ஒத்துழைக்கவும் மட்டாகச் செலவு செய்யவும் பயிற்சி கொடுக்கப்பட்டிருக்கிறது.

'' மாதர் சபையின் பிரதான பகுதி தையற் பாடசாலையே. அரசினர் நன்கொடைப் பணம் ரூபாய் 400 உடன் சன்மார்க்க சபையினரின் ரூபாய் 150 உபகரிப்பினால் மாதர் சபைக்கு ரூபாய் 550 க்குத் தையல் யந்திரம் ஒன்று வாங்கப்பட்டது. 7-4-55இல் சன்மார்க்க சபைக்கு அரசினர் அளித்த நன்கொடைப் பணம் ரூபாய் 800ஐயும் உபயோகித்து இரண்டு தையல் யந்திரங்கள் ரூபாய் 810 சதம் 05க்கு வாங்கப்பட்டன. பெண்களும், வயதுவந்த மாணவிகளும் தையல்வேலை பயின்று கொண்டு வருகிறார்கள். இவ்வூர்ப் பெண்கள் யாவரும் தையல் வகுப்பிற் சேர்ந்து பயன்பெறவேண்டு மென்பது சபையின் விருப்பமாகும். மாதர் சபை அங்கத்தவர்களினால் தைக்கப்பட்ட உடுப்புக்கள் காட்சிகளில் வைக்கப்பட்டு, பாராட்டப்பட்டதோடல்லாமல் பரிசுகளும் பெற்றிருக்கின்றன. எமது தையற் பாடசாலைக்கு அரசினர் ஓர் ஆசிரியரை நியமனஞ் செய்து எம்மை ஊக்கப்படுத்த வேண்டுமென அரசினரையும் வேண்டிக்கொள்ளுகிறோம்.

'' இவ்வூர்ப் பொது மக்களிடம் நன்கொடையாகச் சிறந்த நூல்களைப் பெற்றுப்

பெண்களின் ஓய்வு நேரத்தை அறிவு வளர்ச்சியில் ஈடுபட வழிவகுத்துள்ளோம். இப்போது எங்களிடம் அநேக நூல்கள் உள. பெண்கள் யாவரும் வரவர நூல்களை வாசிப்பதில் உற்சாகங் காட்டுவது மிகவும் மகிழ்ச்சி தருவதாகும்.

சிறுவர் சிறுமிகளை, ஆடல் — பாடல் என்னும் பகுதிகளிற் பங்குபற்றச் செய்வதும் அவர்கள் குணநல ஒழுக்கத்துக்கு வேண்டிய முயற்சிகளை எடுப்பதும் சபையின் பிரதான முயற்சியாகும்.

### சன்மார்க்க ஐக்கிய நாணய சங்கம்

இதில் 45 அங்கத்தவர்கள் உண்டு. மாதம் ஒருமுறை கூடிக் கருமமாற்றுகிறார்கள். அங்கத்தவர்கள் கமத்தொழில், கைத்தொழில் வகைகளிற் சிறப்படைய எல்லா வசதிகளுஞ் செய்யப்படும்.

### பால் நிலையம்

இவ் வருடம் பால் நிலையத்தை இச் சபை மேற்பார்வை செய்யப் பொறுப் பேற்றிருக்கிறது.

### பொது

இவ் வருடஞ் சிறப்பாக நமது கிராமத்திற் பனை மகோற்சவம் கொண்டாடப்பட்டது. அதன் காரணமாகப் பனம் விதைகள் புலக் காணிகளில் நாட்டப்பட்டன. இதையொட்டி விசேட பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. அவ்விழாவில், யாழ்ப்பாணத்தில், பனம் பொருள் ஆராய்ச்சி நிலையம் ஒன்று நிறுவவேண்டுமென்று அரசினரைக் கேட்டுக்கொண்டது. அடுத்த வருடம் பதநீரில் இருந்து பனங் கட்டி உண்டுபண்ண முயற்சிகள் எடுக்க வேண்டுமென அகில இலங்கைக் காந்திய சேவா சங்கக் காரியதரிசி திரு. சி. க. வேலாயுதபிள்ளை அவர்களுடன் கலந்துரையாடியபின் தீர்மானிக்கப்பட்டது.

குரும்பசிட்டியைத் தாயகமாகக் கொண்ட, சபை அங்கத்தவர் திரு. க. தம்பிப்பிள்ளை அவர்கள், கெக்கிறுவாப் பட்டின சபையின் தலைவராகத் தெரியப் பட்டமை குறித்துச் சபை பெருமை கொள்கிறது. இதன் காரணமாக அன்னாருக்குச் சபையாரால் 5-2-55இல் பகிரங்க உபசரிப்பு விழா நடாத்தப்பட்டது.

அகில இலங்கை இந்து மாமன்றத்தில் எமது சபை அங்கத்துவம் பெற்றதோடல்லாமல் இந்து மாமன்ற அதிகார சபைப் பிரதிநிதித்துவமுங் கிடைக்கப்பெற்று, திரு. வ. செல்லமுத்தர் அவர்கள் அதிகார சபை அங்கத்தவராகவும் நியமனம் பெற்றிருக்கிறார். இது எமது சபைக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

இவ்வருடம் பொதுசனங்கள் சபையின் முயற்சியை நன்கு ஆதரித்துத் தேவைப்பட்டபோதெல்லாம் நன்கொடை யுதவியமை குறித்துச் சபை மகிழ்ச்சியடைகிறது. விசேடமாக திரு. பூ. சு. நடராசா அவர்கள் வாசிகசாலை மேசை ஒன்றை உபகரித்திருக்கிறார். அவருக்கு எமது நன்றி உரியதாகுக.

இவ்வருடம் கிராம முன்னேற்றப் பகுதியினர் (R. D. S.) ரூபாய் 800 நன்கொடை யுதவினர். மயிலிட்டிக் கிராம சங்கத்தினர் ரூபாய் 100 நன்கொடை யுதவினர்.

எமது ஸ்தாபனம் செவ்வனே நடைபெறவும் சபை மேற்கொண்ட வேலைகளில் எங்களுடன் ஐக்கியமாக ஒத்துழைக்கவும் உதவியாக இருந்த வலி - வடக்குக் காரியாதிகாரி (D. R O.) அவர்களுக்கும், கிராம முன்னேற்றப் பகுதி உத்தியோகஸ்தர் (R. D. O.) அவர்களுக்கும், மயிலிட்டிக் கிராம சங்கப் பகுதியினருக்கும் நாம் வணக்கத்துடன் நன்றி தெரிவிக்கிறோம்.

சபைக்கு அன்பும் ஆதரவும் அளித்து எல்லா வகைகளிலும் ஒத்துழைத்து எம்மை ஊக்கப்படுத்திய எம்மூர் மக்கள் யாவருக்கும் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். மேலும் இச் சபை சிறப்புற்றோங்க எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறோம்.

## இருபத்தொன்று, இருபத்திரண்டாவது ஆண்டுகள் : 1-5-57 வரை

இவ்வாண்டுகளில் யாழ்ப்பாண அரசாங்க அதிபரைத் தலைவராகக்கொண்ட மாவட்ட அதிகாரிகள் சபை “ ஈழகேசரிப்

பொன்னையா'' வீதியைப் பகிரங்க வேலைப் பகுதியினர் எடுக்கவேண்டுமென்று சிபார்சு செய்தனர். குரும்பசிட்டி உப—தபாற் கந்தோர் 'B' பிரிவு உப-தபாற் கந்தோராக உயர்த்தப்பட்டது. எமது கிராம வேலைகளைத் திறம்படச் செய்வதற்குச் சன்மார்க்க சபையினரே ஒப்பந்த வேலைகளை மேற்கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டது. மயிலிட்டிதெற்கு விதானைப் பிரிவின் தெற்கெல்லை சம்பந்தமாக எழுந்த பிரச்சினையில் இருமுறை மாகாண அதிபர் கந்தோரில் நடைபெற்ற கூட்டங்களில் சன்மார்க்க சபைப் பிரதிநிதிகளாகக் காரியதரிசியும் திரு. மு. சபாரத்தினம் அவர்களும் கலந்து மயிலிட்டி தெற்கு — குரும்பசிட்டியின் தெற்கு எல்லை, டாக்டர் வீ. அ. சின்னத்துரை வீட்டுக்குத் தெற்குப்பக்கமாக உள்ள இளையப்பா ஒழுங்கையும் அவ் ஒழுங்கையின் மேற்கு அந்தலையில் இருந்து பத்தகல் ஒழுங்கை வரையுமுள்ள இரண்டு கிராமங்களின் ஊரெல்லையும் என்று இருக்க வேண்டுமென ஒப்புக்கொள்ளப்பட்டது.

சைவசித்தாந்தவகுப்பு ஒன்றினை 1-9-55 தொடக்கம் 2-2-56 வரை தொடர்ந்து நடாத்தியது. இவ்வகுப்புக்குச் சமயப் பணியே இலட்சியமாகக் கொண்ட ஏழாலை, சைவத்திருவாளர் திரு. மு. ஞானப்பிரகாசம், B. A., B. SC., அவர்கள் ஆசிரியராக இருந்து கற்பித்து வந்தார்கள். இக்கால எல்லையுள் அரசாங்கக் கல்விப்பகுதியினரால் வெளியிடப்பட்ட சைவசமயபாடத்திட்டத்துக்கு அமைவாகச் 'சைவசமய போதினி' 2ஆம், 3ஆம், 4ஆம், 5ஆம் வகுப்புப் புத்தகங்களைச் சன்மார்க்கசபையார் வெளியிட அவரே உதவி புரிந்தார்கள்.

இவ்வருடம் 27-2-57இல் மகாசிவராத்திரி வழிபாட்டுக்குச் சபை அங்கத்தவர்களையும் கிராம மக்களையும் கொண்ட, ஆண்களும் பெண்களுமாக நாற்பது அன்பர்களைத் திருக்கேதீஸ்வரம் அழைத்துச்செல்லச் சபையார் எல்லா ஒழுங்குகளுஞ் செய்தனர்.

மலையாளம் ஏற்றுமதிப் புகையிலை வீழ்ச்சியால் நட்டமடையும் கமக்காரர்களுக்கு 'ஐக்கிய சிகறெற் புகையிலை உற்பத்தி விற்பனவுச் சங்கம்' ஒன்று அமைக்க ஆரம்பமுயற்சி எடுக்கப்பட்டு ஒரு சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இன்னும் முதல்முறையாக எமது கிராமத்திற் பரிசோதனைக்காக 1000 பிடிப் புகையிலைக் கன்றுகள் பயிரிட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

1955ஆம் ஆண்டு மார்கழி மாதம் ஏற்பட்ட புயற்சேதங்களை இப் பகுதிக் கிராமத் தலைமைக்காரர் இல்லாமை காரணமாகச் சபையாரே பார்வையிட்டு விபரங்களைச் சேகரித்து அரசாங்க உதவிபெற்றுக்கொடுக்க முயற்சி எடுக்கப்பட்டது.

## இருபத்துமூன்று, இருபத்துநான்காவது ஆண்டுகள்: 19–10–58 வரை

சபையினரின் இடைவிடா முயற்சியின் பேருக எமது கிராமத்துக்குப் பதினெரு வருடகாலத்துள் ஈழகேசரிப் பொன்னையா வீதி, பகிரங்க (P. W. D.) தெருவாகக் கிடைத்தமை பெரும் பேருகும். நமது கிராமத்துக்குத் தந்தி வசதி அமைத்துத் தரவேண்டுமென அரசினரை வேண்டியமை காரணமாக, தபால் வானொலிப்பகுதி அமைச்சர் காரியாலய நிரந்தரக் காரியதரிசி, நான்கு மைல் இடைத்தூரமான சுன்னுகம்—குரும்பசிட்டிக்குத் தந்தி வசதி அமைக்க 6000 ரூபாய் செலவு ஏற்படுமெனவும் அடுத்த நிதிவருடம் நடைமுறைக்கு எடுக்கப்படுமெனவும் இச் சபையினர்க்கு அறிவித்திருந்தனர்.

**இவ்வருடங்களிற் சபையினர் மேற்கொண்ட நிகழ்ச்சிகள் :**

3-6-57 — 9-6-57வரை நடைபெற்ற அகில இலங்கைச் சுகாதார வாரத்தின் சார்பாக வலிகாமம் வடக்குப் பிரிவுச் சுகாதார சபையினரின் நிகழ்ச்சிகளிற் பங்கு பற்றியமை.

3-6-57 — எமது கிராமத்தில் 25 வீடுகள் கொண்ட ஒரு பகுதியைத் தெரிந்தெடுத்து அப்பகுதியை மாதிரிக்குச் சுகாதார விதிகளுக்கு அமைவாக்க வேண்டிய நடபடிக்கைகள் எடுத்தமை. மத்தியட்சகர்கள் மதிப்பிட்டுப் பாராட்டியமை.

**6-6-57** — சுகாதார விழாத் தொடர்பாக நடைபெற்ற தெல்லிப்பழைச் சுகா தாரக் கண்காட்சியில் [யூனியன் கல் லூரியில்] சன்மார்க்கசபையினர் சய ரோகத்தைத் தடுத்தல் என்னும் அம் சத்தை விளக்கும் படங்களை இடம் பெறச் செய்து தகுதிப் பத்திரம் பெற்றமை.

**13-6-57** — திருஞானசம்பந்த சுவாமிகள் குருபூசை விழா.

**1-7-57** — மாணிக்கவாசக சுவாமிகள் குரு பூசை விழா.

**2-8-57** — சுந்தரமூர்த்தி சுவாமிகள் குரு பூசை விழா.

**14-9-57** — பாரதி விழா.

**28-9-57** — சரஸ்வதி பூசை விழா. புத்த கம் – பத்திரிகைக் கண்காட்சி.

**29-9-57** — தென்னிந்தியத் தமிழ் எழுத் தாளருக்குச் சபை மண்டபத்தில் வர வேற்புபசாரம்.

**24-11-57** — சன்மார்க்க கிராமமுன்னேற் றச் சங்கம் அரசாங்கத் தொடர்பை நீக்கியமை.

**24-11-57 — 10-1-58** வரை வெள்ளத் தால் அழிந்த பயிர் நிவாரண வேலை களில் ஈடுபட்டுழைத்தமை.

**14-1-58** — பொங்கல் விழா – திருவமுது படைத்தல், கூட்டுப் பிரார்த்தனை, பொங்கற் பாக்கள் படித்தல், விருந் துண்ணல்.

**5-2-58** — தத்துவக் கலைமணி — பாரத உப ஜனதிபதி சேர் இராதாகிருஷ் ணன் அவர்களைப் பலாலி விமான நிலையத்தில் யாழ்ப்பாண வரவேற்புச் சபையினரின் வேண்டுகோளுக் கமை வாக மாலையிட்டு வரவேற்று உபசரித் தமை.

**16-2-58** — சிவராத்திரி விழா தினத்திற் சபையினரையும் கிராம மக்களையும் திருக்கேதீஸ்வரம் அழைத்துச் சென் றமை.

**9-3-58** — விசேட பொதுக் கூட்டம்.

**30-3-58** — குரும்பசிட்டி மயானத்தைச் சுத்தஞ்செய்தமை.

,, ஈழகேசரிப் பொன்னையா நினைவு நாள் கொண்டாடியமை. மகேசுவர பூசை விழா.

**12-5-58** — விசேட பொதுக் கூட்டமும் திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூசை விழாவும்.

**27-5-58** — விசேட பொதுக் கூட்டம். குரும்பசிட்டி இந்துசமய விருத்திச் சங்கம் ஆரம்பித்தமை.

**24-7-58** — சுந்தரமூர்த்தி சுவாமிகள் குரு பூசை.

**3-8-58** — பொதுக் கூட்டம் [சன்மார்க்க இளைஞர் சங்கம்].

**11-9-58** — பாரதி விழா [சன்மார்க்க இளைஞர் சங்கம்].

**13-10-58 — 21-10-58** வரை நவராத்திரி பூசை விழா. அம்பாள் ஆலயத்திற் சைவப் பிரசங்கங்கள், கூட்டுப் பிரார்த் தனைகள் செய்தமை.

**19-10-58** — உறுப்பினர் கூட்டம். சன் மார்க்க சபை 25ஆம் வருட உத்தி யோகஸ்தர் தெரிவு.

## இருபத்தைந்து, இருபத்தாறுவது ஆண்டுகள்: 31-12-59 வரை

இந்த ஆண்டுகளிலே குரும்பசிட்டி அம்பாள் ஆலயத்தில் திருவெம்பாவை உற்சவ காலத்திற் சைவப்பிரசங்கங்கள், சமயகுரவர் குருபூசை விழாக்கள், ஈழகேசரிப் பொன்னையா ஞாபகார்த்த விழா, குரும்ப சிட்டி சித்திவிநாயகர் ஆலயத்தில் வருட உற்சவ காலத்திலே சைவப்பிரசங்கங்கள், தென்னிந்திய வானெலிப் பாடகர் புதுக் கோட்டை, இசைமணி திரு. R. சீனிவாசன் அவர்களின் ' அருளரசி ' என்னும் விடயம் பற்றிய கதாகாலட்சேபம் – காங்கேசன் துறை வசந்தகான சபையினரின் கொட் டகைக் கூத்து, பண்டிதமணி திரு. சி. கண பதிப்பிள்ளை அவர்களுக்குப் பராட்டு விழா, நவராத்திரி பூசை விழா, சிவதீட்சை வைக்

கும் வைபவம் ஆதியன நடைபெறலாயின. பொங்கல் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சைவப் பேரறிஞர் தென்னிந்திய பேராசிரியர் S. R. துரைசாமி சாஸ்திரி அவர்கள் 'பக்திமார்க்கம்' என்னும் விடயம் பற்றி விரிவுரை நிகழ்த்தினர்.

## இருபத்தேழாவது ஆண்டு: 25-5-62 வரை

### 27ஆவது ஆண்டுத் தொகுப்பு அறிக்கை

சன்மார்க்கசபை சென்ற இருபத்தேழு வருடங்களாகத் தொடர்ந்து மெய்ந்நெறியிலும் உலகியலிலுஞ் சிறந்த நற்பணிகள் புரிந்திருக்கிறது. ஒரு சிறிய வாடகைக் கட்டிடத்துள் ஆரம்பித்த இச்சபை, கால வளர்ச்சியில் பத்துக்கு மேற்பட்ட உப சங்கங்களைத் தன்னகத்தேகொண்டு முப்பதினாயிரம் ரூபாய் பெறுமதியுள்ள தாபனமாக விளங்குவதோடல்லாமல், அரசாங்கத் தொடர்புடையவர்களும் சமூகசேவைத் தாபனங்களும் கல்விமான்களும் அறிஞர்களும் எழுத்தாளர்களும் தரிசித்து மகிழும் இடமாகவும், நமது கிராமத்தைப் பிரகாசிக்கச் செய்யும் பேரொளியாகவும் அமைந்து மிளிர்கின்றது.

வழமைபோலச் சபை நிகழ்ச்சிகளில் உபசங்கங்கள் வேண்டியவாறு தனித்தும் ஒருமித்தும் பணிபுரிந்திருக்கின்றன. சமயம், ஒழுக்கம், நீதி, கலை, கல்வி, கலாச்சாரம், கிராம தேவை என்னும் உபபிரிவுகளிற் சபை இயன்றளவு இவ்வாண்டும் பணிபுரிந்திருக்கிறது.

#### சமயம்

சபை பிரதானமாகச் சமயப் பணிகளில் ஈடுபட்டுழைத்து வருகிறது. முன்னர் சன்மார்க்கசபையினரால் எழுதப்பட்டுக் கல்விப்பகுதியினரால் அங்கீகரிக்கப்பட்ட 'சைவசமய போதினி' வரிசையில் ஆருவது புத்தகம் சபையினரால் எழுதப்பட்டு இவ்வருடம் நூல் வடிவில் வெளிவந்துள்ளது. இது சைவச்சிறுர்களின் உளப்போக்குக்குத் தக்க சமயஅறிவை வளர்க்கும் நோக்கமாக இலங்கை அரசினரின் புதிய சைவ சமய பாடத்திட்டத்துக்கு அமைவாக எழுதப்பட்ட சிறந்த நூலாகும். இம்முயற்சியில் உறுதுணையாக இருந்து உதவி புரிந்தவர் ஏழாலை, சைவப்பேரறிஞர் திரு. மு. ஞானப்பிரகாசம், பி. ஏ., பி. எஸ்சி. அவர்களாகும். அவருக்குச் சபை என்றும் கடப்பாடுடையது. கையெழுத்துப் பிரதியைப் பார்வையிட்டு வேண்டிய திருத்தங்களைச் செய்தும் புதிய குறிப்புக்களைக் கூறியும் உதவியவர் பலாலி அரசினர் ஆசிரியகலாசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதர், செந்தமிழ்மணி திரு. பொ. கிருஷ்ணபிள்ளை அவர்களாகும். அவர்களுடைய பணிக்கும் சபை நன்றி தெரிவிக்கிறது. கந்தர்மடம் சைவப் பாடசாலை ஆசிரியர் திரு. க. சி. குலரத்தினம் அவர்கள் தமது குறிப்புக்களைத் தந்து உதவி ஒத்துழைத்தமை மிகவும் போற்றப்படவேண்டிய தொன்றாகும்.

சமயப் பணியாகக் கருதி இப்புத்தகத்தை உயர்ந்தமுறையிற் பதிப்பித்து வெளியிட்ட சுன்ஞகம், வட்-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகத்தாருக்கும் சபை நன்றி பாராட்டுகிறது.

வழமைபோலச் சமய குரவர் குருபூசைகள், சமயப் பிரசங்கங்கள் சபையால் நடாத்தப்பட்டன. தொடர்ந்து இக்கால எல்லையுள்ளும் சித்திவிநாயகர் ஆலயத்தில் சிவதீட்சை வைப்பிக்கப்பட்டது. அதில், பல ஆண்களும் பெண்களும் மாணவ மாணவிகளும் பங்குபற்றினர். அம்பாள் ஆலய, விநாயகர் ஆலய விசேட வருடாந்த உற்சவ காலங்களிற் கூட்டுப் பிரார்த்தனையும் சைவப் பிரசங்கங்களும் செய்விக்கப்பட்டன. அட்ட கிரகதோஷ நிவிர்த்தியின் பொருட்டு மூன்று நாட்களும் விசேட பூசைகள் கூட்டுப்பிரார்த்தனைகள் திருமுறை இன்னிசைக் கச்சேரிகள் கதாப்பிரசங்கங்கள் தொடர்ந்து நடைபெற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. திருமகள் அழுத்தகத்தாருடைய ஒத்துழைப்புடன் கோளறுபதிகம் உரையுடன் நூல் வடிவிற் பதிப்பிக்கப்பட்டு இலவசமாக விநியோகஞ் செய்யப்பட்டது.

இலங்கைவாழ் சைவமக்களின் குரலோடு குரலாக எமது சபையும் கதிர்காம மடங்களை அரசாங்கம் அகற்றக்கூடாதென எதிர்ப்புத் தெரிவித்து அகற்றப்படாமைக்

குரிய காரண காரியங்களைக் காட்டி மனுத் தயாரித்துப் பிரதமருக்கும் கலாச்சார உள் நாட்டு மந்திரிக்கும் அனுப்பி வைத்தது. இவற்றிலும் இவை போன்ற பிறவற்றிலும் சபை ஈடுபட்டுழைத்து வருகிறது.

### நீதிப்பகுதி

விசேடமாகக் கிராம மக்கள் தங்களுக்குள் நிகழும் பிணக்குகளைச் சபையின் நீதிப் பகுதியினருக்கு முறையிடும் வழக்கம் ஏற்பட்டுவிட்டது. இவ்வருடகாலத்துள் நான்கு முறைப்பாடுகளைச் சபையினர் விசாரணை செய்து சமரசமாகத் தீர்த்து வைத்தனர். மயிலிட்டி தெற்குக் கிராமத் தலைமைக் காரர் திரு. க. செல்லத்துரை அவர்களும் இந் நீதிப்பகுதியை நன்கு மதித்து ஆதரவளித்து வருவது போற்றப்பட வேண்டியதாகும். அவரின் சேவைக்கு நன்றி.

### கல்வி

சைவப் பேரறிஞர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் எழுதிய **'சைவ நற்சிந்தனைகள்'** வெளியீட்டைத் தொடர்ந்து இக்கால எல்லையுள் மேலும் இரண்டு நூல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. ஒன்று மகாஜனக் கல்லூரிச் சித்திரக்கலை ஆசிரியர் திரு. ஆ. தம்பித்துரை அவர்கள் எழுதிய **'ஓவியக்கலை'** என்னும்நூலாகும். மற்றொன்று திருவாளர்கள் இ. நாகராஜன், கனக.செந்திநாதன், சு. வே., குறமகள், எஸ். பொன்னுத்துரை என்போர் எழுதிய **'மத்தாப்பு'** என்னும் குறுநவலாகும். அவ்வவற்றுக்குத் தனித்தனி வெளியீட்டு விழாக்களையும் சபை நடாத்தியது. யாழ்ப்பாணத்தின் பல எழுத்தாளர்கள், பேரறிஞர்கள், நூலாசிரியர்கள், வெயீட்டாசிரியர்கள் இவ் வெளியீட்டு விழாக்களிற் கலந்து தமிழ் வளர்ச்சிபற்றிக் கருத்தரங்கங்களை நடாத்தினர். இவ் வெளியீடுகளுக்குப் பொறுப்பாயிருந்து பணிபுரிந்தவர் சபையின் உபதலைவர் ஆசிரியர் திரு. கனக. செந்திநாதன் அவர்கள் ஆவர்; அவர் முயற்சிக்கும் நூலாசிரியர்களின் ஒத்துழைப்புக்கும் நன்றி உரியதாகுக.

சிறந்த கல்விமான்களையும் அறிஞர்களையும் அழைத்து அவர்களின் விரிவுரைகள் நடாத்தப்பட்டன. சிறந்த நூல்நிலையமும் வாசிகசாலையும் அறிவு விருத்திக்கு வாய்ப்புச் செய்கின்றன. தின நிகழ்ச்சிகளை அறிய வானொலி வசதியுண்டு.

### மணிவாசக நூல்நிலையமும் வாசிகசாலையும்

சபையின் பிரதான வேலைத்திட்டத்தில் இப்பகுதியும் ஒன்றாகும். காலை 8மணி தொடக்கம் இரவு 8 மணிவரை வாசிப்பதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. சபைக் கட்டிடத்திற்கு ஏற்படுத்தப்பட்ட மின்சார இணைப்புக் காரணமாக முன்னையிலும் பார்க்க இப்போது பொதுமக்கள் அதை நன்கு பயன்படுத்துகிறார்கள். வாசிகசாலைக்குத் தினகரன், வீரகேசரி, ஈழநாடு, ரைம்ஸ், டெயிலி நியூஸ், சன்டே ஒப்சேவர், இலங்கை டெயிலிமிரர், இந்துசாதனம், புதினம், கலைச்செல்வி, ஆனந்தவிகடன், கல்கி, கலைமகள், மஞ்சரி, கண்ணன், அம்புலிமாமா, குமுதம், தர்மசக்கரம், விவேகானந்தன், நாவலன் என்னும் பத்திரிகைகள் வரவழைக்கப்படுகின்றன. அவ்வக்காலங்களில் வெளிவரும் விசேட சஞ்சிகைகளும் மலர்களும் வாங்கி வைக்கப்படுகின்றன. சபைக்குரிய சந்தாப்பணத்தில் 95 வீதப் பணம் இப்பகுதிக்குச் செலவிடப்படவேண்டியிருக்கிறது.

யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலிருந்தும் கல்விமான்களையும் ஆராய்ச்சியாளர்களையும் வரவழைக்கக் கூடிய தகுதியான நூல்நிலையம் சபைக்கு உண்டு. சமயம், இலக்கியம், இலக்கணம், சரித்திரம், சிறுகதை என்னும் பிரிவுகளிலும் பிறவுமாக 450 பழைய புதிய புத்தகங்களும் வேறுஞ் சிறந்த பத்திரிகைக் கட்டுக்களும் மலர்களும் இருக்கின்றன. ஆயினும் இடம்பெறவேண்டிய சிறந்த நூல்கள் அதிகம் தேவை. பல வெளியீட்டுக் கழகத்தினரும் நூலாசிரியர்களும் எமது நூல்நிலையத்திற்கு இலவசமாக நூல்கள் அனுப்பிவருகிறார்கள். அவர்கள் தொடர்ந்து நூல்களை அனுப்பி ஆதரிக்குமாறு வேண்டுகின்றோம். அவர்களுக்கும் சபை நன்றி பாராட்டுகிறது.

## கலை, கலாச்சாரம்—
## சன்மார்க்க நாடக மன்றம்

கலை கலாச்சாரப் பகுதிக்குச் சன்மார்க்க நாடக மன்றம் பொறுப்பாக இருந்து பணி புரிந்து வருகிறது. இம்மன்றம் இலங்கைக் கலைக்கழக நாடகக் குழுவில் இணைந்திருக்கிறது. தரமான நாடகங்களை மேடையிடுதல்; மற்றைய மன்றங்களின் நல்ல நாடகங்களை நடிப்பித்துக் காண்பித்தல்; கொட்டகைக் கூத்துக்கு ஆதரவு கொடுத்தல்; காவடி, கரகம், கும்மி, நாட்டுப்பாடல் போன்ற கிராமியக் கலைகளை வளர்த்தல்; இசை, நடனம் முதலியவற்றை ஊக்குவித்தல் என்பவற்றோடு இரசஞான விருத்திக்குரிய சிறப்பு ஆற்றலை உற்சாகமூட்டி வளர்க்க முயற்சி எடுத்தல் என்பன இம் மன்றத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

நவராத்திரிகாலக் கலைவிழாவில் கிராமியக்கலைகள் மேடையிடப்பட்டன. 'நிறை குடம்' என்னும் சரித்திர நாடகமும் நாடக மன்ற உறுப்பினர்களால் நடிக்கப்பட்டது. உயர்தரமான இந்நாடகம் இன்றுவரை பல இடங்களிலும் மேடையிடப்பட்டு யாவரதும் நன்மதிப்பைப் பெற்று வருகிறது. காங்கேசந்துறை வசந்தகான சபையாரின் 'பக்த நந்தனார்' என்ற கொட்டகைக் கூத்தும் எம்மூர் மக்களுக்குக் காண்பிக்கப்பட்டது. இக்கால எல்லையுள் 'பகையும் பாசமும்' என்னும் சமூக நாடகமும் 'ஆயிரத்தில் ஒருவர்' என்ற ஒற்றையங்க நாடகமும் மன்ற அங்கத்தவர்களால் மேடையேற்றப் பட்டன. பின்னைய 'ஆயிரத்தில் ஒருவர்' என்ற நாடகம் முறையே யாழ்ப்பாணச் சனசமூகநிலைய சமாச நாடக விழாவில் இரண்டாம் இடத்தையும், வலி-வடக்குச் சனசமூகநிலைய சமாச நாடகவிழாவில் முதலாம் இடத்தையும் பெற்றது.

சன்மார்க்க நாடகமன்றத் தலைவர் திரு. ஆ. த. பொன்னுத்துரை, B. A. அவர்கள் வடபகுதிப் பிரதேச கலாமன்றத்தின் நாடக நுண்கலைப்பிரிவில் அங்கத்தவராகவும், வலி-வடக்குச் சனசமூகநிலைய சமாச நாடகப்பகுதிக்குத் தலைவராகவுந் தெரிவு செய்யப்பட்டுப் பணிபுரிந்து வருவதும், வானொலி நாடகங்களை எழுதியும் நடித்தும் வருவதும் இம்மன்றத்திற்கு ஏற்பட்ட கௌரவமாகும்.

இலங்கை அரசாங்க தகவல் பகுதியினரும், இலங்கையிலுள்ள பிறநாட்டுத் தூதுவர் காரியாலயங்களும்—அமெரிக்கா, பிரித்தானியா, ஜேர்மனி, இந்தியா— தங்கள் நாட்டுச் செய்திப் படங்களைக் காலத்துக்குக் காலம் எமது மண்டபத்திற் காட்டிவருகின்றார்கள். அவர்களுக்குச் சபை நன்றி பாராட்டுகிறது.

## சன்மார்க்க இளைஞர் சங்கம் —
## விளையாட்டுக் கழகம்

விடுமுறைக் காலங்களில் தேவைப்படும் போது பொதுக்கூட்டங்களைக் கூட்டிப் பேச்சுக்களும் பேச்சுப் போட்டிகளும் நடாத்தி வருகின்றது. இளைஞரில் அமைந்த விசேட ஆற்றல்களை வளர்ப்பதற்குரிய முறைகளிற் பயிற்சியளிக்கிறது. கையெழுத்துப் பத்திரிகை 'சன்மார்க்கதீபம்' வெளியிடுதல் முக்கிய வேலைத்திட்டங்களுள் ஒன்றாகும். விளையாட்டுக்களும் விளையாட்டுப் போட்டிகளும் நடாத்துதல் விளையாட்டுக் கழகத்தின் நோக்கமாகும்.

சன்மார்க்கசபையின் தம்பியையா ஞாபக விளையாட்டு மைதானம் 15 பரப்புக்களைக் கொண்டதாகும். இளைஞர்கள் மைதானத்தை உபயோகப்படுத்தி வருகின்றனர். நவீன விளையாட்டுக்களுக்கு மைதானம் விசாலமடையவேண்டும். அடுத்த வருடம் மைதானத்தை நன்கு செப்பனிட்டு முழுக் காணியையும் உபயோகப்படுத்தச் சபை முயற்சி எடுக்கும்.

## சன்மார்க்க ஐக்கிய நாணய சங்கம்

இதில் முப்பதுக்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் இருக்கிறார்கள். மாதம் ஒருமுறை கூடிக் கருமமாற்றுகிறார்கள். அங்கத்தவர்கள் கமத்தொழில் கைத்தொழில்களிற் சிறப்படையவும் கடன்பளு நீங்கவும் மட்டாகச் செலவு செய்யவும் பொருளாதார வளர்ச்சியடையவும் இச்சங்கம் பணிபுரிகிறது.

## சன்மார்க்க மாதர் ஐக்கிய நாணய சங்கம்
## சன்மார்க்க மாதர் சபை

சன்மார்க்க மாதர் ஐக்கியநாணய சங்கம் பெருமைகொள்ளக்கூடிய வகையில்

நடைபெற்று வருகிறது. இதில் 25 அங்கத்தவர்கள் உண்டு. தனியங்கத்தவர்கள் கடன் 225 ரூபாவாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அங்கத்தவர்கள் கூடிக் கடன்வசதி பெற்றுக் கோழி வளர்ப்பு, பால் ஆடு வளர்ப்பு, பால் மாடு வளர்ப்பு, பன்ன வேலே முதலிய குடிசைக் கைத்தொழில்களிலும் ஈடுபட்டுக் குடும்பப் பொருளாதார விருத்தியிலும் மேம்பட வசதிசெய்யப்பட்டிருக்கிறது. மாதர் ஐக்கியநாணய சங்கப் பொதுக் கூட்டங்களின் பின்பு மாதர் முன்னேற்றத்துக்கு வேண்டிய பொதுவிடயங்கள் பற்றிக் கலந்து பேசி ஆவன செய்யும் வழக்கம் நல்லபலனைத் தருகிறது. மாணவிகளும், பெண்களும் தங்களுக்கு வேண்டிய தையல் வேலைகளைப் பழகி, எமது தையல் யந்திரங்களில் தைத்துத் தமது குடும்ப தேவைகளைப் பூர்த்திசெய்கிறார்கள். பெண்கள் தங்கள் ஓய்வுநேரத்தை நன்கு உபயோகப்படுத்தப் பழகுதல் வேண்டும்.

### பால் நிலையம்

சபை ஆதரவுடன் நடைபெற்றுவரும் பால்நிலையத்திற்கு இவ்வருடம் பால்காய்ச்சுவதற்குரிய நிரந்தரக் கொட்டில் அமைத்துத் தகரத்தால் வேயப்பட்டிருக்கிறது. இதற்காகச் சபை ரூபா 50க்கு மேற்படச் செலவு செய்திருக்கிறது. மாதர் சங்கத்தால் தெரிவு செய்யப்பட்ட பெண் மேற்பார்வையாளர்கள் ஒழுங்காக மேற்பார்வைசெய்து கடமை புரிகிறார்கள். சபை உபதலைவர் திரு. நா. சிவசாமி ஆசிரியர் பொறுப்பாளராகப் பணிபுரிந்துவருகிறார். பால் நிலையம் திறம்பட நடாத்தப்பட்டு வருகிறது.

### கிராமதேவை

**மத்திய வைத்தியசாலை :** இவ் வருடம் 7-8-61இல் குரும்பசிட்டியில் மயிலிட்டி மத்திய வைத்தியசாலை தாபிக்கப்பட்டமை குறித்துச் சபை பெருமகிழ்ச்சியடைகிறது. 1936ஆம் ஆண்டு தொடக்கம் சபை தொடர்ந்து முயற்சித்தமை காரணமாக ஆரம்பத்தில் உப மருந்துச்சாலை, சிசுமாதா பராமரிப்பு நிலையம் என்பன கிடைக்கப் பெற்றாலும் இடத்துக்கிடம் மாற்றப்பட்டன ; தேவைக்கு ஏற்றதாகப் போதிய வளர்ச்சியடையவில்லை.

சன்மார்க்கசபை பல வருடங்களாகப் பிரசவ விடுதிச்சாலை வளவில் மத்திய வைத்தியசாலை அமைத்துத்தரும்படி ஒவ்வொரு வருடாந்த விழாக்களிலும் வெவ்வேறு சந்தர்ப்பங்களிலும் அரசாங்கத்துடன் தொடர்புகொண்டு முயற்சி எடுத்து வந்துகொண்டிருந்தது. அதன் காரணமாக ஆனி (ஜூன்)மாத முற்பகுதியில், அரசாங்கம் 8-7-61இல் மத்திய வைத்தியசாலை அமைக்கப்படும் என அறிவித்தது. ஆனால் பின், 29-6-61இல் சபைக்கு அரசாங்கத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதப்படி, காலம் காட்டாது மத்திய வைத்தியசாலை குறித்தவண்ணம் ஆரம்பிக்க முடியாதென அறிவித்துவிட்டது.

ஏமாற்றமான இச் சூழ்நிலையில் சன்மார்க்கசபை சௌக்கிய சேவை அதிபதிக்கு அரசாங்கம் முன் தீர்மானித்தபடி சிசுமாதா பராமரிப்பு நிலையத்தில் மத்திய மருந்துச்சாலையை உடனடியாகத் தாபிக்கும்படி தந்திமூலம் மனுச்செய்தது. வேறும் கிராம பொதுத் தாபனங்களையும் ஈடுபடுத் தந்தியடிக்க முயற்சி செய்தது. அதற்காகச் சபை மொத்தமாக ரூபா 15ஐச் செலவு செய்யவேண்டி ஏற்பட்டது.

சன்மார்க்கசபை 2-7-61இல் விசேட பொதுக்கூட்டம் கூட்டி மத்திய வைத்தியசாலையைக் குறித்த இடத்தில் தாபிக்கும்படி மனு ஒன்றைத் தயாரித்து ஏகமனதாக அங்கீகரித்து அனுப்பிவைத்தது. அவ் விசேட கூட்டத்தில் கௌரவ சுகாதார அமைச்சரவர்களைப் பேட்டிகண்டு விளங்க வைக்க ஒரு தூதுக்குழுவைக் கொழும்புக்கு அனுப்பவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

குரும்பசிட்டி மக்கள் சார்பாகக் கேட்பதிலும் மயிலிட்டி கிராமசங்க மக்கள் தொகுதி சார்பாகக் கேட்பது கூடிய பலன் கொடுக்குமென்ற காரணத்தால் 6-7-61இல் வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாசாலையில் ஒரு பகிரங்கக் கூட்டம் கூட்டி சிசுமாதா பராமரிப்பு நிலைய வளவில் மத்திய வைத்தியசாலைக்கு என அரசாங்கம் திருத்திய கட்டிடத்தில் மத்திய வைத்தியசாலையைக் காலந் தாழ்த்தாது நிறுவவேண்டு

மென்னும் பிரேரணையை நிறைவேற்றிக் கௌரவ சுகாதார அமைச்சருக்கு அனுப்பி வைத்துச் செயல்புரியச் சபை முன்னின் றுழைத்தது. இக் கூட்டத்திலேயே மத்திய வைத்தியசாலை சம்பந்தமாக விபரமடங் கிய மனு ஒன்று தயாரித்துச் சுகாதார அமைச்சருக்குச் சமர்ப்பிக்கவும், நேரே கண்டு பேசவும் முடிவு செய்யப்பட்டது.

கூட்டத் தீர்மானப்படி, திரு. க. வே. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் முன் னுள் கிராம சங்கத் தலைவர் திரு. வ. இராச நாயகம், J. P. அவர்களும், சன்மார்க்கசபை யினரும் சேர்ந்த குழு ஒன்று கொழும்பு சென்றது.

1. முன்கூட்டியே ஒழுங்குசெய்யப்பட்ட மனு.
2. மத்திய வைத்தியசாலைக்கு என அர சாங்கத்தால் திருத்தியமைக்கப் பட்ட கட்டிடம், வளவு, கிணறு என்பன பொருந்த எடுக்கப்பட்ட பெரிய அளவுப் புகைப்படங்கள்.
3. பிரமாணத்திற்கு அமைவாக வரை யப்பட்ட மயிலிட்டி கிராம சங்கப் பகுதிப் படம்.
4. சன்மார்க்க சபையின் வைத்திய வச திச் சேவைக்குரிய கடிதக் கோவை (பைல்).

என்பவற்றுடன் 11-7-61இலும் 12-7-61 இலும் கௌரவ சுகாதார அமைச்சரை இருமுறையாகக் கண்டு கலந்து பேசி அரசாங்கம் தீர்மானித்தபடியே மத்திய வைத்தியசாலையை உடனடியாக ஆரம் பித்து வைக்கும்படி கேட்டு வற்புறுத்தப் பட்டது. கலந்துபேசியதன் முடிபாகச் சுகா தார அமைச்சர் தாம் நேரிற் பார்த்து ஆரம் பித்து வைப்பதாகத் தெரியவைத்தார்கள்.

இத்தகைய முயற்சியின்பின் சபை யினர் சிசுமாதா பராமரிப்பு நிலைய வளவு துப்புரவு செய்தல்; கிணற்றுச் சேறு அள்ளி வற்ற இறைத்தல்; கட்டிடங்களைக் கூட் டிக் கழுவிச் சுத்தம் செய்தல் முதலிய பணி களில் ஈடுபட்டுழைத்தனர்.

உதவிச் சுகாதார அமைச்சர் கௌரவ ஒபயசேகரா அவர்கள் மத்திய மருந்துச் சாலையைப் பார்வையிட்டபின்பு, யாழ்ப் பாணத்தில் அவரைச் சந்தித்தபோது, கௌரவ சுகாதார அமைச்சர் A. P. ஜெயசூரியா அவர்களே இது சம்பந்தமாக இறுதி முடிவு செய்யவேண்டுமென அவர் தெரியவைத்தார்கள்.

சுகாதார அமைச்சரின் யாழ்ப்பாண வருகை ஐயத்துக்கிடமாக இருந்தபடியால் தூதுக் குழுத் தலைவர் திரு. க. வே. சுப்பிர மணியம் அவர்கள் மறுபடியும் 3-8-61இல் கொழும்பு சென்று சுகாதார அமைச்ச ருடன் கலந்துபேசியதன் முடிபாக 7-8-61 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு மத்திய மருந்துச்சாலையை ஆரம்பித்து வைப்பதா கத் தெரியவைத்தார்கள். கௌரவ சுகாதார அமைச்சரின் தீர்மானம் எழுத்து மூலம் அவரால் யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை அத்தியட்சருக்குத் தெரிய வைத்த தன்பின், யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை அத்தியட்சர் அவர்களுடைய ஆலோ சனையின்படி 7-8-61 காலை மத்திய வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டது.

சன்மார்க்கசபையின் ஆதரவுடன் திரு. க. வே. சுப்பிரமணியம் அவர்களின் தலை மையில் இயங்கிய குழு ஆரம்ப விழாவை நடாத்திவைத்தது. யாழ்ப்பாணம் வைத்திய மேலதிகாரி டக்டர் S. கனகரத் தினம் அவர்கள் சைவமுறைப்படி குத்து விளக்கேற்றி மத்திய வைத்தியசாலையை ஆரம்பித்து வைத்தார்கள்.

சன்மார்க்கசபை, 1-7-61 தொடக்கம் நடைமுறைக்கு வரவேண்டிய மத்திய வைத்தியசாலை தடைப்படுத்தப்பட்ட காலந் தொடக்கம் மீண்டும் 7-8-61இல் ஆரம்பிக்கப்படும்வரை எடுத்துக்கொண்ட முயற்சி காரணமாக, கொழும்பு சென்ற தூதுக் கோஷ்டியின் செலவு, தந்தி, தொலை பேசி, பதிவுதபால் முத்திரை, ஆரம்ப விழா, வரவேற்பு என்பவற்றுக்கு ரூபா 708 சதம் 56 செலவு செய்திருக்கிறது.

குரும்பசிட்டியில், மயிலிட்டி மத்திய வைத்தியசாலை தாபிக்கப்பட்டமை குறித் துச் சபை பெருமை கொள்ளுகிறது. இவ் விடயத்தில் எங்களுடன் ஒத்துழைத்த

வயாவிளான், திரு. க. வே. சுப்பிரமணியம் அவர்களுக்கும், திரு. வ. இராசநாயகம், J. P. அவர்களுக்கும் சபையும் நமது கிராமமும் என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளன. இவ்விடயத்தில் ஒத்துழைத்த யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை. அத்தியட்சர் டக்டர் ஜி. என். ஆர். நதானியேல் அவர்களுக்கும், மயிலிட்டிக் கிராமசங்கத்திற்கும், இப்பணி நிறைவேற ஆதரவுதந்து ஒத்துழைத்த நண்பர்களுக்கும் சபை நன்றி பாராட்டுகிறது. இம் மத்திய வைத்தியசாலையை யமைத்துத்தந்த சுகாதார அமைச்சருக்கும் சௌக்கிய சேவை அதிபதி, அதிகாரிகளுக்கும் சபையின் நன்றி உரியதாகுக.

## சிசுமாதா பராமரிப்பு நிலையம்

மத்திய வைத்தியசாலை தாபிதத்துடன் சபை நின்றுவிடவில்லை. முன்பு, இங்கிருந்து மாற்றப்பட்ட சிசுமாதா பராமரிப்பு நிலையத்தைத் திரும்பவும் வசதிகள் நிரம்பிய பழைய மத்தியான இடத்திற்கு மாற்ற வேண்டுமென மனுப்பண்ணி *19-9-61*ல் முயற்சி எடுத்துக்கொண்டது. அது சம்பந்தமாக சௌக்கியசேவை அதிபதியின் (D. H. S.) *17-10-61*க் கடிதத் தொடர்பாக யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை அத்தியட்சர் (S. H. S.), தெல்லிப்பழை சௌக்கிய வைத்தியாதிகாரி (M.O.H.) என்போருடன் கலந்து பேசி வேண்டிய நடபடிக்கைகளை எடுத்துக்கொண்டது. இவ் வதிகாரிகளுடைய கேள்விப்படி சிசுமாதா பராமரிப்பு நிலையத்திற்கு உடனடியாக வேண்டிய: மேசை — கதிரை — வாங்குகள் — வாளிகள்— மலகூடவாளிகள் —' றபர்சீற் '—'பேசின்' கள் — தலையணைகள் — தலையணை உறைகள் — படுக்கைவிரிப்புக்கள் — படுக்கை மறைப்புத் திரைச் சேலைகள் — துவாய்கள் — சவர்க்காரமும் பெட்டியும் என்பவற்றைச் சபை இலவசமாக உபகரிக்கச் சிசுமாதா பராமரிப்பு நிலையம் **19-3-62** தொடக்கம் முன்போல குரும்பசிட்டி மத்திய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருக்கிறது. இரண்டு கிழமைக்கு ஒருமுறை டக்டர் சமுகம் கொடுத்து வைத்திய வசதியளிக்கிறார்கள். இவ்வுபகரிப்புப் பொருள்களுக்காகச் சபை ரூபா *125* சதம் *75* செலவு செய்தது.

இப்போது மத்திய மருந்துசாலை, சிசுமாதா பராமரிப்பு நிலையம் ஆகிய இரண்டு வகையான வைத்தியசேவை நிலையம் நடைமுறையில் இருக்கின்றன. இவை வளர்ச்சியுற்று மக்கள் மேலதிக வைத்தியவசதி பெறத்தக்க கிராம வைத்தியசாலையாக மாற்றி அமைப்பதற்கு எங்கள் சபை தொடர்ந்து முயற்சிக்கும்.

## ஈழகேசரிப் பொன்னையா வீதி

பகிரங்க தெரு இல்லாமை நமது கிராமத்திற்குப் பெரும் குறையாக இருந்துவந்தது. *1947*ஆம் ஆண்டு தொடக்கம் சபையின் முயற்சி காரணமாக இரண்டுமைல் நீளத்திற்கு—*24*அடி அகலத்திற்கு—ஒழுங்கைகளை அகலவித்து ஈழகேசரிப் பொன்னையா வீதி அமைக்கப்பட்டது. *11* வருட முயற்சியின் பின் *1958*இல் அரசாங்கம் பகிரங்க வேலைப்பகுதிக்குரிய தெருவாக அங்கீகரித்தது; ½ மைல் நீளத்திற்குக் கற்பதித்துத் தார் ஊற்றியது. எஞ்சிய பகுதியுந் தொடர்ந்து வேலை நடைபெறச் சபையால் மனுச் செய்தும் பேட்டி கண்டும் முயற்சிகள் எடுக்கப்பட்டன. யாழ்ப்பாணம் பகிரங்க வேலைப் பகுதியால் அதற்குரிய செலவினங்களைச் சிபார்சு செய்து அமைச்சர் காரியாலயத்திற்கு அங்கீகாரத்துக்கு அனுப்பப்பட்டபோது, நிதி பற்றுக்குறை காரணமாக அது கைவிடப்பட்டது. மேற்கொண்டும் சபை முயற்சி எடுத்தமை காரணமாக மேலும் இவ்வருடம் ½ மைல் தூரம் திருத்தவேலை செய்ய முயற்சி எடுக்கப்படும் என அறிகிறோம். இவ்விடயத்தில் காரியசித்தி யடையும் வகையில் சபை முயற்சி எடுக்கும். ஈழகேசரிப் பொன்னையா வீதி ஒரு சிறந்த பகிரங்க வீதியாக அமைக்கப்பட வேண்டுமென்பது சபையின் குறிக்கோளாகும்.

## மயிலிட்டி தெற்கு எல்லைப்பிரிவு


மயிலிட்டிதெற்கு எல்லைப்பிரிவு புனர் அமைப்புப்பற்றிச் சபை நீண்டகாலமாக முயற்சி எடுத்துவந்துள்ளது. மயிலிட்டி கிராமசங்கத் தலைவரின் *8-9-61*ஆந் திகதிக் கடிதத் தொடர்பாகச் சன்மார்க்கசபை மயிலிட்டிக் கிராமசங்கத்தின் விசேட உப சபையில், மயிலிட்டி தெற்கு எல்லைகள்

'ஈழகேசரி' பொன்னையா ஞாபகார்த்த விழா, மகேசுரபூசை




1, 3. 'ஈழகேசரி' பொன்னையா ஞாபகார்த்த கூட்டங்கள் (2 வருடங்கள்). 2, 4. 'ஈழகேசரி' பொன்னையா ஞாபகார்த்த விழாவின்பின் மகேசுரபூசை (மதியபோசனம்) (2 வருடங்கள்).

## 'ஈழகேசரி' பொன்னையா ஞாபகார்த்தப் பேச்சுப் போட்டி




1. கீழ்ப்பிரிவில் தங்கப் பதக்கம் பெற்ற மாணவர் பேசுகிறார். 2. மேற்பிரிவில் முதலாம் இடம்பெற்ற மாணவருக்கு வலி-வடக்குக் காரியாதிகாரி திரு. தி. முருகேசபிள்ளை அவர்கள் தங்கப் பதக்கம் அணிகிறார் (1964). 3. 1965ஆம் ஆண்டில் பேச்சுப் போட்டியில் பரிசுபெற்ற மாணவ மாணவிகள். 4, 5. முறையே 'ஆத்மஜோதி' திரு. நா. முத்தையா அவர்களாலும் (1965), முன் காரியாதிகாரியாயிருந்து உதவி மாகாண அதிபராய் உத்தியோக உயர்வுபெற்ற திரு. ஆ. பெருமையினார் அவர்களாலும் (1963) பேச்சுப் போட்டியின்போது முதற்பரிசு பெற்றவர்களுக்குத் தங்கப்பதக்கங்கள் அணிவிக்கப்படுகின்றன.

எங்ஙனம் அமையவேண்டுமென அதற்குரிய மனுவும் விளக்கப்படமும் சமர்ப்பித்து 17-9-61இல் சபை தனது ஆலோசனையைத் தெரிவித்தது. முக்கியமாகத் தெற்குப் பக்கமாக மேற்கு எல்லை பத்தகல் ஒழுங்கையும், தெற்கு எல்லை குப்பிளான் இளையப்பா ஒழுங்கையும், எஞ்சிய மீதிப்பகுதி குரும்பசிட்டி — குப்பிளான் ஊரெல்லையுமாக இருக்கவேண்டுமெனச் சபையால் வற்புறுத்தப்பட்டது. சபையின் ஆலோசனைகள் கிராமசங்க உபசபையால் ஆலோசனைக்கு எடுக்கப்பட்டன. இவ்வெல்லைகள் கிராம சங்க உபசபையாற் கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

### பொது

சபையினராற் பொங்கற்பண்டிகை விழா, ஈழகேசரிப் பொன்னையா நினைவு நாள் விழா, நவராத்திரிகாலக் கலைவிழா என்பன வழமைபோல் இவ்வருடமுஞ் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன.

மொழியுரிமை கோரி நடைபெற்ற சத்தியாக்கிரக போராட்ட காலத்தில் 'தனிச் சிங்களச் சட்டத்தை இலங்கை முழுவதும் நடாத்தியே தீருவோம்' என்ற பிடிவாதக் கொள்கையை விடுத்து இலங்கைவாழ் இரு தேசீய இனங்களுக்கும் இடையே ஒற்றுமையை நிலைநிறுத்தத் தமிழ்மொழிக்கு அரசாங்க அங்கீகாரம் அளிக்கும்படி சபை ஒரு மனு தயாரித்து முதலமைச்சருக்கு மனுச் செய்து வேண்டிக்கொண்டது.

யாழ்ப்பாணம் நெஞ்சுநோய்ச் சிகிச்சை நிலையத்துடன் தொடர்புகொண்டு நமது கிராமத்திலும் நெஞ்சு நோய்ப் பரிசோதனைக்குரிய 'எக்ஸ்றே' படப்பிடிப்புக்கு ஒழுங்குகள் செய்யப்பட்டன. கிராம மக்கள் உற்சாகத்துடன் பரிசோதனைப் படப்பிடிப்பில் ஈடுபடச் சபை பிரசாரஞ் செய்து ஊக்கப்படுத்தியது.

அகில இலங்கைப் பொதுசன சுகாதார வாரத்தின் சார்பாக வலிகாமம் வடக்குப் பிரிவுச் சுகாதார வார சபையிற் பங்குபற்றிப் பணிபுரிகிறது.

அகில இலங்கைச் சயரோகத் தடுப்புச் சேவைச் சங்கத்தில் (C. N. A. P. T.) வலிகாமம் வடக்குக் காரியாதிகாரி பிரிவு உபசபையிற் பங்குபற்றிச் செயல்புரிகிறது.

அகில இலங்கை அருள்நெறி மன்றத்தின் நிர்வாகசபையில் இடம்பெற்று அதன் வேலைத்திட்டங்களுக்கு அமைவாகப் பணி புரிகிறது.

அகில இலங்கைச் சைவ இளைஞர் மத்திய மகாசபையிற் தொடர்பு கொண்டு அதன் வேலைத் திட்டங்களுக் கமைவாக முயற்சி எடுக்கிறது.

இந்துசமய அபிவிருத்தி ஆலோசனைச் சபையின் வேலைத் திட்டங்களைச் சபை ஏற்று இயன்ற பணி புரிந்து வருகிறது.

அகில இலங்கை இந்துமாமன்றம், திருக்கேதீச்சரத் திருப்பணிச்சபை என்பன வற்றின் நோக்கங்கள் நிறைவேறச் சபை முயற்சி எடுக்கிறது.

யாழ்ப்பாணம் சனசமூக நிலையங்களின் சமாசத்திலும் வலி-வடக்கு சனசமூக நிலையங்களின் சமாசத்திலும் உள்ள நிருவாக சபைகளில் அங்கத்துவம் பூண்டு பணி புரிகிறது.

## இருபத்தெட்டு, இருபத்தொன்பது, முப்பதாவது ஆண்டுகள் : 31-12-64 வரை

இவ் வாண்டுகளின் ஆரம்பத்திலே 'ஈழகேசரிப் பொன்னையா ஞாபகார்த்தப் பேச்சுப் போட்டி' நடாத்தவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. அப்போட்டியை அகில இலங்கை ரீதியாக நடாத்தி முதலாம், இரண்டாம், மூன்றும் இடங்களுக்கு முறையே தங்கப்பதக்கம், வெள்ளிப்பதக்கம், புத்தகங்கள் பரிசளிக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டதோடு தொடர்ந்து வருடாவருடம் நடாத்தவும் ஏற்ற ஒழுங்குகள் ஆரம்பிக்கப்பட்டன. ஈழகேசரிப் பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றத்தினர் வருடாவருடம் போட்டிக்குரிய பரிசைக் கொடுத்துதவும் பணியை ஏற்றுக் கொண்டனர்.

இக்கால எல்லையுள் மிகவும் பயங்கரமாகப் பரவிய இளம்பிள்ளைவாதநோயை எமது கிராமத்திலும் பரவாமல் தடைசெய்வதற்கு

விசேட சிரத்தையெடுக்கப்பட்டது ; விசேட அச்சுவிளம்பரம் பிரசுரஞ்செய்து வீடு வீடாகக் கொடுத்துப் பிரசாரஞ் செய்யப் பட்டது. நமது கிராமத்திலுள்ள 1 — 8 வயதுவரை உடைய பிள்ளைகள் பெயர் இடாப்புக்களைத் தயாரித்துத் தெல்லிப் பழைச் சுகாதார சேவைப் பகுதியினருடன் சேர்ந்து தடைமருந்து சன்மார்க்கசபை மண்டபத்திற் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

விசேடமாகச் சமயப்பகுதியில் அதிக சிரத்தை எடுக்கப்பட்டது. சிவதீட்சை வைப் பித்தல், குருபூசைகள் கொண்டாடுதல், கோயிற்றிருவிழாக் காலங்களிற் கூட்டுப் பிரார்த்தனை, சைவப்பிரசங்கங்கள் நடாத் துதல், திருத்தொண்டுகள் செய்தல்—செய் வித்தல் என்பன போன்ற விடயங்களில் விசேட சிரத்தை யெடுக்கப்பட்டது. பண் முறைத் தேவாரவகுப்பு நடைபெற ஆரம்ப முயற்சி எடுக்கப்பட்டு, ஆசிரியர் திரு. மு. இராமலிங்கம் அவர்கள் பொறுப்பாக இருந்து பணிபுரிய ஆவன செய்யப்பட்டன.

1964ஆம் ஆண்டு மார்கழி மாதம் வீசிய சூறுவளியினால் ஏற்பட்ட சேதங்களை மதிப்பிட்டு அரசினரிடமிருந்து நன் கொடைப்பணம் பெறவேண்டிய எல்லா முயற்சிகளும் எடுக்கப்பட்டன. ஈழகேசரிப் பொன்னையா வீதியிலிருந்து குரும்பசிட்டி அம்பாள் ஆலயத்துக்குச் செல்லும் 'ஆலய வீதி'யைக் கல் பரவி அமைக்கச் சிரமதான முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஈழத்துப் பிரபல எழுத்தாளர் இரசிக மணி கனக. செந்திநாதன், இலங்கை, வானொலி நாடகப் பகுதித் தலைவர் திரு. செ. சண்முகநாதன் (சானா), ஆசிரியர் வி. கந்தவனம், B. A. என்போரால் முறையே எழுதப்பட்ட 'ஈழத்து இலக்கிய வளர்ச்சி', 'பரியாரி பரமர்', 'இலக்கிய உலகம்' என்னும் நூல்களின் வெளியீட்டு விழாக்களை நடாத்தி யும், 'திருமுருகாற்றுப்படை' என்னும் நூலைப் பிரசுரிப்பித்து இலவசமாக விநியோகித்தும் பணிபுரிந்திருக்கிறது. மேலும் அவ்வப் போது கிராமமக்களது தனித்தனித் தேவை களையும், முறைப்பாடுகளையும் அறிந்து அவர்கள் குறைகளை நீக்க வேண்டியன செய்யப்பட்டன. இங்ஙனம் தளரா ஊக்கத் துடனும் திட சித்தத்துடனும் பணிபுரியத் திருவருள்பாலித்த சிவபிரானை இறைஞ்சி ஏத்துவோமாக.

வளர்க சன்மார்க்க சபை !
வாழ்க சன்மார்க்க நெறி !!

---

உயிர்கள், பிறப்பு இறப்பு இல்லாத தன்மை பெறவேண்டும். எந்த உயிர்க்கு மலம் அற்றதோ அதற்குப் பிறப்பில்லாத் தன்மை வந்தெய்துகிறது. அந்தமில் நிர்மலத்தான் உயிர்களின் மும்மலத்தையும் நீக்குபவன் என்று உணரவேண் டும். இறைவன் மும்மைமலமறுவிக்கும் முதலாய முதல்வன்.


— சன்மார்க்கசபையில் வித்துவான் சி. அருணைவடிவேல்

★ ★ ★

நிலம் வைத்திருக்க எல்லோருக்கும் உரிமை உண்டு. ஒரு சிலர் அதிக நிலம் பெற்றிருக்க மிகுதிப்பேர் நிலமின்றி இருக்கவேண்டுமென்ற நியதி இல்லை. நிலப் பிரச்சினையைச் சர்வோதயவழி திருப்தியுடன் தீர்க்கின்றது.

— சன்மார்க்கசபையில் வார்தா கல்வித்திட்டப் பேராசிரியர் திரு. ஈ. டபிள்யூ. அரியநாயகம்

## பொதுக் கூட்டங்கள்




1. கலைப்புலவர் திரு. க. நவரத்தினம் அவர்கள், கலாநிதி சு. நடேசபிள்ளை அவர்கள் தலைமையில் விரிவுரை நிகழ்த்துகிறார். 2. காரைக்குடி அழகப்பாக் கல்லூரிப் பேராசிரியர் திரு. ஆ. முத்துசிவன், எம். ஏ. இலக்கிய விரிவுரையாற்றுகிறார். 3. பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்களின் அறுபதாண்டுப் பூர்த்திவிழா.

# சபை நடைமுறைகள்



1, 2. சன்மார்க்க சபை, சன்மார்க்க மாதர் சபை நடைமுறைகளைக் கொழும்பு சமூகசேவா பயிற்சிக் கலாசாலை மாணவ மாணவிகள் பார்வையிடுதல்.
3. பால நிலையம்.

# சென்ற முப்பது ஆண்டுச் சன்மார்க்கசபை நிருவாகஸ்தர்கள்

| ஆண்டு | தலைவர் | உப தலைவர்கள் | காரியதரிசிகள் | தனாதிகாரிகள் | நிருவாக உறுப்பினர் |
|---|---|---|---|---|---|
| 34/35 1 | திரு. கா. பொன்னையா | திரு. சி. கந்தையா | திரு. க. நாகலிங்கம்<br>,, க. சுந்தரமூர்த்தி | திரு. வ. இராமலிங்கம் | திருவாளர்கள் : கோ. நமசிவாயம், வ. பொன்னுக்குமாரு, சி. தம்பிப்பிள்ளை, தி. இராசிங்கர், கு. நாகலிங்கம், கோ. அப்பாக்குட்டி, சி. கதிரவேலு. |
| 36 2 | ,, | திரு. கு. நாகலிங்கம்<br>,, க. நாகலிங்கம் | திரு. சி. தம்பிப்பிள்ளை<br>,, வ. பொன்னுக்குமாரு | திரு. வ. இராமலிங்கம்<br>,, ப. இளையதம்பி | திருவாளர்கள் : கோ. நமசிவாயம், தி. இராசிங்கர், சி. சுப்பிரமணிய ஐயர், கோ. அப்பாக்குட்டி, கொழும்புப் பிரதிநிதி : அ. கயிலாயபிள்ளை. |
| 37 3<br>38 4 | ,, | திரு. வ. இராமலிங்கம் | திரு. சி. தம்பிப்பிள்ளை<br>,, க. நாகலிங்கம் | திரு. கோ. நமசிவாயம்<br>,, தி. இராசிங்கர் | திருவாளர்கள்: மு. சபாரத்தினம், வ. ஐயம்பிள்ளை, கோ. அப்பாக்குட்டி. |
| 39 5 | ,, | திரு. க. நாகலிங்கம் | திரு. வ. இராமலிங்கம்<br>,, மு. சபாரத்தினம் | ,, | திருவாளர்கள் : சி. தம்பிப்பிள்ளை, வ. ஐயம்பிள்ளை, சி. இரத்தினம். |
| 40 6 | ,, | — | திரு. சி. தம்பிப்பிள்ளை | திரு. கோ. நமசிவாயம் | திருவாளர்கள் : கோ. அப்பாக்குட்டி, மு. சபாரத்தினம், வ. ஐயம்பிள்ளை, வ. இராமலிங்கம், தி. இராசிங்கர், சி. சுப்பிரமணிய ஐயர். |
| 41 7 | ,, | — | ,, | ,, | ,, |
| 42 8 | ,, | — | திரு. சி. தம்பிப்பிள்ளை<br>,, வ. நடராசா | திரு. கோ. நமசிவாயம்<br>,, மு. இராமலிங்கம் | திருவாளர்கள் : கோ. அப்பாக்குட்டி, வ. ஐயம்பிள்ளை, மு. சபாரத்தினம், க. அருணாசலம், நா. சிவசாமி. |
| 43 9 | ,, | — | திரு. நா. சிவசாமி<br>,, சி. தம்பிப்பிள்ளை | திரு. வ. நடராசா<br>,, மு. இராமலிங்கம் | திருவாளர்கள் : கோ. அப்பாக்குட்டி, மு. சபாரத்தினம், வ. ஐயம்பிள்ளை, சி. கதிரவேலு, வே. வன்னியசிங்கம். |

| ஆண்டு | தலைவர் | உபதலைவர்கள் | காரியதரிசிகள் | தனாதிகாரிகள் | நிருவாக உறுப்பினர் |
|---|---|---|---|---|---|
| 10, 11 | திரு. நா. பொன்னையா | திரு. நா. சிவசாமி | திரு. வ. நடராசா<br>,, மு. இராமலிங்கம் | திரு. கோ. நமசிவாயம்<br>,, சி. தம்பிப்பிள்ளை | திருவாளர்கள் : மு. சபாரத்தினம், வ. ஐயம்பிள்ளை, கோ. அப்பாக்குட்டி, சி. கதிரவேலு. |
| 12 | ,, | திரு. மா. சின்னப்பு | திரு. வ. நடராசா | திரு. க. செல்லத்துரை | திருவாளர்கள் : சி. தம்பிப்பிள்ளை, நா. சிவசாமி, மு. இராமலிங்கம், த. இராசரத்தினம், பூ. சு. நடராசா, நா. சண்முகம், மு. பொன்னையா. |
| 13 | ,, | ,, | திரு. வ. நடராசா<br>,, க. செந்திநாயகம் | திரு. பொ. கந்தப்பு | திருவாளர்கள் : சி. தம்பிப்பிள்ளை, நா. சிவசாமி, த. இராசரத்தினம், பூ. சு. நடராசா, மு. பொன்னையா, க. செல்லத்துரை. |
| 14 | ,, | ,, | ,, | திரு. க. செல்லத்துரை | திருவாளர்கள் : த. இராசரத்தினம், மு. பொன்னையா, நா. சிவசாமி, பூ. சு. நடராசா, தி. சின்னத்தம்பி, வ. செல்லத்துரை |
| 15 | ,, | திரு. க. செந்திநாயகம் | திரு. நா. சிவசாமி<br>,, மு. சுப்பிரமணியம் | ,, | திருவாளர்கள் : வ. நடராசா, க. செல்லத்துரை, த. இராசரத்தினம், வ. பாலசந்திரன், க. செல்லையா, பூ. சு. நடராசா, க. கணபதிப்பிள்ளை. |
| 16 | திரு. மா. சின்னப்பு | — | திரு. வ. நடராசா<br>,, மு. இராமலிங்கம் | ,, | திருவாளர்கள் : நா. சிவசாமி, க. செந்திநாயகம், வ. பாலசந்திரன், த. இராசரத்தினம், வ. செல்லத்துரை, மு. சுப்பிரமணியம், க. கணபதிப்பிள்ளை. |
| 17 | திரு. நா. சிவசாமி | திரு. மு. பொன்னையா | திரு. மு. இராமலிங்கம்<br>,, த. இராசரத்தினம் | ,, | திருவாளர்கள் : சி. தம்பிப்பிள்ளை, தா. மகேந்திரம், தா. இராசேந்திரம், வை. இளையதம்பி, சி. கதிரவேலு. |
| 18, 19 | ,, | ,, | திரு. த. இராசரத்தினம்<br>,, மு. இராமலிங்கம் | ,, | திருவாளர்கள் : சி. தம்பிப்பிள்ளை, தா. மகேந்திரம், ஆ. நடராசா, வை. இளையதம்பி, சி. கதிரவேலு, தா. இராசேந்திரம். |

| ஆண்டு | தலைவர் | உபதலைவர்கள் | காரியதரிசிகள் | தனாதிகாரிகள் | நிருவாக உறுப்பினர் |
|---|---|---|---|---|---|
| 20 | திரு. நா. சிவசாமி | திரு. க. செந்திநாயகம் | திரு. த. இராசரத்தினம்<br>,, சி. இரத்தினம் | திரு. க. செல்லத்துரை | திருவாளர்கள் : சீ. தம்பிப்பிள்ளை, மு. சபாரத்தினம், வ. செல்லத்துரை, பூ. சு. நடராசா, வ. நடராசா, தா. மகேந்திரம், பொ. இராசரத்தினம், கொழும்புப் பிரதிநிதிகள் : அ. அம்பலவாணர், வ. செல்லமுத்தர். |
| 21<br>22 | ,, | திரு. க. செல்லத்துரை | திரு. த. இராசரத்தினம் | திரு. க. செந்திநாயகம் | திருவாளர்கள் : சீ. தம்பிப்பிள்ளை, மு. சபாரத்தினம், வ. செல்லத்துரை, சி. இரத்தினம், ஆ. முத்தையா, பொ. இராசரத்தினம். |
| 23 | திரு. கோ. நமசிவாயம் | திரு. நா. சிவசாமி | திரு. த. இராசரத்தினம் | திரு. ஆ. முத்தையா | திருவாளர்கள் : மு. சபாரத்தினம், க. செந்திநாயகம், ஆ. த. பொன்னுத்துரை, க. செல்லையா, தா. மகேந்திரம், பொ. இராசரத்தினம், பொ. இளையப்பா. |
| 24<br>25 | ,, | திரு. நா. சிவசாமி<br>,, க. செந்திநாயகம் | திரு. த. இராசரத்தினம்<br>,, க. செல்லையா | ,, | திருவாளர்கள் : மு. சபாரத்தினம், சி. இரத்தினம், ஆ. த. பொன்னுத்துரை, பொ. இராசரத்தினம், ம. சபாரத்தினம். |
| 26<br>27 | ,, | ,, | ,, | ,, | ,, ,, |
| 28<br>29<br>30 | ,, | ,, | திரு ஆ. த. பொன்னுத்துரை<br>,, க. செல்லையா | திரு. த. இராசரத்தினம் | திருவாளர்கள் : மு. சபாரத்தினம், வ. செல்லத்துரை, க. செல்லத்துரை, சி. இரத்தினம், ஆ. முத்தையா, பொ. இராசரத்தினம், ம. சபாரத்தினம். |

# சன்மார்க்கசபைபற்றியபத்திரிகைச்செய்திகள்

## 'ஆனந்த விகடன்' — 1954

யாழ்ப்பாணத்திலே தமிழுக்கும் சைவத்துக்கும் உழைக்கும் குரும்பசிட்டி சன்மார்க்க சபையினரைப் பாராட்டி, தருமபுர ஆதீனத்தார் ஒரு விசேட பரிசை அளித்துக் கௌரவித்தனர். ஆதீன இசைப் புலவர் இசையரசு திரு. எம். எம். தண்டபாணி தேசிகர் பாடிய தெய்வப் பாடல்களைத் தாங்கியுள்ள பத்து இசைத் தட்டுக்களுருவத்திற் கடல் கடந்து வந்த இப்பரிசைச் சன்மார்க்க சபைச் செயலாளரிடம் 'ஈழகேசரி' ஆசிரியர் திரு. இராஜ. அரியரத்தினம் அவர்கள் வழங்கினார்கள். தமிழ்ப் பணியும் சைவப் பணியும் செவ்வனே நடக்கும் இடங்களைப் பாராட்டிக் கௌரவிப்பதிலே தருமை ஆதீனம் எப்பொழுதுமே முதல் ஸ்தானம் வகிக்கத் தவறுவதில்லை.

## 'ஈழகேசரி' —3-7-1955

கிராம முன்னேற்றச் சங்கங்களுக்கெல்லாம் ஒரு முன்மாதிரியாக விளங்கிப் பொதுசனப்பணியில் தனக்கென ஒரு தனி இடத்தைப் பெற்றுள்ள சபை ஒன்று இந் நாட்டில் உளதெனின் அது குரும்பசிட்டி சன்மார்க்கசபை எனத் துணிந்து கூறலாம்.

இச் சபையினர் வெளியிட்டுள்ள 20ஆம் வருடத் தொகுப்பு அறிக்கையினைப் பார்க்கும்போது ஸ்ரீமத் சுவாமி விவேகானந்தா அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வருகை புரிந்ததின் பேற்றினை நினைந்து பெருமையடையாதிருக்க முடியாது. சுவாமி அவர்களின் வருகையின் பேறுகக் குரும்பசிட்டியிலும் இந்து வாலிபர் சங்கம் ஒன்று தொடங்கப் பெற்று இச் சங்கமே பின்பு 1934 ஆம் ஆண்டில் சன்மார்க்கசபை என்னும் பெயர் தாங்கித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இச்சபை பொதுநலத் தொண்டில் ஈடுபட்டு ஆற்றிவரும் சேவைகளோ பல. கிராமத்துக்கும் நாட்டுக்கும் வேண்டிய பல்வேறு துறைகளிலும் பணிபுரிவதோடு இளைஞர்களுக்கும் ஆர்வம் ஊட்டிச் சன்மார்க்க வாழ்வின் சிறப்பை உணர்த்திவருகிறது.

இச்சபையின் முயற்சிகளை அரசாங்க அதிகாரிகளும் தமிழ்நாட்டு அறிஞர்களும் பிறரும் நேரிற் பார்த்து மகிழ்ந்து வருகின்றனர். இச்சபையோடு தொடர்புகொண்டவர்களிற் பலர் கல்வியும் - சொல்லாற்றலும் சைவ ஒழுக்கமும் உடையவராக இருக்கின்றனர். பல ஆண்டுகளாகப் பல திறத்தானும் அசைவிலா ஊக்கத்துடன் பணிபுரிந்துவரும் இச்சபை நாட்டுக்கொரு நல்ல சபையாக அமைந்து நாட்டுக்குப் பல்லாண்டு பணியாற்றுவதாகுக.

## 'வீரகேசரி' — 4-7-1955

சென்ற இருபதுவருடகாலமாகக் குரும்பசிட்டிக் கிராமத்தின் வளர்ச்சிக்குப் பல்வேறு துறைகளிலும் சேவை புரிந்து வருவதும், இன்று கட்டிடம், விளையாட்டு நிலம், தளபாடம், நூல்நிலையம் மற்றும் உபகரணங்களுடன் ரூபா 20 ஆயிரத்துக்குமேல் பெறுமதியுடையதாக விளங்குவதுமான சன்மார்க்கசபை தனது இருபதாவது ஆண்டு அறிக்கையை வெளியிட்டிருக்கிறது.

பத்துக்கு மேற்பட்ட உபசங்கங்களை உள்ளடக்கியதாக நடைபெற்றுவரும் இச்சபை கடந்த ஆண்டு செய்த சேவை, பொதுப் போட்டிகளிற் கலந்து பெற்றுள்ள வெற்றிகள், விருதுகள், தற்போதைய நடவடிக்கைகள் ஆகியவைபற்றி 24 பக்கங்கள் கொண்ட அறிக்கையில் விரிவாக வெளியிட்டிருக்கிறது.

தருமபுர ஆதீனம் இச்சபையின் சமய சேவையைப் பாராட்டி 10 தேவார இசைத் தட்டுக்களை வழங்கிக் கௌரவித்துள்ளது. அது மட்டுமன்றி யாழ்ப்பாணக் கிராம முன்னேற்றச் சங்கங்களின் போட்டி, வலி-வடக்குக் கிராமமுன்னேற்றச் சங்கங்களின் போட்டி, யாழ் விநோத கண்காட்சி ஆகியவற்றில் முதலிடம் பெற்று அவற்றுக்குரிய

கேடயங்களைப் பரிசாகப் பெற்றுளதென்பதும் குறிப்பிடத்தக்கது.

ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான நிலங்களைப் பொதுமக்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்றுச் சுயமுயற்சியினால் அமைக்கப்பட்ட 'ஈழகேசரிப் பொன்னையாவீதி'யை அரசாங்கம் கையேற்றுப் பகிரங்கவேலைப் பகுதியினரின் வீதியாக்கி மேலும் விஸ்தரிக்கவேண்டு மென்பதும், 'B' பிரிவுக்கு உயர்த்தப்பட இருக்கும் இக் கிராமத்திலுள்ள தபாற்கந்தோரில் தந்தி வசதி அமைக்கவேண்டு மென்பதும், அங்குள்ள பிரசவ வைத்தியசாலை வளவிலேயே மத்திய வைத்தியசாலை அமைக்கவேண்டுமென்பதும், மயிலிட்டிதெற்கு விதானைப் பிரிவை ஏற்றமுறையிலே திருத்தி அமைக்கவேண்டு மென்பதும் இச்சங்கத்தின் முக்கிய கோரிக்கைகளாகும். இங்ஙனமாகக் கிராமத்தின் வளர்ச்சிக்குப் பல்வேறு துறைகளிலும் சேவைபுரிந்துவரும் இச்சபை சிறந்த முன்மாதிரியாக அமைந்திருப்பது மிகவும் பாராட்டப்படக்கூடியதாகும்.

## 'இந்துசாதனம்' — 8-7-1955

சன்மார்க்க சபையின் 20ஆம் ஆண்டறிக்கை அச் சபையினருக்கு மிகுந்த உற்சாகமூட்டுந் தன்மையாக இருப்பதோடு ஏனைய சபைகளுக்கும் முன்மாதிரியாய் அமைகின்றது. தபாற்கந்தோர், தெரு, பிரசவ வைத்தியசாலை, மத்திய வைத்தியசாலை, விளையாட்டுநிலம், சேமிப்பு, ஐக்கியம், சுகாதாரம், சமயம், கல்வி என்பனவும் பிறவுமாய்ப் பல துறைகளிற் தொண்டாற்றி வருவதோடு எடுத்த கருமம் சித்தியடையும் வரையும் சபையார் சலியாது உழைக்குந் தன்மையராய் இருக்கின்றாரென்பதைக் குறித்துச் சபையின் அறிக்கை நன்கு விளக்குகிறது. சபைக்குச் சென்ற அறிஞர்களும் அவர்களுடைய அறிவுரைகளும் சபையார் பெற்ற விருதுகளும் சபை செய்யுந் தொண்டுக்குச் சிறந்த சான்றுகளாக அமைகின்றன. இறை அருளால் சபை வளர்வதாகுக.

## 'சுதேசமித்திரன்' — 12-1-1958

'ஈழகேசரி'யின் ஸ்தாபகர் திரு. நா. பொன்னையா அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட அந்தச் சன்மார்க்க சபை சிறந்த முறையில் தொண்டாற்றி வருவதை அறியக்கூடியதாக இருந்தது. சரஸ்வதி பூசையை முன்னிட்டு, ஒரு புத்தக, பத்திரிகைக் கண்காட்சியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பொம்மைக் கொலுவுக்குப் பதில் கலைவாணியின் அம்சமான புத்தகங்களைக் கொண்டு கொலு வைத்திருப்பதைப் பாராட்டத்தான் வேண்டும். இன்றுள்ள பத்திரிகைகள் [இந்தியா இலங்கை இருநாடுகளிலும் வெளியாகின்றவை] சிறிது காலம் மின்னிவிட்டு மறைந்தவை. இப்படியாகப் பலவற்றைக் காணமுடிந்தது எமக்கு மகிழ்ச்சியைத் தந்தன. பூரண கும்பத்துடன் சபைத் தலைவர் எங்களை வரவேற்றார்.

பிற்பகல் இரண்டு மணி. சுமார் இருநூறு பேர்கள் ஆண்களும் பெண்களுமாகக் கூடியிருந்தனர். பொறுமையோடு அமைதியாகவும் இருந்து கேட்டமை அதிசயக் காட்சியாகவே இருந்தது எங்களுக்கு. கட்டடத்தின் முன்வரிசையிற் தோரணங்கள் தென்பட்டன. கரும்பலகை ஒன்றில் 'குரும்பசிட்டி சன்மார்க்க சபை—இந்தியாவிலிருந்து வரும் எழுத்தாளர்களுக்கு வரவேற்பு' என்று எங்கள் ஐவரின் பெயரும் பிழையின்றி எழுதப்பட்டிருந்தது. சன்மார்க்க சபையில் எங்கள் பேச்சைச் சுருக்கமாக முடித்துக்கொண்டு 'ஈழகேசரி' ஆசிரியர் அன்பர் திரு. இராஜ. அரியரத்தினம் அவர்களுடன் சேர்ந்து புறப்பட்டோம்............

[தென்னிந்தியாவிலிருந்து வெளிவரும் 'சுதேசமித்திரன்' பத்திரிகையில் 'ஈழத்து இலக்கிய யாத்திரை' என்று மகுடமிட்டு திரு. ரா. ராஜகிருஷ்ணன் எழுதிய கட்டுரை வரிசையிற் சன்மார்க்க சபை பற்றிய குறிப்பு.]

# சன்மார்க்கசபையும் குரும்பசிட்டியும்

## மணிவாசக நூல்நிலையமும் வாசிகசாலையும்

**மா**ணிக்கவாசக சுவாமிகளின் திருவவதாரத்தின் காரணமாகச், 'சுவாமிகளே சன்மார்க்கம் எது என நிலைபெறச் செய்தாரா? அன்றி சன்மார்க்கமே உருவெடுத்து மணிவாசக சுவாமிகள் தோன்றினரா?' என்றாற் போன்றது, 'சன்மார்க்க சபையால் மணிவாசக நூல்நிலையம் தோற்றுவிக்கப்பட்டதா? அன்றேல் மணிவாசக நூல்நிலையத்தில் சன்மார்க்க சபை தோன்றிற்று'? என்பது. சன்மார்க்க சபை பவ ஆண்டு ஐப்பசித் திங்கள் முதலாந் திகதி விஜயதசமித் தினமாகிய புதன்கிழமை பிற்பகல் 5 மணியளவில் மணிவாசக நூல்நிலைய மண்டபத்தில் நிறுவப்பட்டது என்று வரலாறு கூறப்பட்டமையான், சன்மார்க்க சபை கருத்தினிற்றோன்றிய காலை மணிவாசக நூல்நிலையமும் தோன்றலாயிற்று.

விஜயதசமித் தினத்தன்று மங்கள வாத்தியம் முழங்க அருட்சக்தி அம்பாள் மானம்பூ வீதி உலாவில் எழுந்தருளி அருணைக்கம்புரிய, சித்திவிநாயகர் 'மாசற எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுறத்' திருக்கடைக்கண்பாலிக்க, அயரா அன்பும் இடையறாத் தியானமும் சுடரும் தூண்டாமணி ஒளிவிட்டுத் துலங்க, சமயகுரவர் நால்வர் சிவமணம் கமழச் செய்ய, பூமடந்தை ஆசீர்வதிக்க, கலைவாணி தேவி அகமகிழ்வுடன் எழுந்து வீற்றிருந்தனள், அச் சிறு வாடகைக் குடிசையாகவுள்ள அலங்கார மண்டபத்தில்.

ஓர் அழகிய வட்டமேசை; அதன்மேல் கலை அமைப்புக் கொண்ட கதர்த்துணி; நான்கு புறமும் ஒளிவளர் குத்துவிளக்குகள்; நடுவே பூரண கும்பம்; இவற்றிடையே ஐந்து நூல்கள்; பக்கத்திற் சிறிய கண்ணாடிப் பேழை; இவற்றைச் சூழ்ந்து அலங்கார மகர தோரணங்கள் விளங்க இவைகளை நோக்கி மகாத்மாகாந்தி புன்முறுவல் பூக்க, வேதாரணியம் உயர்திரு சு. சொக்கநாத தேசிகர் அவர்கள் கலைவாணி தேவியைப் பிரதிட்டை செய்து அடங்கன் முறைத் தேவாரம், திருவாசகம், சிவஞானபோதம், பெரிய புராணம், திருவாதவூரடிகள் புராணம் ஆகிய ஐந்து நூல்களையும் அக் கண்ணாடிப் பேழையுட் பொலிவுறச் செய்து பூஜா காரியங்களை நடாத்தித் திருமுறை ஓதச் சபையினர் சிவநாம பாராயணம் செய்து 'அரகர மகாதேவா' கோஷிக்க மணிவாசக நூல்நிலையம் இனிது ஆரம்பமாயிற்று.

மூர்த்தி தல தீர்த்த விசேடத்தினால் இறைவன் சான்னித்தியம் திகழுதல் உண்மை. சாந்திய கலை பொலிந்த கலைவாணி தேவியின் சான்னித்திய மகத்துவம் அன்பர்கள் அடியார்களின் உள்ளங்களைக் கவர்வதாக வுள்ளது. சன்மார்க்க சபையின் மெய்யன்பர்கள் கலைவாணி தேவியின் பாத கமலத்திலே தம் அர்ச்சனைத் திரவியங்களான நூல்களை நிவேதனஞ் செய்து துதி செய்யத் தொடங்கினர். மணிவாசக நூல்நிலையம் கலைவாணி தேவியின் கோயிலாயிற்று. நூல்கள் காணிக்கைத் திரவியங்களாயின.

ஆரம்பத்தில், ஒன்றரை வருட காலமாக, மணிவாசக நூல்நிலேயப் பொறுப்பாளராக இருந்து திறம் பட நடாத்திய ஆசிரியர் திரு. சி. கதிரவேலு அவர்கள் மணிவாசக நூல் நிலேயத்தையும் வாசிகசாலே யையுஞ் சீரிய முறையில் வளரச் செய்தனர்.

மணிவாசக நூல் நிலேயத்தின் இரண்டாவது ஆண்டு அறிக்கை பின்வருமாறு :

'' சன்மார்க்க சபையாரால் ஆரம்பிக்கப்பட்ட இந் நூல்நிலேயம் சென்ற இரண்டு ஆண்டுகளாக நன்ருய் நடைபெற்று வருகிறது. சென்ற வருடம் இந் நிலேயத்தில் 124 புத்தகங்கள் இருந்தன. இப் போது 156 புத்தகங்கள் இருக்கின் றன. இன்னும் 5 மேசைகளும் 5 வாங்குகளும் 5 கதிரைகளும் 9 படங்களும் ஒரு கண்ணுடி அலு மாரியும் இருக்கின்றன.

**இந் நிலேயத்துக்கு வருகின்ற பத்திரிகைகளாவன :**

**தினப்பதிப்பு :** தினகரன், வீரகேசரி.

வார வெளியீடு : ஈழகேசரி, **இந்து** சாதனம், இந்தியகேசரி, **வித்த** கம், செட்டிநாடு, இந்துநேசன், தமிழ்மணி, நகரதூதன், ஆனந்த போதினி, தமிழ்நாடு, தமிழ்த் தொண்டன், ஆனந்தவிகடன், சுதந்திரன், தனவணிகன், தேச நேசன்.

பட்ச வெளியீடுகள் : ஞானசித்தி, சோதிட பரிபாலினி, சுதேச நாட்டியம்.

**மாத வெளியீடுகள்:** கலேமகள், தமிழ்ப் பொழில், ராமகிருஷ்ணவிஜயம், தமிழரசு, விநோதன், விசித்தி ரன், இந்துதர்மம், புது உலகம்.



வருட மலர்கள் : **தனவணிகன்**—காங் கிரஸ்மலர், பொங்கல்மலர், ஆனந்தவிகடன்—தீபாவலிமலர், ஈழகேசரி ஆண்டுமடல், தமிழ்த் தொண்டன் — பொங்கல்மலர், சினிமாஉலகம்—தீபாவலிச்சுடர், இந்துநேசன்-வருட அநுபந்தம்" என்பனவும் உண்டு.''

''மணிவாசக நூல் நிலேய வளர்ச் சிக்கு மூலகாரணமாயிருந்து தொ டர்ந்து தொண்டாற்றிய ஆசிரியர் திரு. வ. பொன்னுக்குமாரு அவர்க ளின் ஞாபகார்த்தவிழா சன்மார்க்க சபையினரால் நூல்நிலேய அபி விருத்தி விழாவாக நடாத்தப்பட் டது. அவரது ஞாபகார்த்த விழா வுக்கென யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலுமுள்ளவர்களிடமிருந்து ரூபா 250 பெறுமதியான 117 புத் தகங்கள் சேகரிக்கப்பட்டன. சேக ரிக்கப்பட்ட புத்தகங்கள் யாவும் ஆசிரியர் அவர்களது ஞாபகார்த்த மாக அமைக்கப்பட்ட அலுமாரி யில் வைக்கப்பட்டன. மயிலிட்டிக் கிராமசங்கத்தினரும், சுன்ஞகம்: ஈழகேசரி, தனலக்குமி புத்தக சாலேயினரும் மணிவாசக நூல் நிலேய வாசிகசாலே வளர்ச்சியில் ஆரம்பகாலம் முதலாக நன் கொடை உதவியும் தேவையான வற்றை அளித்தும் உதவிபுரிந்துள் ளார்கள்.

''பெரியபுராணத் தொகுப்புக் கள் மூன்றை உவந்தளித்த S.S.சண் முகநாதன் புத்தகசாலே அதிபருக் கும், பத்துப்பாட்டு, குறுந்தொகை, கலித்தொகை நூல்களே உவந் தளித்த ஸ்ரீலங்கா புத்தகசாலே மனேஜர் அவர்களுக்கும், தொல் காப்பியம் - கணேசையர் உரை விளக்கக் குறிப்புக்களேக் கொண்ட நூல்களேத் தந்துதவிய தனலக்குமி புத்தகசாலேயினருக்கும் சபை நன்றி பாராட்டுகிறது.

"'கலைமகள் நூல் நிலையம்' என்னும் ஸ்தாபன அங்கத்தவர்கள் தங்கள் ஸ்தாபனத்துக்குரிய 75க்கு மேற்பட்ட நூல்களையும் ஸ்தாபனத்துக்குரிய வாங்கு மேசை என்பவற்றையும் மணிவாசக நூல்நிலையத்துக்கு அன்பளிப்புச் செய்து மணிவாசக நூல் நிலையத்துடன் தமது ஸ்தாபனத்தையும் இணைத்து நற்சேவை செய்துள்ளனர்."

சபையின் போஷகராக இருந்து சபையைப் போஷித்து வந்தவரும் திரு. 'வி. க.' வின் பித்தனெனத் தம்மைக் குறிப்பிடுபவருமாகிய காலஞ்சென்ற திரு. கந்தையா-தியாகராசா அவர்கள் தாம் போற்றிச் சேமித்து வைத்திருந்த நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை மணிவாசக நூல்நிலையத்துக்கு அன்பளிப்புச் செய்தனர். இவற்றுல் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரால் எழுதப்பட்டநூல்கள் பெரும்பாலானவை கிடைக்கப்பெற்றன.

பூண்டுலோயா, கிருஷ்ணு ஸ்ரோஸ் மனேஜர் திரு. கிருஷ்ண சாமி அவர்கள் எமது சபையைப் பார்வையிட்டுப் பெருமகிழ்வு கொண்டு தாமும் சேகரித்துவைத்திருந்த 25 புத்தகங்களை மணிவாசக நூல்நிலையத்துக்கு அன்பளிப்புச் செய்து கௌரவித்துள்ளார்கள்.

சன்மார்க்கசபையின் ஆரம்ப ஸ்தாபகர்களில் ஒருவரும், பின்பு போஷகராக இருந்து போஷித்து வந்தவரும், நூல்களை அழகுபடுத்திப் பேணுவதில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவருமான காலஞ்சென்ற திரு. கோ. அப்பாக்குட்டி அவர்கள் தம் சீவியகாலம் முழுவதும் தம் உடைமையாகப் போற்றிப் பாதுகாத்துவந்த 500 நூல்களை மணிவாசக நூல் நிலையத்துக்கு அன்பளிப்புச் செய்தார்கள்.

குரும்பசிட்டி, சைவப் பண்பு மிளிர்ந்த திரு. தம்பர் - கந்தையா உபாத்தியாயர் அவர்களின் புத்திரன் திரு. இராமநாதன் அவர்கள் ரூபா 100 பெறுமதியான சுவாமி விவேகானந்தரின் நூற்றுண்டு வெளியீட்டுத் தொகுதிகளான 'ஞானதீபம்' எனும் 10 நூல்களை, மணிவாசக நூல்நிலையத்துக்கு உவந்தளித்துச் சிறப்பித்துள்ளார்கள்.

இன்னும் இந்நிலையம் பல வழிகளிலுஞ் சிறப்புற்றேங்க அநேக அன்பர்கள் காலத்துக்குக்காலம் உதவிபுரிந்துவருகிருர்கள்.

இன்று மணிவாசக நூல்நிலையத்தில் சமயம் 189, இலக்கியம் 248, சரித்திரம் 75, சிறுகதை 93, நவல் 183, பொதுவானவை 146 ஆக மொத்தம் 934 நூல்கள் இருக்கின்றன. மற்றும் 'ஈழகேசரி' வருடக் கட்டுக்கள், மற்றும் பத்திரிகைகள், சஞ்சிகைகள், மலர்கள், விசேட வெளியீடுகள் என்பனவும் பல உண்டு.

சன்மார்க்கசபை நிருவாகசபையின் தீர்மானப்படி 30ஆவது வருட ஞாபகச் சின்னமாக எதிரே வரும் விஜயதசமித் தினத்துக்கு முன்பு ரூபா 3000 சேகரித்து அதில் ரூபா 2000 பெறுமதியான நூல்களும், ரூபா 1000 பெறுமதியான தளபாடமும் மணிவாசக நூல் நிலையத்துக்குப் பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந் நோக்கம் இனிது நிறைவுற இன்னருள் பாலிப்பதாகுக.

காலை 8 மணி தொடக்கம் இரவு 8மணி வரை வாசிகசாலையில் வாசிப்பதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. சபைக் கட்டிடத்திற்கு ஏற்படுத்தப்பட்ட மின்சார இணைப்புக் காரணமாக முன்னையிலும் பார்க்க இப்போது பொதுமக்கள் அதை நன்கு பயன்படுத்துகிருர்கள்.

வாசிகசாலைக்குத் தினகரன், வீர கேசரி, ஈழநாடு, ரைம்ஸ், டெயிலி நியூஸ், சன்டே ஒப்சேவர், இலங்கை டெயிலிமிரர், சன், இந்துசாதனம், புதினம், கலைச்செல்வி, ஆனந்த விகடன், கல்கி, கலைமகள், மஞ்சரி, கண்ணன், அம்புலிமாமா, குமுதம், தர்மசக்கரம், விவேகானந்தன், நாவலன், கலைக்கதிர் என்னும் பத்திரிகைகள் வரவழைக்கப்படு கின்றன. விசேட சஞ்சிகைகளும் மலர்களும் வாங்கி வைக்கப்படு கின்றன. இலவச வெளியீடுகளும் இடம்பெறுகின்றன.

சன்மார்க்கசபை நிரந்தர கட்டிடத்தில் மணிவாசக நூல்நிலையம் மூலஸ்தானமாக அமைந்திருக்கிறது. சபைமண்டபம் கலைவாணி தேவியின் கோயிலாயிற்று. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களும் ராவ் பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்களும் கலைவாணி தேவியைத் தொழுதேத்துகின்றனர். இத்தகைய சிறப்புப் பொருந்திய மணிவாசக நூல்நிலையம் சிறப்புற்று வளரக் கலைவாணியை இறைஞ்சுவோமாக.

---

## சமயம்

சன்மார்க்க சபையின் மூலாதார நோக்கங்களிற் சமயப்பணி முக்கியமானதாகும். அப் பணியிற் சென்ற முப்பது வருடங்களில் இணையற்ற சேவையைச் செய்துள்ளது. பரம்பரையாகவே சைவநன் மக்கள் வாழ்ந்து வரும் இவ்வூரில், சன்மார்க்கசபை திட்டமிட்டுச் சமயப் பணி புரிந்து சமய வாழ்விலும் ஒழுக்க நெறிகளிலும் கோவில் வழிபாட்டிலும் திருமுறைகளை ஓதுவதிலும் முன்னின்று உழைத்து வருகிறது. அதனை விரிவாக எடுத்துரைக்க வேண்டியதில்லை. தொகுத்துக் கூறினுலே போதுமானது:

1. தொடக்க காலத்திலே விவேகானந்த சபையார் நடாத்தும் பரீட்சைக்கு மாணவர்களை ஆயத்தஞ் செய்து அனுப்பியமை. பண்முறைத் தேவார வகுப்புக்களை இடை இடையே நடாத்தியமை.
2. சென்ற முப்பது வருடகாலமும் அம்பாள் ஆலயத்தில் நடைபெறும் விழாக்களிலெல்லாம் சிவபுராணம், கோளறுபதிகம், அச்சோப் பதிகம் முதலியவற்றை ஓதுவித்தமை.
3. நாயன்மார் குருபூசைகளையும் நாவலர் குருபூசையையும் சபை மண்டபத்தில் வருடா வருடம் ஒழுங்காய் நடாத்தியமை.
4. சைவப் பெரியார் திரு. மு. ஞானப்பிரகாசம் அவர்கள் தலைமையில் சிவஞானசித்தியார் வகுப்பை இரண்டு வருடங்களாக நடைபெறச் செய்து கீரிமலைச் சிவன்கோவிலில் நிறைவு விழா எடுத்தமை.
5. சென்ற பத்து வருடங்களாகத் தொடர்ந்து சபை தனது செலவிற் கார்த்திகை மாதத்தில் குரும்பசிட்டி சித்திவிநாயகர் ஆலயத்தில் மாணவர்க்கும் பெரியோருக்கும் சிவதீட்சை வைப்பித்தமை. (250க்கு மேற்பட்டோர் இதுவரை சிவ தீட்சை பெற்றுள்ளனர்.)
6. பாடல்பெற்ற ஸ்தலமாகிய திருக்கேதீஸ்வரத்திற்குச் சிவ ராத்திரி காலத்திற் பொதுமக்

களைக் கூட்டிச் சென்று வழிபாடியற்றியமை.

7. சரஸ்வதி தேவி கொலுவிருந்து இன்னருள் பாலிக்கும் எங்கள் மண்டபத்திலே கலைமகளின் தினமாகிய நவராத்திரி காலத்திலே பூசை, கலைவிழா என்பன நடாத்தியமை.

8. மார்கழி மாதங்களில் திருவெம்பாவைக் காலங்களிலே குரும்பசிட்டி அம்பாள் ஆலயத்தில் நடைபெறும் விழாக்களின் கடைசி நாளான தீர்த்தத் திருவிழாக்களின்போது இலவசமாகச் சைவத் தோத்திரத் திரட்டு, பாராயணத் தோத்திரத் திரட்டு, சிவபுராணம், திருமுருகாற்றுப்படை என்னும் பாராயணச் சிறு நூல்களை வழங்கியமை.

9. சித்தாந்த சாகரம் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் எழுதிய, அருமருந்தன்ன நூலாகிய சைவநற்சிந்தனையை வெளியிட்டதோடு அவற்றில் அரைவாசிக்குமேல் இலவசமாக வழங்கப்பட்டமை.

10. சமயபாடம், பாடசாலைகளிலே கட்டாயம் படிப்பிக்க வேண்டுமென்று அரசினர் உத்தரவு வந்தவுடனே பாடசாலை மாணவர்கள் தாமே படிக்கக்கூடியதாக, சைவசமய போதினி 2, 3, 4, 5, 6ஆம் புத்தகங்களை வெளியிட்டமை. இவை அரசினரின் அங்கீகாரம் பெற்று ஈழத்திலுள்ள பாடசாலைகளிற் படிப்பிக்கப்படுகின்றன.

11. மார்கழிமாதத்தில் திருவெம்பாவை உற்சவ காலங்களிலே குரும்பசிட்டி அம்பாள் ஆலயத்திலே தொடர்ந்து பத்து வருடங்களாகப் பெரும் பணச் செலவிலே சைவப் பேரறிஞர்களைக் கொண்டு சைவப்பிரசங்கங்கள் செய்வித்தமை.


12. தமிழ் நாட்டிலிருந்து ஈழத்துக்கு வருகைதந்த குன்றக்குடி அடிகளார், சித்தாந்தசிகாமணி க. வச்சிரவேலு முதலியார், சி. அருணைவடிவேல் முதலியார், சுவாமி சுத்தானந்தர், பேராசிரியர் முத்துசிவன், 'கலைமகள்' ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன், பேராசிரியர் S. R. துரைசாமி சாஸ்திரிகள் முதலிய சமயப் பேரறிஞர்களை அழைத்துச் சமயச் சொற்பொழிவுகள் ஆற்றச் செய்தமை.

13. சமயப் பெரியார்களான கௌரவ சு. நடேசபிள்ளை, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, செந்தமிழ்மணி பொ. கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் அறுபதாம் ஆண்டுப் பூர்த்தி விழாவைக் கொண்டாடியும் அவர்களைக் கௌரவித்தும் செயல் புரிந்தமை.

14. அகில இலங்கை இந்துமாமன்றம், அகில இலங்கை அருள்நெறிக்கழகம் முதலிய பிற சங்கங்களில் அங்கத்துவமாகி அவைகள் செய்கின்ற சமயப் பெருந் தொண்டுக்குப் பக்கபலமாய் நின்று உதவி செய்தமை.


மேலே குறிப்பிடப்பட்டவைகளையும் மற்றும் பல சைவப் பணிகளையும் எமது சங்கம் இடையீடின்றிச் செய்து வந்தமையால் இக்கிராமம் வளர்ந்தோங்குகிறது. எமது சமயப் பணியைப் பலர் பராட்டி ஊக்கம் அளித்துள்ளார்கள். தமிழ்நாட்டில் மிகப் புராதனமானதும் பெருமை பெற்றதுமான தருமபுர ஆதீனம் தாம் ஒலிப்பதிவு செய்வித்த, தேவாரத் திருப்

## சித்தாந்த வகுப்புப் பூர்த்தி விழா




1. சித்தாந்த வகுப்பிற் பங்குபற்றியவர்கள். (மாலையுடன் நிற்பவர் சித்தாந்த வகுப்பு ஆசிரியர் திரு. மு. ஞானப்பிரகாசம் அவர்கள்.) 2, 3. சித்தாந்த வகுப்பு மாணவர்களும் அன்பர்களும் கீரிமலை நகுலேஸ்வர ஆலயத் திருவீதி வலம்வருதல்.

## திருக்கேதீஸ்வர யாத்திரை



சபை அங்கத்தவர்களையும், கிராம மக்களையும் திருக்கேதீஸ்வரம் அழைத்துச் சென்றமை. [3 வருடப் படங்கள்]

## சிவ தீட்சை — சைவப் பிரசங்கம்



சபை ஆதரவில்: 1, 2. சித்திவிநாயகர் ஆலயத்தில் சிவதீட்சை வைபவங்கள் நடைபெறுகின்றன. 3. பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை அவர்கள் குரும்பசிட்டி - அம்பாள் ஆலயத்திற் சைவப் பிரசங்கம் செய்கின்றார்கள்.

பாடல்கள் அடங்கிய இசைத்தட்டுக்களில் ஒரு தொகுதியை (பத்து) எமக்கு அன்பளிப்புச் செய்தமை நாம் பெற்ற பேறுகும்; பெரு மதிப்பாகும். திருவாவடுதுறை ஆதீனம் நமது 'சைவசமய போதினி' நூல்களுக்கு அருமையான மதிப்புரைகள் வழங்கியது மாத்திரமன்றிச் சபையின் பணியைப் பாராட்டித் தமது ஸ்தாபனத்தின் சமய வெளியீடுகளை அன்பளிப்புச் செய்யச் சம்மதம் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத் தக்கதாகும்.

அகில இலங்கை இந்து விவகார ஆலோசனைச்சபையார் எமது பணிகளைப் பாராட்டிச் சிலவருடங்கள் நன்கொடை வழங்கினுர்கள். ஆனல் இப்போது சமய வகுப்புக்கள் நடத்துவோருக்கு மாத்திரம் நன்கொடை வழங்குவது என்ற சட்டத்தைக் கைக்கொண்டமையால் நிறுத்திவிட்டார்கள். பலவகையான தொண்டுகளைச் செய்து வரும் எம்மாற் சமய வகுப்புக்களை நாடோறும் அல்லது வாரந்தோறும் நடாத்துதல் சிரமசாத்தியமானது. போலியாக ஒரு வகுப்பை நடாத்தி நன்கொடை பெறவும் நாம் விரும்பவில்லை. அகில இலங்கை இந்துமாமன்றம் இப்படியான சட்டதிட்டங்களைத் தளர்த்தி உண்மையான தொண்டு செய்யும் சங்கங்களுக்கும் உதவிபுரிய வேண்டுமென்பது எமது வேண்டுகோளாகும்.

---

## மத்திய வைத்தியசாலை - பிரசவ விடுதி

1934ஆம் ஆண்டு ஆரம்பித்த குரும்பசிட்டி சன்மார்க்க சபை மயிலிட்டி கிராமசங்கப் பகுதிக்கு வைத்திய வசதி கிடைக்க வேண்டுமென்று 1936ஆம் ஆண்டு தொடக்கம் முன்னின்று உழைத்து வருகின்றது. இன்றுவரையுந் தொடர்ந்து முயற்சித்ததன் பயனுகக் குரும்பசிட்டியில் ஆரம்பத்தில், உபமருந்துச்சாலையும் (Visiting Dispensary), பின்பு சிசு-மாதா பராமரிப்பு நிலையமும் (Maternity Clinic), 1–7–61 தொடக்கம் மத்திய மருந்துச்சாலை (Central Dispensary)யும் கிடைத்திருக்கின்றன.

யாவருந் தமது வைத்திய தேவையைக் குரும்பசிட்டி மத்திய மருந்துச்சாலையிற் பெற்று அதன் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பர்களாக என்று வேண்டிக் கொள்ளுகிறேம்.

வைத்தியசாலை வரலாறு :

10–8–1936இல் சன்மார்க்க சபை, மயிலிட்டிக் கிராமசங்கப்பகுதிக்கு மத்தியாக இருக்கும் குரும்பசிட்டி வவுணத்தம்பை றேட்டுச் சந்தியில் மருந்துச்சாலை (டிஸ்பென்சரி) அமைத்துத் தரும்படி அரசாங்கத்தைக் கேட்டு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டது. 1939ஆம் ஆண்டு, கிழமைக்கு இரண்டுநாள் உபயோகத்தில் இருக்கும் உப மருந்துச்சாலை (Visiting Dispensary) வவுணத்தம்பைச் சந்தியில் ஸ்தாபிக்கப்பட்டது.

1949ஆம் ஆண்டு சன்மார்க்க சபையின் முயற்சியினுலும் மயிலிட்டிக் கிராமசங்கத் தலைவராயும் சன்மார்க்கசபையின் தலைவராயுமிருந்து காலஞ்சென்ற 'ஈழகேசரி' திரு. நா. பொன்னையா J. P. அவர்

களின் முயற்சியினாலும், குரும்ப சிட்டி மக்களாற் பிரசவ வைத்திய சாலைக்காகக் கட்டுவன் — வயாவிளான் பகிரங்க வீதியில் மாவெழு ஒழுங்கைச் சந்திக்கு அருகாமையில் 10 பரப்புக்காணி நன்கொடையாக மயிலிட்டிக் கிராமசங்கத்திற்கு வழங்கப்பட்டது. குரும்பசிட்டி பிரபல வர்த்தகர் திரு. பூ. சுப்பிரமணியம் அவர்கள் சிசு-மாதா பராபரிப்பு நிலையக் காணிக்குள் கிணறு வெட்டுவித்து உதவினர்.

சன்மார்க்க சபைத் தலைவர் 'ஈழகேசரி' திரு. நா. பொன்னையா அவர்கள் கிராமசங்கத் தலைவராக இருந்த காலத்தில், கிராமசங்க மூலம் சிசு-மாதா பராபரிப்பு நிலையத்துக்குரிய கட்டிடம் அமைக்க அரசாங்க நன்கொடைப் பணம் ரூபா 7000 பெற்றுக் கட்டிடமும் அமைக்கப்பட்டது. அன்னாராலேயே 2-1-50இல் அத்திவாரக் கல் நாட்டப்பட்டது. 1950ஆம் ஆண்டு மத்தியில் அப்போதைய சுகாதார, உள்ளூர் ஆட்சிமன்ற அமைச்சர் கௌரவ S. W. R. D. பண்டாரநாயக்கா அவர்களால் இந் நிலையந் திறந்து வைக்கப்பட்டது. அன்று தொடக்கம் அது சிசு-மாதா பராபரிப்பு நிலையமாக நிலவிவருகிறது.

5-7-49இல் சன்மார்க்கசபை தனது 15ஆவது வருடாந்த விழாவில் குரும்பசிட்டியில் இருக்கும் சிசு-மாதா பராபரிப்பு நிலையத்தைப் படுக்கை வசதியுடன் பிரசவ வைத்தியசாலையாகப் பூரணப்படுத்தித் தரும்படி பிரேரணை நிறைவேற்றி அரசாங்கத்தைக் கேட்டுத் தொடர்ந்து முயற்சித்துவருகிறது.

20-7-50இல் சன்மார்க்கசபையின் 16ஆவது வருடாந்த விழாவில் சிசு-மாதா பராபரிப்பு நிலையவளவில் இப்போது உபயோகத்தில் இருக்கும் உப மருந்துச் சாலையை மத்திய மருந்துச்சாலையாக அல்லது கிராம வைத்திய சாலை (Rural Hospital) யாக அமைத்துத் தரும்படி பிரேரணை நிறைவேற்றி அரசாங்கத்திற்கு மனுச் செய்து தொடர்ந்து நடபடிக்கை எடுத்துவந்திருக்கிறது.

30-3-51இல் 'ஈழகேசரி' திரு. நா. பொன்னையா J. P. அவர்கள் இறந்தபின், சன்மார்க்க சபையின் 17ஆவது ஆண்டுவிழா 29-12-51ல் அப்போதைய சுகாதார மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசி கௌரவ திரு. V. நல்லையா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அன்று மாலை 4 மணிக்குப் பாராளுமன்றக் காரியதரிசி கௌரவ திரு. V. நல்லையா அவர்கள் சிசு—மாதா பராபரிப்பு நிலையத்துக்குச் சன்மார்க்க சபையினருடன் நேரிற் சென்று பார்வையிட்டு அதுபற்றிய பூரண விபரங்களையும் அறிந்தனர்.

இப்போது உபயோகத்தில் இருக்கும் உப மருந்துச்சாலையை விசாலமான நிலப்பரப்புடைய சிசு-மாதா பராபரிப்பு நிலையத்திலேயே மத்திய மருந்துச்சாலையாக அமைத்துத்தரல் வேண்டுமென்றும், சிசு—மாதா பராபரிப்பு நிலையத்தைப் பூரணப்படுத்திப் படுக்கை வசதியுடன் கூடிய பிரசவவைத்தியசாலையாக அமைத்துத்தரல் வேண்டுமென்றும் சபையினராற் கேட்டுக் கொள்ளப்பட்டது.

வருடாந்த விழாவின் தலைமையுரையிலே பாராளுமன்றக் காரியதரிசியவர்கள் மத்திய மருந்துச்சாலை, பிரசவ வைத்தியசாலை என்பனவற்றின் அவசியத்தை அரசாங்கத்திடஞ் சிபார்சு செய்து, தன்னால் இயன்ற உதவி செய்து

தருவதாகவுங் கூறினூர். பின்பு அவர்கள்அரசாங்கத்திற்குச்சிபார்சு செய்த கடிதத்தின் பிரதியையும் சன்மார்க்க சபைக்கு அனுப்பி, வேண்டிய ஒத்துழைப்புச் செய்வ தாகவுந் தெரியவைத்தார்கள்.

1953ஆம் ஆண்டளவில் குரும்ப சிட்டி வட்டார அங்கத்தவர்க ளின் முயற்சியினூலும் மயிலிட்டிக் கிராம சங்கத்தின் பேரார்வத்தி னூலும் கிராம சங்கம் முறையே 5000/ ரூபாவும், 6000/ ரூபாவும் அரசாங்க நன்கொடைப்பணமாகப் பெற்று மொத்தம் ரூபா 13000/-க்கு மேற்பட்ட செலவிற் கட்டிடம் அமைத்துக்கொண்டது. அத்துடன் மயிலிட்டிக் கிராமசங் கம், உபயோகத்தில் இருக்கும் உப மருந்துச்சாலையைச் சிசு — மாதா பராபரிப்பு நிலையத்துக்கு மாற்று தல் வேண்டுமென்றும், அதை உட னடியாக மத்திய மருந்துச்சாலை யாக அமைத்துத்தரல் வேண்டு மென்றும், குறித்த வளவையும் கட் டிடங்களையும் அரசாங்கத்திடம் ஒப்படைப்பதாகவும் தீர்மானம் நிறைவேற்றி அரசாங்கத்தின் அவ தானத்திற்குக் கொண்டுவந்தது. அரசாங்கம் சென்ற வருடம் சிசு-மாதா பராபரிப்பு நிலையத்தையும் வளவையும் பொறுப்பேற்றுக் கொண்டது.

1954இல் முன்னுள் இலங்கைப் பிரதமர் அதி கௌரவ சேர் ஜோன் கொத்தலாவல அவர்களது யாழ்ப் பாண வருகையின்போது சன் மார்க்கசபை, சிசு-மாதா பரா பரிப்பு நிலையத்தின் வாசலின் முன், பந்தர் அமைத்து வரவேற்று உபசரித்தது. அவ்வுபசரிப்பின் போது அளிக்கப்பட்ட மனுவில், கிழமைக்கு இரண்டு நாள் உபயோ கத்தில் இருக்கும் உப மருந்துச் சாலையை சிசு-மாதா பராபரிப்பு நிலைய வளவில் மத்திய மருந்துச் சாலையாக அமைத்துத் தரும்படி யும் கோரப்பட்டது. பிரதமர் மனு வைக் கையேற்று நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்கள். பின்பு சுகாதார திணைக்களம் அம் மனுவின் காரணமாக நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவித்தது.

அந்தப் பந்தரிலே மயிலிட்டிக் கிராமசங்கத் தலைவராற் கிராம சங்கச் சார்பாகச் சமர்ப்பித்த மனு வில் இரண்டாவது முக்கிய தேவை யாக சிசு-மாதா பராபரிப்பு நிலைய வளவில் மத்திய மருந்துச்சாலை அமைத்துத் தரும்படி கேட்கப் பட்டு மனு சமர்ப்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.


1956க்குப்பின் நடைபெற்ற சன்மார்க்க சபையின் ஒவ்வொரு ஆண்டுவிழாக்களிலும் மேலும் வெவ்வேறு சந்தர்ப்பங்களிலும் குரும்பசிட்டியில் வைத்தியசாலை அமைக்கும்படி அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு சன்மார்க்க சபை முயற்சி எடுத்து வந்திருக் கிறது. இதன் தொடர்பாக, இப் போது உபயோகத்தில் இருக்கும் உப மருந்துச்சாலையை சிசு-மாதா பராபரிப்பு நிலைய வளவில் மத்திய மருந்துச்சாலையாக ஸ்தாபிக்கும் படி, 18-5-61இல் சுகாதாரசேவை அதிபருக்கு எழுதிய மனுவின் காரண மாக அவர்களின் No. MC. 100 61, 29-5-61, திகதியைக் கொண்ட பதில் கடிதத்தில் மத்திய மருந்துச் சாலை ஆரம்பிக்கவேண்டிய நடவடிக்கை எடுக்கும் விடயம் தமது உடனடிக் கவனத்திலிருப்பதாகவும். 1960/61 இல் உபயோகத்திற்குத் திறந்து வைக் கப்படும் என்றும் சன்மார்க்க சபைக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கி றது.

கொழும்பு சுகாதார சேவை அதிபர் எழுதிய No. MC. 100/61 29-5-61க் கடிதத் தொடர்பாக, 16-6-61இல் சன்மார்க்க சபையினர், யாழ்ப்பாணம் சுகாதார சேவை அதிகாரி டக்டர் என். ஜி. ஆர். நதானியல் அவர்களைப் பேட்டி கண்டு மத்திய வைத்தியசாலையை, அரசாங்கச் சொத்தாக இருக்கும் சிசு-மாதா பராபரிப்பு நிலையத்துக்குரிய கட்டிடத்திலேயே ஸ்தாபிக்கும்படி காரண காரியங்களைக் காட்டிக் கலந்துபேசினர். அதன் காரணமாக டக்டர் என். ஜி. ஆர். நதானியல் அவர்கள் மத்திய மருந்துச்சாலை; சிசு - மாதா பராபரிப்பு நிலைய வளவில் 8-7-61 சனிக்கிழமை காலை 9½ மணிக்குத் திறந்து வைக்கப்படுமென்று தெரியவைத்தார்கள்.

ஆனல், 29-6-61இல் சபைக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில், காலங் காட்டாது 'மத்திய வைத்தியசாலையைக் குறித்த வண்ணம் ஆரம்பிக்கமுடியாது' என அறிவிக்கப்பட்டிருந்தது. ஏமாற்றமான இச்சூழ்நிலையில், சன்மார்க்க சபை திரும்பவும் கௌரவ சுகாதார அமைச்சரவர்களையும் வைத்தியசேவை அதிபரவர்களையும் முன்பு தீர்மானித்தபடி சிசு-மாதா பராபரிப்பு நிலையத்தில் மத்திய வைத்தியசாலையை ஆரம்பிக்கும்படி கேட்டிருந்தது. அத்தொடர்பாக 11-7-61இல் கொழும்புக்குச் சென்று கௌரவ சுகாதார அமைச்சரைப் பேட்டிகண்டு விளக்கியதன் பயனக, சுகாதார அமைச்சர் தாம் நேரிற் பார்த்து ஆரம்பித்து வைப்பதாகத் தெரியவைத்தார்கள். பின்பு, உதவிச் சுகாதார அமைச்சரின் யாழ்ப்பாண விஜயத்தின் போதும் அவர்களுடன் பேட்டி கண்டு விபரங்களை எடுத்துக்கூறி ஆவன செய்யுமாறு கோரப்பட்டது. மீண்டும் சுகாதார மந்திரியிடம் கொழும்பு சென்று கலந்து பேசியதன் முடிபாக 7-8-61 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு மத்திய மருந்துச்சாலையை ஆரம்பித்து வைப்பதாக அறிவித்தார்கள். யாழ்ப்பாணம் சௌக்கியசேவை அத்தியட்சர் அவர்களுடைய ஆலோசனையின்படி 7-8-61காலை வைத்திய சாலை ஆரம்பிக்கப்பட்டது.

மேற்கொண்டும் சன்மார்க்கசபை எடுத்துக்கொண்ட முயற்சிகள் காரணமாக சிசு—மாதா பராபரிப்பு நிலையம் 19-3-63இல் குரும்பசிட்டி மத்திய மருந்துச்சாலைக்கு மாற்றப்பட்டிருக்கிறது. இப்போது மத்திய மருந்துச்சாலை, சிசு-மாதா பராபரிப்பு நிலையம் ஆகிய இரண்டு வகையான வைத்திய வசதிச் சேவை நிலையங்கள் நடைமுறையில் இருக்கின்றன. 17-4-64 தொடக்கம் பிரசவ வைத்தியசாலையை உள்ளடக்கிய கிராம வைத்தியசாலை அமைத்துத்தர வேண்டுமென மனுச் சமர்ப்பித்தும் வடபகுதிச் சௌக்கிய சேவைப் பகுதி அதிபருடன் நேரடியாகத் தொடர்பு கொண்டும் வேண்டிய நடபடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கிராம வைத்தியசாலையாக மாற்றம்பெறவும் அதனுல் மக்கள் மேலதிக பலனைப் பெறவும் இச்சபை தொடர்ந்து முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது.

## சிசு - மாதா பராபரிப்பு நிலையத் திறப்புவிழா



முன்னுள் சுகாதார, ஸ்தல ஸ்தாபன மந்திரி கௌரவ S. W. R. D. பண்டார நாயக்கா அவர்கள் குரும்பசிட்டி, சிசு-மாதா பராபரிப்பு நிலையத்தை ஆரம்பித்து வைத்தல். அவருடன் காங்கேசன்துறைப் பாராளுமன்றப் பிரதிநிதி திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், கியூ. சி., வர்த்தகப் பிரமுகர் திரு. பூ. சுப்பிரமணியம், மயிலிட்டி கிராமசபைத் தலைவர் திரு. நா. பொன்னையா, சைவாசிரிய கலாசாலை அதிபர் திரு. சி. சுவாமிநாதன் பி. ஏ., நிரந்தரக் காரியதரிசி, சௌக்கிய சேவைப் பகுதி அதிகாரிகள் ஆகியோரும் மற்றும் பிரமுகர்களும் நிற்கின்றனர். — 1950

## மத்திய வைத்தியசாலையும் — சிசு - மாதா பராபரிப்பு நிலையமும்



1. மத்திய வைத்தியசாலை ஆரம்ப விழா. 2. சிசு - மாதா பராபரிப்பு நிலையத்துக்குச் சபை கொடுத்த நன்கொடைகள். 3. யாழ்ப்பாண வைத்திய சேவை அதிகாரி அவர்கள் மத்திய வைத்தியசாலையைக் குத்துவிளக்கேற்றித் திறந்துவைத்தல். 4. கிராமசபைத் தலைவராயிருந்த வழக்கறிஞர் திரு. வ. இராசநாயகம், ஜே. பி. அவர்கள் வரவேற்புரை நிகழ்த்துகிறார்கள். — 7-8-61

# 'ஈழகேசரி' பொன்னையா வீதி

குரும்பசிட்டி ஒரு சிறிய கிராமம். இக் கிராமத்தின் நாற்புற எல்லைக்கு அப்பாலேயே பகிரங்க தெருக்கள் உள்ளன. நமது கிராமத்தின் தெற்கு எல்லையில் உள்ள பகிரங்க தெருவிலிருந்து ½ மைல் தூரத்திற்குப் பழைய டச்சுரோட்டு ஒன்று நமது ஊருக்கு வந்து முற்றுப் பெறும விருக்கிறது. இதைவிடப் பகிரங்கதெரு நமது கிராமத்தில் இருந்ததில்லை. இதுவே 1947க்கு முன் நமது கிராமத்தின் பிரதான தெருக்களின் நிலைபரமாகும்.

'திருக்கோவில் இல்லாத ஊர் அடவிகாடு'; 'ஆறில்லா ஊருக்கு அழகுபாழ்'. நல்ல தெரு இல்லாத ஊருக்கு வளர்ச்சியும் உயர்ச்சியும் இல்லை. சிறியனவெல்லாம் பெரியவற்றிற்கு இரையாகின்றன. இவை யாவும் நாம் அனுபவத்திற் காணக்கூடியதாகும்.

எமது சிறிய கிராமம் மயிலிட்டி தெற்காக இருப்பதினலும் மயிலிட்டி தெற்கில் இரு வேறுபட்ட சமுதாயங்கள் உள்ளனவாதலாலும் அவற்றில் ஒரு சமுதாய மக்கள் வேருெரு கிராமத்தின் முன்னேற்றத்திலேயே ஆர்வமுள்ளவர்களாய் இருப்பதினலும் எமது கிராமம் அபிவிருத்தி யடைவது 'மலையைத் தோண்டிச் சுண்டெலியைப் பிடிப்பதை' யொக்கும். அத்தோடு பகிரங்க வீதி இன்மை அத்தகைய முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைப்பதாகவுமிருந்தது. சன்மார்க்கசபை ஆரம்பமாகி மிகச் சில வருடங்களிற் பகிரங்க தெருவின் அத்தியாவசியம் புலனயிற்று.

குரும்பசிட்டியில் இருந்த கிராமசங்க ஒழுங்கைகள் எல்லாம் 9 அடி—12 அடி அகலமுள்ளவை. போக்குவரவு செய்வது மிகவும் கஷ்டம். மயிலிட்டிக் கிராம சங்கத்தினல் ஒழுங்கைகளுக்கு வருடா வருடம் அளிக்கப்படும் நன்கொடைப்பணம், ஓர் ஒழுங்கையைத் தானும் நன்கு செப்பனிட்டுப் பரிபாலிப்பதற்குப் போதியதாகவில்லை. கிராமசங்க ஒழுங்கை என்பது மண்பாதை, அல்லது மக்கிப்பாதை. குரும்பசிட்டிக் கிராமம் கண்விழிக்க வேண்டுமானல் பகிரங்க தெரு ஒன்றையாவது பெறல் வேண்டும்; அல்லது கிராமத்துக்கு வளர்ச்சி என்பது இல்லை என்ற உண்மை பிரத்தியட்சமாயிற்று.

15-12-47இல் சன்மார்க்க சபையின் ஆர்வம் காரணமாக, பின்வரும் விண்ணப்பம் எழுதப்பெற்றுக் காணிச் சொந்தக்காரர்களிடம் கையொப்பம் பெறப்பட்டது.

''குரும்பசிட்டியின் எதிர்கால வளர்ச்சிக்கும், உதாரணமாக 'பஸ்' போக்குவரத்து, தபாற்கந்தோர் முதலியவற்றை ஸ்தாபிப்பதற்கும், மற்றைய கிராமங்கள்போற் தேவைகளைப் பெற்று விசேஷமாய் இருப்பதற்குமுள்ள முக்கியமான தடை எங்கள் ஊருக்கூடாக ஒரு பகிரங்க தெரு இல்லாமையேயாகும். ஆகையால் கட்டுவனிலிருந்து வயாவிளான் மத்திய பாடசாலையை அடையும் ஒழுங்கைகளைப் (உட்கடை போரியன், சத்தியக்கலட்டி) பெருப்பிப்பதற்கு எங்கள் காணியிலிருந்து மூன்று முழம் விட்டுக்கொடுக்கச் சம்மதிக்கிருேம். இப்படிச் செய்வதால் ஏற்படக்கூடிய செலவுக்குச் சபையே பொறுப்பாக இருக்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டால் மேற்காட்டியவாறு

காணியை விட்டுக்கொடுக்கச் சம்மதம் தெரிவிக்கிறோம்''.

எமது கிராமத்தின் மத்தியிலே கிழக்கு மேற்காக ஊடறுத்துச் செல்லும் 'சத்தியக்கலட்டி', 'போரியன்', 'உட்கடை' ஆகிய மூன்று ஒழுங்கைகளின் இருபக்க எல்லைக் காணிக்காரருடன், ஒழுங்கைகளை அகல்விப்பதில் ஏற்படக்கூடிய கஷ்ட நஷ்டங்களைப்பற்றிக் கலந்துரையாடி அவர்கள் விருப்பத்தை அறிந்து அவரவர் விரும்பியவாறு ஒவ்வொருவருக்கும் செய்யப்பட வேண்டியவற்றைப்பற்றிய விபரங்கள் சேகரிக்கப்பட்டன. சன்மார்க்க சபை நிருவாக சபையிலே, காணியின் எல்லையாக உள்ள வேலியை எவ்வளவுதூரம் உள்ளே வெட்டிப் போடுவது; வேலியை யார் வெட்டுவது; என்ன கதியால் போடுவது; யார் போடுவது; வேலியை அடைப்பது யார்; செலவு கொடுப்பது யார்; எப்போது வேலையை ஆரம்பிப்பது?' என்பன போன்ற விடயங்களைக் கலந்து பேசி நடவடிக்கை எடுக்கவேண்டி யிருந்தது.

பலவிதமான மனப்பான்மையுடைய மக்களிடையே இவ் வேலை மிகக் கஷ்டமாக விருந்தது. அகல்விப்பதற்குரிய கருவிகள்: கத்தி, கோடரி, புத்துவெட்டி, மண்வெட்டி, பாரைக்கம்பி, கயிறு, கடகம், முள்ளுவிருண்டி, தள்ளுவண்டி என்பன பெற்றுக்கொள்ளவேண்டியிருந்தன. இவைகளுக் கெல்லாம் பணம் முக்கிய தேவையாயிற்று. அகல்விக்கும் வேலையை மாரிகாலத்திலேயே ஆரம்பிக்க வேண்டியிருந்தது. என்ன கஷ்டம் வந்தாலும் 24 அடி அகலத்துக்குப் பாதையை அகல்விக்கும் வேலையை மேற்கொள்வது எனச் சன்மார்க்கசபை தீர்மானித்தது.

1948ஆம் ஆண்டு ஆவணி—மார்கழி மாதங்களிலே போரியன், உட்கடை ஒழுங்கைகளில் மேற்கூறிய விடயங்கள் அடங்கிய அகல்விக்கும் வேலை நடந்தேறியது. 9 அடி—12 அடி அகல ஒழுங்கைகள் 24 அடிக்கு அகல்விக்கப்பட்டன. அகல்வித்த செலவு ரூபா 539 ஆகும். அதிற் பெரும்பகுதி பல உபகாரிகளிடமிருந்தும் இவ்வூர் ஐக்கிய பண்டகசாலை இலாபப் பணத்திலிருந்தும் கிடைத்தது. சிரமதான இயக்கமென்று இப்போது அரசாங்க விளம்பரம் பெறும் தியாகப் பணியைச் சன்மார்க்கசபை 15 வருடங்களுக்கு முன்பே ஆரம்பித்து உழைத்து ஜெயம் பெற்றது. எமது இப்பணியை ஏற்றுப் பகிரங்க தெருவாக அங்கீகரித்து நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்க மேலதிகாரிகளுக்கு மனுச் செய்துவைக்கப்பட்டது. 9 மாதமாக ஒரு தகவலும் கிடைத்திலது. 8-7-49இல் வடமாகாண அரசாங்க அதிபர் எமது சேவையைப் பாராட்டி எழுதிய கடிதம் கிடைத்தது. இதனைத் தொடர்ந்து 15ஆம்ஆண்டுவருடாந்தக்கூட்டத்தில் ''இவ்வூரில் P.W.D. தெருவோ D. R. C. தெருவோ கிடையாது. கிராமசங்க ஒழுங்கைகளே உண்டு. ஆகவே இச் சபை கிராமசங்க ஒழுங்கை ஒன்றை D. R. C. தெருவுக்குரிய அளவு அகலமாக அகல்வித்திருக்கிறது. அதற்குப் பெரும் பணச்செலவும் செய்திருக்கிறது. அவ் ஒழுங்கையிற் குறையாயுள்ள வேலைகளைப் பூரணப்படுத்தி D. R. C. தெருவாக எடுத்துக்கொள்ளவேண்டு மென D. R. C. பகுதியினரை இம் மகாசபை வேண்டிக்கொள்ளுகிறது'' என்ற பிரேரணையைச் சபைநிறைவேற்றி மேலதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தது. இத் தொடர்பாக அரசாங்க

அதிபர் அவர்கள் அகல்விக்கப்பட்ட ஒழுங்கைகளைப் பார்வையிட்டுச் சென்றுர்கள். பின் எமக்கு எழுதிய கடிதத்தில் அவர் ''பகிரங்க வேலைப் பகுதியினர் ஒரு D. R. C. தெருவைக் கையேற்குங் காலத்திலே குறித்த ஒழுங்கை D. R. C. தெருவாக ஏற்றுக்கொள்ளப்படும்'' என்று எழுதியிருந்தார்.

எமது பணியின் முக்கியத்தை உணர்ந்த மயிலிட்டிக் கிராம சங்கத்தினர், மிகுதியாக உள்ள சத்தியக் கலட்டி ஒழுங்கையையும் அகல்வித்துப்பெருப்பிப்பதாலுல் மத்திய அரசாங்கத்திடம் இருந்து பெற்ற நன்கொடைப் பணம் 3000 ரூபாவையும் உதவுவதாகவும்; குறித்த தெருவைப் பகிரங்க வேலைப் பகுதிக்கு ஒப்படைக்க முயற்சி செய்வதாகவும் அறியத் தந்தனர். பகிரங்க வேலைப்பகுதித் தெருவாகப் பரிணமிப்பதைக் கனவு காண்பவர் இச் சந்தர்ப்பத்தைக் கைநழுவவிடுவார்களா? எதிர்நோக்கியுள்ள கஷ்டங்களைப் பொருட்படுத்தாது சத்தியக்கலட்டி ஒழுங்கையை அகல்விக்கும் வேலை ஆரம்பிக்கப்பட்டது. இதன் நீளம் 1 மைல் 1 பேர்லாங். காணிச் சொந்தக்காரர் காணிகளை இலவசமாக உதவினர்; அகல்விப்பதற்குரிய செலவு ரூபா 423ஐ இக் கிராமத்திலுள்ள இரண்டு ஐக்கிய நாணய சங்கங்கள் உதவி எமக்கு ஊக்கமளித்தன. வயாவிளான் அரசினர் மத்திய கல்லூரிக்கு வடக்கு மேற்கு வேலிகள் பற்றி அரசினருடன் ஒழுங்கு செய்ய வேண்டியிருந்தமையால் உடனடியாக அகல்விக்க முடியவில்லை. அரசாங்க அதிபருடன் தொடர்புகொண்டு அவரை ஸ்தலத்துக்கு அழைத்துக் காட்டியும் அவசியத்தை எடுத்துக் கூறியும் பலன் கிடைக்கவில்லை. உள்நாட்டு மந்திரி காரியாலயமும் கல்வி மந்திரி காரியாலயமுமாக இரு மந்திரிகளின் நிருவாகத்துக்குட்பட்ட காரணத்திஞற்போலும் எமது வேண்டுகோள் ஏற்கப்படவில்லை. எனினும் மனந் தளராது அகல்விக்கும் முயற்சியைத் தொடர்ந்து மூன்று ஒழுங்கைகளையும் ஒன்று சேர்த்து 'ஈழகேசரி' பொன்னையா வீதி எனப் பெயர் சூட்டப்பட்டது.

'ஈழகேசரி' பொன்னையா வீதி பகிரங்க தெருவாயிற்றென்று நமது ஊர்வாசிகள் நம்பினர். காலக்கிரமத்தில் நம்பிக்கை இழந்தனர். தெருவீதி, மாரிகாலத்திலே சேறும், சகதியும், வெள்ளக் கிடங்கும், கல்லும், முள்ளுமாக மாறிற்று. சில இடங்களிற் பழைய வேலிகள் தோன்ற ஆரம்பித்தன. மறுபடியும் அகலம் குறைவான இடங்கள் தென்பட்டன. கிராம சங்கமும் இத்தகைய நீளமான அகலம் கூடிய தெருவைப் பரிபாலனஞ் செய்வதற்கு இயலாது சன்மார்க்க சபையையே எதிர் பார்த்தது.

1952ஆம் ஆண்டில் சபை, கிராமமுன்னேற்றச் சங்கப் பகுதியினருடன் தொடர்புகொண்டு, 'ஈழகேசரி' பொன்னையா வீதியைப் பற்றி விண்ணப்பஞ் செய்ததன் பயனுக அப் பகுதியினர் வாக்களித்த நன்கொடையைப் பெற்று சன்மார்க்க சபையினர் சிரமதான இயக்கத்தைப் பயன்படுத்திச் சத்தியக் கலட்டி ஒழுங்கையை 12 அடி அகலத்துக்குக் கற் பரவிச் செப்பனிட்டனர். இதற்குரிய மூலப் பொருள்களின் பெரும்பகுதி எமது கிராம மக்களால் நன்கொடையாக உபகரிக்கப்பட்டன. சன்மார்க்க சபையினர் செய்த வேலையைக் கிராம முன்னேற்றப் பகுதியினர் ரூபா 3855 என மதிப்பிட்டு அதன் அரைவாசித் தொகையாகிய ரூபா 1927 சதம் 50ஐ நன்கொடையாக உவந்தளித்தனர். சத்தியக் கலட்டி

ஒழுங்கை ஓரளவிலே திருப்தியான வீதியாயிற்று. இதனைத் தொடர்ந்து மயிலிட்டிக் கிராம சங்கத்தாற் பெற்றுக் கொடுக்கப்பட்ட மத்திய அரசாங்க நன்கொடைப் பணம் 3000 ரூபாவையும் உதவியாகக் கொண்டு உரிய வேலையைச் சன்மார்க்க சபையே ஒப்பந்தமெடுத்து எஞ்சியுள்ள போரியன், உட்கடை ஒழுங்கை வேலையையும் நன்கு கற்பதித்துச் செப்பனிட்டது.

யாழ்ப்பாணம், கிராம முன்னேற்றச் சங்கங்களின் சமாசத்தில், சன்மார்க்க சபையினரின் இவ் வேலையைப் பாராட்டிப் பேசி அத் தொடர்பாகச் சபைக்கு அனுப்பி வைக்கப்பட்ட பாராட்டுக் கடிதத்தைத் தொடர்ந்து, 1953ஆம் ஆண்டு கிராம முன்னேற்றப்பகுதி அதிகாரி (D. R. D.) அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தபோது அவருக்குரிய நிகழ்ச்சி நிரலில், குரும்பசிட்டி சன்மார்க்க சபையைப் பார்வையிடுதல் என்ற நிகழ்ச்சியும் சேர்க்கப்பட்டது. சன்மார்க்கசபை, அதிகாரி அவர்களை வரவேற்று உபசரணை செய்து 'ஈழகேசரி' பொன்னையா வீதி பற்றிய விண்ணப்பம் ஒன்றையும் சமர்ப்பித்தது. கிராம மக்களுக்கு அரசாங்கம் செய்ய வேண்டிய சேவையை இச்சபை செய்துள்ளது. அத்தொண்டை அரசாங்கம் பொறுப்பேற்று, 'ஈழகேசரி' பொன்னையா வீதியைப் பகிரங்க வேலைப் பகுதிக்குரிய (P. W. D.) தெருவாக அங்கீகரிக்க வேண்டும் எனவும் வேண்டிக்கொண்டது. இம் மனு எமது பகுதிப் பாராளுமன்ற அங்கத்தவருக்கூடாகக் கௌரவ போக்குவரவு மந்திரி அவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது. ''பகிரங்க வேலைப் பகுதியினருக்குச் செய்யப்பட வேண்டிய வேலைகள் அதிகம் இருப்பதினால் வேறு எந்தக் கூடுதலான வேலையையும் பொறுப்பெடுப்பது கஷ்டம்'' என்ற அறிவித்தல் கிடைத்தது. 'ஈழகேசரி' பொன்னையா வீதியை உபயோகத்துக்குத் தக்கதாக இனி எப்படிப் பேணுவது என்ற நிலை ஏற்பட்டது.

மறுபடியும் அரசாங்க அதிபர் அவர்களின் உதவி கோரப்பட்டது. 'ஈழகேசரி' பொன்னையா வீதிக்கு கற்பரவி, தார் ஊற்றுவதற்கு கனடாதேச நன்கொடைப் பணத்திலிருந்து நன்கொடைப் பணம் பெற்றுத் தருமாறு மனு சமர்ப்பித்து அவரைப் பேட்டி கண்டு பேசப்பட்டது. ஒருவருட முயற்சியின் பேறாக, கற்பதித்துத் தார் ஊற்ற அந் நன்கொடைப் பணத்தைக் கோரியவிடத்து, 'ஈழகேசரி' பொன்னையாவீதியில் மூன்று நீர்வடிகால்வாய்அமைப்பதற்கு மாத்திரம் அரசினரால் ஒப்பந்தம் கோரப்பட்டது. சன்மார்க்கசபையே இந்த ஒப்பந்தத்தையும் ஏற்றுச் செவ்வனே நிறைவேற்றி ஒப்பந்தத் தொகை ரூபா 855 ஐயும் பெற்றுக் கொண்டது.

1954ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் இலங்கைப் பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவல அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தபோது அவர்களை வரவேற்று உபசரித்து, அவர் போக்குவரத்து மந்திரியாக இருந்த காலத்தில் பாராளுமன்ற அங்கத்தவர் திரு. சு. நடேசபிள்ளை அவர்கள் மூலம் சமர்ப்பித்த விண்ணப்பத்தையும் அவர்களுடைய பதிலையும் ஞாபகப்படுத்தி, 'சன்மார்க்க சபைக்கு ஒரு மைல் தூரத்தில் உள்ள பகிரங்க தெருவில் இவ் வரவேற்பை ஏற்படுத்தியதற்கு, குரும்பசிட்டியில் ஒரு பகிரங்க தெரு இன்மையே காரணம்' என்பதையும் விளக்கிச் சன்மார்க்கசபையின் முயற்சி

வெற்றிபெற ஆவன செய்யவேண்டும் என மனுச்சமர்ப்பித்து நேரிற் கேட்டுக்கொண்டது. 1955ஆம் ஆண்டு தை மாதம், ''அரசாங்கத்தின் நிதிநெருக்கடி காரணமாக P. W. D. பகுதிக்குக் கீழுள்ள தெருவீதிகளையேபரிபாலனம் செய்ய முடியாம லிருக்கிற தென்றும் அதனால் 'ஈழகேசரி' பொன்னையா வீதியைக் கையேற்றுக்கொள்ள முடியாதென்றும் பணநிலை திருப்திகரமான காலத்தில் சபையாரின் விண்ணப்பம் கவனிக்கப்படும்'' என்றும் பதில் கிடைக்கப்பெற்றது. அடுத்த பங்குனி மாதம் காங்கேசன்துறைத் துறைமுக அபிவிருத்தி சம்பந்தமாக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த கௌரவ போக்குவரத்து மந்திரி, மொன்ரேகு-ஜெயவிக்கிரமா அவர்களைப் பேட்டிகண்டு மனுச் சமர்ப்பித்தும் ஒருபலனும் கிடைக்கவில்லை. ஆயினும்வலிகாமம் வடக்கு கிராமமுன்னேற்றச் சமாசத்தினர் கௌரவ உள்நாட்டு மந்திரி அவர்களை யாழ்ப்பாணம் கச்சேரியிற் பேட்டிகண்டு சமர்ப்பித்த மனுவில் 'ஈழகேசரி' பொன்னையா வீதி பற்றியும் வற்புறுத்தப்பட்டது. கௌரவ உள்நாட்டு மந்திரியார் அவ்வீதியைப் பற்றிய விடயத்தை வடமாகாண அரசாங்க அதிபரின் கவனத்துக்கு அனுப்பிவைத்தார்கள். அரசாங்க அதிபர் வடமாகாண மாவட்ட இணைப்புச் சபைமூலம் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள்.

1947ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ந்து 7ஆண்டுகளாகச் சபை அரும்பாடுபட்டு 2மைல் நீளம் 24 அடி அகலமான வீதி ஒன்றை அமைத்தது. பொதுமக்கள் தம் உடல் உழைப்போடு ஒரு இலட்ச ரூபா பெறுமதியான நிலத்தையும் நன்கொடையாக வழங்கினர். இவையெல்லாவற்றையும் கண்டும் அரசாங்கம் அவ்வீதியைக் கையேற்காமை சபைக்கு மிகுந்த ஏமாற்றத்தைக் கொடுத்தது. ஆயினும் இயன்றமட்டும் தொடர்ந்து முயன்றதன் பேருக 1956ஆம் ஆண்டளவில் ஓரளவு சித்தி ஏற்படக்கூடிய நிலை காணப்பட்டது. இச்சபையின் பிரதிநிதிகள் இருமுறை (12-10-56, 9-11-56) யாழ்ப்பாண பகிரங்க வேலைப் பகுதியினரின் காரியாலயத்தில் (P. W. D. Office) சமுகம் கொடுத்துத்தெருவின்அவசியத்தை விளக்கியதன் காரணமாக அதிகாரிகள்(Executive-Engineer) 'ஈழகேசரி' பொன்னையா வீதியை மயிலிட்டிக் கிராம சங்கத் தலைவருடனும் சன்மார்க்கசபைக் காரியதரிசியுடனும் பார்வையிட்டார்கள். மீண்டும் மீண்டும் சபையார் தொடர்ந்து காரியாலயம் சென்று கலந்து பேசினார்கள். இதன்பயனாக யாழ்ப்பாணப் பகிரங்க வேலைப்பகுதியினர் இத் தெருவைக் கையேற்றுக் கொழும்பு போக்குவரவு மந்திரி காரியாலயத்துக்கு மனுப் பண்ணியிருந்தார்கள். யாழ்ப்பாண அரசாங்க அதிபரைத் தலைவராகக் கொண்ட மாவட்ட இணைப்பு அதிகாரிகள் சபையும் 'ஈழகேசரி' பொன்னையா வீதியைப் பகிரங்க வேலைப் பகுதியினர் எடுக்கவேண்டுமெனச் சிபார்சு செய்தது. சன்மார்க்க சபையினரால் 2-6-56இல் அனுப்பி வைக்கப்பட்ட மனுவை ஆதாரமாகக்கொண்டு கெக்கிராவைப் பட்டினசங்கத் தலைவராக இருந்த திரு. க. தம்பிப்பிள்ளை அவர்களும் கௌரவ போக்குவரத்து மந்திரியுடன் கலந்து பேசி வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொண்டார்.

1958ஆம் ஆண்டுவரை சன்மார்க்க சபையினர் தருணம் கிடைத்த ஒவ்வொரு சந்தர்ப்பத்

திலும் முயற்சி எடுத்ததன் பேருக எமது கிராமத்துக்குப் பதினெரு வருட காலத்துக்குள் 'ஈழகேசரி' பொன்னையா வீதி பகிரங்க தெரு வாகக் (P. W. D.) கிடைத்தமை பெரும் பேருகும்.

*1-3-58*இல் அரசாங்கம் 'ஈழ கேசரி' பொன்னையா வீதியைப் பொறுப்பேற்றுக் கொண்டது. இதன் காரணமாகச் சன்மார்க்க சபையினர் *9-3-58*இல் ஒரு விசேட பகிரங்கக் கூட்டம் கூட்டி அவ் வீதியை அரசினர் அங்கிகரிக்க உதவி புரிந்த அனைவருக்கும் நன்றி கூறியது.

கிராமத்தின் தேவைக்கு ஏற்ற வகையில் கல் பதித்துத் தார் ஊற்றவும் உயர்ந்த பிரிவில் 'ஈழ கேசரி' பொன்னையா வீதியைச் சேர்க்கும்படியும் மனு சமர்ப்பித் தும் யாழ்ப்பாண பகிரங்க வேலைப் பகுதிக் காரியாலயத்திற் சந்தித் தும் கலந்துரையாடியதன் பயனுக, *1962*ஆம், *1963*ஆம் ஆண்டுகளில் திருப்தியாகக் கல் பதித்தும் தார் ஊற்றப்பட்டும் உள்ளது. 'ஈழ கேசரி' பொன்னையா வீதி ஒரு சிறந்த வீதியாகப் பகிரங்க வேலைப் பகுதியினராற்கணிக்கப்பட்டு நன்கு பராபரிக்கப்பட வேண்டுமென்பது சபையின் குறிக்கோளாகும்.

---

## உபதபாற்கந்தோர்

எமது கிராமமாகிய குரும்ப சிட்டிக்கு அண்மையிலுள்ள பிரதம தபாற்கந்தோர் தெல்லிப்பழையில் உள்ளது. தெல்லிப்பழைத் தபாற் கந்தோர் அதிகாரிகள், எமது கிராம மக்கள் என்றும் பாராட் டக் கூடியதாக அரிய சேவையைப் பட்சபாதமின்றி எம் கிராமத்துக் குப் புரிந்துவந்தனர்; வருகின்றனர்.

யாழ்ப்பாணத் தமிழ் இனத் துக்கு ஓர் எடுத்துக்காட்டாக நமது கிராமத்து மக்களும் அமைவர். கல்வி, அறிவு, ஒழுக்கம், பண்பாடு, நாகரிகம் இவைகளில் தேர்ச்சி பெற்றும் அரசாங்க சேவை, வியா பாரம், கமம், அயல்நாட்டிற் சேவை என்பவற்றில் தீவிரமாய்ப் பங்குபெற்றும் விளங்குபவர்கள். இக்காரணங்களால் இக் கிராமத் துக்கு கடிதம், தந்தி, காசுக் கட்டளை (M. O.), தபாற் கட்டளை (P. O.), பார்சல் போக்குவரவு ஆதியன அதிகம். இவற்றை உணர்ந்த தெல்லிப்பழைத் தபாற்கந்தோர் அதிகாரிகள் ஷ்ெ தபாற்கந்தோரின் பரிபாலனத்திலுள்ள கிராமவரிசை இடாப்பில் மயிலிட்டி தெற்கு என் னும் கிரமத்திற்குப் பதிலாக மயி லிட்டி தெற்கு—குரும்பசிட்டி என இரு கிராமங்களாக வகுத்து எமது இவ்வூரையும் ஒரு கிராமமாகச் சேர்த்திருக்கிருர்கள்.

சன்மார்க்கசபையின் ஆரம்ப காலத்தில் எமது ஊரிலே ஒரு தபாற்பெட்டி, பிரபல வர்த்தகர் திரு. நன்னியர்—தாமர் அவர்களது கடையிலே வைக்கப்பட்டருந்தது. அங்ஙனம் இருப்பது எல்லோருக் கும் வசதியாக இல்லை என்றும் ஆகையால் குரும்பசிட்டிக் கிரா மத்தின் மத்தியான ஓர் இடத்தில் ஒரு நிலையான தூண் தபாற் பெட்டி (சிமென்ரால் செய்யப்பட் டது)வைத்துதவுமாறும்*1-9-38*இல் அரசினரை வேண்டிக்கொண்டது.

இவ்வூர்க் கடித பரிமாற்றத் தைக் கணக்கெடுத்துப் பார்ப்பின் ஒரு தபாற் பெட்டியின் சேவைக்

குக் கூடியதென்றும், மூன்று தபாற் பெட்டிகள் நிறுவப்பட வேண்டு மென்றும் விண்ணப்பஞ் செய்யப் பட்டது. இம் முயற்சியின் பயனாய் குரும்பசிட்டியின் மத்தியில் நிலை யான தூண் தபாற்பெட்டியும், கிழக்கு மேற்குப் பகுதிகளில் புதிய இரு தபாற் பெட்டிகளும் வைத்துத் தபாற்பகுதியினர் உதவியுள்ளனர்.

பொருளாதாரந் தனியுறுப் பாக இருந்துவந்த பண்டைய கிரா மம் போன்றதன்றிப் புறநாடுக ளுடன் தொடர்புகொண்டு நவீன வீதி அமைப்புக்களும் வாகன வசதி களும் மேலும் மேலும் இறுகப் பிணைக்கப்பட்டிருக்கின்ற இக் காலத்தில் எமது கிராம மக்கள் தம் வாழ்க்கைச் சௌகரியங்களை உடையவர்களாய் விளங்க வேண்டு மென்பதும் சன்மார்க்க சபையின் நோக்கமாதலால், 10-8-48 இல் குரும்பசிட்டியில் ஓர் உபதபாற் கந்தோர் நிறுவப்படல் அத்தியாவ சியமென்று கௌரவ தபால் தந்தி அமைச்சருக்கும் அப்பகுதித் தலைவ ருக்கும் மனுச்செய்தும் பேட்டி யளித்தும் மற்றும் வேண்டிய காரண காரியங்களைத் திருப்தி யாகச் சமர்ப்பித்தும் முயன்றமை காரணமாக 1949இல் உபதபாற் கந்தோர் கிடைக்கப் பெற்றது. ஆனால் C பிரிவுத் தபாற்கந்தோர் எமது கிராமத்தின் தேவையைப் பூர்த்தி செய்வதாயில்லை. தந்தி வசதியுடன் கூடியதாகவும் கூடிய தொகைக்குக் காசுக் கட்டளைகள் மாற்றக்கூடியதாகவுமுள்ள தபாற் கந்தோரே வேண்டுமென மனுச் செய்ததன் பயனாக 55ஆம் ஆண் டில் 'B' பிரிவு தபாற் கந்தோராக உயர்ச்சி பெற்றது. அவ்வாண்டில் தபாற் கந்தோர் சேமிப்பு இயக்க வேலை ஆரம்பிக்கப்பட்டது. 150க்கு மேற்பட்டோர்கள் தபாற்கந்தோர் சேமவங்கிப் பாஸ் புத்தகங்களைப் பெற்றனர். அவ்வருடம் ரூபா 4500 வரை சிறு தொகைச் சேமிப்பு மூலம் சேகரிக்கப்பட்டது. தெல் லிப்பழைத் தபாற்கந்தோர் நிரு வாக எல்லையுள் கூடுதலாகத் தந்தி அனுப்புதல், பெறுதல் நடை முறையிலிருக்கும்எமது கிராமத்துக் குத் தந்தி வசதி அமைக்கப்பெரு மையை உணர்ந்து 1956ஆம் ஆண் டில் கௌரவ தபால் வானொலி விளம்பர அமைச்சருக்கு விண்ணப் பம் செய்துள்ளோம். அதன் பேறாக தந்திவசதி கொடுக்கப்படவேண் டிய உபதபாற் கந்தோர்கள் பெயர் இடாப்பில் எம்மூர்த் தபாற் கந் தோரும் சேர்க்கப்பட்டிருக்கிறது எனவும், நான்குமைல் நீளமான சுன்னாகம்—குரும்பசிட்டிக்குத் தந்தி வசதி அமைக்க ரூபா 6000 செலவு ஏற்படுமெனவும் அடுத்த நிதி வரு டத்தில் கவனம் எடுக்கப்படுமென வும் அறிவிக்கப்பட்டது. 1958ஆம் ஆண்டில் தந்தி தொலைபேசி வசதி கள் ஏற்படலாயின. உபதபாற் கந்தோர் சீரும் சிறப்பும் பெற்று வளர்ச்சியடைந்து இன்று A பிரிவு உபதபாற்கந்தோராக விளங்கு கின்றது.

சபையின் முயற்சிகள் எல்லா வற்றிற்கும் வேண்டிய ஆலோசனை கள், வழிவகைகளை அறிவுறுத்திய திரு. கதிரிப்பிள்ளை—சுந்தரமூர்த்தி அவர்களுக்கு எமது கிராம வாசி கள் யாவரும் கடப்பாடுடையவ ராவர்.

# வயாவிளான் அரசினர் மத்திய மகாவித்தியாலயம்

'பொன்னையா பள்ளிக்கூடம்' என இப்போதும் பொதுமக்களால் அழைக்கப்படும் வயாவிளான் அரசினர் மத்திய மகாவித்தியாலயம் குரும்பசிட்டி எல்லையில் அமைவதற்கு மூலகாரணமாய் இருந்தவர் சன்மார்க்கசபைத் தலைவரும் 'ஈழகேசரி' அதிபருமாகிய திரு. நா. பொன்னையா ஜே. பி. அவர்களாவர். திரு. பொன்னையா அவர்கள் தான் தலைவராக இருந்து பணி புரிந்த சன்மார்க்கசபை நிருவாகசபையில் வலிகாமம் வடக்குப் பகுதிக்கு ஸ்தாபிக்கப்பட விருக்கும் மத்திய கல்லூரி பற்றியும் அது ஆங்கிலக் கல்லூரி வசதி குறைந்த மயிலிட்டிக் கிராமசங்கப் பகுதியில் ஸ்தாபிப்பதற்கு எடுக்கப்படவேண்டிய நடைமுறை ஒழுங்குகள் பற்றியும் கலந்துரையாடினார். சன்மார்க்கசபை நிருவாகசபையில் ஆலோசனை செய்து தீர்மானிக்கப்பட்ட பல முடிபுகளுக்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. திரு. பொன்னையா அவர்களுக்குச் சொந்தமான ''மீனாட்சி தோட்டம்'' எனப் பெயரிய விவசாயப் பண்ணைக்குரிய காணியில் மத்திய கல்லூரி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. சன்மார்க்க சபை நிருவாக உறுப்பினரின் உபகுழுவும் அயற்கிராம வாசிகளும் சேர்ந்த பொதுச்சபை கூடி மத்திய கல்லூரி நிறுவுதற்குரிய ஆக்கப்பணிகளை மேற்கொண்டனர். பரோபகாரியான திரு. பொன்னையா அவர்கள் அரசாங்கத்துக்கு ரூபா 10000 நன்கொடை அளித்து ஒரு மாத காலத்துள் தற்காலிக பாடசாலைக் கட்டிடமும் தளவாடங்களும் வழங்கி உதவி புரிந்தார்கள். 1946 ஆம் ஆண்டு மத்தியகல்லூரி ஸ்தாபிக்கப்பட்டது.

அயற் கிராமவாசிகளையும் கொண்ட சபை, நிதி திரட்டி நடவடிக்கை எடுத்தபோது, குரும்பசிட்டியில் சன்மார்க்கசபையினர் நிதி சேகரித்து உதவியதோடல்லாமல் சபைக்குரிய உபகரணங்களான வாங்குகள், கதிரைகள், மேசைகள் என்பனவற்றைத் தற்காலிகமாக உதவிக் கல்லூரிக்குரிய விடுதிச்சாலை உடனடியாக நடைபெறுவதற்கும் வசதி செய்து கொடுத்தனர்.

1951ஆம் ஆண்டளவில் தற்காலிக கட்டிடம் பழுதடைய மத்தியகல்லூரி பலாலி விமானத் தளத்துக்கு அண்மையாயுள்ள கட்டிடங்களுக்கு மாற்றப்பட இருப்பதை அறிந்து சன்மார்க்கசபை, கல்லூரி ஸ்தாபிக்கப்பட்ட இடத்திலேயே நிரந்தர கட்டிடம் அமைத்து வகுப்புக்கள் நடாத்தப்பட வேண்டுமெனக் கௌரவ கல்வி மந்திரிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்க்கும் மனுச் சமர்ப்பித்து தொடர்ந்து நடவடிக்கை எடுத்துக்கொண்டதன் காரணமாக 1955ஆம் ஆண்டு நிரந்தர கட்டிடவசதி ஏற்பட்டது.

மத்திய கல்லூரி அபிவிருத்திக்காக இச்சபையினர் வயாவிளான் அன்பர்களின் ஒத்துழைப்புடன் வேண்டியபோதெல்லாம் கல்விமந்திரி, வித்தியாதிபதி, பாராளுமன்ற உறுப்பினர் என்போரைப் பேட்டி கண்டும் மனுச் சமர்ப்பித்தும் வேண்டிய நடவடிக்கைகளில் ஈடுபட்டும் உழைத்திருக்கின்றனர்.

நமது கிராமத்துப் பிள்ளைகளில் அதிக தொகையான மாணவர் கல்விபெறும் வயாவிளான் அரசினர் மத்திய மகாவித்தியாலயம் மாணவர்களுடைய கல்விக்கு வேண்டிய எல்லாத் தேவைகளையும் உள்ளடக்கி உயர்தரக் கல்வியோடு கைத்தொழில் கமத்தொழிற் கல்வியும் பெறுவதற்கு வசதியாக அமையவேண்டுமென்பதே சன்மார்க்கசபையின் நோக்கமாகும்.

# நூல் வெளியீடுகள்

நல்ல நூல்களை எழுதி வெளியிடுவதும் மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் உபயோகமான சமய சம்பந்தமான சிறு பிரசுரங்களை வெளியிட்டு இலவசமாக வழங்குவதும் சன்மார்க்கசபையின் வேலைத் திட்டங்களுள் ஒன்ருகும். அத் திட்டத்தின் முதற்படியாக ஆரம்பத்திலே அப்பர் புகழ்மாலை என்ற பெயருடன் கூடிய தொகுப்பு நூலை வெளியிட்டு இலவசமாக எமது சபை வழங்கியது. பின்னர் சபையின் ஆரம்ப ஸ்தாபகர்களுள் ஒருவரும் சபையின் காரியதரிசியாக அமர்ந்து சபையை வளர்த்தவருமான காலஞ்சென்ற திரு. வ. பொன்னுக்குமாரு ஆசிரிய ரவர்களின் ஞாபகார்த்தமாக திருவெம்பாவையும் திருப்பள்ளி எழுச்சியும் சேர்ந்த இலவச வெளியீடொன்று விநியோகிக்கப்பட்டது. மார்கழித் திருவாதிரை காலங்களிலே எம்மூர் அம்பாள் ஆலயத்தில் நடைபெறும் தீர்த்தோற்சவ காலங்களிலே சிவபுராணம், தோத்திரத் திரட்டு, பாராயணத் தோத்திரத் திரட்டு, கோளறு பதிகம், திருமுருகாற்றுப்படை என்னும் நூல்களை வெளியிட்டுச் சன்மார்க்கசபை இலவசமாக வழங்கி உள்ளது.

ஈழத்துப் பாடசாலைகளிலே கீழ்வகுப்பு மாணவர்களுக்கு இலக்கியம் ஒரு பாடமாகப் படிப்பிக்கப்பட வேண்டுமென்று கல்விப் பகுதியினர் தீர்மானித்தபொழுது, சன்மார்க்கசபைத் தலைவரான திரு. நா. பொன்னையா அவர்கள் சன்மார்க்க சபை நிருவாக சபையில் வகுப்புக்களுக்குரிய இலக்கிய பாட புத்தகங்கள் எழுதும்படி ஆலோசனை கூறி உற்சாகமூட்டினுர். சன்மார்க்க சபையின் ஆதரவில் அதன் அக் காலக் காரியதரிசிகளான பண்டிதர் வ. நடராசா, திரு. கனக. செந்திநாதன் என்போரால் இலக்கிய மஞ்சரி — ஐந்தாம், நான்காம் வகுப்புப் புத்தகங்கள் எழுதப்பட்டுச் சபையின் பெயரில் வட — இலங்கைத் தமிழ்நூற்பதிப்பக வெளியீடுகளாக வெளிவந்தன. இப்பாட நூல்களை அரசாங்க கல்விப் பாடநூற் பிரசுர சபையார் அங்கீகரித்ததோடு ஆசிரிய உலகமும் பெருமளவில் ஆதரித்து உற்சாகமளித்தது.

சன்மார்க்கசபையின் ஆதரவில் சைவப்பெரியார் ஏழாலை, திரு. மு. ஞானப்பிரகாசம் அவர்களை ஆசிரியராகக் கொண்ட சைவ சித்தாந்த வகுப்பொன்று இரண்டு வருடங்களாக நடைபெற்றது. அப்போது சமய பாடம் கட்டாயபாடமாக்கப்பட்டுப் பாடசாலைகளிற் படிப்பிக்க வேண்டுமென அரசாங்கம் உத்தரவிட்டது. சித்தாந்த வகுப்பிற் கற்றுக்கொண்டிருந்த சன்மார்க்கசபையினர், சன்மார்க்க சபை நிருவாக சபையில் வகுப்புக்களுக் கேற்ற சமயபாட நூல்களை வெளியிடவேண்டுமெனத் தீர்மானித்தனர். அத் தொடர்பாகச் சபையினர் சைவசமய போதினி 2ஆம், 3ஆம், 4ஆம், 5ஆம், 6ஆம் வகுப்புக்களுக்குரிய புத்தகங்களை எழுதி வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகத்தாருக்குக் கொடுத்து வெளியிடச் செய்தனர். சைவசமய பாட நூல்கள் எழுதும் முயற்சியில் எமக்கு உறுதுணையாக நின்ற சித்தாந்த வகுப்பு ஆசிரியர் திரு. மு. ஞானப்பிரகாசம் அவர்களுக்கும், பலாலி அரசினர் ஆசிரியகலாசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் செந்தமிழ்மணி பொ. கிருஷ்ணபிள்ளை அவர்களுக்கும், கந்தர்மடம்,

சைவப்புலவர் க. சி. குலரத்தினம் அவர்களுக்கும் எங்கள்சபை பெரிதும் கடப்பாடுடையதாக இருக்கின்றது. 'சைவசமய போதினி' நூல் வரிசைகள் அரசாங்ககல்விப்பகுதிப் பாடநூற்பிரசுரசபையாரால் அங்கீகரிக்கப்பட்டு ஈழத்தின் பல பாகங்களிலும் பாடநூல்களாக உபயோகிக்கப்பட்டுவருகின்றன.

சன்மார்க்கசபை வெளியீடுகளில் மிக முக்கியமானதும் மிகச் சிறந்ததுமானது சைவநற் சிந்தனைகள் என்னும் நூலாகும். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் சிந்தனையில் உதித்த அரும் பெரும் கருத்துக்களை விடயத்துக்கேற்ற அமைப்பும் பிரசுர அலங்காரமுங் கொண்ட நூலாக சபை வெளியிட்டமையைச் சைவ உலகம் போற்றுதிருக்க முடியாது. இந் நூலின் பிரதிகளில் 750 இலவசமாகவே வழங்கப்பட்டன. எஞ்சியவற்றில் ஒரு பகுதி பிரபல புத்தகக்கடைகளில் 50 சத விலைக்கு விற்பனைக்குக் கொடுக்கப்பட்டன. பண்டிதமணியவர்கள் இக்கட்டுரைகளை எழுதியுதவியமைக்குச் சன்மார்க்கசபையினர் நன்றி பாராட்டுகின்றனர்.

ஈழத்து எழுத்தாளர் ஐவர் (இ. நாகராஜன், கனக. செந்திநாதன், சு. வே., குறமகள், எஸ். பொன்னுத்துரை) புதுமையாகப் படைத்த மத்தாப்பு என்ற குறுநவலை எமதுசபை வெளியிட்டது. (விலை ரூபா ஒன்று.) பிரபலசிற்பாசாரியார் திருநெல்வேலி திரு. வி. ஆறுமுகம் அவர்களின் புத்திரனும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஓவிய ஆசிரியருமாகிய திரு. ஆ. தம்பித்துரை அவர்கள் எழுதிய ஓவியக்கலை (விலை ரூபா ஒன்று), சிறுவர் சித்திரம் (விலை ரூபா 1-50) என்னும் நூல்களும் சபையாரால் வெளியிடப்பட்டன. மாவை ஆதீனப் பிரதம ஆசாரியர் பிரம்மஸ்ரீ து. சண்முகநாதக் குருக்கள் அவர்களால் எழுதப்பட்ட மாவிட்டபுரத் திருத்தல வரலாறு (விலை ரூபா 2-50) என்னும் நூலும் சபையாரால் வெளியிடப்பட்டது.

இவைதவிர, சன்மார்க்கசபை ஸ்தாபகர்களுள் ஒருவரும் 'ஈழகேசரி'ப் பத்திராதிபரும் தமிழ்த் தொண்டருமாகிய திரு. நா. பொன்னையா அவர்களது வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம் என்னும் சிறு நூல் ஒன்றையும், ஈழத்துப் பிரபல சிற்பாசாரியார் திருநெல்வேலி திரு. வி. ஆறுமுகம் அவர்களைப்பற்றிய வாழ்க்கை வரலாறாகிய கலைமடந்தையின் தவப்புதல்வன் (இரசிகமணி கனக. செந்திநாதன் எழுதியது) என்னும் நூலையும் சன்மார்க்கசபை வெளியிட்டது.


நூல்களை வெளியிடுவது மாத்திரமன்றிப் பிரபல வெளியீட்டாளர்கள் வெளியிட்ட சில நூல்களை அறிமுகம் செய்விக்கும் முகமாக வெளியீட்டு விழாக்களையும் நடாத்தியது. அத்தகையன, கவிஞர் கந்தவனம் எழுதிய இலக்கிய உலகம்; வானொலி நாடகப்பகுதித் தலைவர் திரு. சண்முகநாதன் (சானா) எழுதிய பரியாரி பரமர் (அரசு வெளியீடு); இரசிகமணி கனக. செந்திநாதன் எழுதிய மூன்றுவது கண் (வரதர் வெளியீடு), ஈழத்து இலக்கியவளர்ச்சி (அரசு வெளியீடு) என்பனவாகும்.

**நூல்கள் :**

இலவச வெளியீடு :


1. அப்பர் புகழ்மாலை
2. திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி

## நூல் வெளியீட்டு விழா



1. 'மத்தாப்பு' குறுநாவல் வெளியீட்டு விழாவில் இரசிகமணி [illegible] பேசுகிறார். 2. 'ஓவியக் கலை' நூல் வெளியீட்டு விழா — பரமேஸ்வரக் கல்லூரி அதிபர் அவர்கள் [illegible] ஆக்கியோனிடம் நூலின முதலாவது பிரதியைப் பெற்று விழாவை ஆரம்பித்துவைக்கின்றார்கள். 3. '[illegible] திருத்தல வரலாறு' வெளியீட்டு விழாவில் ஆக்கியோன் பிரம்மஸ்ரீ [illegible] சண்முகநாதக் குருக்கள் அவர்கள் பேசுகின்றார்கள். 4. திரு. ஏ. பி. பொன்னுத்துரை, பீ. ஏ. அவர்கள் வரவேற்புரை நிகழ்த்துகின்றார்கள்.

## நூல் வெளியீட்டு விழா — கருத்தரங்கம்




1. பண்டிதமணியவர்களின் 'சைவ நற்சிந்தனைகள்', 2. 'மாவிட்டபுரத் திருத்தல வரலாறு' எனும் நூல்களின் வெளியீட்டு வைபவம், 3. புத்தகக் கண்காட்சி, 4. இலக்கியக் கருத்தரங்கம்.

3. சிவபுராணம்
4. தோத்திரத்திரட்டு
5. பாராயணத் தோத்திரத் திரட்டு
6. கோளறு பதிகம்
7. திருமுருகாற்றுப்படை

பாட நூல்கள் :

1. இலக்கிய மஞ்சரி 5ஆம் புத்தகம்
2. ,, 4ஆம் ,,
3. சைவசமய போதினி 2ஆம் ,,
4. ,, 3ஆம் ,,
5. ,, 4ஆம் ,,
6. ,, 5ஆம் ,,
7. ,, 6ஆம் ,,
8. ,, 7ஆம் புத்தகம் (அச்சில்)

வரலாறு :

1. திரு. நா. பொன்னையா அவர்கள் வாழ்க்கை வரலாறு
2. கலைமடந்தையின் தவப் புதல்வன்
3. மாவிட்டபுரத் திருத்தல வரலாறு

பிறநூல்கள் :

1. சைவநற்சிந்தனைகள் (சமயம்)
2. மத்தாப்பு (குறு நவல்)
3. ஓவியக்கலை (கலை)
4. சிறுவர் சித்திரம் (கலை)

மொத்தம் 22 நூல்கள்.

---

## தம்பியையா ஞாபகார்த்த விளையாட்டு மைதானம்

திரு. காசிப்பிள்ளை, தம்பியையா அவர்கள் குரும்பசிட்டியிற் பிறந்தவர். அவர் மலாயா தேசத்துக்குச் சென்று அங்கு ஓறியென்றல் இன்சூரன்ஸ் கம்பெனி ஏஜென்ராக இருந்தவர். 1949ஆம் ஆண்டளவில் தாயகம் திரும்பி, பாரிசவாத நோயினுற் பீடிக்கப்பட்டு, கொழும்பு மத்திய வைத்தியசாலையிற் சிகிச்சை பெற்று அங்கேயே மரணமானுர்.

அக்காலத்திலே சன்மார்க்க சபைத் தலைவரும், மயிலிட்டிக் கிராம சங்கத் தலைவருமான திரு. நா. பொன்னையா அவர்கள் திரு. கா. தம்பியையா அவர்களின் நண்பராக விளங்கினுர். அவர்களே திரு. கா. தம்பியையா வைத்திய சிகிச்சை பெறுவதற்கு, அவரின் உறவினரும், சன்மார்க்க சபையின் நீண்டகால அங்கத்தவரும், மயிலிட்டிக் கிராம சபை எம்மூர் அங்கத்தவருமான திரு. வ. செல்லத்துரை அவர்களுடன் கொழும்புக்குக் கொண்டு சென்றவர்கள். திரு. தம்பியையா ஒரு தனவந்தராக இருந்தமையினுலும் திரு. நா. பொன்னையா அவர்களின் உதவி ஒத்துழைப்பைப் பெற்றமையினுலும் வேறு காரணங்களினுலும் கிராம அபிவிருத்திக்காகச் சன்மார்க்க சபைக்கு ரூபா 5000/- நன்கொடை அளிக்க விரும்புவதாகத் தெரிவித்திருந்தனர். அவரது விருப்பம் நிறைவேறுவதற்கு முன் அவர் மரணமானுர்.

திரு. தம்பியையா அவர்களின் மரணத்தின்பின் சன்மார்க்கசபைத் தலைவரவர்கள் திரு. தம்பியையாவினுரிமையாளர்களுடன் தொடர்பு கொண்டு, உரிமையாளர் அவர்களின் நியாயதுரந்தரர் பெயரில் ரூபா 5000க்கு ஒரு நோட்டுக் கொடுக்கவும் நியாயதுரந்தரர் உடனே அந்த நோட்டைச் சன்மார்க்க சபைத் தலைவராயிருந்த திரு. நா. பொன்னையா அவர்களுக்கும் திரு. பூ. சு. நடராசா அவர்களுக்கும்

சிபார்சுபண்ணவும் அவர்கள் நோட்டைப் பெற்றுச் சன்மார்க்க சபைக் காரியதரிசியிடம் சமர்ப்பிக்கவும் வேண்டிய ஒழுங்குகளைச் செய்து அவர்களே நிறைவேற்றினர். மலாயாவிலிருந்து பெறப்படவேண்டிய பணம் பெற்றபின்பு ரூபா 5000/- தம்பியையா ஞாபகார்த்தமாகக் கிராம அபிவிருத்திக்குரிய தர்ம கைங்கரியங்களுக்கு உபயோகிக்க ஒழுங்கு செய்யப்பட்டது.

சன்மார்க்க சபை வளவில் சபைக்கு அத்தியாவசியம் வேண்டற்பாலதான கிணறு 1-1-51ல் தோண்டப்பட்ட பொழுது தம்பியையா உரிமையாளரின் நியாய துரந்தரரால், சன்மார்க்க சபைத் தனாதிகாரியிடம் ரூபா 1000/- கொடுக்கப்பட்டது. பின்பு 25-5-53ல் ரூபா 3000 கொடுக்கப்பட்டது. மிகுதி ரூபா 1000 கிடைக்கவில்லை.

1948ஆம் ஆண்டளவில், சன்மார்க்க சபைத் தலைவர் திரு. நா. பொன்னையா அவர்கள் மயிலிட்டிக் கிராம சங்கத் தலைவராகவும் இருந்தனர். அக்காலத்தில் மயிலிட்டிக் கோவிற்பற்றில் ஒரு பிரசவ விடுதிச்சாலை ஸ்தாபிக்க வேண்டுமென்று சிந்தித்து மத்தியாக உள்ள ஓரிடத்தில் 16பரப்புக்காணியை தர்மசாதனம் செய்வித்து அதில் ஒரு கிணறும் தர்ம கைங்கரியமாகத் தோண்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுத் தம்பியையா ஞாபகார்த்த நிதியில் ரூபா 3000 பிரசவ விடுதிச்சாலை நிறுவுவதற்கு உபயோகிப்பது என்று ஆலோசனை கூறியிருந்தனர். பின்பு அவரது விடாமுயற்சியின் பயனாகப் பிரசவ விடுதிச்சாலை நிறுவுவதற்கு மத்திய அரசாங்கத்திடம் ரூபா 7000 நன்கொடை பெற்று அதற்குரிய கட்டிடத்தை நிறுவச் செய்தார். அங்கு ஆரம்பத்திலே சிசு—மாதா பராமரிப்பு நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. 25-7-50இல் அவ்விடத்திற் பிரசவ விடுதிச்சாலை நிறுவுவது அவசியமானதென்று கருதப்படவில்லை என ஸ்தலஸ்தாபனப் பகுதியினர் அறியத்தந்தனர்.

சன்மார்க்க சபை, பிரசவவிடுதிச்சாலை வளவில் மத்திய மருந்துச்சாலை ஒன்றும் அமைத்துத்தரவேண்டுமென்று கிளர்ச்சி செய்தது. மயிலிட்டிக் கிராம சங்கத்தினரும் இத்திட்டத்துக்கு உதவியாக இருந்து ரூபா 11000 மத்திய அரசாங்க நன்கொடையாக இருமுறை பெற்று பிரசவ விடுதிச்சாலைக்கும் மத்திய மருந்துச்சாலைக்குமாகத் திட்டம் வகுத்து அதற்குரிய கட்டிடத்தைக் கட்டுவதற்கு ஆவனசெய்தனர். மயிலிட்டிப் பகுதியில் மத்திய மருந்துச்சாலை ஸ்தாபிப்பதற்குரிய நடவடிக்கைகள் 1952—53 வரவு செலவுத்திட்டத்திற் கையாளப்படும் என்று சுகாதாரப்பகுதி அறியத்தந்தது.

1951இல் சன்மார்க்க இளைஞர் கழகமும் விளையாட்டுப் பகுதியும் புனருத்தாரணஞ் செய்யப்பெற்றன. அக்காலத்திலே விளையாட்டு மைதானம் இல்லாமையால் இடத்துக்கு இடம் மாறியும் புல் உள்ள காலங்களிற் காணிச் சொந்தக்காரர் தடைசெய்ய விளையாட்டுக்கள் நடைபெறுமலும் இருக்கவேண்டியிருந்தது. கிராமத்துப் பிள்ளைகளின் உடல்நல வளர்ச்சிக்கு விளையாட்டு மைதானம் மிக அவசியமெனச் சபை தீர்மானித்தது. அரசாங்க நன்கொடைப் பணம் பெற்று விளையாட்டு மைதானம் அமைக்க முடியாமையைச் சபை அறிந்தது. விளையாட்டு மைதானத்தின் அவசியத்தை உணர்ந்து அதனைப் பெறுவதற்குரிய வழிவகைகளை நன்குபரிசிலனைசெய்தது. தம்பியையாவின் ஞாபக நிதி 3000 ரூபாவையும் விளையாட்டு மைதானம்

ஏற்படுத்துவதில் உபயோகிப்பது என்று தீர்மானஞ் செய்யப்பட்டது. 'கொக்கன்' என்னும் பெயருள்ள 15 பரப்புக் காணி ரூபா 3000 ஆக வாங்கப்பட்டது. அந்தக் காணியை விளையாட்டு மைதானமாக அமைப்பதற்கு ரூபா 763 செலவு செய்யப்பட்டது. நமது கிராமத்து இளைஞர்களின் இக் கைங்கரியத்துக்குத் தம்பியையா ஞாபக நிதியிலிருந்து ரூபா 2263 உபயோகப்படுத்தப்பட்டது. 4—5 வருடங்களாக சன்மார்க்கசபை தம்பியையா விளையாட்டு மைதானம் சிறப்புற்று விளங்கியது. கைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி, உதைபந்தாட்டப் போட்டிகள், 'கிறிக்கெற்', விளையாட்டுக்கள், விளையாட்டுப்போட்டிகள் என்பன சன்மார்க்கஇளைஞர்சங்கத்தினரால் நன்கு வகுக்கப்பட்டு நடைபெறலாயின. இங்ஙனம் விளையாட்டு மைதானம் நன்கு உபயோகப்படுத்தப்பட்டு ஒழுங்காகப் பல விளையாட்டுக்களும் நடைபெறலாயின.

1956-57ஆம் ஆண்டில் சன்மார்க்கசபை அங்கத்தினரல்லாதாரின் எதிர்ப்பியக்கம் சபைமீது ஆரம்பமாயிற்று. ஒரு சிறுபகுதி அங்கத்தினர் அந்த எதிர்ப்பியக்கவலையில் அகப்பட்டனர். ஒத்துழையாமை இயக்கம் தொடங்கிற்று. அழிவுசக்திக்கு ஆதாரமாகத் தம்பியையாவின் உரிமையாளரையும் சன்மார்க்க இளைஞரில் ஒரு பகுதியாரையும் தம் சூழ்ச்சிவலையில் அகப்படுத்துவதிற் சித்தி பெற்றனர். இடம் பொருள் ஏவல்களைப் பெற்றுக் கொண்டதும் அழிவு நாடகம் ஆரம்பமாயிற்று :

(i) மயிலிட்டிக் கிராம சங்கம், பிரசவ விடுதிச்சாலைக்குத் தம்பியையா ஞாபக நன்கொடை ரூபா 3000ஐயும் செலுத்துமாறு உத்தரவு விடுத்தது.

(ii) தம்பியையா ஞாபக விளையாட்டு மைதான பரிபாலன உரிமை தம்பியையாவின் உரிமையாளருக்கு உரியதென்று அவர்களைத் தூண்டி வழக்குத் தொடரப்பட்டது.

(iii) சன்மார்க்கசபை மண்டபம், சன்மார்க்க கிராம முன்னேற்றச் சங்கத்துக்கு (R. D. S.) உரியது என்று அரசாங்கத்துக்கு மனுச்செய்யப்பட்டது.

(i) மயிலிட்டிக் கிராம சங்கம் தமது மனுவுக்குப் போதிய ஆதாரமின்று எனக் கண்டு மேற்கொண்டு நடவடிக்கையிறங்கவில்லை.

(ii) வியாச்சியகாரரின் நியாய துரந்தரர் விடுத்த முன்னறிவித்தலுக்குச் 'சன்மார்க்க சபையே தம்பியையா ஞாபக நிதிக்குப் பொறுப்பாளராதவின் வருமதியாயுள்ள மிகுதி ரூபா 1000ஐயும் சன்மார்க்க சபைக்குக் கொடுக்குமாறு' பதிலளித்தது. தம்பியையா விளையாட்டு மைதான பரிபாலன உரிமை வழக்கு, முறைப்பாடு சரியானதன்று என்று ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இதனல் நேர்ந்த கதி: தம்பியையா ஞாபகார்த்த நிதியில் மீதியாக உள்ள 737ரூபாவும் இவ்வழக்குச் சம்பந்தமாகச் செலவு செய்யப்பட்டமையே.

(iii) சன்மார்க்க கிராம முன்னேற்றச் சங்கம் (R. D. S.) பலமுறையாகப் புனருத்தாரணஞ் செய்யப்பெற்று இப்போது பிறிதோர் ஸ்தாபனமாக வேறொரு கட்டிடத்தில் அங்குரார்ப்பணஞ் செய்யப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

"சுடச்சுடரும் பொன்போல்
ஒளிவிடுந் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு"

"கோதாட்டொழி, சக்கர நெறிநில், சான்றோரினத்திரு, சித்திரம் பேசேல், சீர்மை மறவேல், சையெனத் திரியேல்" என்பன ஈண்டு எமது சமர்ப்பணம்.

சன்மார்க்க சபையின் சத்திய நெறி ஜெயம் பெற்றது. சூரு வளிப்பேய் தலைவிரித்தாடியது. இன்னல் இடுக்கண் விளைவித்தது. தர்ம தேவதையின் உள்ளம் கனிந்தது. அருணன் உதித்தனன். இருள் போய் மறைந்தது. சத்தியம் ஓங்குக. சன்மார்க்கம் வாழ்க—சன்மார்க்கசபை வாழ்க.

---

# குரும்பசிட்டிக் கிராமம்

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனிசிறந் தனவே."

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வமானாற்போல நாம் பிறந்த நாடு நமது ஆதார முதல் உலகமாகிறது. உலகங்களுக்கெல்லாம் காரணனாய ஆதி பகவனை உணரச் செய்கின்றது. ஆதலினன்றோ நாம் பிறந்த நாட்டின்மீது எமக்கு இடையறா அன்பு உண்டாகின்றது. இந்த அன்புதான் ஊராபிமானம், கிராமாபிமானம், தேசாபிமானம், உலகாபிமானமாய் வளர்ந்து இறைவனிடத்தே சரணடையச் செய்கிறது.

விதிவிலக்காகப் பெற்றதாயினும் மாற்றாந் தாயிடத்துப் பற்றுடையவரும், தமது கிராமத்தின் முன்னேற்றத்திலும் அயற்கிராமத்தின் முன்னேற்றத்திலேயே கருத்துடையவருமாய சிலர் காணப்படுதலுமுண்டு.

25 வருடங்களுக்கு முன்பு "உமது ஊர், எவ்வூர்" என வினவின், "நமது ஊர் மயிலிட்டி தெற்கு" என்று உடனே விடை கூறுவர். இன்று அதே வினாவை வினவின் "நமது ஊர் குரும்பசிட்டி" என்றே விடை கூறுவர். சன்மார்க்கசபை ஆரம்பிக்கப்பட்ட போது 'தென்மயிலைச் சன்மார்க்க சபை' எனப் பெயர் வழங்கப்பட்டது; கடித மேல்விலாசம் 'மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழை' என்று பதியப்பட்டது; சில வருடங்களுக்குப் பின்பே 'குரும்பசிட்டி சன்மார்க்கசபை'யென மாற்றப்பட்டது. இன்று தமிழ்கூறு நல்லுலகத்து எவ்விடத்தும் குரும்பசிட்டி என்றோர் ஊருண்டு எனின் சன்மார்க்கசபை இருக்கின்ற அவ்வூரல்லவா என்று அநுவதிக்கப்படும். இதுவே சன்மார்க்கசபையின் சரித்திர விருத்தியாகும்.

எமது ஊரின் பெயர் குரும்பசிட்டி என்று வழங்க ஆரம்பித்த பொழுது குரும்பயிட்டி, குரும்பகட்டி, குரும்பசிட்டி என்று பல்வேறு திரிபுள்ள சொல்லாய் வழங்கலாயிற்று. இன்று குரும்பசிட்டி என்ற பெயரே வலுவடைந்து வழங்குகின்றது. எமது ஊரிலுள்ள உப தபாற்கந்தோர் 'குரும்பசிட்டி உப தபாற்கந்தோர்' எனப் பதியப்பட்டுள்ளது. மேலும் பல அரசாங்க காரியாலயங்கள் குரும்பசிட்டி என்ற கிராமப்பெயரை அங்கீகரித்துச் செயலாற்றுகின்றன.

*1953ஆம் ஆண்டளவில்* கட்டுவன் விதானைப்பிரிவில் இருக்கும் மயிலிட்டி தெற்குக் கிராமசங்க

வாக்காளரும் மயிலிட்டி தெற்கு விதானைப் பிரிவிலிருக்கும் கட்டுவன் வட்டார வாக்காளரும் அவ்வப் பகுதிப் பெரும்பிரிவுகளுடன் சேர்க்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அங்ஙனம் மாற்றம் செய்கையில் மயிலிட்டி தெற்கு—குரும்பசிட்டியின், தெற்கு—மேற்கு எல்லைகள் இயற்கையான பகிரங்க ஒழுங்கைகளாக அமைய வேண்டுமென எல்லைகள் வகுக்கப்பட்ட போது—மயிலிட்டி தெற்குக் கிராமத்தின் மேற்கு எல்லை கணலுளுவை ஒழுங்கையாக அமையவேண்டு மென்று, மயிலிட்டி தெற்குக் குரும்பசிட்டிக் கிராமத்துக்கு மிகவும் பாரதூரமான நஷ்டமான ஒரு பிரச்சினை அரசாங்கரீதியில் ஆரம்பிக்கப்பட்டது.

மயிலிட்டி தெற்கு விதானைப் பிரிவு, மயிலிட்டி கிராமசங்க மூன்று வட்டாரங்களாக அமைந்திருக்கிறது. மயிலிட்டி தெற்குக் கிராமத்தில் இப்போது குரும்பசிட்டி பெரும்பிரிவாக அமைந்து 5ஆம், 6ஆம் வட்டாரங்களை உள்ளடக்கி யிருக்கிறது. மேலே கூறப்பட்ட பிரச்சினை சம்பந்தமான முடிவும் எல்லை வகுப்பும் அவ்வாறே அமையுமாயின், குரும்பசிட்டி 6ஆம் வட்டாரம், குரும்பசிட்டிக் கிராம சனசமூகம் சிறுபான்மையினராகவுள்ள வட்டாரமாக மாறும். மயிலிட்டி தெற்கு விதானைப் பிரிவிலே பெரும்பகுதியை அடக்கிய குரும்பசிட்டிக் கிராமம் சிறு பிரிவாகத் தோற்றமெடுக்கும். குரும்பசிட்டியின் அரசியல் ரீதியான முக்கியத்துவம் முன்னேற்றம் என்பனவற்றிற்கு இடையூறுகள் உண்டாகும்.

இங்ஙனமான புது அமைப்பால் நமது கிராமத்தின் எதிர்கால நஷ்டத்தைஉணர்ந்து சன்மார்க்கசபை, மயிலிட்டி தெற்கு-கட்டுவன் எல்லைப் புனரமைப்பை ஆட்சேபித்தது. காரியாதிகாரி, மாகாண அதிபதி என்போராற் கூட்டப்பெற்ற ஆலோசனைக் கூட்டங்களுக்கெல்லாம் சன்மார்க்கசபைப் பிரதிநிதிகள் சமுகமளித்து, அவ்விடயஞ் சம்பந்தமாகச் சமர்ப்பிக்கப்பட்ட விளக்கப்படத்திலே பத்தகல் ஒழுங்கை பூரணமாகக் காட்டப்படாமையைச் சுட்டிக்காட்டினர். உள்ளூர் உதவி ஆட்சிமன்றத் தலைவர் நேரிலே பத்தகல்ஒழுங்கையைப் பார்வையிடல் வேண்டுமென்று வேண்டப்பட்டனர். ஈற்றிலே கணலுளுவை ஒழுங்கையை விடுத்து எமதூரின் தெற்கு எல்லையிலுள்ள இளையப்பா ஒழுங்கை, பத்தகல் ஒழுங்கை என்பன எல்லைகளாக நிர்ணயஞ் செய்யப்பட்டுள்ளன. இதனால் மயிலிட்டி தெற்கில், குரும்பசிட்டி பெரும்பகுதியாக அமைந்து தெற்கு எல்லை நன்கு ஸ்திரமாக வகுக்கப்பட்டிருக்கிறது.

சன்மார்க்கசபை 1953ஆம் ஆண்டு தொடக்கம் குரும்பசிட்டியை அரசினர் கிராம இடாப்பிற் பதிவு செய்யவேண்டிய நடைமுறைகளில் ஈடுபட்டுழைத்து வருகிறது. இதன் முதல் அங்கமாக குரும்பசிட்டியின் ஒரு பகுதி 'புன்னாலைக்கட்டுவன் வடமேற்கு' என அரசாங்கரீதியிற் கணிக்கப்பட்டு, நிருவாகரீதியாகவும் வாக்குரிமை ரீதியாகவும் துண்டாடப்பட்டிருந்தமையை எடுத்துக்காட்டி அரசாங்கத்துக்கு மனுச்செய்தும் பேட்டி கண்டும் நடவடிக்கைகளை எடுத்தது. இதன்முடிபாகத் துண்டாடப்பட்ட 'புன்னாலைக்கட்டுவன் வடமேற்கு'ப் பகுதி மயிலிட்டி தெற்கு—குரும்பசிட்டியுடன் இணைக்கப்பட ஆவன செய்தது. இதன்காரணமாக அரசாங்க வாக்காளர்இடாப்பிற் கூடுதலான குடிசன வாக்காளரைக் கொண்ட குரும்பசிட்டிக் கிராமந் தோற்றமெடுத்தது.

திருவருட்பொலிவுடன் விளங்கும் சைவாலயங்கள், பாடசாலை, கல்லூரி, வைத்தியசாலை, தந்திச் சேவையோடு கூடிய உபதபாற்கந்தோர், ஐக்கிய நாணய சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பகிரங்க வீதி, பஸ்சேவை, மின்சார சேவை, கைத்தொழிற்சாலைகள், யந்திரநெசவாலை, விளையாட்டு மைதானம், விவசாய நன்செய் நிலம், கலை கலாச்சார நிலையங்கள், அழகிய இல்லங்கள் எல்லாம் அமைந்துள்ள ஒரு மாதிரிக் கிராமமென மிளிரும் எமது ஊரானது இன்னும் அரசாங்கக் கிராமப் பெயர் இடாப்பில் இடம் பெறுதிருக்கிறது. இதுவே எம்மனோராற் செய்து முடிக்கப்பெறவேண்டிய இன்றைய பிரதான காரியமாகும் என்பதை எமதூர் அன்பர் அனைவருக்கும் நினைவிற் கொள்ளுமாறு தெரிவிக்கிறோம்.

---

## ஒப்பந்த வேலைகள்

நமது கிராமத்திலே நடைபெறவேண்டிய பொதுவேலைகள் நன்கு நகுதியாகவும் சிறப்பாகவும் நடைபெறுவதற்குச் சன்மார்க்கசபை ஒப்பந்த மெடுத்து வேலைசெய்யும் வேலைத்திட்டத்தை நடைமுறைக்கு எடுத்துக்கொண்டது. அதன்காரணமாகச் சபை மேற்கொண்ட ஒப்பந்த வேலைகள் பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 1. | 'ஈழகேசரி' பொன்னையா வீதி 1மைல் | ரூபா | 3500 |
| 2. | ,, ,, ·9மைல் | ,, | 3800 |
| 3. | மயிலிட்டி தெற்குச் சந்தைக் கட்டிடம் | ,, | 2075 |
| 4. | ,, ,, சுடலை மடக் கூரைவேலை | ,, | 400 |
| 5. | 'ஈழகேசரி' பொன்னையா வீதியில் 3 நீர்வடிகால்வாய் | | 855 |
| 6. | தெவிசுகிரி ஒழுங்கைவேலை | ,, | 250 |
| 7. | புதிய குரும்பசிட்டி ஒழுங்கை | ,, | 5849 |

அழியக்கூடிய, நிலையில்லாதவற்றை உண்மையானவை, நிலையானவை என நம்பிவிட்டோம். இவற்றை விட்டு நாம் பக்திமார்க்கத்தில் ஈடுபடவேண்டும். இதனால் இறைவன் அருள் கிடைக்கும்.


—சன்மார்க்கசபையில் பேராசிரியர் S. R. துரைசாமி சாஸ்திரிகள்

★ ★ ★

நீங்கள் நன்மை செய்ய விரும்பினால் சாதி, மத, பேதக் குரோதமில்லாது ஒற்றுமையாக இருங்கள்.

—சன்மார்க்கசபையில் ஞானவள்ளல் பரஞ்சோதிமகான்

## அம்பாள் ஆலய அலங்காரத் தேர்



சைவ அன்பர்கள் பலர் உபகரித்த பெருந் தொகைப் பணங்கொண்டு செய்து முடிக்கப் பட்ட எம்மூர் அம்பாளின் அலங்காரத் தேர்.

## சன்மார்க்க நாடக மன்றம்




1. 'மன்னிப்பு'; 2. 'ஆயிரத்தி லொருவர்'; 3. 'தாகம்';
4. 'நிறைகுடம்' என்ற நாடகங்களில் வருங் காட்சிகள்.

# சன்மார்க்க நாடக மன்றம் — 1955 - 1965

'சன்மார்க்க நாடக மன்றம்' 1955ஆம் ஆண்டு விஜய தசமித் தினத்தில் சன்மார்க்க சபையின் உப சங்கமாக அங்குரார்ப்பணஞ் செய்யப்பட்டது. தரமான நாடகங்களை மேடையிடல், மற்றைய மன்றங்களின் திறமான நாடகங்களை நடிப்பித்துக் காண்பித்தல், கொட்டகைக் கூத்துக்கு ஆதரவு கொடுத்தல், காவடி, கரகம், வசந்தன் போன்ற கிராமியக் கலைகளை வளர்த்தல், இசை நடனம் போன்றவற்றை ஊக்குவித்தல், கலைஞர்களைக் கௌரவித்தல் என்பன இம் மன்றத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

கன்னி முயற்சியாக இந்நாடக மன்றம் 28-4-56இல் 'இருமனம்' என்ற சமூக நாடகத்தைத் தயாரித்துக் காலஞ்சென்ற பிரபல எழுத்தாளரும் நாடக ஆசிரியருமாகிய 'இலங்கையர்கோன்' திரு. ந. சிவஞானசுந்தரம், காரியாதிகாரியவர்கள் முன்னிலையில் அரங்கேற்றியது. வலிகாமம் வடக்குப் பகுதியில் உள்ள பல மாணவர்கள், ஆசிரியர்கள் எம்மன்ற அங்கத்தவர்களுடன் சேர்ந்து இதில் நடித்தார்கள். இந் நாடகத்துக்காக எமது நாடகமன்றம் 250 ரூபா வரை செலவு செய்து சொந்தமான சோடினைப்பொருள்களைச் செய்வித்துள்ளது. சோடினைப் பொருள்களைச் செய்வதில், தன் கைவண்ணத்தைக் காட்டியவர் இந் நாடகத்திற் கதாநாயகனாக நடித்த திரு. அ. குகதாசன் ஆவார். இந் நாடகம் ஈட்டிய வெற்றிக்குச் சான்றாக 'ஈழகேசரி'யில் அப்போது வெளிவந்த விமர்சனத்தின் ஒரு பகுதியைத் தருகின்றோம்:

"இந்த நாட்டில் நாடகமேடைகள் சமீபகாலமாகப் பெரும்பாலும் பிரசங்க மேடைகளாகவே காணப்படுகின்றன. நாடகம் என்ற பெயரால் தரமுஞ் சுவையும் அற்ற மலிவுப் பிரசுரங்கள் படையெடுத்துக்கொண்டிருப்பதும் அவற்றைத் துணைக்கொண்டு கலையைக் களங்கப்படுத்தக் கலாரசனையற்ற பலரும் கங்கணங் கட்டிக்கொண்டு முன்வந்திருப்பதுமே இதற்குக் காரணங்களாகும். இதற்குப் புறநடையாக 28-4-56 சனிக்கிழமை 'சன்மார்க்க நாடகமன்ற'த்தால் அரங்

---

### 1964—65ஆம் வருட உத்தியோகத்தர்கள் :

**தலைவர் :**
ஏ. ரி. பொன்னுத்துரை, பி. ஏ.

**காரியதரிசிகள் :**
க. கோபிநாத், த. இராசரத்தினம்

**தனாதிகாரிகள் :**
க. சிவதாசன், த. புவனேந்திரன்

**நிருவாக அங்கத்தவர்கள் :**
த. சிவலிங்கம், க. கணேசன்,
த. புலேந்திரன்,
செல்வி இராசலட்சுமி வைத்திலிங்கம்,
திருமதி செல்வலட்சுமிஇராசரத்தினம்,
செல்வி பரிமளகாந்தி சிவசாமி.

### மேடையிட்ட நாடகங்கள் :

| | | |
|---|---|---|
| 1. | இருமனம் | 28-4-56 |
| 2. | யூலியசீசர் | 31-12-56 |
| 3. | விலாச மாற்றம் | 31-12-56 |
| 4. | தியாக சீலன் | 14-1-58 |
| 5. | பழிக்குப்பழி | 14-1-60 |
| 6. | சங்கிலியன் | 14-1-60 |
| 7. | பகையும் பாசமும் | 24-9-60 |
| 8. | ஆயிரத்தில் ஒருவர் | 24-9-60 |
| 9. | நிறைகுடம் | 14-10-61 |
| 10. | இரணியன் | 14-10-61 |
| 11. | ஒளி பிறந்தது | 10-63 |

கேற்றப்பட்ட 'இருமனம்' என்ற நாடகம் கலை நுணுக்கங்களுடன் சிறப்புற அமைந்திருந்தது. மோலியரின் 'லோபியின் காதலை' இந்நாட்டுக்குத்தக மாற்றியமைக்கப்பட்ட நாடகமே 'இருமனம்'. நாடகத்தைத் தயாரித்தளித்த திரு. ஏ. ரி. பொன்னுத்துரை, பி. ஏ. பிரதான பாத்திரம் தாங்கித் திறம்பட நடித்தார். எதிர்காலத்திற் சிறந்த குணசித்திர நடிகராக விளங்கக்கூடிய தகைமைகள் இவரிடமுள''.

—ஈழகேசரி 6-5-56

அடுத்ததாக 31-12-56இல் நடைபெற்ற கலா நிகழ்ச்சிகளில் 'யூலியசீசர்', 'விலாசமாற்றம்', 'மேலும் கீழும்' என்ற மூன்று சிறு நாடகங்கள் நடித்துக் காண்பிக்கப்பட்டன. இந் நாடகங்களிற் சிறுவர்களின் நடிப்பாற்றலை ஊக்குவிக்கும் நோக்கமாகப் பல சிறுவர்கள் நடிப்பதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. 14-1-58இல் 'தியாகசீலன்' என்ற நாடகமும் நடாத்தப்பட்டது.

கொட்டகைக் கூத்துக்களை ஆதரிக்கவேண்டுமென்ற எமது இலட்சியத்துக்கு அமைவாக காங்கேசன்துறை வசந்தகான சபையாரது 'மயானகாண்டம்', 'நந்தனார்' என்ற கொட்டகைக் கூத்துக்களை எம்மூர் மக்களுக்குக் காண்பித்தோம். மக்கள் திரள் திரளாக வந்து இந் நாடகங்களைக் கண்டு களித்தனர். இந்நாடகங்களைப் பார்த்த பரமேசுவரக்கல்லூரி அதிபர், திரு. சி. சிவபாதசுந்தரம் M. A. (Cantab) அவர்கள் இந் நாடகத்தில் நடித்தவர்களை வியந்தும் இப்படியான கொட்டகைக் கூத்துக்களை ஆதரிப்பது சன்மார்க்க நாடக மன்றம்போன்ற சிறந்த கழகங்களின் தலையாய கடமையென்றும் கூறினர்.

14-1-60இல் 'பழிக்குப்பழி', 'சங்கிலியன்' என்ற நாடகங்கள் நடிக்கப்பட்டன. பல புதுமுகங்கள் இந் நாடகத்திற் புகுத்தப்பட்டமை இங்கு குறிப்பிடத்தகுந்தது. இந் நாடகங்களைக் கண்டு மகிழ்ந்த நாடகத் தயாரிப்பாளர் திரு. இ. மகாதேவா அவர்கள் (தேவன், யாழ்ப்பாணம்) இளைஞர்களின் விசேட ஆற்றலை வியந்து அவர்கள் நாடக உலகில் நந்தா விளக்குகளாகலாம் என்று குறிப்பிட்டார்.

24-9-60இல் எமது நாடக மன்றம் பெருஞ் செலவில் நவராத்திரிக் கலைவிழாவைக் கொண்டாடியது. அக் கலைவிழாவைக் கண்டு மகிழ ஆயிரக்கணக்கான மக்கள் மண்டபம் வழியும்படி திரண்டிருந்தனர். புனிதமான ஒரு பரத நாட்டியத்துடன் விழா ஆரம்பமானது. இம் முக்கிய விழாவில் 'பகையும் பாசமும்' என்ற சமூக நாடகம் அரங்கேற்றப்பட்டது. இத்துடன் 'ஆயிரத்தில் ஒருவர்' என்ற ஓரங்க நாடகமும் மேடையிடப்பட்டது. ஷெ ஓரங்க நாடகம் வலிகாமம் வடக்குச் சனசமூக சமாஜ விழாவில் நடந்த நாடகப்போட்டியில் முதலாவது பரிசு பெற்றதென்பதையும், மட்டுநகரில் நடைபெற்ற 'தமிழ் விழா'வில் இந் நாடகம் மேடையிடப்பட்டுக் கிழக்கிலங்கை, மலையக மக்களின் பாராட்டுதலைப் பெற்றதென்பதையும் பெருமிதத்துடன் கூறுகிறோம்.

எமது மன்றத்துக்கு மகத்தான புகழை ஈழத்து நாடக உலகிலேயே தேடித்தந்த நாடகம் 'நிறைகுடம்' ஆகும். இந் நாடகத்தை மெச்சாத கலாவல்லுநர்கள் இல்லை. இந் நாடகத்தை ஈழத்தின் பல்வேறு கலாமன்றங்கள், பேரவைகள் தமது விழாக்களில் நடிக்க வைப்பித்தமையே இதற்குச் சான்று பகரும்.

**'நிறைகுடம்' மேடையிடப்பட்ட சில முக்கிய இடங்களும் காலமும்:**

| | | |
|---|---|---|
| 1. | சன்மார்க்கசபை மண்டபம் (கலை விழா) | 14-10-61 |
| 2. | நடேஸ்வராக் கல்லூரி, காங்கேசன்துறை (நாடக விழா) | 5-11-61 |
| 3. | முத்தமிழ்விழா, மாவிட்டபுரம் | 27- 1-62 |
| 4. | யாழ் நகரமண்டபம் (கலைப்பிரசாரசபை நடாத்திய நாடகவிழா) | 26- 5-62 |
| 5. | நாடக விருந்து, இளவாலை | 30- 6-62 |
| 6. | சனசமூகநிலைய நாடகப்போட்டி (சபை மண்டபம்) | 20- 7-62 |
| 7. | யாழ் நகரசபையில் (ஜேர்மன் ஸ்தானிகர் முன்னிலையில்) | 28- 7-62 |
| 8. | இசைவிழா, பரமேஸ்வராக்கல்லூரி | 29- 7-62 |
| 9. | வசந்தகானசபை நாடகவிழா | 30- 7-62 |
| 10. | நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்றம் | 24- 8-62 |
| 11. | ,, ,, ,, | |
| 12. | கட்டுவன் (மயிலிட்டி கிராமசபை நடாத்திய சாகித்திய விழா) | 8- 9-62 |
| 13. | கதம்பவிழா, மகாஜனக்கல்லூரி | 62ஆம் ஆண்டு |
| 14. | இடைக்காடு (வள்ளுவர் விழா) | ,, ,, |
| 15. | யூனியன் கல்லூரி (இரசிகமணிக்கு வைத்த வரவேற்பு விழா) | 64ஆம் ஆண்டு |
| 16. | இந்துக்கல்லூரி, மானிப்பாய், (கலையரசுவின் 75ஆவது வயதுப் பூர்த்திவிழா) | 64ஆம் ஆண்டு |
| 17. | திருக்குறள் மகாநாடு, கிளிநொச்சி | 12-6-65 |

ஷெ நாடகத்தில் க. கோபிநாத், வே. மகேந்திரன், கருணாநிதி, ஏ. ரி. பொன்னுத்துரை, த. புவனேந்திரன், க. கணேசன் என்போர் முக்கிய பாத்திரங்கள் தாங்கி நாடகக்கலை தமக்குக் கைவரக்கூடிய கலையென நிரூபித்துவிட்டனர். இந் நாடகத்தின் உதவியாளர்களாக, எமது மன்றத்துப் பல நாடகங்களில் நடித்த க. சிவதாசன், த. சிவலிங்கம் என்போர் கடமை ஆற்றினர். ஷெ நாடகத்தின் கதை, வசனங்களை அமைத்து இயக்குநராக இருந்தவர் மன்றத் தலைவர் திரு. ஏ. ரி. பொன்னுத்துரை அவர்களே. ஷெ நாடகத்துக்கு இசை அமைத்தவர் வசந்தகானசபை திரு. வி. வி. வைரமுத்து அவர்கள்.

அடுத்ததாக, கனக. செந்திநாதன் எழுதிய 'ஒளிபிறந்தது' என்ற நாடகம் அரங்கேற்றப்பட்டது. இரசிகர்களின் மனத்தை ஈர்க்கும் வகையில் நாடகம் அமைந்திருந்தது.

மாவிட்டபுரம் 'முத்தமிழ்க் கலை மன்ற'த்தினர் 'கட்டப்பொம்மன்,' 'பாசக்குரல்' போன்ற நாடங்களைக் காலத்துக்குக்காலம் உதவி எமது கலைவிழாக்களைச் சிறப்பித்தமையும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. 'மறுமலர்ச்சி மன்ற'த்தினரும், 'சந்திப்பு', 'மனுநீதி கண்ட சோழன்' என்ற நாடகங்களை நடித்து எமது விழாக்களைக் கோலாகலமாகக் கொண்டாட உதவியமையும் போற்றற்குரியது.

எமது நாடகங்களைத் தயாரிப்பவராகிய எமது மன்றத் தலைவர் எழுதிய 'காதல் கைகட்டம்' என்ற நகைச்சுவை நாடகம் 1960ஆம்

ஆண்டு இலங்கை வானொலி நிலையத்தார் யாழ் நகரமண்டபத்தில் நடாத்திய கலைவிழாவில் மேடையிடப்பட்டதும் பின் ஆடி மாதம் வானொலிமூலம் ஒலிபரப்பப்பட்டதும் எமது மன்றத்துக்கு ஒரு கௌரவம் எனக் கருதுகிறோம். இதைவிட கொழும்பு 'லயனல் வென்ற்' கலாமண்டபத்தில் நடைபெற்ற நாடகவிழாவில் நடந்த சரித்திர நாடகமாகிய 'பதியூர் ராணி'யில் முக்கிய பாத்திரமேற்று இரசிகர்களதும் பத்திரிகைகளதும் பாராட்டைப் பெற்ற ஒரேஒரு யாழ்ப்பாண நடிகரும் எமது மன்றத் தலைவரே. 10-4-62இல் கொழும்பு றோயல்கல்லூரி மண்டபத்தில் இலங்கை வானொலி நிலையத்தினர் நடாத்திய நாடகவிழாவில் இடம்பெற்ற மூன்று நாடகங்களில் ஒன்று எமது மன்றத் தலைவர் எழுதிய "வருஷம் பிறந்து முன்னம் முன்னம்......'' என்ற நகைச்சுவை நாடகமாகும். அ் நாடகம் 14-4-62 வருடப்பிறப்புத் தினத்தன்று ஒலிபரப்பப்பட்டது. கலையரசு க. சொர்ணலிங்கம், கே. செல்வரத்தினம், என். நவரத்தினம், வசந்தா அப்பாத்துரை ஆதியோர் உட்படப் பல தலைசிறந்த நாடகக் கலைஞர்களுடன் எமது மன்றத் தலைவரும் நடித்து, தமக்கு மன்றி எமது மன்றத்துக்கும் பெரும் புகழ் ஈட்டியுள்ளனர்.

இந் நாடகமன்றத்தின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக விளங்கும் சன்மார்க்க சபைக்கும், 'நிறைகுடம்' அரங்கேற்றத்துக்கு நிதி உதவி புரிந்த இலங்கைக் கலைக்கழக தமிழ்நாடகப் பகுதிக்கும், சிறப்பாக அதன் தலைவர் திரு. சு. வித்தியானந்தன் அவர்களுக்கும், பணஉதவி புரிந்த பல அன்பர்களுக்கும், குறிப்பாகக் காலஞ்சென்ற சைவ அன்பரும் வள்ளலும், பிரபலவர்த்தகரும் ஆகிய திரு. E. நல்லதம்பி, J. P. (நீர்கொழும்பு) அவர்களுக்கும், 'மாவிட்டபுரம் முத்தமிழ்க் கலை மன்ற'த்தினருக்கும், காங்கேசன் துறை 'வசந்தகான சபை'யினருக்கும், 'மறுமலர்ச்சி மன்ற'த்தினருக்கும் சன்மார்க்க நாடகமன்றம் பெரிதும் கடப்பாடுடையது.

---

சன்மார்க்க சபையாரின் அறிக்கை இக்கிராம மக்கள் முன்னேறி வருகிறார்கள் என்பதைக் காட்டுகிறது. திரு. பொன்னையா அவர்கள் பெரிய இலட்சியத்தைக்கொண்டு உழைத்தபடியால்தான் அவர்தம்மோடு வாழ்ந்த மக்களுக்கு இத்தகைய பயனளிக்கிறது.

—சன்மார்க்கசபையில் தபால் வானொலி அமைச்சர் திரு. சு. நடேசபிள்ளை

★ ★ ★

மேல்நாடுகளிலே சமயமானது லௌகீக வாழ்க்கையிலிருந்து பிரிந்து நிற்கிறது. கீழ் நாடுகளிலே சமயமும் வாழ்க்கையும் ஒருமைப்பட்டுப் பிரிக்க முடியாததாக இருக்கின்றன.

— சன்மார்க்கசபையில் கலைப்புலவர் க. நவரத்தினம்

# சன்மார்க்கசபை 27ஆவது வருடாந்த விழா

## தலைமைப் பேருரை

மாவட்ட நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம் அவர்கள்

சபையோர்களே! குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் 27ஆவது ஆண்டு விழாவிற்கு என்னைத் தலைமை வகிக்கும்படி அழைத்ததற்காக, சபையினருக்கும் சபை நிருவாகிகளுக்கும் எனது அன்பார்ந்த நன்றி. உங்கள் காரியதரிசி என்னைத் தலைமை வகிக்கும்படி அழைத்தபோது, நான் நல்லாகத் தமிழில் வேறோரிடத்திற் பேசினேனென்றும் ஆகையால் இங்கும் நான் பேசுவதைக் கேட்க ஆவலாயிருக்கிறார்களென்றுஞ் சொன்னபொழுது நான் என்னையே நம்ப முடியவில்லை. எனக்குத் தமிழில் அறிவு மிகவுஞ் சிறிது. ஏதோ இங்கும் அங்குமாகக் கொஞ்சம் வாசித்திருக்கிறேன். நீங்கள் நினைப்பதற்கு மாறாக நான் பேசும் தமிழிலோ கருத்திலோ பல குறைகள் இருக்கத்தான் செய்யும். என்னை உற்சாகப் படுத்தியதற்காக உங்கள் காரியதரிசிக்கும் எமது நன்றி. அத்துடன் என் பேச்சில் எழும் பிழைகளையும் மன்னிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

உங்கள் சபையின் இருபத்தேழாவது ஆண்டு வருடாந்தத் தொகுப்பு அறிக்கையை நான் வாசித்தேன். நான் வாசித்த பொழுது எனக்கு ஆச்சரியமும் பெருமையும் உண்டாயின. தமிழர்களுக்குள், அதிலும் யாழ்ப்பாணத்தில் ஒருவகையான அரசாங்க நிருவாகமும் இல்லாமற் சிறிதாகத் தொடங்கி இருபத்தேழு வருட காலமாகத் தொடர்ந்து கடமையாற்றி நாளொருவண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து பத்துக் கிளைகளைக் கொண்ட ஸ்தாபனமாகி, பூவின் நறுமணம் போன்று உயர்ந்து எங்கும் ஒளிவற நிறைந்து நிலவும் பெருமை உங்கள் சபைக்குரியது. வேறெங்கும் கண்டறியாத சிறப்பை உங்கள் சபையிற் காண்கிறேன்.

அன்றொருநாள் அப்பர் சுவாமிகள் திருவையாற்றுக்குச் சென்றார். தாம் அன்று புறக்கண்ணினாலும் அகக்கண்ணினாலும் பார்த்து அனுபவித்ததையெல்லாம் இசைத்துப் பாடியருளினார். இத்தனை காலமும் தாம் கண்ணாற் கண்டுங் கருத்தினால் அறியாமல் இருந்தவற்றை, அன்று திருவையாற்றிற் கண்டு அறிந்துகொண்டதாக, ஒவ்வொரு பாட்டிலும் "கண்டறியாதன கண்டேன்" என்று திரும்பத் திரும்ப வியந்து வியந்து கூறினார்.

"மாதர்ப் பிறைக்கண்ணி யானை
மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப்
புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல்
ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங்
களிறு வருவன கண்டேன்!
கண்டே னவர்திருப் பாதம்
கண்டறி யாதன கண்டேன்."

இப்படி உங்கள் சங்கமானது ஒன்றாகத் தொடங்கிக் காலவரையிற் பரந்து உயர்ந்து பலவாகப் பிரிந்து பல துறைகளிலிருந்து தொண்டாற்றிவரும் இக்காட்சியை

எதற்கு ஒப்பாகச் சொல்லலா மென்று நினைத்து நினைத்துப் பார்த்தேன். கம்பர் சரயுநதியை, பரம் பொருளைப் பற்றிச் சொல்லும் பல் வேறு சமயங்களுக்கும், உடம்பின் ஒவ்வொரு பகுதியிலும் உலாவும் உயிருக்கும் ஒப்பாகப் பாடிய செய் யுள்கள் என் நினைவுக்கு வரு கின்றன :

"கல்லிடைப் பிறந்து போந்து
கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லையில் மறைக ளாலும்
இயம்பரும் பொருள்ஈது என்னத்
தொல்லையில் ஒன்றே யாகித்
துறைதோறும் பரந்த சூழ்ச்சிப்
பல்பெருஞ் சமயஞ் சொல்லும்
பொருளும்போல் பரந்த தன்றே"

"தாதுஉகு சோலை தோறும்
சண்பகக் காவு தோறும்
போதவிழ் பொய்கை தோறும்
புதுமணற் றடங்கள் தோறும்
மாதவி வேலிப் பூக
வனந்தோறும் வயல்கள் தோறும்
ஓதிய உடம்பு தோறும்
உயிரென உலாய தன்றே."

உங்கள் சிறந்த பெயரைத் தாங்கிய சன்மார்க்க சபைக்கு எங்கிருந்து இந்தப் பலம் வந்தது? எந்தச் சக்தி உங்கள் சபையையும் அங்கத்தினரையும் நிருவாகிகளையும் ஆட்டிவைக்கின்றது? என்னும் கேள்விகளை நான் ஆராய்ந்து பார்த் தேன். அதற்கு விடையும் ஓரள விற் கண்டு பிடித்துவிட்டேன். ஏதோ ஒரு சக்தி உங்களை ஆட்டிக் கொண்டிருக்கிறது. நீங்கள் ஆடிக் கொண்டிருக்கிறீர்கள். இதற்கு ஒரு விதமான சந்தேகமும் இல்லை.

இன்றும் நின்று நிலவி உங்களை ஆட்டிவைக்கும் சக்தி எங்கேயிருந்து பிறந்தது என்று சொன்னால், உங் கள் சங்கத்தை நன்னோக்கத்துடன் தொடக்கிவைத்த காலஞ்சென்ற 'ஈழகேசரி' திரு. நா. பொன்னையா, ஜே. பி. அவர்களின் ஆத்மசக்தி தான் அது என்று திடமாகக் கூற லாம்.

பல ஆண்டுகளுக்கு முன் திரு. பொன்னையாவைப் பல சந்தர்ப்பங் களிற் சந்தித்திருக்கிறேன். அவ ருடைய குணாதிசயங்களையும் ஓர் அளவிற்கு அறிந்திருக்கிறேன். அறிவைஅடிப்படையாகக்கொண்ட தன்னம்பிக்கை, தம்மோடு பழகிப் பழகிக் கற்றுக்கொண்ட உயரிய குறிக்கோள்கள், எதையும் தாங் கிக்கொண்டு முன்னேறும் ஆற்றல் ஆகியவற்றை அவரிடம் கண்டேன். அவர் மற்றவர்களோடு பழகுகிற நல்லமுறைகள், கூசாமல் எங்கே துன்பத்தைக் கண்டாலும் புகுந்து உதவுகின்ற மனம் என்ற இன்னோ ரன்ன அருங் குணங்களை அவரிடம் கண்டேன்.

பவள மல்லிகைப்பூ மலர்கின்ற போது தோட்டம் முழுவதும் ஒரு தெய்வீக நறுமணம் பரவி நிறைவ துண்டு. அபூர்வமான சில மனிதர் களுக்கு மனமும் எண்ணங்களும் மலர்ந்து பிரகாசிக்கிற பருவத்தில் அந்த எண்ணங்களின் மலர்ச்சியால் எண்ணுகிறவர்களைச் சுற்றி ஒரு வகை ஞானமணமோ எனத்தக்க புனிதமான சூழ்நிலை நிலவும்.

இதுபோலுள்ள ஞானமணந் தான் திரு. பொன்னையாவைச்சுற்றி எழுந்தது. அந்த மணம் இன்றும் உங்கள் கிராமம் முழுவதிலும் பரந்து நிலவுகிறது என்பதற்கு ஐய மில்லை. உங்கள் சபையின் வளர்ச் சியே அதற்கு எடுத்துக்காட்டாக விருக்கிறது. அவர் ஞாபகார்த்த மாக ஒரு வீதிக்குப் 'பொன்னையா வீதி' என்று பெயரிட்டிருக்கிறீர் கள். ஆனால் அது தேவையில்லை. அவரின் நினைவும், அவரின் தலைமை

யில் நீங்கள் பெற்ற அனுபவமும், பழகிய பண்பும் உங்களை விட்டு இன்றும் விலகவில்லை. வாழையடி வாழையென வந்த திருக்கூட்டம் போல நீங்கள் அவர் ஏற்றிவைத்த கொடியை இன்றும் உயர்த்திப் பிடித்துத்தான் கொண்டிருக்கிறீர்கள். இதுதான் உங்களினதும் உங்கள் சபையினதும் வெற்றிக்குக் காரணம். இன்னும் பல ஆண்டுகளுக்கு நீங்கள் இந்த வெற்றிக் கொடியை உயர உயர ஏற்றி வைத்து அவர் தொடக்கிவைத்த பணியை வெற்றிவீரர்களாய் ஆற்றி வரவேண்டுமென்று நான் கடவுளை வேண்டிக்கொள்ளுகிறேன்.

இது நிற்க, உங்களுடைய சபை இருபத்தேழு வயதுப் பராயம் அடைந்துவிட்டது. ஆகையினால் நான் உங்களுக்கு ஏதாவது புத்திமதி சொல்லத் தேவையில்லை. என்னைப் போன்றவர்களின் புத்திமதியில்லாமலே நீங்கள் வெற்றிக்கு மேல் வெற்றி அடைந்திருக்கிறீர்கள். ஆயினும் நானும் சில சொல்ல வேண்டுமென்று என் கடமை உணர்ச்சி தூண்டுகிறது. ஆகையினாற் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். அவைகளில் ஏற்கக்கூடியவற்றை ஏற்று மிகுதியைப் புறக்கணிக்குமாறு வேண்டிக்கொள்ளுகிறேன்.

உங்கள் சபையைப் போலுள்ள ஒரு ஸ்தாபனம் பலமடைந்து வருகிற காலத்தில், அந்த ஸ்தாபனத்தின் பலத்தையும், பொதுசனங்கள் ஸ்தாபனத்துக்குச் செலுத்தும் அன்பையும் மதிப்பையும் பெறுவதற்காகப் பல சுயநலப் புலிகள் வள்ளல்களாகவும் நல்லவர்களாகவுந் தோன்றி உங்கள் சபையிற் சேர்வார்கள். அப்படிச் சேருங் காலத்திற் கறையான் எடுத்த புற்றில் எப்படிப் பாம்பு குடியேறுகிறதோ அப்படியே முடிந்துவிடும். சுயநலப்புலிகள் தங்கள் நோக்கங்கள் பூர்த்தியாகும் வரைக்குந்தான் காத்திருப்பார்கள். அதன்பின் தங்கள் சுயரூபத்தையே காட்டுவார்கள். அதனால் அந்த ஸ்தாபனத்தின் அழிவையும் தேடுவார்கள். இப்படிப்பட்ட, இதிலும் பெரிய, பொது ஸ்தாபனங்கள் சுயநலக்காரர்களால் அழிக்கப்பட்டதையும் நான் அறிவேன். ஆகையாற்றான் அவதானமாக இருக்கவேண்டுமென்றும் சொல்லுகிறேன்.

"கற்பூரப் பாத்திகட்டிக் கத்தூரி
எருப்போட்டுக் கமழ்நீர் பாய்ச்சிப்
பொற்பூர உள்ளியினை விதைத்தாலும்
அதன்குணமே பொருந்தக் காட்டும்
சொற்பேதை யருக்கு அறிவுஇங்கு
வருமெனவே சொல்லி னாலும்
நற்போதம் வாராதுஅங் கவர்குணமே
மேலாக நடக்குந் தானே."

இன்று நிருவாகிகளாகவும் அங்கத்தவர்களாகவும் இருக்கும் நீங்கள், 'ஈழகேசரி' பொன்னையாவின் வாழையடி வாழையாக வந்திருக்கிறீர்கள். அப்படியே உங்களின் வாழையடியாக வரத்தக்க இளைஞர்களைத் தெரிந்து எடுத்துப் பயிற்ற வேண்டும். அப்படிப்பட்டவர்கள்தான் வாழையடி வாழையென வந்த திருக்கூட்டத்தின் அங்கத்தவர்களாக இருக்கத் தகுதியுள்ளவர்களாவார்கள். நீங்கள் செய்துவரும் தொண்டுகள் எல்லாவற்றிற்கும் அடிப்படைக் காரணமாக உள்ளவை அன்பு, இரக்கம் என்னும் குணங்கள். அன்பு, இரக்கம் இல்லாதவர்கள் இத்தகைய பணிகள் செய்ய முடியாது என்பது உண்மையாகும்.

இக் குணங்களை உடைய வாலிபர்களைத் தேடிக் கண்டுபிடித்து உங்கள் சபையில் அங்கத்தினர்க

ளாகச் சேர்க்கவேண்டும். நீங்கள் செய்துவருந் தொண்டில் அவர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டும். அப்படிச் செய்துவருவீர்களானல் உங்கள் சபையானது மேன்மேலும் வளர்ந்து ஆலமரம்போல் விழுதுகள் ஊன்றி யாழ்ப்பாணத்தில் இருப்பவர்களுக்கும் பொதுவாகத் தமிழர்களுக்கும் வழிகாட்டியாகவும் நிழல்தரும் பூஞ்சோலையாகவும் எங்கள் எல்லோருக்கும் பெருமை தரும் ஸ்தாபனமாகவும் விளங்கும்.

இறுதியாக எங்களைத் தீயவழியிற் செல்லவிடாமற் தடுத்தாட்கொண்டு நல்லவழியிற் செலுத்த வேண்டுமென்று கடவுளைத் துதிக்கும் புராணமொன்றை நினைப்பூட்டி என் பேச்சை முடிக்கின்றேன். இந்தத் தெய்வீகப் பாடலை நீங்கள் எல்லோரும், நானும் ஒருமுறையாவது கருத்தை உணர்ந்து மனத்திற் பதித்தால் அதுவே போதும். நாங்கள் தீயவழியிற் செல்லாது சன்மார்க்கவழி நடந்து கடைத்தேறுவோம்.

"புன்னெறி யதனிற் செல்லும்
போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி ஒழுகச் செய்து
நவையறு காட்சி நல்கி
என்னையும் அடிய னாக்கி
இருவினை நீக்கி யாண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல்
பாதபங் கயங்கள் போற்றி."

மக்களுக்கு அவசியம் தேவைப்படுவது நிலம், உணவு, உற்பத்தி, கல்வியறிவு இவைகள்தான். மகாத்மா காந்தியின் பூதான, வித்தியாதான இலட்சியங்கள் கல்வியறிவோடு தொழிலறிவையும் வளர்க்க உதவும்.

—சன்மார்க்கசபையில் வார்தா கல்வித்திட்டப் பேராசிரியர் திரு. ஈ. டபிள்யூ. அரியநாயகம்

★ ★ ★

உடம்பு சிவசம்பந்தமடையத் திருநீறும் உருத்திராக்கமும் அணியவேண்டும். உள்ளம் சிவசம்பந்தமடையத் திருவைந்தெழுத்தை ஓதவேண்டும்.

—சன்மார்க்கசபையில் காஞ்சிபுரம் வித்துவான் அருணைவடிவேல் முதலியார்

★ ★ ★

சத்தாகிய இறைவனைத் தேடும் மார்க்கம் நூல்களைப் படித்தால் மாத்திரம் போதாது. பெரியோர்கூறிய—வாழ்ந்து காட்டிய வழிநின்று இறைவணக்கத்தில் ஈடுபடவேண்டும்.


—சன்மார்க்கசபையில் பேராசிரியர் திரு. S. R. துரைசாமி சாஸ்திரிகள்

## சன்மார்க்க சபையில் வரவேற்பும், விரிவுரைகளும்



1. சேர் ஜோன் கொத்தலாவல அவர்களேயும், 2. 'கலைமகள்' ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன் அவர்களேயும் வரவேற்றல். 3. பொற்கரைநாட்டு, உலகத் தொழிற்சங்க சம்மேளனப் பிரதிநிதி திரு. யோ எஸ். அனன்; யாழ்ப்பாண ஐக்கிய இயக்க அதிகாரி திரு. செல்வரசு குக்; 4. தென்னிந்தியப் பேராசிரியர் திரு. S. R. துரைசாமி சாஸ்திரி; 5. சென்னை சட்டசபை அங்கத்தவர் திரு. T. S. அவிநாசிலிங்கம் செட்டியார்; 6. மகாஜனக் கல்லூரி அதிபர் திரு. தெ. து. ஜெயரத்தினம்; 7. முன்னுள் 'ஈழகேசரி' ஆசிரியர் திரு. இராஜ அரியரத்தினம் ஆகியோர் சொற்பொழிவாற்றுகின்றனர்.

## சபை விழாக்கள்




1. தில்லி, பல்கலைக் கழகப் பேராசிரியர் திரு. சாலை. இளந்திரையன், எம். ஏ., எம். லிற்., திருமதி இளம். கனகசவுந்தரி, எம். ஏ., எம். லிற். சபை நிர்வாகத்தருடன் காணப்படுகின்றனர். 2, 3. சபையின் ஆரம்ப ஸ்தாபகர்களுள் ஒருவரான திரு. கோ. அப்பாக்குட்டி அவர்களின் படம் திரை நீக்கம். 4. இலங்கை–மேற்குஜேர்மன் தூதுவர் டாக்டர் ரி. எம். ஒர் அவர்களுக்குச் சபை மண்டபத்தில் தேநீர் விருந்தளித்து உபசரிப்பு.

# சன்மார்க்க சபை - வானொலிப் பேச்சு

வானொலி நிருபர்: ஐயா! நீங்கள்தான் இந்தச் சபையின் காரியதரிசி என்று நினைக்கிறேன்?

காரியதரிசி: ஆம், நான்தான். இவர் தான் சபைத்தலைவர்.

வானொலி: உங்கள் சபை மண்டபத்துக்கு வந்த உடனே முதன்முதல் இந்தப்பெரிய கேடயந்தான் கண்ணில படுகிறது. என்னத்துக்குக் கிடைத்தது இது?

காரிய: இது அதிகார் நாகநாதர் நினைவுக் கேடயம். இது அவர் மகன் இராசவாசல் முதலியார் கனகநாயகம் அவர்களால் வழங்கப்பட்டது. இது, யாழ்ப்பாண அரசிறைப் பகுதியில் முதலாவதாகக் கருதப்படும் கிராம முன்னேற்றச் சங்கத்துக்குச் சென்ற வருடம் முதல் வழங்கப்பட்டு வருகிறது.

வானொலி: அப்ப போனவருடம் உங்கடை சங்கம்தான் திறம் சங்கம் போல?

காரிய: ஆம், அப்படித்தான். இந்தக் கேடயம் எங்களுக்கும் வல்லன் கிராம முன்னேற்றச் சங்கத்துக்கும் தரப்பட்டது. நாங்கள் ஆறு மாதம் அவை ஆறுமாதம் வைத்துக்கொண்டோம்.

வானொலி: எல்லாமாக 300க்கு மேற்பட்ட கிராம முன்னேற்றச் சங்கங்கள் இருக்கும் யாழ்ப்பாணத்தில முதல் சங்கமாக வாறது ஒரு அரிய சாதனைதான். இது என்ன இந்தக் கேடயத்துடன் இன்னுமொரு சிறு கேடயம் வைச்சிருக்கிறியள்.

காரிய: இதுதான் 'ஈழகேசரி' பொன்னையா ஜே. பி. நினைவுக் கேடயம். அவர் பாரியாரால் வழங்கப்பட்டது. இது வலிகாமம் வடக்கில் முதன்மையாக வரும் சங்கத்துக்குச் சென்ற வருடம் முதல் வழங்கப்பட்டு வருகிறது.

வானொலி: அப்ப அதுவும் உங்களுக்குத்தான் கிடைத்திருக்கிறது. யாழ்ப்பாணத்தில முதலாக வந்த சங்கம் வலிகாமம் வடக்கில் முதலாக வாறது பெரிய ஆச்சரியமில்லை. அப் பக்கத்தில் வைக்கப்பட்டிருக்கும் வெள்ளிக்கோப்பை என்னத்துக்குக் கிடைத்தது?

காரிய: நாங்கள்தான் எல்லாத்துக்கும் முதல் என்று சொல்ல ஒரு மாதிரிக் கூச்சமாகவும் கிடக்கிறது. நீங்கள் அதைக் கண்டு பிடித்துக் கேட்டபடியால் சொல்கிறோம். இது யாழ்ப்பாணத்தில் நடந்த யாழ்விநோதக் களியாட்டு விழாவிலே திறமான கிராம முன்னேற்றச் சங்கப் பொருட் காட்சிக்குப் பரிசாக எங்களுக்கு வழங்கப்பட்டது.

வானொலி: எல்லாம் வலு சந்தோஷம். உங்களுடைய சன்மார்க்க சபையும் அதன் உப சங்கமுமான கிராமமுன்னேற்றச் சங்கமும் இவ்வளவு நல்லாக நடப்பதற்கு என்ன காரணம்? தலைவர் காரிய தரிசியின்றை ஊக்கமோ?

காரிய: இல்லை, இல்லை; அப்படி நாங்கள் ஒருநாளும் சொல்லமாட்டோம். இச் சபை நல்லாக நடப்பதற்கு முதற் காரணம் இந்தக் குரும்பசிட்டி ஊரவர்களுக்கிடையில உள்ள ஒற்றுமையும் அவர்கள் இந்தச் சபையில காட்டுகிற அக்கறையுந்தான். பொருள் வேண்டுமென்றால் பொருளுதவி

யும் சரீர உதவி வேண்டுமென்ருல் சரீர உதவியும் கொஞ்சமும் தயங்காமல் தருவார்கள். ஒரு உதாரணத்துக்குச் சொல்லுகிறேம், நீங்கள் வந்த ரேட்டு இருக்கிறதே! அந்த ரேட்டைத் தனிய ஊரவர்கள்தான் அகல் வித்துப் போட்டு முடித்தார்கள். காசாகத் தந்தார்கள்; கல்லாகத் தங்கள் வண்டியில் ஏற்றிவந்து தந்தார்கள்; ரேட்டிலே நின்று சரீர உதவியாகவும் செய்தார்கள். எஞ்சினியரும் ஓவசியரும் இல்லாமல் வேலைமுடிந்தது.

வாஞெலி: அப்படியானுல் இந்த ஊரிலை சுய உதவி கரைபுரண்டு ஒடுகிறது என்று சொல்லுங்கோ. அது கிடக்க, இந்த ரேட்டுக்கு என்ன பெயர் வைத்திருக்கிறீர்கள்?

காரிய: 'ஈழகேசரி' பொன்னேயா ரேட்டு என்று பெயர் வைத்திருக்கிறேம்.

வாஞெலி: ஏன் அப்படி அவற்றை பெயரை ரேட்டுக்கு வைத்தீர்கள்?

காரிய: 'ஈழகேசரி' பொன்னேயாதான் இந்தச் சபையை சன்மார்க்கசபை என்ற பெயருடன் 1934ஆம் ஆண்டு ஆரம்பித்து வைத்தார். அவர் இந்தச் சபைக்கும் ஊருக்கும் மட்டுமல்ல பொதுவாக ஈழத்துக்கும் சிறப்பாகத் தமிழ் வளர்ச்சிக்கும் பெரும் சேவைசெய்து இருக்கிருர். 'ஈழகேசரி' என்ற உயர்தர வாரப் பத்திரிகையையும் ஸ்தாபித்து நடத்தியவர் அவர்தான்.

வாஞெலி: இனி உங்கள் சங்கத்தின் நடைமுறைகளைப் பற்றிப் பார்ப்போம். சன்மார்க்கசபையிலே எத்தனை உப சங்கங்கள் உண்டு சொல்லுங்கள் பார்ப்போம்?

காரிய: சன்மார்க்கசபையிலே காலத்துக்குக் காலம் ஆரம்பிக்கப்பட்டு இப்போது எல்லாமாகப் பத்துக்கு மேற்பட்ட உப சங்கங்கள் உண்டு. இவை தனித்தும் சேர்ந்தும் பணி புரியும்.

வாஞெலி: முதலிலை எத்தனை அங்கத்தவர்கள் கிராமமுன்னேற்றச் சங்கத்தில் இருக்கிருர்கள் சொல்லுங்கோ பார்ப்போம்?

காரிய: இதற்குப் பிறிம்பாக அங்கத்தவர் இடாப்பு இருக்கு பாருங்கோ. எல்லாமாக இன்று வரைக்கும் 275 ஆண்களும் 153 பெண்களும் அங்கத்தவர்களாக இருக்கிருர்கள்.

வாஞெலி: அப்ப பெண்களும் இந்த ஊர் முன்னேற்றத்திலை பெரும் பங்கு எடுத்துக்கொள்ளுகினம் போலை?

காரிய: ஆம், அவர்களுக்கு மாதர் சங்கம் என்று ஒரு சங்கம் புறம்பாக இருக்கிறது. அது இந்தச் சன்மார்க்கசபையின் கிளைச்சங்கம்.

வாஞெலி: இந்த மாதர் முன்னேற்றச் சங்கம் செய்யும் சேவைகளைப்பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கோ பார்ப்போம்.

காரிய: விபரமாகச் சொல்வதென்ருல் அதிக நேரம் பிடிக்கும்.

வாஞெலி: விபரமாய்ப் பெரிய பிரசங்கம் செய்யவேண்டாம்; சும்மா சுருக்கமாய்ப் பிரதானமான விடயங்களைச் சொன்னுல் போதும்.

காரிய: பிரதானமாகச் சொல்ல வேண்டுமென்ருல் வீட்டுக்குள் அடங்கிக் கிடந்த பெண்களை வெளிப்படச் செய்தது முதல் காரியம். இரண்டாவது சமயம், கல்வி, சேமிப்பு, சிக்கனம், குழந்தை வளர்ப்பு, சிசு—மாதா

பராபரிப்பு, சுகாதாரம் முதலிய விடயங்களிலெல்லாம் அவர்கள் பெரிய அக்கறைகாட்டி உழைத்து வருகிறார்கள். கிராமப் பெண் களுக்கெனத் தையல் வகுப்பும், குடிசைத் தொழில் வகுப்பும் நடாத்துகிறார்கள். இதைவிட....
.......................

வானொலி: இவ்வளவே பெரிய காரிய மாய்ப் போய்ச்சு. இப்படி ஒவ் வொரு கிராமத்திலும் பெண்கள் செய்தினம் எண்டால் யாழ்ப் பாணம் கொஞ்ச நாளிலை மிக முன்னேறி விடும். சரி நல்லது, மற்றக் கிளைச்சங்கங்கள் பெயர் என்ன சொல்லுங்கள் பார்க்க லாம்.

காரிய: ஆம். சன்மார்க்க கிராம முன்னேற்றச்சங்கம், சன்மார்க்க இளைஞர் சங்கம்—விளையாட்டுக் கழகம், சன்மார்க்க மாதர்சபை, சன்மார்க்க ஐக்கிய நாணய சங் கம், சன்மார்க்க சனசமூக நிலை யம், சன்மார்க்க மாதர் ஐக்கிய நாணய சங்கம், மணிவாசக நூல்நிலையம்—வாசிகசாலை, சன் மார்க்க நாடகமன்றம், இந்து சமய விருத்திச்சங்கம்.

வானொலி: மற்றக் கிளைச்சங்கங்கள் என்னென்ன செய்கிறது என்று சாடையாகத் தெரியும். இளைஞர் சங்கம் செய்கிற வேலைகளைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கோ பார்ப்போம்.

காரிய: இந்தச் சங்கம் பொதுவாக இளைஞர்களைத் துர்வழியில் செல்ல விடாமல் அவர்களுக்குப் பொழுதுபோக்காகவும் நல்வழி யாகவும் உள்ள விடயங்களில் ஈடுபடுகிறது. அவர்களுடைய சிறப்பு ஆற்றலை நன்கு வளர்க்க முயற்சி யெடுக்கப்படுகிறது. பேச்சுப்போட்டிகள், வியாசப் போட்டிகள், நாடகங்கள், பிரார்த்தனைக் கூட்டங்கள், குரு பூசைத்தினங்கள், விளையாட்டுக் கள், விளையாட்டுப்போட்டிகள் முதலியவற்றில் இவர்கள் கவனம் செலுத்துகிறார்கள். அத்துடன் தாங்களாகவே ஒரு கையெழுத் துப் பத்திரிகையும் வைத்து நடாத்துகிறார்கள். பாருங்கோ இதுதான் கடைசியாக வந்த பிரதி.

வானொலி: இதிலை நல்ல வியாசங் கள் கட்டுரைகளைவிட நல்ல சித் திரப்படங்களும் இருக்குது. இவைகள் எல்லாம் இந்த இளை ஞர்கள் கீறினதுதானோ?

காரிய: ஆம், இவர்கள்தான் படங் களும் கீறினது. வியாசங்களும் எழுதினது. வாசிக்கிறது அவர்கள் தான்.

வானொலி: அப்ப என்ன இதிலை பெரியாட்களும் வாசிக்கக்கூடிய விடயங்கள் இல்லை என்று சொல்லுகிறியளோ?

காரிய: ......சிரிப்பு. இளைஞர்களைப் போல மனமுள்ள பெரியாட்களும் இருக்கினம்தானே. ஆனால் இதிலை முக்கியமாக இளைஞர்களுக்குரிய விடயங்கள்தான் இருக்கும்.

வானொலி: இந்த ஊரில் எத்தனை குடும்பங்கள் வரையில் இருக்கும்?

காரிய: ஏறக்குறைய 350 குடும் பங்கள் வரையில் இருக்கும். அதிகமாக ஒவ்வொரு குடும்பத் திலை ஒவ்வொரு ஆணுவது, பெண் ணுவது இந்தச் சங்கத்திலை அங்கத் துவம் வகிக்காமலில்லை.

வனொலி: இந்தச்சபை ஊரவர் களுக்குத் தனித்தனி செய்து கொடுக்கும் உதவிகள் எவை?

காரிய: எல்லாவற்றிலும் பிரதான மானது அவர்களுக்கு இடையில் வரும் பிணக்குகள், முறைப்பாடு

களை எங்கள் சமாதானசபையைக்கொண்டு சமாதானமாகத் தீர்த்து வைக்கிறோம். இதனாலே அவர்களுக்கு எவ்வளவோ பணம் மிச்சம். ஊரிலே சமாதானமும் நிலவுகிறது.

வானொலி: என்னைக் கேட்டால் இது தான் எல்லாத்திலும் திறமான சேவை யென்று சொல்லுவேன். ஏன் என்றால், இந்தப் பகுதிகளிலே சில்லறைப் பிணக்குகளைப் பெரிய வழக்குகளாக்கி அப்புக்காத்துப் பிறக்கிறாசிமாருக்குப் பணத்தை அள்ளிக்கொடுக்கும் குணம் ஆக்களுக்கை இருக்குது. அதோடை கொலைகளும் நடக்கப் பார்க்கிறது. இதுகளுக்கு இடம் வையாமல் சிறு பிணக்குகளை முளையிலேயே கிள்ளி எறிந்துவிட்டால் ஊருக்கும் எவ்வளவோ நன்மை. மற்றது இதைவிட வேறை யென்ன தனி உதவி உங்கள் சபை செய்கிறது?

காரிய: குடிதண்ணீர் இல்லாதவர்களுக்குக் கிணறு வெட்டுதற்கும் மலகூடம் இல்லாதவர்களுக்கு மலகூடம் கட்டுவதற்கும் அரசாங்கம் தாற உதவிப்பணத்தை எடுத்துக் கொடுக்கிறோம். மற்றது அங்கவீனம் — வயோதிபத்தால் கஷ்டப்பட்டு வருந்துவோர் பெயர்களை அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அனுப்பிப் பொதுப் பண உதவியும் பெற்றுக் கொடுக்கிறோம். சயரோகிகளுக்கும் நிவாரணம் பெறவேண்டிய நடவடிக்கைகள் எடுக்கிறோம். அறிவு, வசதி குறைந்தவர்கள் தங்கள் தேவைகளை முறையிடும்போது அவை கிடைக்க ஆவன செய்கிறோம்.

வானொலி: இதுகள் தனியுதவி. இதைவிடப் பொதுவாக எல்லோருக்கும் பிரயோசனப்படக்கூடிய காரியங்கள் என்ன செய்கிறீர்கள்?

காரிய: பிரதானமாக நூல்நிலையம் வாசிகசாலை வைத்து நடத்துகிறோம். புத்தகங்கள் வாசிக்கக் கொடுக்கிறோம், பத்திரிகைகள் எடுத்துப்போட்டு வாசிகசாலை நாடாத்துகிறோம். விளையாட்டு நிலம் அமைத்து விளையாடுவதற்கும், விளையாட்டுப் போட்டிகள் நடாத்துவதற்கும் வசதி செய்திருக்கிறோம். குழந்தைகளுக்குரிய பால்நிலையம் வைத்து நடாத்துகிறோம். நல்ல போக்குவரத்து வசதிக்குரிய தெருக்கள் போடுகிறோம். மேலும் மத்திய வைத்தியசாலை, தபாற்கந்தோர் வசதி என்பன கிடைக்கச் செய்திருக்கிறோம். அறிஞர்களைக் கொண்டு பிரசங்கங்கள் ஒழுங்கு படுத்துகிறோம். சிவஞானசித்தியார் வகுப்பு நடாத்தினோம். தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் சிவதீட்சை வைப்பிக்கிறோம். சிறந்த புத்தகங்கள் வெளியிடுகிறோம். நல்ல புத்தகங்களைச் சபை வெளியீடாகப் பதிப்பிக்கிறோம். இலவச வெளியீடுகள் அவ்வக் காலங்களில் வெளிவரச் செய்கிறோம். புயல், மழை என்பவற்றால் ஏற்படும் சேதங்களுக்கு மதிப்பு எடுத்து நிவாரணம்பெற முயற்சி எடுக்கிறோம். இப்படிக் கனகாரியங்கள் செய்கிறனாங்கள்.

வானொலி: போதும், போதும்; சபை வேலைத்திட்டங்களை ஒருவாறு அறிந்துவிட்டோம். தெரிந்த காரியமாச்சே உங்கள் சபை முதலாவதாக வந்ததிலிருந்தே, சன்மார்க்கசபைக்குரியகட்டடம் நல்ல வசதியான அழகான கட்டடமாகக் கிடக்கிறது. இதுக்கு என்னவேன் அரசாங்கம் உதவி செய்ததோ?

காரிய: இல்லை. இது அந்த நாளிலே அங்கத்தவர்களுடையவும் ஊர்ச் சனங்களிடம் நாங்கள் சேர்த்த காசைக்கொண்டுந்தான் கட்டப் பட்டது.

வானொலி: அரசாங்கம் உங்களுக்கு வேறு என்ன உதவி செய்திருக் கிறது?

காரிய: ஒரு றேடியோ செற் தந் திருக்கிறது. வாசிகசாலை நடாத் தக் கிராமசபை மூலம் வருட வீதம் நன்கொடை தருகிறது. றேட்டுப் போடுவதற்கும் நன் கொடைப் பணம் உதவி செய் தது. தனித்தனி கக்கூசு, கிணறு முதலிய காரியங்களுக்கும் அர சாங்கம் உதவி செய்துகொண்டு வருகிறது.

வானொலி: அரசாங்கம் தாற பணத்தைவிட இந்த வேலை களுக்கு வேறு எப்படிப் பணம் வாறது?

காரிய: மற்றதெல்லாம் அதிகமாக அங்கத்தவர்களிட மிருந்துதான் வாறது. சந்தாப்பணம் என்றும் நன்கொடைப்பண மென்றும் வரும்.

வானொலி: உங்களுடைய சங்கத் தைப்பற்றி இவ்வளவு அறிந்தது சந்தோஷம். இதைப்போலை மற் றச் சங்கங்களும் இருந்தாலோ என்று ஆசையாய்க் கிடக்குது. இந்தக் கிராமச்சனங்களின் ஒற் றுமைதான் உங்கடை சங்கம் நல்லாய் நடக்கிறதற்குக் கார ணம் என்று நினைக்கிறேன்.

காரிய: ஆம், உண்மை. அரசாங்க உதவி இல்லாமலே 1934ஆம் ஆண்டு தொடக்கம் இச்சபை மெய்நெறியிலும் உலகியலிலும் இயன்ற பணிபுரிந்து வருகிறது. நாடு சுதந்தரம் பெற்றபின்பு 1948ஆம் ஆண்டின் பின்புதான் அரசாங்கஒத்துழைப்பைப்பெறக் கூடியதாக இருந்தது. இப்போது அரசாங்க உத்தியோகஸ்தர்கள் எல்லோரும் நல்ல உதவி.

வானொலி: நான் உங்களுடைய சங் கத்தைப் பார்த்துக் கனநேரம் தாமதித்து விட்டேன். இப்பவும் விட்டுப்போக மனமில்லாமல் தான் கிடக்குது. பொழுதுபட்டுப் போகுது. இவ்வளவு சிரமப்பட்டு எல்லாத்தையும் விளங்கப்படுத் தினதுக்கு என் நன்றி; வணக்கம்.

காரிய: உங்களைப்போல வேறை ஆட் களும் வந்து பார்வையிடவேண்டு மென்றும் இப் பகுதியிலுள்ள எல் லாச் சபைகளும் — சங்கங்களும் நல்லாய் இருக்கவேண்டு மென் றும் எங்களுக்கு மிகவும் ஆசை. நீங்கள் பொறுமையாய் இருந்து இவ் விபரங்களைக் கேட்டு விளங் கிக்கொண்டதற்கு எமது நன்றி. ஆனால் ஒண்டு நமது சபைக்கு வாற ஆட்களைச் சும்மா போக விடுவதில்லை.

வானொலி: ......சிரிப்பு என்ன காசு கேட்கப் போறியளோ ?

காரிய: அப்படியில்லை, சோடாவும் குடித்து வெற்றிலை பாக்கும் போட்டுக்கொண்டு எங்கள் குறிப் புப் புத்தகத்திலும் எங்கள் சபை யைப்பற்றிச் சிறு குறிப்பு எழு திப்போட்டுப் போங்கள்.

வணக்கம்.

[1956ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30ஆம் திகதி இலங்கை வானொலியில் இது ஒலிபரப்பப்பட்டது.]

# சன்மார்க்கசபைக்கு வருகைபுரிந்தோரும் வரவேற்று உபசரிக்கப்பெற்றவர்களும்

1. திரு. ஆ. முருகேசு, புன்னாலைக்கட்டுவன் அரசினர் பாடசாலைத் தலைமை ஆசிரியர்.
2. ப்ரம்மஸ்ரீ. சி. தங்கசாமிஐயர், ஊரெழு கணேசவித்தியாசாலைத் தலைமை ஆசிரியர்.
3. பண்டிதர் திரு. இ. நமசிவாயம், ஆசிரியர், மயிலிட்டி தெற்கு.
4. பண்டிதர் திரு. வ. முத்துக்குமாரு, ஆசிரியர், மயிலிட்டி தெற்கு.
5. திரு. த. சின்னத்துரை, ஆசிரியர், வயாவிளான்.
6. திரு. சி. சுவாமிநாதன், B. A., பேராசிரியர், மயிலிட்டி.
7. திரு. மு. ஞானப்பிரகாசம், B. A., B. SC., ஏழாலை.
8. பண்டிதர் வே. மகாலிங்கசிவம், பேராசிரியர், கோப்பாய் அரசினர் ஆசிரியகலாசாலை.
9. பண்டிதர் திரு. க. மாணிக்கத்தியாகராசா, சுன்னாகம்.
10. பண்டிதர் திரு. வி. சங்கரப்பிள்ளை, ஆசிரியர், விளிசிட்டி.
11. திரு. சு. பொன்னம்பலம், மயிலிட்டி தெற்கு.
12. திரு. ச. மு. அருளம்பலம், எழுத்தாளன், 'ஈழகேசரி'.
13. நியாயதுரந்தரர் திரு. சாம் ஏ. சபாபதி, தலைவர், மாநகரசபை, யாழ்ப்பாணம்.
14. திரு. அ. வெற்றிவேற்பிள்ளை, தலைமை ஆசிரியர், சுன்னாகம்.
15. ஸ்ரீமதி மா. மங்களம்மாள், 'தமிழ்மகள்' ஆசிரியை, வண்ணார்பண்ணை.
16. ஸ்ரீமதி நவரத்தினம் மகேஸ்வரி, வண்ணார்பண்ணை.
17. பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளை, பேராசிரியர், கோப்பாய் அரசினர் ஆசிரியகலா [சாலை.
18. திரு. கோ. இராஜகோபால், திருகோணமலை.
19. திரு. வி. கருணாநிதி, காரியதரிசி, யாழ்ப்பாண வாலிப மகாநாடு, திருநெல்வேலி.
20. பண்டிதர் திரு. க. தம்பையா, தலைமை ஆசிரியர், மீசாலை.
21. பண்டிதர் க. சபா ஆனந்தர், B. A., இணுவில்.
22. சேர் வை. துரைசுவாமி, தலைவர், அரசாங்கசபை, இலங்கை.
23. நியாயதுரந்தரர் திரு. R. R. நல்லையா, J. P., M. B. E., தலைவர், பட்டினசபை, [யாழ்ப்பாணம்.
24. முன்னாள் தபால் வானொலி அமைச்சர் திரு. சு. நடேசபிள்ளை, இராமநாதன் கல்லூரி, மருதனாமடம்.
25. பேரறிஞர் S. H. பேரின்பநாயகம், B. A., ஆசிரியர், மானிப்பாய்.
26. நியாயவாதி S. R. கனகநாயகம் B. A., யாழ்ப்பாணம்.
27. நியாயவாதி மு. பாலசுந்தரம், B. A., B. SC., திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
28. திரு. இராஜ. அரியரத்தினம், ஆசிரியர், 'ஈழகேசரி'.
29. திரு. மா. பீதாம்பரம், தலைமை ஆசிரியர், கோப்பாய் அரசினர் ஆங்கில பாடசாலை.
30. செல்வி பண்டிதை தம்பு இராசேஸ்வரி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
31. ஸ்ரீமதி எம். ஏ. சாரதாம்பாள், சென்னை.
32. செல்வி ஞா. முருகேசு, அதிபர், கோப்பாய் மகளிர் ஆசிரிய கலாசாலை.
33. செல்வி க. சந்தனநங்கை, ஆசிரியை, கோப்பாய் மகளிர் ஆசிரிய கலாசாலை.
34. திரு. ச. அம்பிகைபாகன், B. A., அதிபர், வைத்தீஸ்வர வித்தியாலயம்.
35. திரு. நம. சிவப்பிரகாசம், நியாயதுரந்தரர், மல்லாகம்.
36. திரு. பொ. நாகலிங்கம், நியாயதுரந்தரர், உடுவில்.
37. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, பேராசிரியர், திருநெல்வேலி சைவாசிரிய கலா [சாலை.
38. திரு. த. பாலச்சந்திரன், காரியாதிகாரி, வலிகாமம் வடக்கு.

39. வித்துவான் நா. சிவபாதசுந்தரம், ஆசிரியர், மகாஜனக் கல்லூரி.
40. வித்துவான் க. கி. நடராசா, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
41. டாக்டர் T. T. அமரசிங்கம், வைத்திய அதிகாரி, காங்கேசன்துறை.
42. டாக்டர் K. நாகலிங்கம், வைத்திய சேவை அதிகாரி, தெல்லிப்பழை.
43. பேராசிரியர் P. சவரிமுத்து, அதிபர், பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலை.
44. வித்துவான் க. வேந்தனார், ஆசிரியர், பரமேஸ்வராக் கல்லூரி, திருநெல்வேலி.
45. வித்துவான் S. R. கந்தசாமி, ஆசிரியர், தும்பளை.
46. பண்டிதர் பொ. சின்னத்துரை, ஆசிரியர், வயாவிளான் அ. ம. மகாவித்தியாலயம்.
47. திரு. T. S. அவிநாசிலிங்கம் செட்டியார், அங்கத்தவர், சென்னை சட்டசபை.
48. திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி, ஆசிரியர், 'கல்கி', சென்னை.
49. திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், பன்மொழிப் புலவர், சென்னை.
50. திருமதி இராசேஸ்வரி அம்மையார், சென்னை.
51. திரு. வி. நல்லையா, B. A., உதவி சுகாதார மந்திரி, இலங்கைப் பாராளுமன்றம்.
52. முதலியார் செ. சின்னத்தம்பி, வட்டுக்கோட்டை.
53. இளைப்பாறிய வைத்திய கலாநிதி சி. சுப்பிரமணியம், யாழ்ப்பாணம்.
54. திரு. K. இராமநாதன், தலைவர், மலாயா தமிழ்ப் பண்ணை.
55. சுவாமி சுத்தானந்த பாரதி.
56. திருமதி ந. சகுந்தலா பாரதி, சென்னை.
57. திரு. S. சின்னத்துரை, B. A., ஆசிரியர், ஏழாலை.
58. சுவாமி அருணாசல தேசிகர், மகாசந்நிதானம், குன்றக்குடி.
59. வித்துவசிரோமணி சி. கணேசையர், புன்னாலைக்கட்டுவன்.
60. ஸ்ரீ வடிவேல்சுவாமி, இணுவில்.
61. திரு. D. G. தயரத்தின, C. C. S., அதிகாரி, கிராம முன்னேற்ற திணைக்களம்.
62. திரு. மு. நவரத்தினசாமி, நீச்சல் மன்னன், வல்வெட்டித்துறை.
63. திரு. சி. நமசிவாயம்பிள்ளை, ஆசிரியர், மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி.
64. திரு. ஆ. முத்துசிவன், எம். ஏ., அழகப்பாக் கல்லூரி, காரைக்குடி.
65. திரு. ந. சிவஞானசுந்தரம் (இலங்கையர்கோன்), காரியாதிகாரி, வலி-வடக்கு.
66. செல்வி ச. மகேஸ்வரி, வித்துவாம்சை, செங்குந்தர் ஆங். பாடசாலை, கல்வியங்காடு.
67. திரு. சி. காராளசிங்கம், விவசாய போதனாசிரியர், யாழ்ப்பாணம்.
68. திரு. சி. இரகுநாதன், எழுத்தாளன், திருநெல்வேலி, இந்தியா.
69. திரு. க. சுப்பிரமணியம், கிராமமுன்னேற்றப் பகுதி அதிகாரி, யாழ்ப்பாணம்
70. சித்தாந்த சிகாமணி க. வச்சிரவேலு முதலியார், காஞ்சிபுரம், தெ. இந்தியா.
71. வித்துவான் சி. அருணைவடிவேல், காஞ்சிபுரம், தெ. இந்தியா.
72. திரு. செல்வரசு குக், ஐக்கிய இயக்க அதிகாரி, வடபகுதி, யாழ்ப்பாணம்.
73. திரு. யோ. எஸ். அனன், உலக தொழிற்சங்க சம்மேளனப் பிரதிநிதி, பொற்கரை நாடு.
74. திரு. கி. வ. ஜெகந்நாதன், ஆசிரியர், 'கலைமகள்', சென்னை.
75. ப்ரம்மஸ்ரீ சி. ஸ்ரீநிவாசன், எம். ஏ., அதிபர், உரும்பராய் இந்துக் கல்லூரி.
76. ப்ரம்மஸ்ரீ பொ. சுந்தரசர்மா, ஆசிரியர், குப்பிளான்.
77. அதிகௌரவ சேர் ஜோன் கொத்தலாவலை, இலங்கைப் பிரதமர்.
78. சுவாமி பரிபூரண பரஞ்சோதிமகான், உலக சமாதான ஆலயப் பிரதிநிதி.
79. கலைப்புலவர் க. நவரத்தினம், ஆசிரியர், யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி
80. திரு. ம. ஸ்ரீகாந்தா, C. C. S., மாகாண அதிபர், யாழ்ப்பாணம்.
81. திரு. து. இராசேந்திரா, உதவி ஸ்தலஸ்தாபன அதிபர், வடபிரதேசம்.
82. திரு. க. கந்தசாமி, B. SC., அதிபர், பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலை.
83. திரு. அ. மார்க்கண்டன் B.SC., உபஅதிபர், நடேஸ்வராக்கல்லூரி, காங்கேசன்துறை.
84. குகஸ்ரீ குகானந்தவாரி, சமயப்பிரசாரகர், இராமேஸ்வர தேவஸ்தானம், தெ. இந்.

85. திரு. சிதம்பர ரகுநாதன், 'சாந்தி' பத்திரிகை ஆசிரியர்.
86. சுவாமி சச்சிதானந்த யோகிராஜ், திவ்ய ஜீவன சங்கத் தலைவர், இலங்கை.
87. திரு. எமர்ஸி பிராட்டும் ஸ்ரீமதி பிராட்டும், பேராசிரியர், அமெரிக்கநாடு.
88. திரு. என். ஈ. கொஸ்டர், இலங்கை - பிரிட்டிஷ் உதவி ஸ்தானிகர்.
89. திரு. என். விஸ்வநாதன், எம். ஏ. அவர்களும் கொழும்பு சமூக சேவா பயிற்சிக் கலாசாலை மாணவ மாணவிகளும்.
90. திரு. K. குமாரசாமி, அதிபர் அவர்களும் யாழ்ப்பாணம் கிராம முன்னேற்றப் பயிற்சி மாணவ மாணவிகளும்.
91. சேர் க. வைத்தியநாதன், தலைவர், திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபை.
92. திரு. ஈ. டபிள்யூ. அரியநாயகம், பொதுக்காரியதரிசி, வர்தா கல்வித் திட்டம்.
93. திரு. ந. நவரத்தினம், காரியதரிசி, இந்துசமய அபிவிருத்தி ஆலோசனைச் சபை.
94. திரு. ரா. பாலகிருஷ்ணன், எழுத்தாளன், தென் இந்தியா.
95. 'மகரம்', எழுத்தாளன், தென் இந்தியா.
96. 'மாயாவி' ,, ,,
97. 'ரசவாதி' ,, ,,
98. இசைமணி ஆர். சீனிவாசன், புதுக்கோட்டை, தென் இந்தியா.
99. திரு. சி. சிவபாதசுந்தரம், எம். ஏ., அதிபர், பரமேஸ்வராக்கல்லூரி, திருநெல்வேலி
100. திரு. தெ. து. ஜெயரத்தினம், பி.ஏ., அதிபர், மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.
101. திரு. க. கிருஷ்ணபிள்ளை, பி. ஏ., அதிபர், நடேஸ்வராக் கல்லூரி, காங்கேசன் [துறை.
102. திரு. S. R. துரைசாமி சாஸ்திரி, பேராசிரியர், தென் இந்தியா.
103. திரு. சி. உ. சோமசேகரம், உதவி வித்தியாதிபதி, வடபிரதேசம்.
104. இராசவாசல் முதலியார் சி. தியாகராசா, மானிப்பாய்.
105. டாக்டர் ரி. எம். ஓர், இலங்கை — ஜேர்மன் தூதுவர்.
106. திரு. அ. மாணிக்கவாசகர், பி. ஏ. (ஆனர்ஸ்), உதவி ஸ்தலஸ்தாபன அதிபர், [வடபகுதி.
107. திரு. வி. தர்மலிங்கம், பாராளுமன்ற உறுப்பினர், உடுவில்.
108. வித்துவான் பொன். முத்துக்குமாரன், ஆசிரியர், வைத்தீஸ்வர வித்தியாலயம்.
109. திரு., திருமதி. சாலை இளந்திரையன், பேராசிரியர், தில்லி பல்கலைக்கழகம்.
110. திரு. சத்தியானந்தம், கோலாலம்பூர்.
111. திரு. வ. விஜயபாஸ்கரன், ஆசிரியர், 'சரஸ்வதி', தென் இந்தியா.
112. திரு. செ. தனபாலசிங்கம், உதவி மாவட்ட நீதிபதி, யாழ்ப்பாணம்.
113. செல்வி புஷ்பா செல்வநாயகம், பி. ஏ., ஆசிரியை, நல்லூர்.
114. திரு. இ. பீ. ஹரன், ஆசிரியர், 'ஈழநாடு', யாழ்ப்பாணம்.
115. திரு. சி. வி. பலாட், இலங்கை — அவுஸ்திரேலிய ஸ்தானிகர்.
116. திரு. மூ. வைரமுத்து, C. C. S., மானிப்பாய்.
117. திரு. ஏ. பெருமையினர், உதவி மாகாண அதிபர், யாழ்ப்பாணம்.
118. திரு. தருய. சிவராமு, பிரபல விமர்சகர், திருகோணமலை.
119. கலைஅரசு K. சொர்ணலிங்கம், மானிப்பாய்.
120. திரு. செ. சண்முகநாதன் (சாணு), நாடகப்பகுதித்தலைவர், இலங்கை வானொலி.
121. திரு. தி. முருகேசபிள்ளை, காரியாதிகாரி, வலிகாமம் வடக்கு.
122. பண்டிதர் ச. பொன்னுத்துரை, தலைவர், வட-இலங்கைத் தமிழாசிரியர் சங்கம்.
123. பண்டிதர் க. வேலுப்பிள்ளை (சு. வே.), ஆசிரியர், நாவற்குழி.
124. பிரம்மஸ்ரீ சு. துரைசாமிக்குருக்கள், ஆதீனகர்த்தா, மாவை ஆதீனம்.
125. பிரம்மஸ்ரீ சு. து. சண்முகநாதக்குருக்கள், பிரதம குரு, மாவை ஆதீனம்.
126. வேளுட் டீ. சில்வா, உதவிக்காரியதரிசி, வெளிநாட்டுப் பாதுகாப்பு மந்திரி காரியாலயம், இலங்கை.

# ஆசி உரைகள்

(சம்பவப் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டவை)

26-5-52

திரு. க. இராமநாதன், B. A., B. L.
தலைவர், மலாயா தமிழ்ப்பண்ணை.

''சன்மார்க்க சபைக்கு வரும் பேறு பெற்றேன். மணிவாசகங்களிற் சில சொல்லும் வாய்ப்புக் கிடைத்தது. இச் சபையின் தொண்டு தொடர்ந்து நடக்கவும் விரியவும் ஆண்டவன் அருள்புரிவாராக.''

* * *

22-11-52

கவி யோகி சுத்தானந்த அடிகள்

''அம்மையப்பன் அருளால் சன்மார்க்க சபை மெய்வழிகாட்டி நீடு விளங்குக.''

* * *

23-5-53

ந. சகுந்தலா பாரதி
[வரகவி சுப்பிரமணி பாரதியார் மகள்]

''பழந்தமிழ்நாடு யாழ்ப்பாணம். செந்தமிழிலே மக்களுக்குச் சன்மார்க்க நெறி காட்டும் சபை நீடூழி வாழ அன்னை பராசக்தி அருள் புரிவாளாக.''

* * *

குரும்பசிட்டி
2—2—54

திரு. ந. சிவஞானசுந்தரம்
காரியாதிகாரி, வலி-வடக்கு

''இன்று குரும்பசிட்டி சன்மார்க்கசபை நூல் நிலயத்தையும், வாசிகசாலையையும் பார்க்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. யாழ்ப்பாணத்துத் தமிழ் வளர்த்த பெரியார்களில் ஒருவர், திரு. நா. பொன்னையாவால் ஆரம்பிக்கப்பட்ட இச் சங்கம் குரும்பசிட்டி இளைஞர்களின் முயற்சியால் அழிந்து விடாமல் பாதுகாக்கப்பட்டு வருவதுகண்டு மகிழ்ந்தேன். இது மேலும் வளரக் கலைவாணி அருள்வேண்டும்.''

* * *

குரும்பசிட்டி
22-2-54

திரு. வ. இராசநாயகம்
மயிலிட்டி கிராமசங்கத் தலைவர்

''இன்று சன்மார்க்க சனசமூக நிலயத்தைத் தரிசித்தேன். வாசிகசாலை திருத்திகரமாக நடைபெறுகிறது. தமிழ், ஆங்கிலம் ஆகப் பத்து வெளியீடுகள் வரவழைக்கப்படுகின்றன. இவற்றுடன் ஆங்கிலத்தில் சஞ்சிகைகளும் வரவழைக்கப்பட வேண்டும். விளையாட்டுக்கள் ஒழுங்காக விளையாடப்படுகின்றன. அறிவு வளர்ச்சிக்குரிய விடயங்களிலும், நாடகம், நாட்டியம், சங்கீதம் முதலிய கலைவளர்ச்சிக்குரிய விடயங்களிலும் இந்த ஸ்தாபனம் காட்டிவரும் ஊக்கம் மிகவும் மெச்சத்தக்கது. ''சன்மார்க்க இளைஞர் சங்கம்'' என ஓர் இயக்கத்தை இளைஞருக்கென இச்சபை நடாத்திவருவது பெரிதும் மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். ஷெ இளைஞர்சங்க மூலம் இச்சங்கம் தனக்குரிய பணியாளரைப் பயிற்றுவதினுல் இச்சபைக்கு எக்காலத்திலும் தொண்டர் பஞ்சம் ஏற்படமாட்டாது. இளைஞர் சங்கம் நடாத்திவரும் 'சன்மார்க்க தீபம்' உண்மையிற் போற்றத்தக்கது. இச்சபை நடாத்திவரும் நூல் நிலயம் மேன்மேலும் வளரவேண்டும். அந் நூல்களைக் கிராமத்தினர் பெற்று வாசிக்க வேண்டும்.''

* * *

குரும்பசிட்டி
14-3-54

திரு. வர்ணகுலசிங்கம்
யாழ்ப்பாணப்பகுதி சனசமூக நிலய மேற்பார்வையாளர்

"This Centre is fortunately housed in a grand building which is fit to be called a model centre in the Island and that it is esteemed to be a high class centre in the Peninsula. The conduct of affairs of this Community Centre is being carried out satisfactorily.

''இந் நிலயம் அதிஷ்டவசமாக ஒரு சிறந்த கட்டிடத்துள் நடாத்தப்பட்டு வருகின்றது. இது இத் தீவின் முன்மாதிரி நிலயமென அழைக்கப்படுதற்குரிய தகுதி பெற்றிருப்பதோடு இக் குடாநாட்டின் மிக உயர்தரமான ஒரு நிலயமாகவும் காணப்படுகின்றது. இச் சனசமூக நிலயத்தின் காரிய நடைமுறைகள் திருப்திகரமாக நடாத்தப்படுகின்றன.''

* * *

27-4-54

**திரு. ஆ. முத்துசிவன், எம். ஏ.**
காரைக்குடி அழகப்பாக் கல்லூரிப் பேராசிரியர்

''சன்மார்க்க சபையின் சேவை சதுரார்ந்த சேவை; கண்டு களிப்பெய்தினேன். நாளும் நாளும் சபையின் சேவைத் திறனும் அதனால் வரும் பயனும் பெருகவேண்டும் என்பது என் அவா. எம்பெருமான் திருவருள் துணை நிற்பதாக.''

* * *

குரும்பசிட்டி
9—5—54

**திரு. வீ. க. சுப்பிரமணியம்**
கி. மு. ச. மேற்பார்வை அதிகாரி (S. R. D.)

''............மிகவும் விசேடமான முறையில் விழா நடந்தது. எனது எண்ணத்தின் படி இச் சங்கம் யாழ்ப்பாணப் பிரிவுகளில் முதல் இடம் வகிக்கிறது. உற்சாகமான முறையில் சங்கத்தை நடாத்தும் உத்தியோகத்தர்களும் கிராம சங்க அங்கத்தவர்களும் செய்யும் நற்றொண்டு மெச்சக்கூடியதே. இக் கிராமத்தின் ஒற்றுமையே இதன் காரணமாகும்.''

* * *

குரும்பசிட்டி
10-5-54

சித்தாந்தசிகாமணி
**உயர்திரு. க. வச்சிரவேல் முதலியார்**
காஞ்சிபுரம்

''சன்மார்க்கசபையின் சார்பில் நடைபெற்ற விரிவுரை நிகழ்ச்சியில் தலைமையாக இருந்து சிவநெறியின் அடிப்படை யுண்மையைப்பற்றி விளக்கிக் கூறும் நல்வாய்ப்புப் பெற்றேன்.

''அவையில் ஆடவர்களும்—பெண்டிரும் சிறுவர் — சிறுமியர்களும் ஒழுங்காகவும் அமைதியாகவும் இருந்து சொற்பொழிவு கேட்டமை மகிழ்ச்சியை யுண்டுபண்ணிற்று.

''அவையில் இருந்தவர்களும் — நிகழ்ச்சியை நடைபெறுவித்தவர்களும் சிறந்த அறிவும் பண்பாடும் படைத்தவர்களாகக் காட்சி தந்தமை பெருமிதம் எய்துதற்குரியதாக இருந்தது.

''இச்சபை அம்மை அப்பர் திருவருள் நெறியை மேற்கொண்டு ஒழுகுந் தன்மையையும், பிறரையும் திருநீற்றொளியினில் விளங்கும் மேன்மையை எய்துவிக்க, என இறைவனை வழுத்துகிறேன்.''

* * *

குரும்பசிட்டி
10-5-54

**வித்துவான்,**
**உயர்திரு. சி. அருணைவடிவேல்**
காஞ்சிபுரம்

'' 'சன்மார்க்கசபை' என்னும் நல்ல பெயரைப் பெற்று அப்பெயருக்கேற்ற பல நல்ல பண்புகளும் வாய்த்துள்ள இச் சிறந்த சபையில் சொற்பொழிவு செய்யும் பேற்றைப் பெற்றேன்.

''சபையின் உறுப்பினர்களும் பிறரும் சைவ சாதனப் பொலிவுடனும் ஆர்வத்துடனும் ஆடவரும் — பெண்டிரும் நிறைந்திருந்தமை சைவ சமயத்தின் தனிப்பேருருவமாகக் காட்சியளித்தது. இளஞ் சிறார்களும் இன்ன பொலிவுடையராயிருந்தமை குறிப்பிடத்தக்கது.

''இச்சபையோடு தொடர்பு கொண்டவர்களிற் பலர் கல்வியும் சொல்லாற்றலும் உடையவராய் இருக்கின்றனர். யாவரும் சைவ ஒழுக்கமுடையவராகக் காணப்படுகின்றனர். இவற்றுக்கெல்லாம் காரணம் இச்சபை பல ஆண்டுகளாகத் தனது பணியைப் பலதிறத்தானும் அசைவிலா ஊக்கத்துடன் செய்துவந்ததே என்று துணிந்து கூறலாம். இத்தகைய நல்வழியை உலகியலிலும் — மெய்ந்நெறியிலும் சைவ சமயத்தின் தனிப்பெரு வழியில் நின்று மக்கட்கு ஆவன புரிந்து அளவில் புகழொடும் அளவில்காலம் வாழ்வதாகுக, என வாயானை, மனத்தானை, மனத்துள் நின்ற கருத்தானைக் கருதி வாழ்த்தி வணங்குகின்றேன்.''

* * *

குரும்பசிட்டி
20-8-54

**திரு. ம. ஸ்ரீகாந்தா, C. C. S.**
வடமாகாண அதிபர்

"Sanmarga Sabai is a unique union of a number of rural institutions The Sabai is doing very good work. I realise that this progress would not have been possible but for the able local leadership available. I wish the Society all success.

''சன்மார்க்கசபை, கிராமசேவை செய்யும் பல ஸ்தாபனங்கள் சேர்ந்த ஓர் ஒப்பற்ற சங்கம். இச் சபை மிகச் சிறந்த தொண்டு புரிந்து வருகின்றது. உள்ளூரவரின்

கண்டு பெரிதும் மகிழ்கிறேன். இம்மாதிரி சபைகளும் இளைஞரும் ஒவ்வொரு கிராமத்திலும் இருந்தால் எவ்வளவு சிறப்பாக இருக்கும். மேலும் மேலும் இந்த ஸ்தாபனமும் வாழ வாழ்த்துகிறோம்.''

* * *

14-10-61

திரு. சி. உ. சோமசேகரம், எம். ஏ.
உதவி வித்தியாதிபதி, வட பிரதேசம்

''இன்று இச்சபையின் கலைவிழாவிற்குச் சமூகம் கொடுக்கும் பாக்கியம் கிடைத்தது. நாடகங்களைப் பார்த்து நன்கு ரசித்தேன். இச் சன்மார்க்கசபையின் பல முயற்சிகளும் ஈஸ்வரனின் அருளால் மேலும் மேலும் வளரவேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.''

* * *

23—5—62

தி. சாலை. இளந்திரையன், எம். ஏ., எம். லிற்
பேராசிரியர், தில்லி பல்கலைக்கழகம்
இளம். கனகசவுந்தரி, எம். ஏ., எம். லிற்
பேராசிரியை,
திருவேங்கடவன் கல்லூரி, தில்லி

''இன்று மாலை இச்சபையில் சொற்பொழிவாற்றும் நல்வாய்ப்புப் பெற்றோம். ஈழந் தந்த இன்பத்துள் இவ்வின்பத்தினை இணையற்றதாகக் கருதுகின்றோம். இச் சபை தன் பணிகளில் மேன்மேலும் ஓங்கி வளர வாழ்த்துகிறோம்.''

* * *

"Thanking for all hospitality friendliness, and understanding of the Kurumpasiddy Sanmarga Community Centre. I like to express my sincerest wishes for the Centre's progress and lasting success.

Sunday 29th July 1962, Kurumpasiddy.''

**Sgd. Dr. T. M. Auer**
West German Ambassador

* * *

29-7-62

திரு. அ. மாணிக்கவாசகர், பி. ஏ. ஆனர்ஸ்
உள்ளூர் ஆட்சி உதவி ஆணையாளர்
வடபகுதி

''யாழ்ப்பாணக் குடாநாட்டின் நானூறு சனசமூக நிலையங்களில் நடு நாயகமாக விளங்கும் குரும்பசிட்டி சன்மார்க்க சனசமூக நிலையத்துக்கும் சன்மார்க்கசபைக்கும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்கள். பணம் பொருளுதவியை எதிர்பார்க்காமல் மக்களின் உற்சாகத்தில் வளர்ந்து தூய மனதில் உருவாகிய தன்னலமற்ற சேவையினால் மலர்ந்த இச்சபை இந்தத் தமிழ் கூறும் நல்லுலகிற்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கவேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.''

* * *

12-8-62

கலை அரசு திரு. க. சொர்ணலிங்கம்
மானிப்பாய்

''இன்று குரும்பசிட்டி சன்மார்க்கசபையாரின் 27ஆவது வருடாந்த விழாவில் பங்குபற்றும் பாக்கியம் எனக்குக் கிட்டியது. 'ஈழகேசரி' பொன்னையா அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இச் சங்கம் செய்துவரும் தொண்டுகளின் சின்னங்கள் பலவற்றையும் பார்வையிட்டேன். இவைகளிலிருந்து இச் சபை மக்களுக்கு வேண்டிய சகல துறைகளிலும் சேவைசெய்து வருவதாகத் தெரிகிறது. அத்துடன் கலைகளிலும் விசேட கவனம் எடுத்து வருவதை அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக இக் கூட்டத்திற் காணப்பட்ட ஒழுக்கமே மிகவும் பாராட்டத்தக்கது''.

* * *

13-8-62

திரு. செ. தனபாலசிங்கம்
உதவி மாவட்ட நீதிபதி, யாழ்ப்பாணம்

''குரும்பசிட்டி சன்மார்க்கசபை செய்து வரும் சேவையையும் நிர்வாகிகள் காட்டும் உற்சாகத்தையும் பார்த்து நான் பிரமித்துப்போனேன். தமிழர்களுக்கு இந்தச் சங்கம் ஒரு வழிகாட்டியாகவும் ஆலமரம் போல் விழுது ஊன்றி நிழல்தரும் ஒரு சோலையாகவும் பல துறைகளில் இருந்து கடமையாற்றி வருகிறது. தமிழர்கள் எல்லோருக்கும் ஒரு பெருமை தரும் ஸ்தாபனமாகவும் விளங்குகிறது. இனியும் மேன் மேலும் சிறந்து வளர்ந்து பரந்து கடமையாற்ற வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.''

* * *

3-10-62

திரு. க. கிருஷ்ணபிள்ளை, பி. ஏ.
அதிபர், நடேஸ்வராக் கல்லூரி
காங்கேசன்துறை

'' இன்று நவராத்திரி காலக் கலைவிழாவில் பங்குபற்றினேன். இச் சபை செய்து

வருகின்ற சேவைகளை அறிந்து மிகவும் வியப்படைந்தேன். இத்தகைய சபைகள் யாழ்ப்பாணத்திலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் தொண்டு செய்தால் எங்களுடைய பிற்சந்ததியார் ஈழத்துக்கு ஒரு எடுத்துக் காட்டாக இருப்பர் என்பது எனது நம்பிக்கை. இச்சபை மேன்மேலும் சிறந்த தொண்டுகளைச் செய்ய ஈசன் அனுக்கிரகிப்பாராக.''

* * *

"Today I have received a very warm welcome to the Centre and have been given a good idea of its activities. Society owes a great debt to the voluntary workers and they for their part are rewarded with much happiness. Best wishes for the future"

(Sgd.) B. C. Ballard
High Commissioner for Australia

* * *

"Presided over the oratorical contest this evening and am much appreciative of the development and social work this Society has been doing for village uplift and progress"

May it prosper always.

(Sgd.) A. Perumaynar
D. R. O., Vali. North
30-3-63.

* * *

"This magnificent building that houses the Sanmarga Sabha of Kurumpasiddy is rendering a useful service to the Rural Community of this area.

"I have opened a very instructive Health Exhibition organised by Mr. Rasanayagam P. H. I. of Palaly and spent a pleasant evening here. I wish this Community Centre great success in all its activities."

*(Sgd.)* G. N. R. Nathanael
S. H. S., Jaffna
13-6-63.

* * *

திரு. கி. பி. அரன், எம். ஏ.
ஆசிரியர், 'ஈழநாடு'

''இந்தக் கிராமத்துக்கு இந்தச் சன்மார்க்க சபை கிடைத்துள்ளது இறைவன் அருளே. இச் சபை செய்யும் பல்வேறு பணிகளையும் அறிய மிக மகிழ்ச்சியாக இருந்தது. இவ்வூர் மக்கள் அதிஷ்டசாலிகள். மற்ற ஊரவர்களுக்கும் ஒரு மேலான முன்மாதிரியாக இருக்கும் இந்த ஸ்தாபனத்தை ஒப்பற்றமுறையில் மிகவுந் திறமையாக நடாத்திவரும் அன்பர்களை மனப்பூர்வமாகப் போற்றுகின்றேன்.''

* * *

"I presided over the oratorical contest today. The prize winning speakers attained a very high standard. Children from Mannar, Puttalam and other parts of the Tamil speaking areas participated and won Gold medals and other prizes. This is most commendable."

*(Sgd.)* T. Murugesapillai
D. R. O., Vali. North
28-3-64

''கடவுள் ஒருவரே நம்மோடு என்றுந் தொடர்புடையவராய், நமக்கு நம்மினும் இனியவரா யுள்ளவர்; அவருக்கே நாமெல்லாம் உடைமைப் பொருள்.''

★ ★ ★

''பாவம் செய்பவர்களை நன்கு மதிப்பவர்கள் இல்லையாயில் பாவம் செய்பவர்களுமிலர்; ஆதலால் பாவம் செய்பவர்களினும், அவர்களை நன்கு மதிப்பவர்களே பெரும் பாவிகள்.''

— ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

# சன்மார்க்கசபை - 30 வருடச் சம்பவத் திரட்டு

1. மணிவாசக நூல்நிலையம், வாசிகசாலை என்பவைகளைத் தாபித்துக் கிராம மக்கள் அவற்றை உபயோகித்துப் பயனடைவதற்குதவியது. — 1934

2. குரும்பசிட்டி அம்பாள் ஆலய உற்சவகாலங்களில் சின்னமேளம் தேவையில்லையென்றும் அது நமது கிராமத்தின் முன்னேற்றத்துக்கும், சன்மார்க்கத்துக்கும் உகந்ததன்று என்றும் தீர்மானித்து ஆலய நிர்வாகஸ்தர்களுடைய ஒத்துழைப்புடன் சின்னமேளம் நீக்கப்பட்டது. — 21-12-34

3. மயிலிட்டி தெற்கில் மரவரிமுறைமூலம் கள் இறக்குவது தடைசெய்யப்படவேண்டுமெனத் தீர்மானித்து முயற்சி எடுத்துக்கொண்டது.

4. மயிலிட்டி தெற்கு—வறுத்தலைவிளான் பகுதிக்குப் புறம்பான பொலிஸ்விதானை வேண்டுமென்று கோரி மனுச் செய்துகொண்டது. — 1934

5. சபையின் ஆதரவுடன் ஆங்கில வகுப்பு கிழமைதோறும் மூன்று நாட்களுக்கு நடாத்த முயற்சி எடுத்துக்கொண்டது.

6. கைப்பந்தாட்டக் கழகம் சபையுடன் இணைந்து நடாத்த முடிவு செய்தது.

7. மலேரியாச் சுரத்தால் கஷ்டப்படுபவர்களுக்குச் சபை பணம் சேகரித்து 22 ரூபா 75 சதம் தென்னிலங்கைவாசிகளுக்கு அனுப்பிவைத்தது. — 23-2-35

8. சபைக்கு நிலையான கட்டிடம் பெறவேண்டுமெனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. — 23-2-35

9. வவுனத்தம்பை ஒழுங்கை அகலம் போதாது என்றும் உபயோகத்துக்குரிய நல்ல நிலையில் இருக்கவில்லையென்றும் தீர்மானித்து மனு தயாரித்து அனுப்பி மேலதிகாரிகளுடன் நேரடியாகக் கலந்துபேசி நடவடிக்கை எடுக்கப்பட்டது.

10. சன்மார்க்க ஐக்கிய நாணய சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. — 1935

11. திருக்கோவில்களில் தாசியர் நடனம், மிருகபலி நீக்கப்படவேண்டும் என்று சபையின் பெயரால் வெளியீடுகள் வெளியிடப்பட்டன. — 3-8-35

12. நமது கிராமத்தில் ஆயுள்வேத வைத்தியர், சலவைத்தொழிலாளர் வசதி கிடைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது — 3-9-35

13. விஜயதசமித்தினத்தன்று சபையிலுள்ள சரஸ்வதி தேவிக்குப் பூசை செய்வதோடு குரும்பசிட்டியில் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் அம்பாள் திருஉலா வரும்போது தூபதீபத்துடன் அர்ச்சிக்கவேண்டுமென்றும் அம்பாள் அடியவர்களுக்குத் தேநீர் சிற்றுண்டி வழங்கி இளைப்பாறச் செய்யவேண்டுமென்றுந் தீர்மானித்தது. 17-11-35இல் இருந்து தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

14. சபைக்கு நிரந்தரக் காணி வாங்கவேண்டுமென்னுந் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. சபைக்குரிய நிதி ரூபா 78இல் ரூபா 50 ஒதுக்கப்பட்ட மூலதனமாகச் சன்மார்க்க ஐக்கிய நாணய சங்கத்தில் சேமிக்கப்பட்டது. — 3-8-36

15. ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தாரின் முதற் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மாணவர்களுக்கு ஒரு வகுப்பு சபை மண்டபத்தில் ஆரம்பிக்கப்பட்டது. — 1936

16. மயிலிட்டி தெற்கில் அரசினர் வைத்தியசாலை ஒன்று நிறுவச் செய்தல்வேண்டுமென்று தீர்மானித்து அதற்குரிய மனுவைத் தயாரித்து சுகாதார மந்திரி,

காங்கேசன்துறை அரசாங்கசபைப் பிரதிநிதி, மாகாண அதிபர், மாகாணப் பிரதம வைத்தியர், கிராமசங்கத் தலைவர் என்போருக்குச் சமர்ப்பித்தது. — 18-8-36

17. மயிலிட்டி தெற்கில் வவுணத்தம்பை ஒழுங்கைச்சந்தியில் வைத்தியசாலைக்குரிய இடம்பெறவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. — 5-9-37

18. வாசிகசாலையிலிருந்து அம்பாள் கோவில்வரையு முள்ள ஒழுங்கையிற் பற்றைகளை வெட்டித் துப்புரவுசெய்யும் வேலை ஆரம்பிக்கப்பட்டது. — 5-9-37

19. கதிர்காம ஆலயப் பொறுப்பு இந்துக்கள் வசம் இருக்கவேண்டுமென மனுத் தயாரித்து அரசங்கத்திற்கு முறையிட்டது. — 4-5-38

20. காங்கேசன்துறை துறைமுகமாக்கப்பட வேண்டுமென அரசினரைக் கோரியது. — 4-5-38

21. கிராமத்தின் மத்தியில் சீமேன்ரால் அமைக்கப்பட்ட தூண் தபாற்பெட்டி வைக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டது. — 16-5-38

22. புயலால் ஏற்பட்ட அழிவுக்கு அரசாங்கம் பணஉதவி வழங்க நடவடிக்கை எடுத்துக்கொண்டது. — 15-12-39

23. காங்கேசன்துறைக்கும்-தூத்துக்குடிக்கும் இடையே கப்பற்போக்குவரத்து நடாத்த அரசினர் முயற்சி எடுக்க வேண்டுமெனத் தீர்மானஞ் செய்து அரசினருக்கு மனுச்செய்துகொண்டது. — 25-12-39

24. 'வைத்தியக் கைமுறைகள்' என்ற நூலைச் சபையார் விற்பனை செய்து அதனாற் கிடைக்கும் இலாபப் பணம் முழுமையையும் காணி வாங்குவதற்கு உபயோகிக்க முயற்சி எடுக்கப்பட்டது. — 10-3-40

25. சமயபாட வகுப்பு ஒன்று நடாத்துதல் பற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டது. — 6-5-40

26. மயிலிட்டி தெற்குக் கிராம விதானையாராகக் குரும்பசிட்டிப் பகுதி விண்ணப்பக் காரரில் ஒருவரையே நியமனஞ் செய்ய வேண்டுமென்று பிரேரணை செய்து வட மாகாண அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. — 14-12-40

27. சபைக்குரிய நிரந்தரக்காணி வாங்குவதற்குச் சபை நிதி ரூபா 275 உடன் மீதியை அக்கால நிருவாகசபையினர் கொடுத்துதவத் தீர்மானித்தனர். — 14-12-40

28. சபைக்குக் காணி வாங்கியமையை நிருவாகசபை அங்கீகரித்தது. — 18-12-40

29. இப்போது இருக்கும் சபைக்குரிய கட்டிடத்தின் அத்திவாரக் கல் நாட்டு விழா நடைபெற்றது. — 6-6-41

30. சபையின் ஆதரவில் சபைவளவில் ஒரு நெசவுசாலைத் தொழில் நிலையம் அமைக்க முடிவு செய்யப்பட்டது. — 1-2-42

31. கிராமத்திற் களவு தீயசெயல் நடைபெறுமற் பாதுகாவல் செய்வதற்குப் பாது காப்புச்சபை தெரியப்பட்டு நடைமுறைக்குரிய ஒழுங்குமுறைகள் நிறைவேற்றப் பட்டன. — 31-3-42

32. சபையின் நிரந்தரக்கட்டிடம் கட்டுவதற்கு நிதிசேகரிக்க முயற்சி எடுக்கப்பட்டது. — 20-9-42

33. சபைக்குரிய நிரந்தரக் கட்டிடத்தை அமைப்பதில் விசேட கவனம் செலுத்தப் பட்டது. கட்டிடத்தின் ஆரம்பப்பகுதி கட்டிமுடிந்தது. — 1945

34. புதிய கட்டிடம் வியஞு புரட்டாதியீ 19ஆந்திகதி (5-10-46) சனிக்கிழமை காலே 6½மணிக்கு மங்கள வாத்திய சகிதமாய்ப் பூசாகாரியங்கள் செய்யப்பட்டுச் சமயாசார முறைப்படி திறந்துவைக்கப்பட்டது.

35. புதிய கட்டிடத் திறப்பு விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. — 12-10-46

36. சபையினர் பாடபுத்தகங்கள் எழுதி வெளிவரச் செய்யத் தீர்மானித்தனர். — 22-12-46

37. சபையினர் எழுதிய 'இலக்கிய மஞ்சரி' 5ஆம், 4ஆம் புத்தகங்களே வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகத்தாருக்குக் கொடுக்கவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. — 29-7-47

38. இன்று 'ஈழகேசரி' பொன்னேயா வீதி என்று அழைக்கப்படும் தெரு முன்பு குறுகிய கிராம ஒழுங்கையாக இருந்தபோது அதனே 24 அடி அகலத்திற்கு அகல்விக்கும் முயற்சி ஆரம்பிக்கப்பட்டது. — 15-12-47

39. சன்மார்க்கசபை — சன்மார்க்க கிராமமுன்னேற்றச் சங்கத்தை உபசங்கமாகத் தாபித்து அரசாங்க வேலேத்திட்டங்களுக்கு அமைவாகப் பணி புரிந்தது. — 1948

40. தபாற்கந்தோர் நமது கிராமத்தில் தாபிக்க ஆரம்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது. — 12-10-48

41. தேவார, திருவாசக இசை வகுப்புக்கள் சபை மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற ஆரம்பவிழா எடுக்கப்பட்டது. — 26-10-48

42. நமது கிராமத்தில் பனங்கள் இறக்குதலேத் தடைசெய்து பதநீர் (கருப்பநீர்) இறக்கிப் பனங்கட்டி செய்ய முயற்சி எடுக்கப்பட்டது. — 22-11-48

43. பேய்க்கிணறு (வற்ரு ஊற்றுக் கிணறு) விவசாயத்துக்கு நீர்ப்பாய்ச்ச உபயோகிக்கும் திட்டத்துக்கு அரசினர் எடுத்து நடாத்தவேண்டு மென்று விண்ணப்பஞ் செய்து முயற்சி எடுக்கப்பட்டது. — 22-11-48

44. கிராமத்திலுள்ள ஒவ்வொரு வீட்டிலும் மலகூடம் கட்டவும் அரசினர் நன்கொடைப் பணம் பெறவும் பெயர் இடாப்புத் தயாரித்துப் படிமுறையாக முயற்சி எடுக்கப்பட்டது.

45. மலகூடம் கட்டக்கூடியவர்களின் பெயர் இடாப்பு மயிலிட்டிப் பகுதிச் சுகாதார பரிசோதகர் சமுகமாயிருக்கத் தயாரிக்கப்பட்டது. — 21-1-49

46. 'ஈழகேசரி' பொன்னேயா வீதியின் ஒரு மைல் நீளமான மேற்குப்பகுதி அகல்வித்துப் பூர்த்தி செய்யப்பட்டது. — 24-4-49

47. வெண்காயக்கூடை பின்னுவதிற் பயிற்சியளிக்கப்பட்டது. — 25-4-49

48. பிரசவ வைத்தியசாலே, விளேயாட்டு மைதானம் என்பன விரைவில் நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டது. — 31-7-49

49. குரும்பசிட்டி சித்திவிநாயகர் ஆலயத்தில் புராணபடனம் ஆரம்பம். — 5-9-49

50. பனேஓலேக் குடிசைக் கைத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் இல்லங்களே மதிப்பெடுத்தும், மூலப்பொருளே வாங்கிக் கொடுத்தும், நன்கொடைப் பணம் உதவியும் ஆக்கப்பட்ட பொருள்களுக்கு விற்பனே வசதி செய்தும் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. — 5-9-49

51. அகல்வித்த தெருவை அரசினர் பொறுப்பேற்றுப் பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. — 6-9-49

52. வித்துவசிரோமணி சி. கணேசையர் அவர்களுக்கு அரசினர் நன்கொடைப் பணம் மாதவீதம் வழங்கவேண்டுமெனக் கோரி நடவடிக்கை எடுத்துக் கொண்டது. — 6-9-49

53. அரசினரால் நியமனம் செய்யப்பட்ட இந்துமத பரிபாலன விசாரணைச் சபைக்கு மனு தயாரித்துக் கொடுத்துப் பேட்டியளித்தது. — 17-11-49

54. ஒப்பந்தமெடுத்து நமது கிராமத்துக்குரிய வேலைகளைச் செய்யச் சபை தீர்மானித்து ஒப்பந்தகாரராகப் பதிவு செய்துகொண்டது. — 30-11-49

55. சலவைத் தொழிலாளரைக் குடியிருத்த முயற்சி எடுக்கப்பட்டது. — 26-2-50

56. மயான ஒழுங்கை துப்புரவு செய்ய ஆரம்பிக்கப்பட்டது. — 21-5-50

57. 'ஈழகேசரி' பொன்னையா வீதி, மத்திய வைத்தியசாலை, விளையாட்டு மைதானம், வயாவிளான் அரசினர் மத்திய கல்லூரி ஆகிய விடயங்கள் பற்றி மனுச்செய்து அவ்வப்பகுதியாருடன் பேட்டி கண்டு பேசி நடவடிக்கை எடுக்கப்பட்டது. — 26-3-51

58. குரும்பசிட்டி உபதபாற்கந்தோர் பெற மனுத்தயாரித்து அனுப்பிவைக்கப்பட்டது. — 10-4-51

59. ஆறன்வடலி வைரவர் கோவில் பலிநிறுத்தம் சம்பந்தமாக அதன் முகாமைக்காரர்கள் சமர்ப்பித்த வேண்டுகோளுக்குச் சபை பூரண சம்மதத்தைத் தெரிவித்துப் பூரண ஒத்துழைப்புச் செய்வதாக வாக்களித்தது. — 29-5-51

60. தொடர்ந்து வருடா வருடம் சிவதீட்சை வைப்பிக்கும் இயக்கம் சபையால் மேற்கொள்ள ஆரம்பிக்கப்பட்டது. — 10-8-51

61. சன்மார்க்க சபையின் ஆதரவில் சன்மார்க்க இளைஞர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. — 18-8-51

62. சபை வளவில் கிணறுவெட்ட ஆரம்பிக்கப்பட்டது. — 1951

63. குரும்பசிட்டிக்கு ஒரு நிரந்தரமான சந்தை வேண்டுமெனக் கிராமசங்கத்தைக் கேட்டுக்கொண்டது. — 4-10-51

64. மயிலிட்டிதெற்கு—குரும்பசிட்டியின் ஒரு பகுதி, புன்னாலைக்கட்டுவன் வடமேற்கு என்றிருப்பதைக் குரும்பசிட்டியுடன் இணைக்கவேண்டுமென அரசினரைக் கேட்டு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொண்டது. — 4-10-51

65. வயாவிளான் அரசினர் மத்திய கல்லூரியை இப்போது இருக்கும் இடத்தில் நிரந்தரமான கட்டிடத்தில் அமைத்துத்தரவேண்டுமெனக் கோரி நடவடிக்கை எடுக்கப்பட்டது. — 14-10-51

66. பிரசவ வைத்தியசாலை, கிராம வைத்தியசாலையாக விஸ்தரிக்கப்படவேண்டுமெனத் தீர்மானித்து நடவடிக்கை எடுத்துக்கொண்டது. — 14-10-51

67. கோணேசர் திருவுருவங்களைக் குரும்பசிட்டிக்கூடாக உலாவரச் செய்தது. — 16-10-51

68. அகல்வித்த தெருவை அரசாங்க பகிரங்கவேலைப் பகுதியினர் (P. W. D.) பொறுப்பேற்கவேண்டுமென மனுச்செய்யப்பட்டது.

69. 'ஈழகேசரி' பொன்னையா வீதியில் கிழக்குப்பகுதி (சத்தியக்கலட்டி ஒழுங்கை) அகல்விக்கும் வேலை ஆரம்பிக்கப்பட்டது. — 4-11-51

70. அகல்வித்த தெருவுக்கு 'ஈழகேசரி பொன்னையா வீதி' அல்லது 'குரும்பசிட்டித் தெரு' எனப் பெயரிடவேண்டுமெனத் தீர்மானித்துக் கிராம சங்கத்துக்குச் சிபார்சு செய்தது. — 8-11-51

71. 'ஈழகேசரி' பொன்னையா வீதிக்குக் கற்பதித்துச் செப்பனிடும் வேலையை (ரூபா 5500) சபை ஒப்பந்தமெடுத்து வேலைசெய்தது. — 8-12-51

72. வடமாகாண அதிபர் திரு. ஹட்சன் அவர்கள் வலி—வடக்குக் காரியாதிகாரியுடனும் சபைக் காரியதரிசியுடனும் 'ஈழகேசரி' பொன்னையா வீதியைப் பார்வையிட்டார். மத்தியகல்லூரிக் காணியில் தெருவுக்காக எடுக்கப்படவேண்டிய பகுதியையும் பார்வையிட்டுக் கலந்து பேசப்பட்டது. — 18—12—51

73. குரும்பசிட்டிக்குப் பாதகமாகச் செய்துகொண்ட, கட்டுவன்—மயிலிட்டிதெற்கு எல்லைப் புனரமைப்பை ஆட்சேபித்து வலிகாமம் வடக்குக் காரியாதிகாரி கந்தோரில் அறிக்கை சமர்ப்பித்துக் கலந்துபேசி எல்லைப்புனரமைப்பைப் புனராலோசனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. — 24-2-52

74. குரும்பசிட்டிக் கிராமம் வகுக்கப்பட்டு அதற்குக் குரும்பசிட்டி எனப் பெயரிட்டு இலங்கையிலுள்ள கிராமப்பெயர் இடாப்பில் ஒரு கிராமமாகப் பதிவு செய்து அரசாங்கம் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டது. — 16-4-52

75. மயிலிட்டிதெற்கு-குரும்பசிட்டிக்குரிய கிராமசந்தைக் கட்டிடவேலையை மயிலிட்டிக் கிராமசபையிடம் ஒப்பந்தமெடுத்து, பூர்த்திசெய்து ஒப்படைக்கப்பட்டது. — 16-4-52

76. சபைக்குரிய கிணற்றுத் தொப்பிக்கட்டு, ஆடுகாற் சுவர் ஆகியவற்றின் வேலை மேற்கொள்ளப்பட்டது. — 23—5—52

77. சபையின் வடபுறவேலி மதிற் சுவராகக் கட்டப்பட்டது. — 17—7—52

78. தேசிய சேமிப்பு இயக்கவேலை மிகத் துரிதமாகவும் விசாலமாகவும் நடைபெற முயற்சி எடுக்கப்பட்டது.

79. குழந்தைகளின் பால்நிலையப் பொறுப்பை ஏற்று அதனைச் சபைவளவுக்கு மாற்றியது. — 1952

80. இரண்டு மைல் நீளமான 'ஈழகேசரி' பொன்னையா வீதி பூரணப்படுத்தப் பட்டது. — 8—11—52

81. நமது கிராம சந்தையின் வரி அறவிடப்படும் ஒப்பந்தத்தை மயிலிட்டிக் கிராம சபையினரிடமிருந்து பெற்று விற்பனையாளரிடம் பணம் வசூலிக்காது வியாபாரம் செய்ய வசதி செய்து கொடுக்கப்பட்டது.

82. சன்மார்க்க மாதர் சபை ஆரம்பித்துவைக்கப்பட்டது. — 4—7—53

83. சன்மார்க்க மாதர் ஐக்கிய நாணய சங்கம் ஆரம்பித்துவைக்கப்பட்டது. — 15—7—53

84. குரும்பசிட்டிக்கு உபதபாற் கந்தோர் வசதி கிடைத்தது. திறப்பு விழா நடாத்தப்பட்டது. — 1—8—53

85. சன்மார்க்க சபை—தம்பியையா ஞாபக விளையாட்டு மைதானக் காணி—கொக்கன்—நிலப்பரப்பு 15 வாங்கப்பட்டது.

86. சன்மார்க்க கூட்டுறவு முதியோர் வகுப்பு ஆரம்பித்து நடாத்தப்பட்டது. — 31—8—53

87. குரும்பசிட்டிக் கிராமம் வகுப்பதற்கு எல்லைகள் வகுத்துக் கிராமப் படம் தயாரித்து மனு சமர்ப்பிக்கப்பட்டது.

88. குரும்பசிட்டி உபதபாற்கந்தோரை C பிரிவிலிருந்து B பிரிவுக்கு உயர்த்தும்படி நடவடிக்கை எடுக்கப்பட்டது. — 26-6-54

89. சேமிப்பு இயக்க நடவடிக்கை காரணமாக 158க்கு மேற்பட்ட தபாற் கந்தோர் சேமவங்கிப் பாஸ்புத்தகங்கள் கிராம மக்கள் வைத்திருக்கவும் 4500 ரூபா வரை சிறு சேமிப்புமூலம் சேர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. — 1954

90. யாழ்-விநோத களியாட்ட விழாவில் சன்மார்க்க சபை அமைத்த காட்சி முதலிடம் பெற்றுப் பரிசுக்கிண்ணம் கிடைக்கப்பெற்றது.

91. இலங்கை முன்னாள் பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவல அவர்களைக் குரக்கன் கதிர் மாலை அணிந்து சபையினர் வரவேற்று உபசரித்தனர். 'ஈழகேசரி' பொன்னையா வீதியை அரசினர் பொறுப்பேற்க வேண்டுமென மனு வாசித்துக் கையளிக்கப்பட்டது. — 16-9-54

92. சபையின் ஆதரவில் சைவப் பெரியார் — ஏழாலை, திரு. மு. ஞானப்பிரகாசம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு இரண்டுவருட காலம் தொடர்ந்து நடைபெற்ற சிவஞானசித்தியார் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. — 9-1-55

93. நமது கிராமத் தோட்டப் பயிர்களுக்கு ஏற்பட்ட அழுக்கணவன் நோய்க்கு வடபகுதி விவசாய போதகரை அழைத்து அவர்மூலம் கிருமிநாசினி தெளிக்கும் முறையை இப்பகுதியிற் புகுத்தியது. — 7-3-55

94. முன்னாள் போக்குவரத்து மந்திரி மொன்ரேகு ஜெயவிக்கிரமாவை காங்கேசன் துறை வாடிவீட்டிற் பேட்டிகண்டு 'ஈழகேசரி' பொன்னையா வீதியை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தது. — 25-3-55

95. சன்மார்க்கசபை யாழ்ப்பாணம் கலை கைப்பணிப் பொருட்காட்சியிற் பங்குபற்றிப் பரிசும் சான்றுப்பத்திரமும் பெற்றுக்கொண்டது.

96. குரும்பசிட்டி உபதபாற்கந்தோர் C பிரிவிலிருந்து B பிரிவுக்கு உயர்த்தப்பட்டது. — 1-7-55

97. எதிரே நடைபெறும் மயிலிட்டிதெற்கு கிராமத் தலைமைக்காரன் தெரிவில் நமது கிராமத்தில் மனுச்செய்தவர்களில் ஒருவர் நியமனம் பெறவேண்டுமெனவும் தெரிவுஸ்தானம் மயிலிட்டி தெற்கில் மத்தியான ஓர் இடத்தில் இருக்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

98. சபைவளவில் தொழில்நிலையம் ஒன்று அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. — 8-8-55

99. வேளாம்புல ஒழுங்கைக்குக் கற்பதித்துத் தார் ஊற்றிச் செப்பனிட கனடா அரசினர் நன்கொடைப்பணத்தில் ரூபா 15000 கோரி கிராமசங்கமூலம் அரசாங்கத்துக்கு மனுச்செய்தது.

100. சன்மார்க்கசபையின் நடைமுறை நிகழ்ச்சிகள் இலங்கைவானொலி கிராமியநிகழ்ச்சிப் பகுதியினரால் 18-8-55ல் ஒலிப்பதிவு செய்யப்பட்டது. கிராமநிகழ்ச்சிப் பகுதியில் 23-1-56ல் ஒலிப்பதிவு அஞ்சல் செய்யப்பட்டது.

101. பிரசவ வைத்தியசாலை வளவில், மயிலிட்டிதெற்கில் கிழமைக்கு இரண்டுமுறை மருந்துகொடுக்கப்படும் உப மருந்துச்சாலையை மத்திய வைத்தியசாலையாக அமைத்துத்தரும்படி மனுச் சமர்ப்பித்தது. — 5-9-55

102. சுதேசி கைத்தறி வாரத்தில் சபையினர் தறியில் நெய்யப்பட்ட புடைவைகளை விற்பனைசெய்தனர். — 5-9-55

103. வலி-வடக்கில், மல்லாகம் கி. மு. ச. வளவில் அமைக்கப்பட்ட வலிகாமம் வடக்கு மத்திய நூல்நிலையத்திற்கு நன்கொடை வழங்கியது. — 2-11-55

104. குரும்பசிட்டி அம்பாள் ஆலய திருவெம்பாவை, திருவாதிரை, விசேட உற்சவ காலங்களில் சைவப்பிரசங்கங்களும் கூட்டுப்பிரார்த்தனைகளும் வருடாவருடம் தொடர்ந்து நடைபெறவேண்டிய நடவடிக்கைகள் செய்யப்பட்டன. — 2-11-55

105. அரசினரின் புதிய பாடத்திட்டத்துக்கு அமைவாகச் சமயபாடப் புத்தகங்கள் வெளியிடவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. — 21-11-55

106. சன்மார்க்க நாடகமன்றம் ஆரம்பித்துவைக்கப்பட்டது. — 1955

107. புயலால் ஏற்பட்ட பயிர்ச்சேதங்களை மதிப்பீட்டு அரசினர் நன்கொடைப்பணம் கமக்காரர்பெற வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டது. — 25-12-55

108. சன்மார்க்க சபையின் உப தலைவர் திரு. க. செல்லத்துரை மயிலிட்டி தெற்குக் கிராமத் தலைமைக்காரராக நியமனம் பெற்றமை குறித்து வரவேற்பு உபசாரம் நடைபெற்றது. — 19-6-56

109. குரும்பசிட்டி உப தபாற்கந்தோருக்குத் தொலைபேசி அமைக்க அரசாங்கத்துக்கு விண்ணப்பம் அனுப்பி வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டது. — 2-7-56

110. யாழ்ப்பாண பகிரங்கவேலைப் பகுதிப் பிரதம எந்திர அதிகாரி—'ஈழகேசரி' பொன்னையா வீதியை மயிலிட்டிக் கிராம சங்கத் தலைவருடனும் சன்மார்க்க சபைக் காரியதரிசியுடனும் பார்வையிட்டு அரசாங்கம் கையேற்கச் சிபார்சு செய்தமை. — 28-8-56

111. எமது கிராமத்தில் சட்டவிரோதமாக மது சேகரித்து வைத்து விற்பனை செய்யு மிடங்களைத் தடைசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. — 25-11-56

112. சித்தாந்த வகுப்புப் பூர்த்தி விழா கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திற் செய்யப் பட்டு பூசை, மகேசுரபூசை என்பன நடைபெறலாயின. — 2-2-57

113. 'ஈழகேசரி' பொன்னையா வீதி வேலை, சுடலைமட வேலை என்பன ஒப்பந்த மெடுத்துத் திருத்தமாகச் செய்யப்பட்டன. — 2-2-57

114. சிவராத்திரி விரத தினங்களுக்குச் சபை அங்கத்தவர்களையும் பொதுமக்களையும் திருக்கேதீஸ்வரம் ஆலயம் அழைத்துச் செல்லும் ஒழுங்கு ஆரம்பித்து வைக்கப் பட்டது. — 27-2-57

115. சித்திவிநாயகர் ஆலயத்திற் புராண படனம் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் நடைபெற முயற்சி ஆரம்பிக்கப்பட்டது. — 17-3-57

116. 'ஈழகேசரி' பொன்னையா வீதி சம்பந்தமாக அரசாங்கத்துடன் மீண்டும் தொடர்பு வைத்து நடவடிக்கை எடுத்துக்கொண்டது. — 17-3-57

117. சபையினரின் முயற்சியினாலே 'சைவசமய போதினி' என்ற பெயர் வரிசை யில் சமயபாட நூல்கள் பாட புத்தகமாக வெளிவந்தன. — 1957

118. சன்மார்க்க கிராம முன்னேற்றச் சங்கம் அரசாங்கத் தொடர்பை நீக்கியது. — 24-11-57

119. 'ஈழகேசரி' பொன்னையா வீதியை அரசாங்க பகிரங்க வேலைப்பகுதியினர் கை யேற்றனர். — 1-5-58

120. அரசினர் கையேற்ற 'ஈழகேசரி' பொன்னையா வீதிக்குக் கற்பதித்துத் தார் ஊற்றிச் செப்பனிடும்படி போக்குவரத்து மந்திரி காரியாலயத்தினருக்கு மனுச் செய்துகொண்டது. — 22-11-58

121. தபாற்கந்தோருக்குத் தந்தி, தொலைபேசி வசதி அமைக்கப்பட்டது. — 25-1-59

122. வித்துவசிரோமணி பிரம்மஸ்ரீ சி. கணேசையர் அவர்களின் நினைவுச்சின்னம் வறுத்தலைவிளான் மருதடி விநாயகர் ஆலயத்தின் அருகாமையில் அமைக்கும்

காரியநிருவாகசபையில் சன்மார்க்கசபைத் தலைவர், காரியதரிசிஅங்கத்துவம் வகிக்க வும் நிதிசேகரித்துக் கொடுத்துதவவும் தீர்மானம் செய்துகொண்டது. — 31-1-59

123. குரும்பசிட்டி தபாற்கந்தோரின் தரத்தை உயர்த்தி இப்போது நடைமுறையி லிருக்கும் வசதிகளைவிட மேலதிக தபாற்கந்தோர் வசதிச் சேவையைப் பெற நடவடிக்கை எடுக்குமாறு தபால்-வானொலி விளம்பர மந்திரி காரியாலயத்துக்கும் தபால் தந்திப்பகுதி அதிபருக்கும் மனுச்செய்து நடவடிக்கை எடுத்தது. — 9-2-59

124. சபையின் ஆதரவில் திரு. A. T. பொன்னுத்துரை, B.A. அவர்களை ஆசிரியராகக் கொண்டு கல்விபோதிக்கும் வகுப்பு ஒன்று நடைபெற ஆரம்பித்தது. — 10-2-59

125. பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்களின் 'சைவநற்சிந்தனைகள்' என்னும் சமயநூலைப் பதிப்பித்துச் சன்மார்க்கசபை வெளியிட்டது. — 31-3-59

126. யாழ்ப்பாணம்—புன்னாலைக்கட்டுவன்—குப்பிளான் பஸ் போக்குவரத்தைக் குரும்ப சிட்டிக்கூடாக நடாத்த அரசாங்கத்துக்கும் போக்குவரத்துச் சபைக்கும் மனுச் செய்துகொண்டது. — 12-8-59

127. சபைக்குரிய விளையாட்டு மைதானத்தின் பெயர் 'சன்மார்க்கசபை தம்பியையா ஞாபகார்த்த விளையாட்டு மைதானம்' எனத் தீர்மானிக்கப்பட்டு, கொங்கிறீற் தூணிலிடப்பட்ட பெயர்ப்பொறிகல் விளையாட்டு மைதானத்தில் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. (விஷமகாரர் அதனை அடுத்தநாளே தகர்த்துவிட்டனர்.) — 3-4-60

128. புதிய குரும்பசிட்டி ஒழுங்கையைப் புதிதாகத் திறந்து ஆரம்பவேலையை மேற் கொண்டமை. கற்பதித்து மக்கிபரவ ரூபா 250—00 செலவு செய்தமை. — 1960

129. சபையின் முன்புறம்—கிணற்றுச் சுற்றுடல்—திருத்தவேலை மேற்கொள்ளப்பட்டது. — 11-3-61

130. தமிழ்மொழிக்குச் சமஉரிமை அளித்துச் சிறுபான்மையோருக்குப் பாதுகாப்பு அளிக்கும்படி விசேட பொதுக்கூட்டம் கூடிக் கோரிக்கை விடுத்து அதுபற்றிய மனுத் தயாரித்துப் பிரதம மந்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டது. — 15-4-61

131. சபைக் கட்டிடத்துக்கு மின்சாரவசதி செய்துவைக்கப்பட்டது. — 28-4-61

132. குரும்பசிட்டி பிரசவ விடுதிச்சாலை வளவில் மத்திய வைத்தியசாலையைத் தாபித்து வைத்திய வசதிபெற நடவடிக்கை எடுக்கும்படி மனுச் சமர்ப்பிக்கப் பட்டது. — 18-5-61

133. யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை அதிபர், மத்திய மருந்துச்சாலை 8-7-61இல் ஆரம்பித்து வைக்கப்படுமெனச் சன்மார்க்க சபைக்கு அறிவித்தது. — 10-6-61

134. சன்மார்க்கசபையின் ஆதரவில் யாழ்ப்பாணம் பண்ணை நெஞ்சுநோய்ச் சிகிச்சை நிலையத்தினர், சபை மண்டபத்தில் 'எக்ஸ்றே' படப்பிடிப்புப் பரிசோதனை செய்யவேண்டிய ஒழுங்குகள் செய்யப்பட்டன. — 14-6-61

135. மத்திய வைத்தியசாலை தாபிப்பதைப் பின்போட்டமையை எதிர்த்துப் பொதுக் கூட்டம் கூட்டி மனு அனுப்பிவைக்கப்பட்டது. கொழும்பு சென்று சுகாதார மந்திரியுடன் பேச்சுவார்த்தை வைக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. — 2-7-61

136. மத்திய வைத்தியசாலையைப் பிரசவ வைத்தியசாலை வளவில் உடனடியாகத் தாபிக் கும்படி வயாவிளான், திரு. க. வே. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் முன் னாள் கிராமசங்கத் தலைவர் திரு. வ. இராசநாயகம் J. P. அவர்களும் சன்மார்க்க சபையினரும் சேர்ந்த குழு ஒன்று 11-7-61, 12-7-61 ஆகிய இரண்டு நாட் களிலும் கௌரவ சுகாதார மந்திரியுடன் கலந்துபேசி மத்திய வைத்தியசாலையை ஆரம்பித்து வைக்கும்படி கேட்டுக்கொண்டது. அத்தொடர்பாக மத்திய வைத் தியசாலை 7-8-61 காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

137. மகாஜனக் கல்லூரிச் சித்திர ஆசிரியர் திரு. ஆ. தம்பித்துரை அவர்களால் எழுதப்பெற்ற 'ஓவியக்கலை' என்னும் நூலைச் சன்மார்க்க சபை பதிப்பித்து, வெளியீட்டு விழாவையும் நடாத்தியது. — 16-9-61

138. மயிலிட்டிக் கிராமசபையின் விசேட உபசபையில், சன்மார்க்க சபை — மயிலிட்டி தெற்கு எல்லைகள் எங்ஙனம் அமைய வேண்டுமென மனுவும் விளக்கப்படமும் சமர்ப்பித்து விபரம் தெரிவித்தது. சபையின் ஆலோசனைகள் கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டன. — 17-9-61

139. பிரசவ வைத்தியசாலைவளவில் நடைபெற்றுப் பின் தற்காலிகமாக மாற்றப்பட்டிருந்த சிசு—மாதா பராபரிப்பு நிலையத்தைத் திரும்பவும் வசதிகள் நிறைந்த மத்தியான இடமான பிரசவ வைத்தியசாலை வளவுக்கு மாற்றவேண்டுமென மனுச்செய்துகொண்டது. —19-9-61

140. கதிர்காமத்துக்குரிய மடாலயங்களை அரசாங்கம் அகற்றக்கூடாதென எதிர்ப்புத் தெரிவித்துப் பிரதமருக்கும், கலாசார உள்நாட்டு மந்திரிக்கும் மனு அனுப்பி வைத்தது. — 4-12-61

141. திரு. இ. நாகராசன், கனக. செந்திநாதன், சு. வே., குறமகள், எஸ். பொன்னுத்துரை என்போர் எழுதிய 'மத்தாப்பு' என்னும் குறுநவல் நூலைப் பதிப்பித்து வெளியிட்டு விழாவையும் நடாத்தியது. — 28-1-62

142. அஷ்ட கிரகதோஷ நிவிர்த்தியின் பொருட்டு மூன்று நாட்களும் அம்பாள் ஆலயத்தில் பூசை, விசேட அபிஷேகம், அர்ச்சனை, சமயப் பிரசங்கங்கள், கூட்டுப் பிரார்த்தனைகள் நடைபெற ஆவன செய்யப்பட்டன. கோளறு பதிகம் இலவசமாக வெளியிட்டு வழங்கப்பட்டது.

143. குரும்பசிட்டியில் இருக்கும் பிரசவவைத்தியசாலை வளவுக்கு சிசு—மாதா பராபரிப்புநிலையம் மாற்றப்பட்டது. சிசு—மாதா பராபரிப்பு நிலையத்துக்கு உடனடியாக வேண்டிய பொருள்களுக்காகச் சபை ரூபா 125 சதம் 75 செலவு செய்து பொருள்களை வாங்கி உபகரித்தது. — 1-4-62

144. சிசு—மாதா பராபரிப்பு நிலையத்தை மத்திய வைத்தியசாலைக்குரிய கட்டிடத்தில் நடத்தாது பிரசவவைத்தியசாலைக்கு என்று முன்னரே அமைக்கப்பட்ட கட்டிடத்தைத் திருத்தி அதில் நடத்தவேண்டுமென்று மனுச் சமர்ப்பித்தது. — 12-4-62

145. சன்மார்க்கசபை அங்கத்தவரும் சிறந்த சைத்திரிகருமான திரு. கே. கே. வி. செல்லையா அவர்கள் சேர் பொன். இராமநாதனின் உருவப்படத்தை வரைந்து சபைக்கு அன்பளிப்புச் செய்தார். இவ் ஓவியம் — யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சித்திரப் பொருட்காட்சியில் வைக்கப்பட்ட படங்களில் முதலிடம் பெற்றது. — 20-5-62

146. 'ஈழகேசரி' பொன்னையா வீதியைக் கற்பதித்துத் தார் ஊற்றிச் செப்பனிட நடவடிக்கை எடுக்கப்பட்டது. ½ மைல் தூரத்துக்கு வேலை நடைபெற்றது. —20-5-62

147. ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு இலங்கைத்தூதுவர் டாக்டர் டி. எம். ஓர் அவர்கள் சபைக்கு விஜயம் செய்தார்.

148. சித்திர ஆசிரியர் திரு. ஆ. தம்பித்துரை அவர்கள் எழுதிய 'சிறுவர் சித்திரம்' என்னும் நூலைச் சபை வெளியிட்டு ஆரம்பவிழாவையும் நடாத்தியது. — 16-9-62

149. அவுஸ்திரேலிய-இலங்கைத்தூதுவர் திரு. B. C. பலாட் எம். ஏ., எல்பி. அவர்கள் சபைக்கு விஜயம்செய்தார். —2-12-62

150. 'ஈழகேசரி' பொன்னைய ஞாபகார்த்த பேச்சுப்போட்டி அகில இலங்கை ரீதியில் தொடர்ந்து வருடாவருடம் நடாத்தவும் தங்க—வெள்ளிப் பதக்கங்கள் பரிசளிக்கவுந் தீர்மானிக்கப்பட்டது. — 12-2-63

151. திரு. கோ. அப்பாக்குட்டி அவர்கள் தாம் அரிதிற் சேகரித்த 500 புத்தகங்களைச் சன்மார்க்கசபை மணிவாசக நூல்நிலையத்துக்கு உபகரித்தார். — 15-3-63

152. நமது கிராமத்தில் இளம்பிள்ளைவாத நோய் பரவாமற்றடுப்பதற்கு விசேட அச்சு விளம்பரம் வெளியிட்டுப் பிரசாரம் செய்யப்பட்டது. எமது கிராமத்தில் 8 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளின் பெயர்இடாப்பு வீடு விடாகச் சென்று தயாரித்துக் குழந்தைகளுக்குச் சபை மண்டபத்தில் வைத்திய சிகிச்சை யளிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன, — 15-5-63

153. மயிலிட்டிக் கிராம சங்கப் பகுதிக்குரிய சுகாதார வார விழா சபை மண்டபத்தில் நடைபெறச் சபை எல்லா ஒழுங்குகளையும் மேற்கொண்டது. — 12-6-63

154. குரும்பசிட்டி – யாழ்ப்பாணம் பஸ் சேவை நன்கு சீர்திருத்தப்படவேண்டுமெனவும் மணித்தியாலத்திற்கு ஒரு வண்டி ஓடவிடவேண்டு மெனவும் மனுச் சமர்ப்பித்து யாழ்ப்பாணம் இ. போ. ச. அதிகாரிகளுடன் கலந்து பேசப்பட்டது. — 12-6-63

155. 'ஈழகேசரி' பொன்னையா வீதியின் கிழக்குப் பகுதிக்கு மின்சார இணைப்பை நீடிக்கச்செய்ய மனுச் சமர்ப்பித்து நடவடிக்கை எடுத்துக்கொண்டது.— 21-9-63

156. வயாவிளான் அரசினர் மத்திய கல்லூரி மாணவர்களுக்கு விஞ்ஞானம் கற்பிப்பதற்குரிய தராதரமுடைய ஆசிரியர்களை நியமனம் செய்யுமாறு கல்விமந்திரிக்கு மனுச் சமர்ப்பிக்கப்பட்டது. — 1-1-64

157. குரும்பசிட்டி புது ஒழுங்கைக்குக் கற் பரவி தார் ஊற்றிச் செப்பனிடும் வேலை தாமதமின்றி நடைபெறவேண்டிய ஒழுங்குகளைக் கவனிக்குமாறு மயிலிட்டிக் கிராமசபைத் தலைவருடனும் உதவி ஸ்தலஸ்தாபன அதிகாரிகளுடனும் கலந்து பேசி நடவடிக்கை எடுக்கப்பட்டது. — 10-1-64

158. சபையின் ஆதரவுடன் பண்முறைத் தேவார வகுப்பு நடைபெற முயற்சி எடுக்கப்பட்டது. — 21-1-64

159. சபையின் உபதலைவரும் பிரபல எழுத்தாளருமான திரு. கனக. செந்திநாதன் அவர்கள் எழுதிய 'ஈழத்து இலக்கிய வளர்ச்சி' என்னும் நூலின் வெளியீட்டு விழாவைச் சபை நடாத்தியது. — 8-2-64

160. சபையின் போஷகரும் 500க்கு மேற்பட்ட நூல்களை அன்பளிப்புச் செய்தவருமான திரு. கோ. அப்பாக்குட்டி அவர்களின் உருவப்படம் சபையில் திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டது. — 28–3–64

161. குரும்பசிட்டி–யாழ்ப்பாண பஸ்சேவை அபிவிருத்தி செய்யப்பட்ட வேண்டுமென யாழ் – இ. போ. ச. அதிகாரிகளுடன் கலந்துபேசி நடவடிக்கை எடுத்துக்கொண்டது. — 2–5–64

162. அம்பாள் வீதியைச் சிரமதானமுறைப்படி கற்பரவி அமைத்தது. — 8–11–64

163. புயற்காற்றினால் ஏற்பட்ட பயிர்ச்சேதங்களை மதிப்பிட்டு அரசினர் நன்கொடைப் பணம் பெறச் சபையினர் வேண்டிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுழைத்தனர். — 23–12–64

164. நாடகக்கலைஞரும் சிறந்த எழுத்தாளருமான திரு. செ. சண்முகநாதன் அவர்கள் எழுதிய 'பரியாரி பரமர்' என்ற நூலினதும், ஆசிரியர் திரு. வி. கந்தவனம், B. A. அவர்களெழுதிய 'இலக்கிய உலகம்' என்னும் நூலினதும் வெளியீட்டு விழாவைச் சபை நடாத்தியது. — 1965

165. புதிதாக அமைத்த புதிய குரும்பசிட்டி ஒழுங்கையின் திருத்த வேலைகளுக்காகத் தொடர்ந்து முயற்சி எடுத்தது. மயிலிட்டிக் கிராமசபையின் ஆதரவில் மத்திய அரசாங்கம் ரூபா 7000 ஷ ஒழுங்கைக்கு அளித்தது. சபையினரே ஒப்பந்த வேலையை ஏற்று வேலைசெய்ய ஆரம்பித்துள்ளனர். — 1965

* அழகாய்

* கவர்ச்சிகரமாய்

* அழியாத சித்திரமாய்

படம் பிடிக்க

ஞானம்ஸ் ஸ்ருடியோ

யாழ்ப்பாணம்

போன்: 7067

கணேசன் ஸ்ரோஸ்

சில்லறை, மொத்த புடைவை வியாபாரிகள்

உரிமையாளர்: க. செ. கனகசபை

78, காங்கேசன்துறை வீதி போன்: 7169

யாழ்ப்பாணம்

உங்களுக்குத் தேவையான

கூறைப் புடைவைகள் – பட்டுப் புடைவைகள்

நவீனரகப் புடைவைகள்—எல்லாவிதப்புடை வைவகைகளும்

சகாய விலையில் வாங்க நம்பிக்கையான இடம்.

ஒருமுறை விஜயம் செய்தால் உண்மை விளங்கும்

உறுதியான, கவர்ச்சியான நவீன தயாரிப்புகள்
உங்கள் எல்லாத் தேவைகளுக்கும் உரிய
வெங்கலம், பித்தளை, செப்பு, சில்வர்
பாத்திர வகைகள்

★ கலை அழகு கொண்ட குத்துவிளக்குகள்,
★ அலுமினியச் சாமான்கள்,
★ பலமான சீனச்சட்டிக் தாச்சிவகைகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் எங்களிடம் கிடைக்கும்

# தாகீரா ஸ்ரோஸ்

40, டாம் ஸ்றிற் கொழும்பு 12.
ஸ்ரோர் 40 - 1, 2 & 3, டாம் ஸ்றிற் போன் 2407

*FOR*
**Brass, Copper, Bronze Wares, Shop Goods and Cotton Ropes.**
*PLEASE CALL AT*

## THAHIRA STORES

40, Dam Street, : : COLOMBO 12.
T'phone: **2407** T'grams: **THAHIRA**



## உங்கள் எவ்வித தேவைகளைப்

பூர்த்திசெய்யவும்
சகாயமான விலைகளிற் சகல பொருட்களைப்
பெறுவதற்கும்

# யாழ்ப்பாண
# ஐக்கிய வியாபாரச் சங்கத்திற்கு

விஜயம்செய்ய மறவாதீர்கள்

தொலைபேசி: **370, 438 & 537** தந்தி: "லக்ஷ்மி"

*விலாசம்:*
*420*, ஆஸ்பத்திரி வீதி,
**யாழ்ப்பாணம்**

சுத்தமாக சுகாதார முறைப்படி நவீன இயந்திரங்களினல்
விலையுயர்ந்த மூலப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கும்

# பேபி மார்க்

ஸ்பெஷல் பானங்களையே அருந்துங்கள்

எல்லா இடங்களிலும் கிடைக்கும்

தாயாரிப்பாளர் :

## சுப்பிரமணியன் சோடாக் கம்பனி

வல்வெட்டித்துறை


போன் : 97 தந்தி : SODA

— கிளை —

ராஜு ஸ்ரோர்ஸ்

2/B ஸ்ரான்லி ரோட் : : யாழ்ப்பாணம்

போன் : 372 தந்தி : "ESVES"



எஸ் - லொன்
இன்றைய அதிசயமான பைப்


இதுவே ஒரு உண்மையான பல-பயன் தரும் பைப்.... திண்மையானது கனக் குறைவானது, மலிவானது, கையாள்வது சுலபம், உக்காது கறையான் அண்டாது அரிப்பேற்படாது, கிருமி, கறள், அழுக்குப்படல எதிர்ப்புடையது. எஸ்-லொன் மின்சார கொண்டுயிட் வேலை உட்பட பெரும்பாலான வீட்டு, கைத்தொழில், விவசாய உபயோகத்திற்கு சிறந்த ஒப்பற்ற பைப்.

பைப் வேலை, உங்களுக்கு உண்டானால் அதற்கு உகந்த பைப் எஸ்லொன்தான் ஆகவே இன்றே எங்குமுள்ள சிறந்த ஸ்டோர்களில் அதைக் கேட்டு வாங்க நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.

ராஜேந்திரம்ஸ் லிமிட்டெட்.

பேங்ஷால் வீதி, கொழும்பு-11.

## குரும்பசிட்டிப் பெரியோர்கள் (இருவர்)



ஆசிரியர்திலகம் பொ. பரமானந்தர் அவர்கள்



வர்த்தகர் திலகம்
பூ. சுப்பிரமணியம் அவர்கள்

# சன்மார்க்க சபைத் தொண்டர்கள்

## 1

## ஆசிரியர், திரு. க. சுந்தரமூர்த்தி அவர்கள்

[1914 — 1941]

"குரும்பசிட்டி 'சன்மார்க்க சபை' தனது இலட்சியங்கள் உருவெடுத்துத் தோன்றுவதற்குக் காரணராயிருந்த சற்புதல்வனும் ஆசிரியர் திரு. க. சுந்தரமூர்த்தி அவர்களை இழக்கவேண்டி நேரிட்டமை குறித்து மிகுந்த அனுதாபப் படுகிறது. அன்னார்தம் ஆன்மா சாந்தியடைவதாக.''

—7ஆவது ஆண்டுத் தொகுப்பறிக்கை –10-8-41

இங்ஙனம் உயர்ந்த இலட்சியங்கள் உருவெடுத்துத் தோன்றிய ஆசிரியர் திரு. க. சுந்தரமூர்த்தி அவர்களைக் குரும்பசிட்டி என்ற இந்த ஊரிலுள்ள இளஞ் சந்ததியினர்க்கு அதிகம் தெரியாது. ஆனால் சன்மார்க்க சபையார் நடாத்தும் பொதுக்கூட்டங்கள் சிலவற்றில் அவரது பெயர் உச்சரிக்கப்படுதலைச் சிலர் கேட்டிருக்கலாம். அவருடைய ஞாபகச் சின்னமான உருவம் வர்ண ஓவியமாகச் சித்திரிக்கப்பட்டுப் பெரியோர்கள் வரிசையிற் சபை மண்டபத்தில் அலங்காரமாகக் காட்சியளிப்பதைப் பலர் அவதானிக்கலாம். இந்த ஊருக்கு அவர் செய்தது என்ன? அவரை நாம் ஏன் நினைவு கூரவேண்டும்?

ஆசிரியர் திரு. க. சுந்தரமூர்த்தி அவர்கள் குரும்பசிட்டி தம்பர்—கதிரேசு அவர்களுடைய புதல்வராக 4-8-1914இல் பிறந்தார். குரும்பசிட்டி மகாதேவ வித்தியாசாலையிலே கல்விபயின்று மிக இளம் வயதிலே அப் பாடசாலையிலேயே ஆசிரியராகப் பணியாற்றினார். அவர் எட்டாம் வகுப்புப் படித்துக் கொண்டிருக்கும்போதே (1929ஆம் வருடம்) கிராமத்தில் உள்ள சங்கங்கள் இளைஞருக்கு ஏற்றவகையில் இயங்கவில்லை என்பதை உணர்ந்தார். இளைஞர்களின் ஆற்றல்களை விருத்திசெய்யவும், கிராமப்பற்றை ஊட்டவும் தன்னுடன் கல்விகற்ற நண்பர்கள் சிலரோடு சேர்ந்து இளைஞர் சங்கம் ஒன்றை ஆரம்பித்து நடாத்தினார். திரு. சுந்தரமூர்த்தி அவர்கள் மிக உற்சாகத்துடன் பொதுக்கூட்டங்கள் நடாத்தியும் சிவபுராணங்களை முறைப்படி கோவில்களிற் சொல்லிக்கொடுத்தும் பாரதியார் பாடல்களை மனப்பாடஞ் செய்வித்தும் (அக்காலத்தில் பாரதிபாடல் நூல்களே மிக மிக அருமை) ஊக்கமளித்தார். இளைஞர் சங்க அங்கத்தவர்கள் அக்காலத்திலே கிராமசங்க ஒழுங்கைகளிற் பற்றை வெட்டிச் சுத்தம் செய்யும் சிரமதானத்தைச் செய்ய அவர் அக்காலத்திலேயே முன்னின்று உழைத்தார். கதர் கட்டல், தக்கிளியில் நூல் நூற்றல், பனங்கட்டி செய்தல் முதலிய துறைகளில் ஆக்கப் பணிபுரிந்தார். சீன வெடிப் பகிஷ்காரம், கோவில்களில்

தாசியர்நடன நீக்கம் ஆகியவற்றை அவர் ஆதரித்துப் பிரசாரம் செய்தார். அக்காலத்திலே தொடங்கப்பட்ட 'ஆனந்த விகடன்' பத்திரிகையை (மாதம் ஒன்று—சந்தா ரூபா ஒன்று) அங்கத்தவரிடையே பரப்பி ஹாஸ்ய உணர்ச்சியைத் தூண்டினர். தானே பாடசாலை நாடகங்களில் விதூஷக வேடத்தில் தோன்றிச் சனங்களைக் குதூகலத்திலாழ்த்தினர். இளைஞர்களிடையே அன்பு, ஒற்றுமை, கிராமப் பற்று, தேசியப்பற்று என்பன வளர, தன் நேரத்தைச் செலவு செய்து அரும் பணியாற்றினர். அக்கால கட்டத்திலே தூக்கிலிடப்பட்ட தேசபக்தர் பகவத்சிங்கின் சரிதையை மேடையிலேற்றி அவர் நடிப்பித்த காட்சி இன்னும் நம் மனதைவிட்டுஅகலாத தொன்று. இங்ஙனம் சமயம், பொதுத்தொண்டு, தேசிய ஆர்வம், நாடகம் என்னும் பலதுறைகளில் அவர் முன்னேடியாக இருந்து வழிகாட்டினர். அப்போது அவருக்குப் பதினெட்டு வயதிருக்கும்.

1934ஆம் ஆண்டு சன்மார்க்க சபையின் ஆரம்பகாலத்திலே இணைக்காரியதரிசியாகப் பதவி வகித்தார். இப் பதவி காரணமாக மேலும் மிக விரிவான முறையிலே செயல் திட்டங்களை வகுத்துப் பொதுப்பணி ஆற்றினர். அதன் காரணமாகச் சபையும் வளர்ந்தது. கிராமமும் விழிப்புணர்ச்சி பெற்றது. இப் பதவி காரணமாகச் சில உறவினரும் பிறரும் தன்னை எதிர்க்கிறார்கள் என்பதை அவர் அறிந்தார். சுயமரியாதையுடன், பெரும் எதிர்ப்பைத் தூசென மதித்துச் சேவையே முக்கியமெனத் துணிந்தார். இதனல் உள்ளூர்ப் பாடசாலையிற் படிப்பிக்க முடியாது எனத் தீர்மானித்து 1935ஆம் ஆண்டளவில் அரசினர் பாடசாலை ஒன்றிற் படிப்பிக்க அழுத்துகமம் சென்றார். பின்பு கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கழகத்தில் ஆசிரியப் பயிற்சி பெற்றார்.

அப்போது அவரிடத்து உள்ளடங்கியிருந்த பல ஆற்றல்கள் வெளிப்பட்டன. அதனல் அவர் புகழ் வெளியிடங்களிலும் ஈழத்திலும் பிரகாசித்தது. எழுத்துத்துறையில் அவர் வல்லமை சிறப்புற்றது. ஆசிரியர் சுந்தரமூர்த்தி அவர்கள் தாம் செய்த இலங்கைப் பிரயாணக் காட்சிகளைப்பற்றிச்சுவையுடன்எட்டுக் கட்டுரைகளை வரைந்தார். அக்கால ஈழகேசரிக் கல்விமலரில் அக் கட்டுரைகள் வெளிவந்தபோது பலர் விரும்பி வாசித்தனர். அவர் எழுதிய கட்டுரைகளின் நடையும் முறையும் கவர்ச்சிகரமாக இருந்தன. இக் கட்டுரைகளே அன்றிச் சில சிறு கதைகளையும் அவர் அக்காலத்தில் எழுதியுள்ளார்.

குரும்பசிட்டியில் இருந்த அக்கால ஆசிரியர்களில் அநேகர் சித்திரத் தராதரமுடையவர்களாய் இருந்தனர். ஆசிரியர் சுந்தரமூர்த்தி அவர்கள் வெறும் தராதரத்தோடு நின்றுவிடாமல் சித்திரம் கற்பிக்கும் இடமெல்லாம் சென்று பயின்று திறமையான ஓவியனகத் திகழ்ந்தார். அக்காலத்திற் சித்திர வித்தியாதரிசகர் ஓவியக் கலைஞன் திரு. S. R. கனகசபையால் ஆரம்பித்து நடாத்தப்பட்ட மிகப் பிரபலமான ''வின்சர் ஆர்ட் கிளப்'' முக்கிய உறுப்பினராகவும் இருந்தார். திரு. சுந்தரமூர்த்தி அவர்களுடைய ஓவியங்கள் பல ஓவியக் காட்சிகளில் இடம் பெற்று முதலாம் இடங்களைப் பெற்றிருக்கின்றன. ஈழகேசரி ஆண்டுமடல் ஒன்றில் அவர் கோட்டுச்சித்திரமாக வரைந்த ''சிந்து நதியின்மிசை நிலவினிலே'' என்ற பாரதி பாடலுக்குரிய சித்திரம் வெளிவந்து

பெரும் பாராட்டுக்களைப் பெற்றுக் கொண்டது.

நல்லாசிரியன், பொதுநலத் தொண்டன், எழுத்தாளன், ஓவியன், நாடகப்பிரியன் என்றெல்லாம் கருதப்படும் சுந்தரமூர்த்தி ஆசிரியர் நம் மனதைவிட்டு நீங்காமல் இருப்பது, இச் சிறப்புக்களால் மாத்திரமன்று; அப்போது மயிலிட்டிப்பகுதிக்கு வரவிருக்கும் வைத்திய சாலை சம்பந்தமாக மத்திய ஸ்தானம் எது என்று குரும்பசிட்டிக்கும் அயற் கிராமங்களுக்கும் இடையே பெரும் போட்டியும் குழப்பங்களும் ஏற்பட்டபோது நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அவர் குரும்பசிட்டி வவுணத்தம்பைச் சந்தியே தகுதியான இடம் என வலியுறுத்திக் காரண காரிய ரீதியில்வீராவேசமாகப் பேசினர்; அங்ஙனம் எதிரிகளை மடக்கியபேச்சு அவரின் புகழை உயர்த்தியதோடு அவருக்கு நிரந்தர இடத்தையும் கொடுத்துவிட்டது. அவர் மிகப் பிரபல பேச்சாளர் என்பதை அன்று நிரூபித்ததோடு அவர் பேச்சு எதிர்காலத்தில் வவுணத்தம்பைச் சந்தியில் வைத்தியசாலை ஸ்தாபிப்பதற்குக் காரணமாகவும் அமைந்துவிட்டது.

ஆசிரியர், சுந்தரமூர்த்தி அவர்கள் படிப்படியாகப் புகழின் உச்சியில் தமது படிப்பு, கற்பித்தல், தொண்டு, எழுத்து, பேச்சு என்பவற்றின் மூலம் ஏறிக்கொண்டிருக்கையில் மிகஇளம்வயதில்(27வயது) தமக்கு ஏற்பட்ட கொடிய நோயினுல் எம்மை விட்டுப் பிரிந்துவிட்டார். ஆனுல் அவர் வளர்த்த இலட்சியங்கள் ஒருகாலும் அழியாது; அவர் பெயர் என்றும் மறையாது. அவரின் ஞாபகார்த்தமாக இளைஞர் சங்கம் சிவபுராணத்தைப் பதிப்பித்து வெளியிட்டது. அதன் உருக்கமான முன்னுரையில் வரும் வரிகள் இவை: ''ஆசிரியர் த. கந்தையாவோடு சமயமும் ஒழுக்கமும் போக, ஆசிரியர் வ. பொன்னுக்குமரனுடன் பேச்சும் படிப்பும் போக, உன்னேடு தொண்டும் செயலும் போய்விட்டதே. இந்த ஊருக்கு இனி யாரோ.''

சன்மார்க்க சபையின் ஆரம்ப ஸ்தாபகர்களுள் ஒருவரும் ஆரம்ப கால இணைக்காரியதரிசிகளில் ஒருவருமான ஆசிரியர் சுந்தரமூர்த்தி அவர்களது அரிய உருவத்தை, அவருடன் உடன்பயின்ற பிரபல ஓவியரும் பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலை ஓவியப் பேராசிரியருமாகிய திரு. கனகசபாபதி மூலம் பெரிய அளவில் வர்ண ஓவியமாக அமைப்பித்துத் திரைநீக்கம் செய்து வைத்த படம் எமது சபையை அலங்கரிக்கிறது. சபையின் வளர்ச்சி கண்டு ஆசி கூறுகிறது.

''கடவுள் இரக்கமே வடிவாய் உள்ளவர்; நம்முட் குடியிருப்பவர். அவர், நாம் பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்காமலும், பொய் வந்துழலுஞ் சமய நெறிப் புகுதாமலும், நம்மை மறுசமயங்களினின்றும் சதா பேதகஞ் செய்து கொண்டேயிருக்கின்முர். பேதகஞ் செய்தலாவது, புன்னெறியை விலக்கி நன்னெறியிற் செலுத்துவது. இதனுலே கடவுளுக்குச் 'சிவம்' என்று பெயர். சிவம் என்முல் நன்மை. சிவம் அளவிறந்த வல்லமை உள்ளது. சிவத்தின் வல்லமைக்குச் சத்தி என்று பெயர்''.

# ஆசிரியர், திரு. வ. பொன்னுக்குமரன் அவர்கள்

[1911 — 1937]

நறுமணம் பரப்பிப் பூத்துக் குலுங்கிக் கண்ணுக்கும் மனதுக்கும் இனிமையூட்டிய முல்லைக் கொடி ஒன்று திடீரென்று அழிக்கப்பட்ட நிலையிற் காணப்பட்டால் எவ்வளவு வேதனை ஏற்படுகின்றதோ, அதே நிலைதான் ஆசிரியர் திரு. வ. பொன்னுக்குமாரு நம்மை விட்டுப் பிரிந்து இறைவனடி சேர்ந்தபோது சன்மார்க்க சபைக்கு ஏற்பட்டது. தமிழ்த்தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் மிக முதிர்ந்த பருவத்தில் இறைவனடி சேர்ந்தபோது அவரைப்பற்றி எழுதிய 'கல்கி' அவர்கள் 'வீழ்ந்த ஆலமரம்' என்று குறிப்பிட்டார்கள். அதே பாணியில் கூறுவதானல் பொன்னுக்குமரனின் பிரிவு இவ்வூருக்கும் எமது சபைக்கும் 'அழிந்த முல்லைக் கொடி'யையே ஞாபகப் படுத்தும். இது உண்மை; முழுவதும் உண்மை.

ஆசிரியர் திரு. வ. பொன்னுக்குமரன் 'ஈழகேசரி' திரு. நா. பொன்னையா அவர்களைச் சிறிய தந்தையாராகப் பெற்ற பாக்கியம் உடையவர்; அவருடைய அரவணைப்பிலே வளர்ந்தவர். எதற்கும் கலங்காத பொன்னையா அவர்கள், தமது மக்களையே ஒன்றன்பின் ஒன்ருக இழந்தபோதும் அழுதே அறியாத பொன்னையா அவர்கள் பொன்னுக்குமரனின் பிரிவின் போது அழுதே விட்டார். தாம் பதிப்பித்த ஆண்டு மலர் ஒன்றில் பொன்னுக்குமரனின் பிரிவு தம்மை நிலைகலங்கச் செய்துவிட்டது என்ற கருத்தில் எழுதியும் உள்ளார். அந்த வாக்கியங்களில் இருந்தே பொன்னுக்குமரனின் அருமை பெருமைகளை நாம் ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம்.

குரும்பசிட்டியாகிய இந்த ஊர் ஏறக்குறைய நாற்பத்தைந்து ஆசிரியர்களைப் பெற்றிருக்கிறது. அவர்களிற் பலர் நல்லொழுக்கம் உடையவர். பலர் கடவுட்பக்தி மிக்கவர். அநேகர் திறமையான ஆசிரியர். சிலர் செயல்திறம் மிக்கோர். ஒரு சிலரே விவேகமும் கூர்ந்த மதியுமுடையோர். அந்த ஒருசிலருள்ளும், விவேகத்துக்கு எடுத்துக்காட்டாக, செயற்றிறமைக்கு உதாரணமாக, ஒழுக்கத்துக்கு ஒரு வரம்பாக நின்ற ஒருவரைக் குறிப்பிட வேண்டுமென்ருல் அவர் ஆசிரியர் திரு. வ. பொன்னுக்குமரனே யாவர்.

ஆசிரியர் திரு. வ. பொன்னுக்குமரன் அவர்கள் குரும்பசிட்டி மகாதேவ வித்தியாசாலையிற் படிக்கும் போதும் அங்கே ஆசிரியராய் இருக்கும்போதும் அசாதாரணமான விவேகி என்று பெயர் பெற்றுவிட்டார். எப்போதும் படிப்பதையே தொழிலாகக் கொண்ட அவர் மற்றவர்களையும் படிக்கும்படி தூண்டுவார். அவர் இருக்கும் இடத்தில் எப்போதும் ஒரு கூட்டம் மாணவர் இருப்பர். தமக்கு முன் இருக்கும் மாணவன் எந்த நேரமாயினும் படியாமல் சும்மா இருத்தலையோ தெருச்சுற்றிப் பொழுது போக்குவதையோ அவர் கண்டிப்பார். கொண்டுவா புத்தகத்தை என்று அவன் படிக்கும் நூல்களைப் படிப்பிப்பார். அல்லது தான் படித்துக்கொண்டிருக்கும் புத்தகத்தைப் பற்றி அவனுக்கு விளங்கக்கூடிய முறையில் அறிமுகஞ் செய்து சொல்லிக்கொண்டிருப்பார். பிற்காலத்தில் அவர் சபை ஆதரவில் ஆசிரிய தராதரப்பத்திர வகுப்பொன்றையும் பிரவேச பண்டித வகுப்பொன்

றையும் நடாத்திப் பலரைச் சித்தி யெய்தச் செய்தார்.

*1932, 1933*ஆம் ஆண்டுகளில் திருநெல்வேலி சைவ ஆசிரிய கலா சாலையிற் பயிற்சி பெற்றுக்கொண் டிருக்கும்போது இப்போது பிரபல பண்டிதர்களாய் இருக்கும் சிலர் அவரோடு உடன்படிக்கும் மாண வர்களாய் இருந்தனர். அப்படிப் பட்ட சூழலிலேகூட பொன்னுக் குமரன் மாணவர் சங்கத் தலைவ ராகவும், கைப்பந்தாட்டக் 'கப்ரன்' ஆகவும், பாடங்களில் முதன்மை பெற்றவராகவும் விளங்கித் தான் படித்த பாடசாலைக்கும் பிறந்த ஊருக்கும் புகழை அள்ளிக்கொடுத் தார். பல கைப்பந்தாட்டப்போட்டி களில் வெற்றியீட்டிச் சைவாசிரிய கலாசாலையைப் பெருமையுறச் செய்தார். அவர் சைவாசிரிய கலாசாலையிற் படித்து ஆசிரியராய் வெளிவந்தபின் அக்காலத்தும் இக் காலத்தும் புகழ்பெற்றிருக்கும் மகா வித்துவான் ந. சுப்பையாபிள்ளை யவர்களிடம் சனி, ஞாயிற்றுக் கிழமைகளிற் சென்று முறைப்படி தமிழ்க்கல்வியை- இலக்கண இலக்கி யங்களைப் பயின்று மதுரைத் தமிழ் பாலபண்டித வகுப்பிற் சித்தியெய் தினர். பண்டித வகுப்புக்கு ஆயத் தம் செய்தார். அவரது மரணம் நமது ஊரிலே தமிழ்ப்பண்டித உல கத்துக்கே உதாரணமாய் விளங்கக் கூடிய ஒருவரை இழக்கச்செய்து விட்டது.

ஆசிரியர் வ. பொன்னுக்குமரன் திறமையான கைப்பந்தாட்ட வீரன். *1930*ஆம் ஆண்டிலே இந்த ஊரில் அந்த விளையாட்டைத் தொடக்கியவர் அவர். இரண்டு வரு டத்துக்கிடையிலேயே பலரை அவர் சேர்த்துப் பழக்கித் திறமையான கோஷ்டி ஒன்றை உருவாக்கி விட் டார். கட்டுப்பாடு, ஒழுங்கு, விளை யாடுமிடத்தைக் கவர்ச்சியாய் வைத்திருத்தல், தலைமைக்குக் கீழ்ப் படிதல் என்பனவற்றில் அவர் மிக அக்கறை செலுத்துவார். அவற்றிற் சிறு குற்றம் கண்டாலும் அவர் சகிக்கமாட்டார். எத்தனையோ போட்டி விளையாட்டுக்களை இவ் வூரிலும் பிறஊரிலும் அவர் நடாத்தி வெற்றி கண்டார். அவரிடஞ் சிறு வயதிலே கைப்பந்தாட்டம் பழகிய சிலர் இன்றும் உற்சாகமாகவும் திறமையாகவும் விளையாடுகின்ற னர். ஒவ்வொரு விளையாட்டின் வெற்றியின்பின்னும் "நாங்கள் பொன்னுக்குமாருவிடம் பழகிய வர்களல்லவா?" என்று பெருமை யுடன் கூறுகின்றனர்.

பொன்னுக்குமரனிடம் இருந்த இன்னொருசிறப்பு, திறமை எங்கிருந் தாலும் அதை வரவேற்று அவர் களை அரவணைத்துத் தம் குழுவிற் சேர்த்துக்கொள்வது. அவர்களை அவர் நடாத்தியவிதம் சகோதர பாசத்தைவிட மேலானது. அவர் களும் ஆசிரியர் அவர்களை நன்கு மதித்து அவர் சொற்படி கேட்டுப் புகழிற் பங்குகொண்டு மேலோங் கினர். சன்மார்க்க சபையை ஸ்தா பித்து அதை ஒரு சிறந்த தாபன மாக்கி நடாத்தியதிற் பொன்னுக் குமரனின் பங்கு அதிகமானது. சபையின் குறிக்கோளை நழுவவிடா மல் அதை வெற்றிகரமாக நடாத் தியவர் அவர்தான். சிறந்த பேச் சாளரான அவர் கூட்டங்களிற் பேசும் அழகே தனி. 'கவிகளில் அமிழ் தம்' என்ற அவரது ஆராய்ச்சிப் பேருரை அவர் செய்த இறுதிச் சொற்பொழிவாகும். தமிழ் இலக் கியமெங்கும் பரந்து கிடக்கும் 'அமிழ்தம்' என்ற சொல்லை எவ் வெப் புலவர்கள் எப்படி எப்படிக் கையாண்டார்கள் என்றெல்லாம் விளக்கிவிட்டு மண்டோதரி புலம் பல் பாடலாகிய 'பஞ்சேரி யுற்ற தென்ன' என்ற பாடலை அவர்

விமர்சித்து 'அமிழ்தாற் செய்த நஞ்சு' என்ற தொடரைக் கம்பன் கையாண்ட விதத்தை அவர் தொட்டுக்காட்டியபோது சபை பிரமித்தது. அந்த வயதில் அப்படியான ஓர் ஆராய்ச்சிப்பேச்சை நிகழ்த்த யாராலும் முடியாது. அதற்குப் பரந்த படிப்பும் நுட்பமான அறிவும் வேண்டும்.

குரும்பசிட்டி மகாதேவா வித்தியாசாலையில் இருந்து மாறிக் குப்பிளான் விக்கிநேஸ்வர வித்தியாசாலையில் ஆசிரியராய் அமர்ந்து தலைமையாசிரியர் திரு. கோ. நமசிவாய மவர்களின் வலக்கரம்போல விளங்கி அப் பாடசாலையை முன்னேற்ற எவ்வளவோ பாடுபட்டார். சிறந்த படிப்பித்தலுக்கு ஆசிரியர் பொன்னுக்குமாருதான் என்ற புகழை நிலைநாட்டினுர். அதோடு நில்லாமல் பல நாடகங்களை மேடையேற்றினுர். முதல் முழக்கம் செய்த சங்கிலியன் நாடகத்தை 1935இல் அவர் மேடையேற்றியுள்ளார் என்ருல்அவரது இரசனைத் திறத்தையும் தேசபக்தியையும் என்னென்பது?

இப்போதும் சன்மார்க்கசபை மண்டபத்தில் உள்ள வித்தல்பாய் படேல், லாலாலஜபதிராய், கோபாலகிருஷ்ணகோகலே, மோதிலால் நேரு, திலகர், மாளவியாஜீ முதலியோரது படங்கள் பொன்னுக்குமரன் தென்னிந்தியச் சுற்றுப் பிரயாணத்தின்போது வாங்கிவந்து அலங்கரித்தவையே. அவர் சித்திரக் கலையை ஈழத்தில் வளர்த்த திரு. எஸ். ஆர். கனகசபை அவர்களிடம் சித்திரம் பயின்று தராதரப் பத்திரம் பெற்றதோடமையாது இவ் ஊரிற் சித்திரக் கலையை வளர்க்க அரும்பாடுபட்டார். அவருடைய பென்சில் சித்திரங்கள் பல காட்சிகளிற் பரிசைப் பெற்றுள்ளன.

சர்வாதிகாரம் எந்த உருவத்தில் தலைகாட்டினுலும் எதிர்ப்பதில் அவர் முன்னணியில் நின்ருர். தம்மவர் பிறர் என்று பாராமல் நியாயத்தின் பக்கம் நின்று வாதாடினுர். ஆங்கில மோகம் தலைக்கேறி, கிராமத்து மக்களை உத்தியோகத்தர் ஒதுக்கித்தள்ளி நான் குரும்பசிட்டியில் பிறந்தவன் என அவர்கள் சொல்ல வெட்கப்பட்ட காலத்திலே தமிழாசிரியர் சமூகத்தை ஊருக்குத் தலைமைதாங்கச் செய்து பொன்னையா அவர்களை வழிகாட்டியாகக் கொண்டு இந்த ஊரைப் பீடும் பெருமையும் பெறச் செய்தே தீருவேன் எனக் கங்கணம் கட்டி உழைத்த பெருமை பொன்னுக்குமரனுடையது.

ஆசிரியர் பொன்னுக்குமரன் அவர்கள் தமிழாசிரியர் சமூகத்தை ஊருக்குச் சேவை செய்யும் ஊழியராகச் செய்து சன்மார்க்கசபை மூலம் நமது கிராமம் பெருமையும் சிறப்பும் பெற வழி வகுத்தவராகும்.

அவருடைய ஞாபகார்த்தமாகச் சன்மார்க்க சபையார் திருவெம்பாவை, திருப்பள்ளி எழுச்சி ஆகிய இரண்டும் சேர்ந்த நூலொன்றை இலவசமாகக் கொடுத்தார்கள். அவர் பெயரில் சன்மார்க்கசபையின் நூல் நிலையத்தில் ஒரு பகுதி திறந்து வைக்கப்பட்டது. குமரன் விளையாட்டுக் கழகத்தை சன்மார்க்கசபை நெடுங்காலம் நடாத்தியது. குப்பிழான் கிராமோதயமலரில் அவர் படத்தை வெளியிட்டுக் கௌரவித்தார்கள்.

ஆதர்ச புருடராகத் திகழுவார் என எதிர்பார்த்த பொன்னுக்குமரன் 26ஆவது வயதில் எம்மை விட்டுப் பிரிந்தார். முல்லை சாய்ந்து விட்டது. ஆனுல் அது தந்த நறுமணம் இன்னமும் சுகந்த வாசனை தந்துகொண்டே இருக்கிறது.

3

# ஆசிரியர், திரு. தி. இராசிங்கர் அவர்கள்

''சன்மார்க்கசபையினது ஆரம்ப காலம் தொடங்கித் தமது அந்திய காலம் வரையும் ஷெ சபையின் அங்கத்தவராகவும் காரிய நிர்வாக சபை அங்கத்தவராகவும் அமர்ந்து, கிராம சங்கத் தேர்தலில் சன் மார்க்க சபை யங்கத்தினருள் ஒரு வரை நிறுத்தவேண்டுமென ஷெ சபை தீர்மானித்தகாலை அவ்வாறு நிறுத்தப்பட்டவர்சார்பாகத் தமது ஏக சகோதரனையும் உற்றார் உற வினரையும் எதிர்த்தும் பகைத்தும் சலியாதுழைத்து வெற்றியீட்டுவ தற்குக் காரண ரொருவராய்த் திகழ்ந்தவரும், சன்மார்க்க சபைக் குரிய நிரந்தர இடவசதி அமைக்க வேண்டுமென்று உறுதி கொண்டு தான் ஷெ சபையின் தனதிகாரி யாக நியமனம் பெற்றவாண்டு அவ் வரிய பணிக்காக ஏறக்குறைய ரூபா 195 சன்மார்க்க ஐக்கிய நாணய சங்கத்திற் சேர்த்து இப் பொழுது சன்மார்க்க சபை வளவு எனப் பெயர்பெறும் காணியை வாங்குவதற்கு மூலதாரமாக அடி கோலியவரும்.

''தமது சொந்தக்கிராமத்தின் நற்பெயருக்காக அயற் கிராமத்துக் குப் போய் அகிம்சா முறை நின்று 'யூடாஸ்காறியொற்'றின் சதியா லோசனை போன்று ஒழுங்கு செய் யப்பட்ட சதியாலோசனைக்காரர்க ளால் நன்கு புடைக்கப்பெற்றவர்க ளுள் ஒருவருமான குரும்பசிட்டி திருவலிங்கம் - இராசிங்கர் என்பவ ரின் அகால மரணத்தை முன்னிட்டு இச்சபை அனுதாபப்படுகிறது. அன்னவர்தம் ஆன்மா சாந்தி யடையுமாறு பிரார்த்திக்கிறது.''

இங்ஙனமான தீர்மானத்துக்கு அருகதையுடையவராகத் தமது வாழ்க்கையையும் சேவையையும் அமைத்து வாழ்ந்தவர் சிறப்புக் குரிய ஆசிரியர் திரு. தி. இராசிங்கர் ஆவர்.

அவர் மிக இளமையில் நம்மை விட்டுப் பிரிந்தாலும் தாம் வாழ்ந்த காலத்து ஆசிரியப் பணியோடு நின்றுவிடாது நமது கிராமத்தின் வளர்ச்சிக்காக ஊழியம் செய்து உழைத்தோர் வரிசையில் முன் அணியில் இடம்பெறும் உத்தம ராவர். ஊரெழு கணேச வித்தியா சாலையில் ஆசிரியராகப்பணியாற்றி மதிப்பும் புகழும் மிக்க ஆசிரியராக விளங்கியவர். [நமது கிராமத்தின் ஆசிரியர்களின் திறமைக்கும் - சிறப் புக்கும் ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார்.] தாம் கற்பித்த பாட சாலைக் கிராமத்து மக்களின் பேரன் புக்குப் பாத்திரராகி அவர்களால் நன்கு மதிக்கப்பட்டவர் என்பதை அவரது மரண யாத்திரையில் அவ் வூர் மக்கள் பெருந்தொகையாகப் பங்குபற்றிச் சிறப்பித்தமை சான் றாகும்.

இவ் உத்தம ஊழியர் நீண்ட காலம் வாழ்ந்து சேவை செய்யமுடி யாதமை சன்மார்க்க சபைக்கும் நமது கிராமத்துக்கும் பெரும் நட்ட மாகும்.

# 'ஈழகேசரி' நா. பொன்னையா அவர்கள்

"பாலர்க்கு வேண்டும் பழமொழி பாட்டு
பக்குவ மான தமிழிற் கவிதை
சாலச் சிறந்தவர் கட்டுரைக் கோவை
தமிழில் மலர்ந்த சிறுகதைச் செல்வம்
கூலிக்கு மாரடிக் காத முயற்சி
குணம்பல கொண்டு மலர்ந்த அரும்பு
போலிச் சரக்கல்ல; ஆண்மையில் வாழ்ந்த
பொன்னைய வள்ளல் அளித்து மறைந்தான்"

கவிஞர் சோ. தியாகராசன் அவர்களது மேற்படி கவிதை ஈழ கேசரி நா. பொன்னையா அவர்களை ஓரளவு படம்பிடித்துக் காட்டு கிறது. "போலிச் சரக்கல்ல; ஆண்மையில் வாழ்ந்த பொன்னைய வள்ளல்" என்ற தொடரைக் கவி ஞர் சரியானபடி போட்டிருக்கிறார். அட்சரலட்சம் பெறும் அந்தத் தொடர் ஆணித்தரமானது; அர்த்தபுஷ்டியுள்ளது.

சன்மார்க்க சபையின் தந்தை யெனக் கொண்டாடப்படும் திரு. நா. பொன்னையா அவர்கள் வாழ்க் கையில் எவ்வளவோ மேடுபள்ளங் களைக் கண்டவர், வறுமையின் கோரப் பிடியிற் சிக்கித் தத்தளித் தவர். பணம் வந்து சேர்ந்தபோது அதைச் சேர்த்து வைத்துக் காக் கும் பூதம்போல் இராமல் எத்த னையோ கல்லூரிகளுக்கும், எவ்வ ளவோ பொதுநல ஸ்தாபனங்களுக் கும், கொள்கை வழுவாத அரசி யல் வாதிகளுக்கும், துன்பப்பட்ட கல்விமான்களுக்கும், மாணவர் களுக்கும், புலவர்களுக்கும் அள்ளி அள்ளிக் கொடுத்தவர். அதைத் தான் கவிஞரது 'வள்ளல்' என்ற சொல் குறிப்பிட்டுக்காட்டுகின்றது.

'ஜெயமுண்டு பயமில்லை மனமே' என்ற பாரதி வாக்கையும் 'வானந் துளங்கிலென் மண்கம்பமாகி லென்' என்ற அப்பர் பாடலையும் (ஈழகேசரித் தலையங்கத்தின்மேலே அதன்குறிக்கோளாக இந்தப்பாடல் நெடுங்காலம் வெளிவந்தது) அடிக் கடி உச்சரிக்கும் திரு. நா. பொன் னையா அவர்களின் மனத்திண்மை யாருக்குமே இருந்ததில்லை. 'தன் னற் சாதிக்க முடியாதது எதுவுமே இல்லை' என்ற மனப்பான்மை அவ ருடையது. வெறும் வாய்ச்சொல் மலிந்த அரசியல் வாதிகளுங் குறிக் கோள்களை மேடையில் மட்டும் உளறும் சொற்பொழிவாளர்களும், கையாற் பணம்விடாத தமிழ்த் தொண்டர்களும் நிறைந்த இந்த ஈழநாட்டிலே தனிமனிதனாய் நின்று அவர் சாதித்த சாதனைகள் எண்ணிறந்தவை; ஏடுகொள்ளா தவை. 'கூலிக்கு மாரடிக்காத முயற்சி, குணம்பல கொண்டு மலர்ந்த அரும்பு, போலிச் சரக் கல்ல; ஆண்மையில் வளர்ந்த பொன்னைய வள்ளல்' என்ற, கவி ஞரது வரிகளின் ஆழம் அவைதான்.

ஆங்கில மோகம் தலைவிரித் தாடிய காலத்திலே, '1930ஆம் ஆண்டில் தமிழிலிலே அரசியலைச் சொல்ல முடியுமா? சிறுகதை, நவல், கட்டுரை எழுதமுடியுமா? தமிழ்ப் பத்திரிகையை வாங்குபவர் யார்? அதிலும் வாரப்பதிப்பில் என்ன இருக்கப்போகிறது?' என் றெல்லாம் பெரியவர்கள் அறிஞர் கள் உச்சரித்த காலத்திலே 'ஈழகேசரி' என்ற வாரப் பத்திரி கையை யாருடைய துணையுமின் றித் தொடங்கி, மின்சார வசதிக ளற்ற அந்நாளிலே கையாலே சுழற்றி அச்சடித்துப் பிழை ஒன்றும்

இல்லாமல், இலக்கியம், சமயம், அரசியல் மூன்றையும் மூன்று கண்ணெனமதித்து இருபத்தைந்து வருடம் பெரும்பொருள் நட்டத்துடன் நடாத்தினரே. அது அவரது வரலாற்றுக் காவியம். ஈழத்துத் தமிழ் வளர்ச்சியிலே 'ஈழகேசரிக் காலம்' என்று எழுத்தாளர்கள் பெருமைப்படுகிறார்கள். அது பொன்னையா அவர்களின் இரத்தத் துளி; நெற்றி வியர்வை; நீண்ட பெருமூச்சு.

தமிழ்ச் சாகியத்தாரின் தேவைகளை, நோக்கங்களைப் பகிரங்கப்படுத்துவதற்கு அச் சாகியத்தாருக்கென ஒரு தேசிய ஆங்கில வெளியீடு இல்லாக் குறையை நன்குணர்ந்து, தாம் நடாத்தி வந்த தமிழ்ப் பத்திரிகையால் ஏற்பட்ட பொருள் நட்டத்தையும், சிரமத்தையும் பொருட்படுத்தாது ஆசிரியப் பேரறிஞரும் அரசியல் ஞானியுமாகும் திரு. S. H. பேரின்பநாயகம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு 'கேசரி' (Kesari) என்னும் ஆங்கில வார இதழை அச்சிட்டுச் சிலகாலம் நடாத்தினர்.

1939ஆம் ஆண்டுக்கு முன்னே ஈழத்துப் பாடசாலைகளில் மேல் வகுப்புக்களிலே படித்த புத்தகங்களில் இருந்த பாடங்கள் எங்கள் மாணவர்க்கு எட்டுணையும் பொருந்தாதவை. குற்றால நீர்வீழ்ச்சியும், மேட்டூர் அணைக்கட்டும், தளவாய் அரியநாயக முதலியாரும் தலைவேதனையைக் கொடுத்தன. நித்திலவாசகமும், பூந்தமிழ் வாசகமும் பவனி வந்தன. யுத்தகாலத்தை நன்கு பயன்படுத்திக்கொண்டு பொன்னையா அவர்கள் பாடப்புத்தகங்களை வெளியிட்டார்கள். ஐந்து வருடங்களுக்கிடையில் ஐம்பதுக்கு மேற்பட்ட புத்தகங்களை வெளியிட்டு ஈழம் பாடப்புத்தக விடயத்தில் தமிழ்நாட்டை எதிர்பாராத நிலையை உண்டாக்கினர்கள். பாலபோதினி, இலக்கிய மஞ்சரி, தமிழ் மஞ்சரி, உரைநடைச் சிலம்பு, உபபாட நூல்கள் என அவர் வெளியிட்ட துணிவைக் கண்டு ஈழம் பிரமித்தது. அவரது இந்தத் துணிவுதான் பிற வெளியீட்டாளர்களுக்கும் துணிவைக் கொடுத்தது.

பாடப்புத்தக வெளியீட்டால் வரும் இலாபத்தை, பொன்னையா அவர்கள் பத்திரிகை வெளியிடுவதற்கும் நல்ல இலக்கண, இலக்கிய நூல்களை வெளியிடுவதற்கும் செலவிட்டார். தொல்காப்பியம் முழுவதையும் (கணேசையர் உரை விளக்கக் குறிப்புக்களுடன்) அழகாகப் பதிப்பித்தார். சிவசம்புப் புலவர் பிரபந்தத் திரட்டு, வசந்தன் கவித்திரட்டு, ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம், நாவலர் நினைவு மலர், கல்வி மலர் என அவர் வெளியிட்டவை ஒவ்வொன்றும் நின்று நிலைபெறக் கூடியவை. ஆனபடியாலேதான் அவர் 'தமிழ்த் தொண்டர்' பொன்னையா ஆனர்.

அரசியலில் அவர் தேசியவாதி. வகுப்புவாதத்தை அவர் எப்போதும் ஆதரித்ததில்லை. பிரபல அரசியல் வாதிகளெல்லாம் வகுப்புவாதச் சூறுவளியிற் சிக்குண்டு போர்க்குரல் எழுப்பியபோதெல்லாம் தேசிய வாதிகளுக்கு உறுதுணையாய் நின்றவர் திரு. நா. பொன்னையா அவர்களே. அதனுல் அவர்கள் பட்ட இன்னல்களோ பல. அவருடைய மன வைராக்கியம் அந்த இன்னல்களையெல்லாம் துச்சமாக மதித்தது.

சைவவித்தியாவிருத்திச் சங்கம், மலையாளப் புகையிலைக் கூட்டுறவுச் சங்கம், மயிலிட்டிக் கிராமசங்கம், பண்டகசாலை யூனியன், சன்மார்க்க சபை, குரும்பசிட்டி ஐக்கியநாணய சங்கம், ஐக்கிய பண்டகசாலை,

திருமகள் அழுத்தகம், தனலக்குமி புத்தகசாலை, வட-இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம் என்ற பத்து ஸ்தாபனங்களுக்குமேல் அவர் முக்கிய பதவிகளை வகித்துப் பம்பரம் போலச் சுழன்று செய்த தொண்டிருக்கிறதே, அது ஒரு மாபாரதம் ஆகும். ஒவ்வொன்றும் அவர் தொண்டால் மிளிர்ந்தன. எனினும் இன்றும் அவர் புகழை உயர்த்திஈழம் முழுவதும் பரவச் செய்த பெருமை சன்மார்க்கசபைக்கே உரியது.

'ஈழகேசரி' நா. பொன்னையா அவர்கள் தான் பிறந்த குரும்பசிட்டி நன்கு வாழப் பெரும் பணி புரிந்தார்—அவர் சன்மார்க்க சபையை ஸ்தாபித்தவர்களில் முக்கியஸ்தராகத் திகழ்ந்தார். சமயம், இலக்கியம், கலை, கிராமத்தொண்டு என்ற நான்கு துறைகளிலும் சபைக்குத் தலைமை தாங்கி ஏறக்குறைய இருபது வருடம் பாடுபட்டுக் கிராமத்தின் தேவைகளைப் பூர்த்தியாக்கச் சபையுடன் ஒன்றி உழைத்தார். தான் கனவுகண்ட மாபெரும் தொழிற்சாலைகளோடு கூடிய ஸ்தாபன மொன்றுக்காக வாங்கிய பெரு நிலப்பரப்பில் மத்திய கல்லூரி ஒன்றை நிறுவி அரசாங்கத்திடம் ஒப்படைத்தார்.

சன்மார்க்க சபை மண்டபம் கட்டும் பொறுப்பை ஏற்றுக் கொண்டு அழகான மண்டபம் ஒன்றைக் கட்டியுதவினர். பல நூல்களையும், அக்காலத்தில் 'ஈழகேசரி'க்கு மாற்றுப் பத்திரிகைகளாக வந்த அநேகம் பத்திரிகைகளையும் வாசிகசாலைக்கு உதவினர். சன்மார்க்க சபையார் பொன்னையா அவர்களின் ஞாபகார்த்தமாக ஆண்டு தோறும் நினைவு விழா நடாத்துகின்றனர். பொன்னையா குடும்பத்தினர் உதவியோடு சென்ற மூன்று வருடமாகப் பேச்சுப் போட்டி நடாத்தித் தங்க, வெள்ளிப் பதக்கங்களும் புத்தகங்களும் பரிசாக வழங்குகின்றனர்.

ஸ்ரீமதி பொன்னையா அவர்கள் திரு. பொன்னையா அவர்கள் இல்லாத குறையை நிவிர்த்தி செய்து சபையோடு ஒத்துழைப்பதைச் சபை பாராட்டுகிறது. கட்டுவன், குரும்பசிட்டி, வயாவிளான் ஆகிய மூன்று ஊர்களையும் இணைக்கும் P. W. D. தெருவுக்கு அவர் பெயரை மயிலிட்டிக் கிராம சங்கம் சூட்டியிருக்கிறது. குரும்பசிட்டியில் உள்ள ஐக்கிய பண்டகசாலை 'பொன்னையா நினைவுப் பண்டகசாலை' யாகப் பெயரிடப்பட்டிருக்கிறது. பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றத்தார் நல்ல நூல்களை வெளியிட்டு அவர் புகழை நிலை நாட்டியுள்ளனர். அவரது உருவப் படம் சன்மார்க்க சபை மண்டபத்தில் அழகொழுக மிளிர்கிறது.

அவர் காட்டிய பாதையிற் செல்வது சன்மார்க்க சபையின் குறிக்கோளாகும். அவரை நினைவு கூர்வது குரும்பசிட்டி மக்களின் கடமையாகும். பொன்னையா புகழ் வாழ்க!

5

# திரு. கோ. அப்பாக்குட்டி அவர்கள்

"ஈழகேசரிப் பொன்னையா பல அருஞ் செயல்களைச் செய்து பொருளும் புகழும் ஈட்டினர். இவ் வருஞ் செயல்களைச் செய்து முடிப் பதற்கு உதவியவர்களில் முதலிடம் அப்பாக்குட்டிக்கே உரியது. பொன் னையா அஞ்சா நெஞ்சன்; தீவிரப் போக்குள்ள ஒருவர்; நாளையைப் பற்றி அதிகம் சிந்தித்தவர் போலத் தெரியவில்லை. பெரும் முயற்சி களில் ஈடுபட்டார்.... இவை யாவற் றிலும் அப்பாக்குட்டிக்கும் பெரிய பங்குண்டு. அவர் மேடைப்பேச்சுச் செய்ததில்லை; 'மாபெருங் கூட் டங்களிற்' கலந்து கொள்ளவில்லை; எவ்வகை ஆடம்பரத்தையும் விரும்பவில்லை. அலுவலகத்தில் வெறும் மேல்தான். ஒரு சால்வைத் துண்டுதானுமில்லை. பொன்னையா நிறுவிய முயற்சியை ஆமைபோன்ற அடக்கத்துடன் கண்ணுங் கருத்து மாய்ப் பேணி வளர்த்து வந்தார்"

ஈழத்தின் பிரபல கல்விமானும் காந்தீயவாதியுமான திரு. S. H. பேரின்பநாயகம் அவர்கள் திரு. கோ. அப்பாக்குட்டி அவர்களைப் பற்றி அளந்து எழுதிய வார்த்தை கள் இவை. அப்படிப்பட்ட பெரிய வர்களிடமிருந்து பெறும் நன் மதிப்பே ஒருவர் பெறற்கரும் பேறு எனலாம்.

*10-7-63*இல் தமது அறுபத் தொரு வயதில் அகால மரணம் அடைந்த திரு. கோ. அப்பாக்குட்டி அவர்கள் முப்பத்துமூன்று வருடங்க ளாக, திரு. நா. பொன்னையா அவர் கள் நிறுவிய தனலக்குமி புத்தக சாலை, திருமகள் அழுத்தகம் என்னு மிவற்றில் சேவை புரிந்து பொன் னையா அவர்களுக்கு வலக்கரம் போல உதவினர்கள்.

திரு. கோ. அப்பாக்குட்டி அவர்கள் தாம் பிறந்த ஊராகிய குரும்பசிட்டியை அதிகம் நேசித்த வர். அவரது கிராமப்பற்று வெறும் வாய்ச்சொல்லோடு மட்டும் நின்று விடவில்லை. பெரியார்கள் பலருடன் சேர்ந்து சன்மார்க்க சபையை ஸ்தாபிக்கப் பாடுபட்டார்கள். அதன் வளர்ச்சிக்காகத் தீவிரமாக உழைத்தவர்கள்.

எங்கள் கிராமத்திலுள்ள தபாற்கந்தோர், வைத்தியசாலை முதலியவற்றை அரசாங்கத்திடம் பெறச் சன்மார்க்க சபைக்குப் பக்க பலமாக நின்று பாடுபட்டவர். அவர் வெளி விளம்பரத்தையோ தற்புகழ்ச்சியையோ விரும்பாதவர். ஆனபடியால் அவரது சேவை அநேக மாக வெளியே தெரியவில்லை.

திரு. கோ. அப்பாக்குட்டி அவர்கள் நிறைய வாசிப்பவர். அவர் எந்த நேரமும் ஏதாவதொன் றைப் படித்துக்கொண்டேயிருப் பார். இக்காலத்துப் படிப்பாளிகள் என்று கருதப்படுவோரை விட அவர் நன்கு கற்றவர். பெரியார் வரலாறுகள், சைவசமய நூல்கள், பிறநாட்டு நவல்கள், சிறுகதைகள் என்பவற்றில் தமிழிலே வந்த அநேக நூல்களை அவர் வாசித்துள் ளார். எந்தப் பத்திரிகை விசேட மலர் வெளியிட்டாலும் அவர் வாங் காது விடுவதில்லை. நூல்களிற் பல வற்றை மீண்டும் 'பைண்டு' செய்து அழகாக மேலுறை போட்டுப் படிப் பது அவர் வழக்கம். எத்தனை வரு

டங்கள் சென்றாலும் அவை புத்தம் புதிது போலிருக்கும். புத்தகத்தை வாங்குவதும் சேமிப்பதும் இலகுவான காரியமன்று. அது நம்மையை விட்டுப் போய்க்கொண்டேயிருக்கும். புத்தகங்களில் ஒன்றை இழந்தாலும் புத்திரசோகம் போன்ற உணர்ச்சி ஏற்படும். திரு. கோ. அப்பாக்குட்டி அவர்களுக்குக் குழந்தைகள் இல்லை. அவர் தமது ஒவ்வொரு நூலையும் ஒவ்வொரு குழந்தைகள் போலக் காப்பாற்றினார்கள். தாம் அப்படிப் பேணிய 500 நூல்களை 1963ஆம் ஆண்டு பங்குனி மாதம் 'ஈழகேசரி' பொன்னையா நினைவு தினத்தன்று சன்மார்க்க சபைக்கு மனமுவந்தளித்தார்கள். பற்பல துறைகளிலும் சென்ற இருபத்தைந்து ஆண்டுகளில் வெளிவந்த சிறந்த நூல்கள் அவை. இந்த அன்பளிப்பு அவர் சன்மார்க்க சபையின் மேல் வைத்திருந்த நன்மதிப்பைக் காட்டுகிறது.

அச்சுத்தொழிலில் அழகு, சுத்தம், பிழையின்மை என்பவற்றை மூச்சாகக்கொண்டு வாழ்ந்தவர் 'அச்சக வித்தகர்' அப்பாக்குட்டி அவர்கள். அவர் மனேஜராயிருந்த திருமகள் அழுத்தகம் ஒரு சிறு துண்டுப்பிரசுரத்தையாவது பெரிய நூற்பதிப்பையாவது பிறர் வியக்கும் வண்ணம் அதிக அக்கறையுடன் வெளியிட்டு வந்தது. ஈழகேசரி வெள்ளிவிழா மலர், கணேசையர் நினைவுமலர், இலங்கையிற் கலை வளர்ச்சி, சைவசமயக் கட்டுரைகள், சைவசமய போதினிகள் முதலிய வெளியீடுகள் அவர் வேலைத் திறமையை நன்கு வெளிக்காட்டுகின்றன.

தரமான இலக்கிய நூல்களை எழுத்தாளர்களிடம் பணங் கொடுத்து வாங்கி (இது ஈழத்தின் புதுமை) நன்றாக வெளியிட வேண்டுமென்ற பெருநோக்கங் கொண்டவர் அவர். அந்த நல்லெண்ணத்தின் விளைவாக, 'ஈழத்தின் பிரபல எழுத்தாளர் திரு. வ. அ. இராசரத்தினம் அவர்கள் எழுதிய 'கொழுகொம்பு', திரு. சி. கதிரவேற்பிள்ளை (எம். பி., கோப்பாய்) அவர்கள் எழுதிய 'மேல்நாட்டுத் தரிசன வரலாற்றுச் சுருக்கம்', கலைப்புலவர் திரு. க. நவரத்தினம் அவர்கள் எழுதிய 'இலங்கையிற் கலைவளர்ச்சி', மட்டுநகர் திரு. பண்டிதர் வி. சீ. கந்தையா அவர்கள் எழுதிய 'மட்டக்களப்புத் தமிழகம்' (இது அவர் இறந்தபின் வெளியிடப்பட்டது.) என்பவற்றை வெளியிட்டுவைத்தார்கள்.

திரு. நா. பொன்னையா அவர்களது பெயரால் பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம் ஒன்றை நிறுவி நூல்களை வெளியிட்டும், உருத்திரபுரம் திருப்பணிச்சபையில் முக்கிய பங்குகொண்டும், மகாவித்துவான் கணேசையர் ஞாபக நினைவுச்சின்னம் ஒன்றை அமைப்பதில் முன்னின்றுழைத்தும் அவர் செய்த தொண்டு போற்றப்படக்கூடியதே.

சன்மார்க்கசபை வளர்ச்சியில் அதிகம் அக்கறை காட்டி உழைத்தார்கள். சபையின் வெளியீடாகிய சைவசமய போதினி நூல் வரிசைகளை நன்கு பதிப்பித்து பதிப்பகத்துக்கு மாத்திரமன்றிச் சன்மார்க்க சபைக்கும் நல்ல புகழைத் தேடித்தந்தவர் அவர். அவர் சபைக்குச்செய்த சேவையை நினைவுகூரும் காரணமாக அவரது நிழற்படம் சபையிலே திரைநீக்கம் செய்யப்பெற்றுச் சபை மண்டபத்தை அலங்கரிக்கின்றது. அவரின் கிராமப் பற்றும் சேவா மனப்பான்மையும் போற்றப்படக்கூடியதாகும். அவர் நினைவு எமது கிராமத்தில் என்றும் நின்று நிலவுவதாகுக.

# ஆசிரியர், திரு. வ. இராமலிங்கம் அவர்கள்

குரும்பசிட்டி என்னும் கிராமம் பூமிசாஸ்திரப் படத்தில் இடம் பெற்று, நல்லதெரு, பெரிய தபாற் கந்தோர், நவீன வைத்தியசாலை, பெரிய கல்லூரி என்பன அமையப் பெற்ற கிராமமாக மிளிரவேண் டும் என்று ஓயாமல் பேசிக்கொண் டும், உற்சாகப்படுத்திக்கொண்டும் சன்மார்க்க சபையை வழிநடாத் தியவர் ஆசிரியர் திரு. வ. இராம லிங்க மவர்கள்.

திரு. நா. பொன்னையா அவர் களின் குடும்பத்தோடு மிக நெருங் கிய உறவினரான திரு. வ. இராம லிங்கம், இளம் வயதிலேயே பத்தி ரிகை படிப்பதில்தீவிரமாயிருந்தார். ' தமிழ்நாடு ', ' நவசக்தி ' என்பன வற்றை அக்காலத்திலேயே வரவ ழைத்து உணர்ச்சியோடு ஆழமாகச் சிந்தித்துப் படித்தவர் அவர். ஆசிரி யர் திரு. வ. இராமலிங்கம் அவர் கள் எந்தப் பத்திரிகையையும் மேலோட்டமாகப் படிப்பதில்லை; மிக நுணுக்கமாகவே படிப்பார். அவர் இறக்கும்வரையும் ஒருபத்திரி கைப் பித்தராகவும், விடயங்களைத் தெளிவாக விளக்குபவராகவும் விளங்கினார். அதனால் அவர் இருக்கு மிடத்தில் ஒரு கூட்டம் அவரைச் சுற்றிக்கொண்டேயிருக்கும்.

வீமன்காமம் தமிழ்ப் பாடசாலை யிலே படிப்பிக்கத்தொடங்கியஅவர் கோப்பாய் அரசினர் ஆசிரிய கலா சாலையில் ஆசிரியப் பயிற்சி பெற்று முந்திய பாடசாலையிலேயே தலைமை யாசிரியரானார். படிப்பை விடாது மேன்மேலும் கற்று பாலபண்டிதர் சோதனையிற் சித்தியெய்தினார். பண்டித வகுப்புப் பரீட்சை எடுத்த நாளன்று அவரது அருமைத் தம்பி யாகிய திரு. வ. பொன்னுக்குமரன் மரணம் சம்பவித்ததினால் அவர் பரீட்சை எடுக்கவில்லை. அந்த அதிர்ச்சியோடு தலைமை ஆசிரியர் வேலையில் ஏற்பட்ட குழப்பங்களும் அவரது திடசித்தத்தை ஓரளவு பாதித்தன.

1934ஆம் ஆண்டு சன்மார்க்க சபை தொடங்கிய பொழுது மிக உற்சாகம் காட்டி உழைத்தார். சன்மார்க்க சபை வாசிகசாலையை ஒழுங்காய் நடாத்தியும் காணிவாங் கிச் சபையின் வளர்ச்சிக்கு அடி கோலியபோதும் திறம்படச் செயல் புரிந்தார். ஆனாலும் பிற்காலத் தில் அவருக்கேற்பட்ட சில இன்னல் கள்—நோய்கள் காரணமாக ஓரளவு ஒதுங்கியே வாழ்ந்தார்.

அவர் ஒதுங்கி வாழ்ந்தாலும் தம்மால் உண்டாக்கப்பட்ட சன் மார்க்க சபையின் ஒவ்வொரு சேவையையும் கண்டு மனமகிழ்ந் தார். பெரிய தெரு, தபாற் கந் தோர், வைத்தியசாலை, மத்திய கல்லூரி, மின்சார வசதி என ஒவ் வொன்றும் நிறைவேற்றப்படுதலைக் கண்டு குதூகலித்தார். சன்மார்க்க சபையின் முக்கியஸ்தர்களைச் சந்திக் கும் போதெல்லாம் தமது இயலா மையைச் சுட்டிக்காட்டிச் சபையின் சேவைக்கு நன்றி பாராட்டினார்.

அவர் உயர்ந்த மனிதர். உயர் நோக்கங்களைக் கொண்டு வாழ்ந்த மனிதர். வீமன்காமம், ஏழாலை, கரம்பன், நெடுந்தீவு, இணுவில், மயிலிட்டி தெற்கு, வயாவிளான், குப்பிளான் ஆகிய ஊர்களில் உள்ள பாடசாலைகளில் தலைமை யாசிரியராய் இருந்த அவர் தலைமை ஆசிரியர்களுக்கு எடுத்துக்காட்டா கத் திகழ்ந்தார். நீதி, நேர்மை, தர்மம் என்பனபற்றி யெல்லாம் அவர் கூறிய கதைகள், செய்த சொற்பொழிவுகள் உயர்ந்தவை.

# குரும்பசிட்டிப் பெரியோர்கள்

## திரு. ந. சின்னத்தம்பி அவர்கள்

(சின்னர்ச் சட்டம்பியார்)

**[திரு. நா. பொன்னையா அவர்கள்]**

நீர்வள நிலவளங்களாற் சிறந்ததும், தேவாலய மடாலயங்களாற் பொலிந்ததும், அரசகேசரி, ஆறுமுக நாவலர், சபாபதி நாவலர், குமாரசுவாமிப் புலவர் முதலிய புலவர் பெருமக்களின் உறைவிடமாயதுமான யாழ்ப்பாணத்தின் வடபாங்கர், திருவுங் கல்வியு முருமெனத் திகழ்தரூஉம் செந்தமிழ் வாணரும், பைந்தமிழ்க் கழகமும், பன்மரக்காவும், தண்மலர்ச்சோலையும் பாங்குடனமைந்து, பார்ப்போர் மனது பரவசங் கொள்ளும் பரமனாலயமுதற் பல்லாலயங்களும் சீர்பெறவமைந்து திகழ்வதூஉம், சீரானமைந்த ஏராளுவோரும், சிற்பர், ஓவியர் கைவினையாளர், கவின்பெறு வணிகர், அற்பகநிறைந்த அருந்தனவான்கள் பொற்புறவமைந்த நற்பெரும் பதியெனத் திகழ்வதூஉம், நன்னயம்படைத்த மின்னனையார்கள் சொன்னயம் பயிலும் மன்னியசிறப்பின் தென்மயிலைப்பதி தொன்னெறிவழாது மன்னுகவென்றே, பன்னருந்தவத்தான் சோமநாத முதலியார் வழிவரூஉ நன்னித்தம்பியும் தெய்வானையம்மையும் பன்னிய தவத்தால் துன்மதி ஆண்டு ஆவணித் திங்கள் உத்தரட்டாதியில் மன்னிய சிறப்பின் சின்னத்தம்பியார் மாண்புறவுதித்தனர்.

இவர்: மாப்பாணர், கனகர், தாமோதரம், சீனிக்குட்டியார் என்னும் நால்வரையும் சகோதரர்களாகவும், ஆசைப்பிள்ளை என்பவரைச் சகோதரியாகவும் பெற்றுள்ளார். தக்க வயதிலே கல்வி பயிற்றப்பெற்று பிறதேச சஞ்சாரியாய்ப் பலதுறைகளிலு மனுபவம்பெற்று, இயற்கையறிவிற் சிறந்தவராய்ச் சிறிதுகாலம் ஓர் தமிழாசிரியராய் விளங்கினர்.

ஆண்டு இருபத்தைந்தாயதும், இவரது குலத்திற்கும் நலத்திற்கும் ஒப்ப வாய்ந்த நாவற்குழி சங்கரப்பிள்ளை யென்பவரின் திருமகளார் தெய்வானைப்பிள்ளை யென்பவரை மணந்து, இல்லறம் நடாத்துவான் தமது சொந்த ஊராகும் மயிலிட்டி தெற்கி லமர்ந்து வியாபாரத்துறையிற் புகுந்து பெரும்பொருள் திரட்டலாயினர்.

இவர், சமய பக்தி, தேசபக்தி முதலியவற்றிற் சிறந்து அறநெறி வழாது ஒழுகியமையாற், கிராமவாசிகளாலும் ஏனையோராலும் நன்கு மதிக்கப்பெற்றவராய்க் கிராமவாசிகளுக்கு வேண்டிய காலங்களிற் பெரும் பொருள் கொடுத்து வாங்கியும், மக்களிடையே யுண்டாகும் பிணக்கு முதலியவற்றை நீதிவழுவாது நடுவுரைத்தும் கிராமத் தலைவராய் விளங்கினதுமன்றி, கிராமசங்கந் தோன்றிய காலம் முதல் சங்க அங்கத்தவராயும் விளங்கினர்.

இவர், சமயபக்தி மேலீட்டினாலே தலயாத்திரை செய்வான்

விரும்பி, தமது வாழ்க்கைத் துணைவியாரையு முடன்கொண்டு, சேதிமுதற் காசி யீருகவுள்ள பல தலங்களையும் தரிசித்தபின், இந்தியாவிலே சிறந்த தலமாகிய வேதாரணியமென்னும் திருமறைக் காட்டிலே ஓர் சத்திரமமைத்து அன்ன தானம் முதலியவற்றிற்காக மூல தனமு முதவியுள்ளார். வேதவன ஆதீனத்திலிருந்து ஓர் சைவாசாரியரை வருவித்துத் தமது கிராமத்திலே சகல வரிசைகளுடன் பரம்பரையாக இன்றளவும் நிலைபெறச் செய்தனர்.

மாவையம்பதியிலே கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் கலியுகவரதனும் கந்தக்கடவுளின் ஞலயத் திருமுடியைப் பசும்பொன்னலாக்கி அளித்து அற்றைத்தினப் பூசைக்கும் மூலதனமீந்துள்ளார். குரும்பசிட்டியில் புராதனமாயமைந்து சீரற்று விளங்கிய விநாயகராலயத்தைத் தமது சொந்தப் பொருள்கொண்டு நவமாயியற்றுவித்துப் பதினையாயிரம் ரூபாய்கள் பெறக்கூடிய தமது ஆஸ்திகளையும் நித்திய நைமித்திகத்தின் பொருட்டு விநாயகப் பெருமானுக்கு அருப்பணஞ் செய்துள்ளார். வருங்காலத்தில் ஆலயம் நடைபெறுவதற்காக ஓர் பஞ்சாயத்தையும் நியமித்து வேண்டிய ஒழுங்குகளும் முன்னரே செய்துவைத்துள்ளார்.

இவர் தேசபக்தி முதிர்ச்சியால், குரும்பசிட்டியிற் பிரபலமுற்று விளங்கும் ''மகாதேவ வித்தியாசாலை''க் காரிய கருத்தாவாகவும், ''சைவவாலிபசங்க''த்தின் போஷகராகவும் பல்லாண்டுகளாகத் தொண்டாற்றி, ஆசிரியர்களும், மாணவர்களும், பெற்றோரும், மற்றோரும் களிக்குமாறு செய்தனர். இவரது சமய பக்தியும், தேச பக்தியும், சிவகாருண்ணியமும், பரோபகாரமும் எத்துணையென்பது நாம் கூருதே போதரும்.

இவர் புத்திரப்பேறில்லாதிருந்தும், ''சுற்றத்திற்கழகு சூழவிருத்தல்'' என்னும் மூதுரைக்கிணங்கத் தமது சகோதரக்களின் புதல்வர்களையும், மனைவியார் வழிவந்த புதல்வர்களையும், உடன் வைத்துப் போஷித்தும், கல்வியூட்டியும், ஏற்றகாலத்தில் மணவினை முதலியன ஆற்றுவித்தும், தமது செல்வத்தின் பெரும்பாகத்தை, ''செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்'' என்னும் முன்னோர் மொழிப்படி, இன்னாரின்னார்க்கே யுரியதாகுகவெனச் சாதனஞ் செய்தும் உள்ளார்.

இவ்வாருய செயற்கருஞ் செயல்களினல் தேசமக்களின் உள்ளத்திற் பிணிப்புண்டு, எல்லோராலும் நன்கு பாராட்டப்பெற்ற திருவாளர் சின்னத்தம்பி, தமது எழுபதாம்வயதில் பிரசோற்பத்திஆண்டு கன்னித்திங்கள் இருபாஞெண்பதிற் குருவாரத்திற் சதுர்த்தசித்திதியும் அனுஷ நட்சத்திரமும் கூடிய சுபவேளையில், உற்ருர், உறவினர், உறுதுணையாளர் உளமிகந்துருகப் பற்றென்றில்லாப் பரம்பொருளிணையடி பெற்றனனினிதே! பெற்றனனினிதே!!

அந்தோ! தென்மயிலைவாசிகள் ஒரு சமயாபிமானியை, ஒரு தேசாபிமானியை, ஒரு நீதியாளரை, ஒரு தருமசீலரை, ஒரு குணக்குன்றை இழந்துவிட்டனர். என்னே! ''ஊழிற் பெருவலி யாவுள மற்றென்று,சூழினுந் தான்முந் துறும்'' என்றபடி ஆயிற்றே. இப்பெரியாரது ஆன்மா சந்தியடைவதாக.

*[ஸ்ரீமான் ந. சின்னத்தம்பி அவர்கள் மரணம் குறித்து பிரசோற்பத்தி ஆண்டு (1931) ஐப்பசி மாதம் ஞாபகார்த்தமாக வெளிவந்த பிரசுரத்தில் இருந்து எடுக்கப்பட்டது.]*

# ஸ்ரீ S. R. முத்துக்குமாரு அவர்கள்

[நல்லூர், சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள்]

முதலியார் ஸ்ரீ S. R. முத்துக்குமாரு அவர்கள் காலஞ்சென்றதினல் யாழ்ப்பாணத்துக் கற்ற மனுஷருடைய தொகுதிக்கு ஒரு பரிகரிக்கக் கூடாத நட்டம் நேர்ந்திருக்கிறது என்றதை அநேகர் அறியமாட்டார்கள். அவருடைய கல்வியோ பல திறப்பட்டது. சென்னைச் சர்வகலாசாலையார் வெளிப்படுத்திய பெரிய தமிழ் அகராதி ஆசிரியர்களுக்கு ஒரு துணையாளராய் இருந்தார் என்றபடியால் அவரது தமிழ்க் கல்வியைப் பற்றிப் பலரும் கேள்விப்பட்டிருப்பார்கள். தமிழ்ப் பாஷை ஒன்றில் அல்ல, இந்திய இலங்கைச் சரித்திரம், வான சாத்திரம், கணிதம், சங்கீதம் முதலிய வேறு பல துறைகளிலும் அவருக்கிருந்த அறிவு எவ்வளவு ஆழமானது என்பதை அவரோடு ஊடாடிப் பழகியவர்கள் மட்டுமே அறிவார்கள். இதுபோலவே, பகிரங்கத்தில் வரவிரும்பாமல் என்றும் அடக்கமாய் வாழ்ந்துவந்த அவரது நற்குண நற்செய்கைகளும் இட்டமித்திரரான ஒரு சிலருக்கே நன்றாய்த் தெரிந்திருக்கும்.

ஸ்ரீ முத்துக்குமாருவோடு நான் அறிமுகமாகி இன்றைக்கு ஐம்பத்தைந்து வருஷத்துக்கு மேலிருக்கும். அவரும் அவர் தம்பியார் ஸ்ரீ V. M. முத்துக்குமாருவும் சம்பத்திரிசியார் கல்லூரியில் நான்காம் வகுப்பிற் படித்துக்கொண்டிருக்கும் போது, நான் மானிப்பாய் பேச்சுச் சட்டம்பியாருடைய பள்ளிக்கூடத்திலிருந்து வந்து அந்த வகுப்பிலேயே சேர்ந்தேன். அக் காலம் எனக்குக் கணக்கு நன்றாய்ப் போகுமானாலும், தமிழை முந்திப் படித்திருந்தமையால் இங்கிலிஷ் அதிகம் ஓடாது. இங்கிலிஷ் உச்சரிப்பிலே என்னை நாட்டுப் பள்ளிக்கூடத்திலிருந்து வந்த ஒரு பையன் என்று வெளிப்படையாய்க் காட்டிக் கொண்டேன். முத்துக்குமாரு சகோதரர் இருவருமோ இங்கிலிஷில் மட்டுமல்ல, இலத்தினிலும் வெகு திறம். இருவரும் பிந்திவந்த என்னை விட்டு இரண்டொரு மாதத்துக்குள் மேல்வகுப்புக்குப் போய் விட்டார்கள். ஆயினும் அவர்கள் அடுத்த ஊரான ஆனைக்கோட்டையிலிருந்து வருகிறவர்கள் என்றதினல், மானிப்பாயிலிருந்து போன எனக்கும் அவர்களுக்கும் நட்புண்டாகி நெடுநாள் நிலைத்து வந்தது. சகோதரர் இருவரும் படிப்பிலே காட்டிய முன்மாதிரியான ஊக்கம் இன்றைக்கும் என் மனதில் அழியாமற் பதிந்திருக்கிறது. பிறகிட்டு இருவரும் உட்பள்ளிக்கூடத்திலே சேர்ந்து, அந்தந்த வகுப்பிலே முதலிடங்களில் நின்று அநேகம் பரிசில்களையும் வாங்குவார்கள். ஒரு பரிசளிப்பன்றோ வேறொரு பெருங் கூட்டத்திலோ இருவரும், எனக்கு அக் காலம் விநோதமாய்த் தோன்றிய இரண்டு வாத்தியக்கருவிகளை வாசித்து, தமிழ்க் கீர்த்தனங்களைப் பாடியது ஐரோப்பிய குருமாருக்கு ஆனந்தத்தை விளைத்தமை என் ஞாபகத்திலிருக்கிறது. பின்னொரு காலம் ஐரோப்பிய பத்திராசிரியர், "கத்தோலிக்க பாதுகாவலன்" இங்கிலிஷ் பதிப்பிலே தமிழ்ச் சங்கீதத்தில் ஏதோ குறைபிடித்து எழுதியபோது, அந்நாளில்பள்ளிக்கூடம் விட்டு உத்தியோகத்தில் அமர்ந்திருந்த S. R. முத்துக்குமாரு அதற்கு எதிராய் நல்ல ஒரு மறுப்பெழுத அதைக்கண்ட மேற்படி பத்திராசிரியர் இவருடைய நியாயத்தை

ஒத்துக்கொண்டு: ''முத்துக்குமாரு சொல்வதென்றால் மறுக்க முடியாது, அவருக்குக் காரியம் நன்றாய் விளங்கும்'' என்று நான் கேட்கச் சொல்லுகிறவரானார்.

ஸ்ரீ முத்துக்குமாரு உத்தியோகத்தில் அமர்ந்து பிறவிடங்களுக்குப் போனபின் அவரோடு உறவாட எனக்குச் சந்தர்ப்பம் ஏற்படாமற் போய்விட்டது. இன்றைக்கு ஒரு பதினைந்து ஆண்டுகளுக்கு முன்தான் ''இந்துசாதன'' இங்கிலிஷ் பத்திரிகையிலே தமிழ் மக்களுடைய பழஞ் சரித்திரத்துறை ஒன்றைப்பற்றி வரையப்பட்ட ஒரு விஷயத்தின் பேரிற் குறிப்பு எழுதும்படி அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் என்னைக் கேட்டவிடத்தில் நான் எழுதிய ஒரு ஆட்சேபத்தைக் கொண்டு என்னுடைய பழைய நண்பரைப் புதிதாய் அறிமுகப்படுத்திக்கொள்ளக் கிடைத்தது. அந்த ஆட்சேபத்துக்குச் சமாதானம் சொல்லுகையில் எனது குறிப்புரைக்கு இலக்கான விஷயத்தை எழுதியவர் ஸ்ரீ முத்துக்குமாருவே என்று வெளிப்பட்டது. அன்றுதொட்டு எங்களுக்கிடையில் கடிதப் போக்குவரவும் இடையிடையே நேரிற்கண்டு கல்வி விஷயங்களைப் பற்றிக் கலந்துபேசும் பாக்கியமும் ஏற்பட்டன.

நம்முள் அநேகருடைய தமிழ் அபிமானம் ''உறவுறவென்றாலும் பறியிலே கைபோடாதே'' என்றபடி யிருக்கும். 'தமிழ் வளர்ச்சி, தமிழ் வளர்ச்சி' என்று உரக்கப் பேசுவோர் பலர். அதற்காக ஒரு துளி வெயர்வை தானும் சிந்தார்கள்; ஒரு வெள்ளைச் சல்லி தானும் எடுத்துச் செலவழியார்கள். ஸ்ரீ முத்துக்குமாரு இந்த மனப்பாங்குக்கு வெகு தூரப்பட்டவர் என்றதை அவர் தமிழர்களுடைய முன்னேற்றத்துக்காக ஓயாமல் உழைத்ததோடு தமது நடுத்தரமான வருவாயிலிருந்து பெருந்தொகைக்கு நூல்களை வாங்கி ஆராய்ந்துகொண்டு வந்ததினாலும் காணலாம். தம்முடைய ஆராய்ச்சிக்காக மட்டுமல்ல பிறருடைய ஆராய்ச்சிக்காகவும் பொருள்செலவிடப் பின்னிடார். ஒருமுறை நான் உரும்பிராயில் ஒருசிறு கொட்டிலிற் தங்கி இருந்து எனது சொற்பிறப்பு ஒப்பியல் அகராதியை எழுத ஆரம்பித்துக்கொண்டிருக்க என்னைக் காண அங்கு வந்தவர், நான் எழுதி முடித்திருந்த சில ஒற்றைகளைப் பார்த்தவுடனே, ''இந்த ஆராய்ச்சி தமிழுக்கு அவசியம் வேண்டும்; உங்களுடைய கிளார்க்குக்குக் கொடுக்கவும் சன்னியாசியான உங்களிடம் பொருள் இராது. எனது அற்ப பென்சன் காசிலிருந்து மாதம் மாதம் ஐவைந்து ரூபா அனுப்புகிறேன்'' என்று சொல்லி, அன்று முதல் நாலு வருஷம் கொடுத்த வாக்கின்படியே செய்து கொண்டு வந்தார். பின்பு அவருடைய உள்ள நிலைபரத்தை நான் அறியவந்து, அப்பால் அனுப்பவேண்டாமென்று கேட்டுக்கொண்டேன். இதற்கிடையில் ஒருநாள் நான் அவரைக் காணும்படி குரும்பசிட்டிக்குப் போனபோது என்னுடைய கொட்டிலுக்கு இணையான ஒருசிறு அறையிலேயே என் நண்பர் வசிக்கக் கண்டேன். பின்புற வீடு விசாலமாய் இருந்தாலும் அவர் வேலை செய்துகொண்டும் உறங்கியும் வந்த முன் அறை சன்னியாசிகளுக்குரிய கொட்டில் போலவே இருந்தது.

ஒறுப்பான சீவியமும் பிறர் நன்மைக்காகப் பண்ணும் உழைப்பும் என்றதே அவருடைய குறிக்கோளாயிருந்தது என்று சொல்லலாம். தம்முடைய சின்ன மகனை வண்ணார் பண்ணையிற் படிப்பிக்கும்படி நீராவியடியிலும், பின் கலாநிலயத்துக்கு

அணித்தாயும் சிலகாலம் வந்திருந்தார். அந் நாட்களில் நாங்கள் ஒருவரையொருவர் பலமுறை கண்டு கொள்ளச் சமயம் வாய்த்தது. முந்தியவிடத்தில் இருக்கையில் ஒரு நாள் நான் அவரைக்காணப் போன போது தாம் தேடி வைத்திருந்த ஒரு விலையேறப்பெற்ற பொருளை எனக்கு ஒப்படைத்தார். அதாவது ''கடதாசி நோட்டுகள்'' கட்டி வைத்ததுபோல சொற்துண்டுகள் கட்டிக் கட்டி அடுக்கியிருந்த ஒரு பெட்டி. என் நண்பர் பல வருஷங்களாய் முயன்று எத்தனையோ நூல்களை ஆராய்ந்து, தற்காலச் சாஸ்திரங்கள் எல்லாவற்றிலும் வருகிற இங்கிலிஷ் பரிபாஷைச் சொற்களுள் இருபத்து மூவாயிரத்துக்கு ஏற்ற தமிழ்ச் சொற்களைப் பொறுக்கியெடுத்து ஒவ்வொரு துண்டில் எழுதிக் கட்டி வைத்திருந்தார். அவைகளை அகராதி முறைப் படுத்திப் பின்னும் இங்கிலிஷில் வழங்கும் சகல சொற்களுக்கும் தமிழ் எழுதிச்சேர்த்து மாணாக்கர், உவாத்திமார், குருமார், பிரசங்கிமார், நீதிமன்றத்தவர்கள், தத்துவ சாஸ்திரிகள், வேதசாஸ்திரிகள், விஞ்ஞான நூலாசிரியர்கள் சகலருக்கும் பயன்படத்தக்க ஒருபெரிய இங்கிலிஷ்—தமிழ் அகராதி செய்து விஞ்ஞானம் முதலிய எல்லாச் சாத்திரங்களையும் தமிழிலே கற்பிப்பதற்கும் இங்கிலீஷில் உள்ள பற்பல துறை நூல்களைப்போலத் தமிழிலும் எழுதுவதற்கும் தமிழுலகுக்கு உதவி செய்ய வேண்டும் என்றது அவரது கருத்து. தமக்குச் சுகத் தாழ்வாயிருப்பதினுலும் நான் சொற்களோடு ஊடாடும் தொழிலில் ஏற்பட்டிருப்பதினுலும் நானே அந்த வேலையை நிறைவேற்ற வேண்டு மென்று அவர் கேட்டுக் கொள்ள, நானும் சம்மதித்து இன்றைக்கு இரண்டு வருஷமாய் அந்த வேலை என் கண்காணிப்பில் நடந்து வருகிறது. தன் நயங்கருதாமல் பிறர்க்கென வாழுகிற தன்மைக்கு ஸ்ரீ முத்துக்குமாரு ஒரு நல்ல எடுத்துக்காட்டு. அவருக்கும் எத்தனையோ அருமையான கைச்சரவை நூல்களைப் பிறருக்குக் காட்டாமற் கூட வைத்திருந்து, தாங்கள் இறந்த பின் செல்லுக்கிரையாகி மண்ணுய்ப்போக விட்டுவிடுகிற பிறருக்கும் எவ்வளவு அசகசாந்தர தூரம்!

ஸ்ரீ முத்துக்குமாருவை நான் கடைசியாய்க் காணக் கிடைத்தது, இவ்வருஷம் சித்திரை வருஷப் பிறப்புக்கு அடுத்த ஒருநாளில் என்று எண்ணுகிறேன். வருஷப் பிறப்புக்கு முன் அவர் எனக்கு எழுதி: 'எங்கள் வருஷப்பிறப்பிலே நாங்கள் எங்களுக்கு அருமையானவர்களைக் காணப்போவது வழக்கம். ஆனபடியால் இன்னநாளைக்கு உங்களிடம் வருகிறேம்' என்று அறிவித்துக்கொண்டு சொல்லிய நாளிலே தமது பிந்திய மனைவி பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு திண்ணைவேலிக்கு வந்தார். அந்நாட்களில் அவர் கேட்ட ஒரு காரியத்தை நான் அவருக்குச் செய்து கொடாமற் போனது துக்கம். அதாவது பூர்வ கால ஐரோப்பாவில் தமிழரே குடியேறியிருந்தார்கள் என்றதற்கு அத்தாட்சியாக அங்கே அநேக ஆற்றுப் பெயர்கள், மலைப்பெயர்கள், ஊர்ப் பெயர்கள் இன்றைக்கும் தமிழ்ச் சொற்களாகவே இருக்கின்றன என்று நான் பலகாலும் சொல்லியதை, அவர் கேட்டிருந்து அவ் விஷயமாய் ஏதோ எழுத விரும்பி அப்படிப்பட்ட பெயர்களில் ஒரு முப்பது எடுத்தனுப்பும்படி கேட்டெழுதியிருந்தார். எனது தலைதெரியாத அலுவல்களின் நடுவே அதற்கு வசதி வாய்க்கும் வாய்க்கும் என்றிருந்து அந்தச் சிறு உபகாரத்தை நேரத்தோடு அவருக்குச் செய்ய முடியாமற் போய்விட்டது.

சென்ற சனிக்கிழமை மாலை இரண்டு வாலிபர்கள் எனக்கு இழவு சொல்லவந்தபோது திடுக்கிட்டு விட்டேன். மின்னுமல் முழங்காமல் வெள்ளிடிவிழுந்தது போலிருந்தது. ஞாயிற்றுக்கிழமை என் அரிய நண்பருடைய சாவீட்டுக்குப்போக ஆயத்தஞ் செய்தும் முடியாமற் போனமையால் அவர் குடும்பத்துக்கு ஒரு அனுதாபத் தந்தி யனுப்புவதோடு அமையவேண்டியதாயிற்று. இறைவன் அவரது பர அன்புமிக்க ஆன்மாவுக்கு அருள் பாலிப்பாராக!

— ஈழகேசரி. 23-8-'42

*Tamil Lexicon*

Published under the authority of the University of Madras.

"To the compilation of words from the above sources, Honorary workers likes Messrs Sidney Gordon Roberts, Robert Fischer and S. Radhakrishna Aiyar, and Honorary Referees like Messrs S. Desikavinayakam Pillai of Nanci Natu and S. R. Muttukumaru Mudaliyar of Jaffna added considerably.

"Thanks are due to Messrs G. Mathews, M. A., B. Litt., K. Swaminathan, B. A. (OXON.), P. Mahadevan, M. A. and S. Desikavinayakam Pillai for their suggestions in the proof stage and to Mr. S. R. Muttukumaru of Jaffna and other honorary referees who had helped with loans of books and collected and sent words for inclusion in the supplement."

---

## ஆசிரியர், திரு. பொ. பரமானந்தர் அவர்கள்

தமிழிலே 'உரு' என்ற ஒரு சொல் இருக்கிறது. அந்த 'உரு' என்ற பண்புக்கு வரைவிலக்கணம் கூறுதல் எளிதன்று. பற்பல குணங்களும் ஒன்ருய் அமைந்து கிடப்பது அது. அந்த 'உரு' என்ற பண்புடையவர் நாவலர் பெருமான் எனப் பலர் சொல்ல நாம் கேட்டிருக்கிறேம். நாம் நாவலர் பெருமானைக் காணவில்லை. ஆனல் அவரைப் போன்ற 'உரு' உள்ளவர் ஒருவரைக் கண்டிருக்கிறேம். அவரை நமது ஆசிரியராக, தலைமை ஆசிரியராக, வழிகாட்டிய ஆசிரியராகப் பெற்றிருக்கிறேம். அவர் தான் திரு. பொ. பரமானந்தர் அவர்கள்.

நாவலர் என்ற சொல் எப்படி ஆறுமுக நாவலரைத் தமிழ்கூறும் நல்லுலகம் முழுவதிலும் குறிக்கிறதோ, அப்படியே 'உபாத்தியாயர்' என்ற சொல் எம்மூரிலும் சுற்றுப்புறக் கிராமங்களிலும் ஆசிரியர் பரமானந்தரையே குறிப்பதாயிற்று. உண்மையில் அவர் ஒரு உதாரணங் காட்டக்கூடிய உபாத்தியாயர்; ஆசிரியத் தொழிலுக்காகவே பிறந்த ஆசிரியர்.

அறுபத்தைந்து வருடங்களுக்கு முன் சைவம்—தமிழ் என்று கிராமங்களிற் பேச முடியாது. எங்கும் கிறிஸ்தவ மயம்; ஆங்கில மோகம். நாவலர் அவர்களால் தொடங்கப்பட்ட சைவப்பாடசாலைகள் கட்டும் பணியை—ஆசிரியர்மாரைச் சைவச் சூழலில் ஆக்கும் பணியை—ஒரு 'வெடிகுண்டு' வைத்துக் கிறிஸ்தவர்கள் தகர்த்துவிட்டார்கள்.

'சேட்டிவிக்கற்' — தராதரபத்திரம் உள்ள ஆசிரியர் இருந்தால் தான் பாடசாலைக்கு உதவி நன்கொடை கிடைக்குமென்ற விதியை ஏற்படுத்தச் செய்துவிட்டு ஆசிரிய கலாசாலைகளைத் தங்கள் வசம் வைத்துக்கொண்டார்கள். ஒரு சைவன் கிறிஸ்தவன் ஆகாமல் உபாத்தியாயர் ஆக முடியாது. நாவலர் பாடசாலையிலேயே தலைமை ஆசிரியர் ஒரு கிறிஸ்தவர் என்பதை நாம் கவனத்தில் வைக்க வேண்டும்.

இப்படிப்பட்ட சூழ்நிலையிலே 1900ஆம் ஆண்டு எங்கள் ஊருக்கு ஒரு சைவப் பாடசாலையைக் கட்டிச் சைவமுறைப்படி நடாத்த ஆசிரியர் பொ. பரமானந்தர் முன்வந்தாரென்றால் அவர் துணிவும், சைவப் பற்றும் எப்படி இருந்திருக்க வேண்டும்? யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவ ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் அக்காலத்தில் இருந்தன. அவை கிறிஸ்தவச் சூழ்நிலையில் இருந்தமையால் — சமயமாற்றத்தை விரும்பாத, 'பொ. ப.' அவர்கள் கொழும்புக்குப் போய் ஆசிரிய பயிற்சி பெற்றார்கள். பின்னர் தாம் உண்டாக்கிய மகாதேவ வித்தியாசாலையிலேயே தலைமை ஆசிரியராக இருந்தார்கள். அவர் அந்த வழியைப் பின்பற்றியதாற்றான் இன்று வரை எங்கள் ஊரில் எஸ். எஸ். ஸீ சித்தியெய்தி வேலையற்றிருந்தாலும் (எத்தனையோ மாணவர்கள் இருக்கிறார்கள்) ஒருமாணவனாவது கிறிஸ்தவனாகி ஆசிரியராகப் பிரியப்படவில்லை. வெறும் உடலை ஓம்புவதற்காகத் தான் மெய்யென நம்பும் சமயத்தை விட்டுப் பிறசமயம் சேர நினைக்கவில்லை. ஒரு கிறிஸ்த கோவிலோ, ஒரு பாடசாலையோ, ஏன்? ஒரு கிறிஸ்தவ மனிதன்கூட இல்லாத சுத்தச் சைவக் கிராமமாகக் குரும்பசிட்டி மிளிர்கிறது என்றால் அப் பெருமையில் பெரும் பங்கு திரு. பொ. பரமானந்தரவர்களையே சாரும்.

மகாதேவவித்தியாசாலை அக்காலத்திலே மிகப்பிரசித்தமாயிருந்தது. கட்டுவன், குப்பிளான், மயிலிட்டி வடக்கு, தையிட்டி, வயாவிளான், பலாலி முதலிய ஊர்களில் இருந்தெல்லாம் மாணவர்கள் வந்து பயின்றார்கள். அரிவரி வகுப்புத் தொடக்கம் ஆசிரிய மாணவர் வகுப்பு வரைக்கும் வகுப்புக்கள் இருந்தன. ஓர் உயர்தர கலாசாலை போன்று அது விளங்கியது. அதன் நடுநாயகமாகச் சகல பொறுப்பும் அவருடையதாக 'பொ. ப.' அவர்கள் விளங்கினார்கள்.

அவருடைய உருவம் தமிழாசிரியர் வர்க்கத்துக்கே ஓர் எடுத்துக்காட்டு. எப்போதும் நெற்றியில் திரிபுண்டரம்; நடுவிலே சந்தனப் பொட்டு; எடுப்பான தோற்றம்; அதிகாரத்தைப் பிரதிபலிக்கும் குரல். ஆசிரியர் தெருவில் வருகிறாரென்றாற் பாடசாலை எங்கும் நிசப்தம். குண்டூசி விழுந்தாற் கூடச் சப்தம் கேட்கும். அக்கால வழக்கப்படி சிறு பிழைக்கும் நல்ல தண்டனை. ஆசிரியர் பொ. பரமானந்தர் இக்கால ஆசிரியர்களைப் போலத் தராதர பத்திரம் பெற்ற அன்றே புத்தகங்களை மூட்டை கட்டி வைத்தவர் அல்லர். உபதொழிலாகக் கமத்தையோ வேறு தொழில்களையோ செய்தவரும் அல்லர். சதா படித்துக்கொண்டும் மாறி வரும் கால மாற்றத்திற்கேற்பத் தானும் வளரவேண்டும் என்னும் எண்ணத்தோடு புதிய விடயங்களைக் கற்றுக்கொண்டும் இருந்தார். பாடசாலையை வளர்த்தார். இதுதான் அவரின் பெருஞ் சிறப்பு. அட்சர, கேத்திர கணிதங்களா? அவர் தானே படித்துப் படிப்பித்தார். நாட்டுச் சீவன சாஸ்திரமா? அவர் தானே படிப்பிக்கத் தயாரானார்.

தானே ஆங்கிலம் கற்று ஓரளவு எழுத வாசிக்கக் கற்றுக்கொண்டார்.

அவர் பாடசாலையிலே வெறும் பாடங்களை மட்டும் படிப்பிக்கவில்லை. எதிலும் ஒரு சுத்தம், ஒழுங்கு இருக்கவேண்டும் என வற்புறுத்தினர். எழுத்து, வரைதல், இலக்கணம் என்ற பாடங்கள் எப்போதுமே உயர்தரமாய் இருக்கப் பார்த்துக் கொண்டார். இன்று வரை குரும்பசிட்டியிற் படித்த மாணவர்களது எழுத்து அருமையாகவே இருக்கிறது. அநேகர் சித்திரப் பாடத்தில் தராதரம் உடையோராய் இருக்கின்றனர். செய்கின்ற வேலை சிறியதாக இருந்தாலும் சுத்தமும் ஒழுங்கும் காணப்படுகின்றன.

இப்போது சில பாடசாலைகளிற் கோலாட்டம் அடிக்கப்படுவதை நாம் காண்கிறோம். அதைப் பெண் பிள்ளைகள் (டான்ஸ்) ஆடுவதுபோல அடிக்கிறார்கள். திரு. பரமானந்தர் அதை ஒரு கலையாகப் பழக்குவித்தார். அண்ணாவி கந்தப்பிள்ளை என்ற பிரபல அண்ணாவியாரின் துணையோடு ஆண்பிள்ளைகள் அதை அடித்தார்கள். அதற்கேற்ற பாடல்களையும் ஆசிரியர் அவர்களே இயற்றினர். கயிற்றுக் கோலாட்டம் என்ற புதுமையான கலை ஒன்றைப் பரமானந்தர் அவர்களே கண்டுபிடித்துப் பழக்கினர்கள். அது மிக நுட்பமும் கடினமுமான கோலாட்டம். கயிற்றிலே உறி, கூடை, சங்கிலி, அரைஞாண் கயிறு என்பவற்றைக் கோலாட்ட மூலம் பின்னுவது அது. பன்னிரண்டு மாணவரில் ஒருவர் தவறு செய்தாலும் கயிறுகளெல்லாம் குழம்பிச் சின்னபின்னப்படும். ஆசிரியரவர்கள் மகாத்மாகாந்தி யாழ்ப்பாணம் வந்தபோதும் வேறு பிரபல நிகழ்ச்சிகளிலும் எத்தனையோ வருடமாக அதை அடிப்பித்தார். ஒரு இடத்திலாவது பிழை நேர்ந்ததில்லை. பன்னிரண்டு மாணவரையும் அவதானித்தபடி பிரம்பும் கையுமாக அவர் நிற்குங் காட்சி ஓர் அற்புதக் காட்சியாகும். அந்தக் கலையை நாம் இன்று மறந்துவிட்டோம். பரமானந்த ஆசிரியரின் நினைவாக அதைப் புதுப்பிக்க வேண்டியது குரும்பசிட்டி மக்களின் கடமையாகும்.

புராணபடனமே யாழ்ப்பாணத்தை உய்வித்ததென்று அறிஞர் கூறுவர். குரும்பசிட்டி அம்பாள் ஆலயத்தில் ஆசிரியர் பொ. பரமானந்தர் அவர்கள் வருடா வருடம் திருவாதவூரடிகள் புராணத்துக்குப் 'பயன்' சொன்னர். தான் சொல்லியது மாத்திரமல்லாமல் தமது மாணவர்களுக்குப் பழக்கியும் வைத்தார். அவரது மாணவர்களாகிய திரு. த. கந்தையா உபாத்தியாயர், திரு. சி. கணபதிப்பிள்ளை உபாத்தியாயர் என்போர் அதனை முறைப்படி செய்து வந்தனர். இப்போது ஆசிரியர் மு. இராமலிங்கமவர்கள் அதனைச் செய்து வருகிறார். இப்போதிருக்கும் இளம் தலைமுறையினரும் அதை முறைப்படி பழகினல் தான் திரு. பொ. பரமானந்தரது கனவு நின்று நிலைக்கும்.

குரும்பசிட்டியில் இந்துவாலிபர் சங்கமொன்றைச் சன்மார்க்கசபை தோன்றமுன் நிறுவிப் பல வருடங்களாகத் தாமே தலைமைதாங்கி நடாத்தினர். மாதந்தோறும்வரும் பூரணை நாட்களிற் சங்கரசுப்பையர் போன்ற பெரியோர்களை அழைத்து சைவப் பிரசங்கங்கள் செய்வித்துச் சைவ ஆசாரம் வளரப் பாடுபட்டார்.

கவிதை இயற்றும் ஆற்றல் வாய்ந்த திரு. 'பொ. ப.' அவர்கள் அக்கால வழக்கப்படி பல 'சரமகவி' களைப் பாடியுள்ளார். கதிர்காம வேலவர்மீது ஒரு பதிகமும் பாடி

யுள்ளார். மகாதேவ வித்தியா சாலையில் வருடாவருடம் மாணவர் சங்க வருடாந்த விழாவை ஒழுங்காக நடாத்தினர். அந்த வருடாந்தக் கூட்டங்களில் அவர் 'தருமிக்குப் பொற்கிளி அளித்தமை', 'குமணன்', 'பிரகலாதன்' முதலிய புராண இலக்கிய நாடகங்களை உதவி ஆசிரியர்களைக்கொண்டு பழக்குவித்து மாணவர்களின் நடிப்புத் திறனை வளர்த்தார். அதிகாலை ஐந்து மணிமுதல் இரவு பத்துமணி வரை மாணவர்களைப் படிப்பித்த ஆசிரியர் அவர். அதோடு மட்டும் அவர் விடவில்லை. இப்போது கல்லூரிகளிற் சிரமதானம் எனப் பெருமையாகப் பேசப்படுகிறதே, அது பரமானந்த ஆசிரியரால் சாதாரணமாக நடைமுறையில் நடாத்தப்பட்டது. வேலியடைத்தல், வெள்ளையடித்தல் பாடசாலைத் தோட்டமமைத்தல், கழுவல் முதலிய எல்லா வேலைகளையும் மாணவரே செய்தனர்; பழக்கப்படுத்தப்பட்டனர். பாடசாலைப் படிப்பு முடிந்து வெளியேறும் எந்த மாணவனும் எந்தத் தொழிலையும் செய்ய முன்வரல்வேண்டும் என்பது அவர் எண்ணம்.

ஆசிரியத்தொழிலோடு நின்று விடாமல் பொதுமக்கள் நலனையும் நாடி அவர் செய்த தொண்டுகள் பல. மக்கள் இலகுவாகக் கடன் பெறவும் சேமிக்கவும்கூடிய ஐக்கிய சங்கமொன்றை நிறுவித் தானே தலைவராய் இருந்து நடாத்தினர். மயிலிட்டி கிராமசங்க அங்கத்தவராய்ப் பல வருடம் இருந்து தொண்டு செய்தார்.

சைவத்தையுந் தமிழ்க்கல்வியையும் பரப்பிய பேராசிரியருக்கு ஞாபகச்சின்னமாக மகாதேவவித்தியாசாலையில் உள்ள பரமானந்தர் மண்டபம் திகழுகின்றது. மயிலிட்டிக் கிராமசங்கத்தார் ஒரு வீதிக்கு அவர் பெயரை வைத்திருக்கிறார்கள். குரும்பசிட்டியிலும் சுற்றுப்புறக் கிராமங்களிலும் உள்ள பன்னூற்றுக் கதிகமான தமிழாசிரியர்கள் உண்ணும் உணவு அவர் தந்த பிச்சை. வாழும் வாழ்க்கை அவர் தந்த செல்வம்.

---

# திரு. R. R. நல்லையா அவர்கள்

**யா**ழ்ப்பாண நகரத்தின் அழகைக் கம்பீரமாக எடுத்துக் காட்டும் ஒரு அம்சமாக இருப்பது மாநகரசபைக் கட்டிடமாகும். அழகு மிளிரும் அந்தக் கட்டிடத்தைச் சுமார் இருபத்தைந்து வருடங்களுக்கு முன் கட்டப் பெரு முயற்சி செய்தவர் அக்காலத்திய யாழ்ப்பாண நகரசபைத் தலைவர் திரு. R. R. நல்லையா அவர்கள். அன்னார் குரும்பசிட்டித் தாயானவள் பெற்றெடுத்த முதற்குழந்தை; மூத்த குழந்தை. ஆம், ஈழத்திலும் யாழ்ப்பாணத்திலும் எம்மூரைப் பிரகாசிக்கச் செய்தவர்களுள் முதற் கண்வைத் தெண்ணக்கூடியவர்கள் நல்லையா சகோதரர்கள் ஆவர். அவர்களில் மூத்தவர் திரு. T. R. நல்லையா (துரைரத்தினம்); இளையவர் திரு. R. R. நல்லையா (இராசரத்தினம்).

பத்தொன்பதாம் நூற்றுண்டிலே, கல்லூரிகளுக் கிடையில் நடைபெறும் 'கிரிக்கெட்' பந்தயப் போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியே சிறந்து விளங்கியது. 1898ஆம் ஆண்டு அதை முறியடித்து யாழ்ப்பாணம்

மத்திய கல்லூரிக்கு வெற்றிவிருதை வாங்கிக் கொடுத்தவர்கள் நல்லையா சகோதரர்களாவர் என மத்திய கல்லூரியின் வரலாற்று நூல் அவர்களை மிகவும் புகழ்ந்திருக்கிறது. அதுமாத்திரமா? 1900ஆம் ஆண்டு நல்லையா சகோதரர்களில் மூத்தவரான திரு. T. R. நல்லையா விளையாட்டு வீரர்களுக்குள்ளே முதல்வராக(சாம்பியனாக)த் திகழ்ந்தார் என்றும், பின் மூன்று வருடங்களில் தொடர்ந்தும் முதல்வராகி அந்த வெள்ளிக்கிண்ணம் நிரந்தரமாகவே மத்திய கல்லூரியில் இருக்கச் செய்தார் என்றும் அது கூறுகிறது.

வெறும் விளையாட்டில் மாத்திரமல்ல, படிப்பில்—நியாயதுரந்தரர் தொழிலில்—அவர்கள் மிகப் புகழ் பெற்றார்கள். 1905ஆம் வருடத்தில் நடந்த நியாயதுரந்தரர் பரீட்சையில் திரு. R. R. நல்லையா அவர்கள் சித்தி பெற்று உபகாரச் சம்பளம் பெற்றமை குறிப்பிடக் கூடிய தொன்றாகும். விளையாட்டு, கல்வி இவற்றோடு நின்றுவிட்டால் திரு. R. R. நல்லையா அவர்களை ஒரு சிலர்க்கே தெரிந்திருக்கும். ஆனால் அவரது அரசியல் ஈடுபாடே அவரைப் புகழேணியில் ஏற்றியது.

யாழ்ப்பாணத்தில் முதன்முதல் ஆரம்பிக்கப்பட்ட பட்டின சங்கத்தில் 1921 — 1924ஆம் ஆண்டு வரை உத்தியோகபூர்வமற்ற அங்கத்தவராகினார். அன்று தொட்டு அவர் மரண பரியந்தம் நகர சங்க அங்கத்தவராகவும் — பல ஆண்டுகள் யாழ்ப்பாண நகர சங்கத்தில் தலைவராகவும் இருந்து யாழ்ப்பாண நகரத்தின் தேவைகளைப் பூர்த்தியாக்கி அநேக அபிவிருத்திகளைச் செய்தார். அரசாங்க சபைத் தேர்தல்களின் போதெல்லாம், திரு. R. R. நல்லையா அவர்களின் பெயரே யாழ்ப்பாண நகரத்தைப் பொறுத்தவரை அடிபடும். தேர்தல் நெளிவு சுளிவுகளில் கைதேர்ந்தவர் திரு. R. R. நல்லையா அவர்கள். ஒரு சிலரைப் போலத் திடீரெனத் தோன்றித் திடீரென மறையும் நட்சத்திரங்கள் போலல்லாமல் அரசியல் வானில் அவர் ஒளிகாலும் நட்சத்திரமாகவே மரண பரியந்தம் விளங்கினார். இது குரும்பசிட்டிக்குப் புகழைஅளித்தது; பெருமைதந்தது.

திரு. நல்லையா சகோதரர்களில் மூத்தவரும் இளையவரும் தமது தொழிலில் — நியாயவாதி யாகவும் நியாயதுரந்தரராகவும் பெரும் புகழ் பெற்று விளங்கினார்கள். அக்கால யாழ்ப்பாண நீதிஸ்தலம் அவர்களின ஏகபோக உரிமையாய் இருந்தது. பிரபல வழக்குகளில் எல்லாம் அவர்கள் திறமையாகத் தங்கள் புகழை நிலைநிறுத்தினர்.

அவர்கள் யாழ்ப்பாண வாசிகளாக மாறிவிட்டாலும் தாம் பிறந்த குரும்பசிட்டியை என்றும் மறந்ததில்லை. அவர்களின் சுற்றத்தவர்களாக, ஆசிரியர் திரு. பொ. பரமானந்தரவர்கள்,பிறப்புஇறப்பு பதிவுகாரரும் ஊரிற் பெரும் புகழ் கொண்டவருமான திரு. மு. சின்னையா அவர்கள் (திரு. மனோரஞ்சிதம் அவர்களின் தகப்பனார்) என்போரும், வேறுபலரும் அவர்களுடன் தொடர்பு கொண்டிருந்தார்கள். குரும்பசிட்டி மகாதேவ வித்தியாசாலைக்கு மனேஜராக மரணபரியந்தம் இருந்தனர். இவரது மனைவியாரும் தம் மாதாவழியில் இக் கிராமத்துடன் மிகவும் நெருங்கிய தொடர்புடையவர்.

கிராமத்தில் ஏற்படும் சிறு பிணக்குகளை அவர்கள் தீர்த்து வைத்தனர். கிராமத்திலிருந்து செல்லும் சாதாரண மக்களுக்குச் செய்யவேண்டிய உதவிகளை முக

மலர்ச்சியோடு செய்தனர். கச்சேரி அலுவல்களையோ, கோட்டு விவகாரங்களையோ பிற வேலைகளையோ அவர்கள் தட்டிக்கழித்ததில்லை. இதனால் குரும்பசிட்டி மக்கள் தம் கருமங்களை அக்காலத்தில் அவர்கள் மூலம் சுலபமாகச் செய்து முடித்தனர்.

சன்மார்க்கசபை தொடங்கி புதுமண்டபம் கட்டி முடிக்கப்பட்டவுடன் அதன் திறப்புவிழா கௌரவ சேர் வை. துரைசுவாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதைத் திறந்துவைக்க திரு. R. R. நல்லையா அவர்களே தகுந்தவர் என நிருவாக சபையினரும் விரும்பினர். திரு. R. R. நல்லையா அவர்கள் சன்மார்க்கசபையின் அழைப்பை விருப்பத்தோடு ஏற்று மணிமண்டபத்தைத் திறந்துவைத்தார்கள். அவர் அப்போது கூறிய பொருள் பொதிந்த வார்த்தைகள் இவை: '' நான் அரசியலில் ஈடுபாடுடையவன்; அரசியல்வாதிகளை நன்கு அறிந்தவன். எனினும், நான் உங்களுக்குச் சொல்லக்கூடிய புத்திமதி இந்தச் சபையில்—இந்த மண்டபத்தில்—அரசியல்வாதிகளை நுழைய விட்டு உங்கள் புனிதநோக்கங்களைப் பழுதாக்காதீர்கள். அவர்களிடம் கவனமாயிருங்கள் '' என்பதேயாகும்.

அவர்கள் கூறிய பொன்மொழிகளை இன்றும் சபை கடைப்பிடித்து வருகிறது. திரு. R. R. நல்லையா அவர்கள் குரும்பசிட்டி மாதா ஈன்ற முழுமதி. அதன் தண்ணிலவு என்றும் ஒளி வீசுவதாக.

---

## திரு. பூ. சுப்பிரமணியம் அவர்கள்

பலவளங்களும் பொருந்திய ஈழ நாட்டின் வடபாலமைந்ததும் பெரியார் பலரை ஈன்றதும் புனித தேவாலயங்களும் கல்விச் சாலைகளும் மலிந்ததும் குறைவற்ற செல்வர்கள் பலரை யுடையதுமாயுள்ளது குரும்பசிட்டி என்னும் கிராமம். இக் கிராமத்தில் வதியும் வேளாண் குலத்துதித்த பூதப்பிள்ளை என்பவர் தன் மரபுக்கேற்ற சின்னப்பிள்ளை என்னும் வனிதையை மணந்து மூன்று புதல்வர்களையும் இரண்டு புதல்விகளையும் அருந்தவத்தால் ஈன்றெடுத்தனர். அவர்களுள், திரு. சுப்பிரமணியம் அவர்கள் 1879ஆம் ஆண்டு பங்குனிமீ 10உ பூதப்பிள்ளை தம்பதிகளின் முதற் புதல்வராய் இவ்வுலகிலே தோற்றினர்.

பாலியத்திலே தமிழும் ஆங்கிலமும் பயின்ற திரு. சுப்பிரமணியமவர்கள் 1902ஆம் ஆண்டு ஏதாவதொரு தொழிலிலீடுபட விரும்பி, அநுராதபுரத்தை யடுத்த காட்டுத் தம்பளை என்னுமிடத்திற் பகிரங்க வேலைப்பகுதி (P. W. D.) ஓவசியர் ஒருவரின் கீழ் உதவியாளராய்ச் சிறிது காலம் கடமை ஆற்றிவந்தார். அரசினர் உத்தியோகத்தால் முன்னேற்றமடைய முடியாதென அவர் எண்ணியமையாற்போலும், கெக்கிராவாவை அடைந்து, ஆங்கு யாழ்ப்பாணம் நல்லூரரைச் சேர்ந்த திரு. தாமோதரம்பிள்ளை என்பவரால் நடாத்தப்பட்டுவந்த வியாபார ஸ்தலத்திலே விற்பனையாளராயும் கணக்கப்பிள்ளையாயும் பல வருடகாலம் ஊக்கமாகக் கடமை புரிந்துவந்தார்.

திரு. தாமோதரம்பிள்ளை அவர்களுக்குக் காளாவி என்னுமிடத்தில் ஒரு தென்னந் தோட்டமும் நெல்

வயலும் இருந்தபடியால் அவர் தமது பிற்காலத்தை அவ்விடத்தில் நிம்மதியாகக் கழிக்க விரும்பினார். அதனால், தமது வியாபார நிலையத்தில் இருந்த ஊக்கமும் விடாமுயற்சியும் விவேகமும் வாய்ந்த ஊழியராகிய திரு. பூ. சுப்பிரமணியம் அவர்களுக்கு, அவ் வியாபார நிலையத்தைத் தம் அன்பின் அறிகுறியாகக் கொடுத்து வாழ்த்துக்கூறிக் கையளித்தார்.

1912ஆம் ஆண்டு தன் சொந்தத்தில் வியாபாரத்தைக் கெக்கிராவாவில் அவ் வியாபார நிலையத்தில் ஆரம்பித்த திரு. சுப்பிரமணியமவர்கள் தன் சகோதரர் திரு. பூ. நாகமுத்து அவர்களையும் ஒரு பங்காளராகக் கொண்டு மிகுந்த ஒற்றுமையுடனும் ஊக்கத்துடனும் விவேகத்துடனும் தொழிலைத் திறம்பட நடாத்திவந்தார். 'செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்' அன்றோ? அதனால், தம் உறவினர் பலர்க்கும் அயலவர்க்கும் தம் ஸ்தாபனத்திலே வேலை கொடுத்து அவர்களையும் மகிழச் செய்து, தாமும் வியாபாரத் தொழிலில் ஓர் உன்னத ஸ்தானத்தைப் பெற்றுப் பெருமகிழ்வுடன் வாழ்ந்து வந்தார்.

1952ஆம் ஆண்டளவில் தாம் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டுமென்னும் எண்ணத்தினாலும் தமது பிள்ளைகள் வியாபாரத்தை நடாத்தும் சிறப்பைப் பார்த்து மகிழ வேண்டுமென்னும் அவாவினாலும் திரு. பூ. சுப்பிரமணியம் அவர்களும், திரு. பூ. நாகமுத்து அவர்களும் ஓய்வு பெற, திரு. சுப்பிரமணியம் அவர்களின் ஏக புதல்வர் திரு. நடராசா, திரு. நாகமுத்து அவர்களின் சிரேட்ட புதல்வர் திரு. சிவப்பிரகாசம், திரு. பூ. சுப்பிரமணியமவர்களின் பெருமகன் திரு. வ. கந்தையா ஆகிய மூவருந் தொழிலைக் கையேற்று அவ் வியாபார நிலையத்தை இன்றும் சிறப்புற நடாத்தி வருகின்றனர். அம் மூவராலும் புதிதாக அமைக்கப்பட்ட வியாபார நிலையமாகிய 'சுப்பிரமணிய மஹால்' என்னும் வியாபார மாளிகை என்றென்றும் கெக்கிராவாவில் திரு. சுப்பிரமணியமவர்களின் ஞாபகமாக நின்று நிலவுவதாக. திரு. சுப்பிரமணியமவர்கள் தம் வாழ்நாளின் இறுதிக் காலத்தை தமது ஏக புத்திரியும் தபாற் பகுதி அதிகாரி திரு. க. சுந்தரமூர்த்தி அவர்களின் பிரிய பத்தினியுமான ஸ்ரீமதி இராசம்மா அவர்களின் பராபரிப்பில் இனிதே கழித்து வந்தார்.

கெக்கிராவாவிலுள்ள இந்து ஆலய நிர்வாக பரிபாலகராய்ப் பலபல தருமங்களைப் பாலித்து நடாத்திய திருவாளர் பூ. சுப்பிரமணியமவர்கள் தமது 80ஆவது வயதில், தமது புதல்வியாரில்லத்தில் ஏவிளம்பிஞு ஆவணிமீ 15ந்வ (1-9-58) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இவ்வுலக வாழ்வை நீத்து இறைவன் திருவடிநீழல் எய்தினர்.

[முப்பதாவது நாள் நினைவு வெளியீட்டு மலரிலிருந்து அனுவதிக்கப்பட்டது.—1958]

# HIGH LIGHTS

AMONG the memorials left behind by the late N. Ponniah, known everywhere as *Eelakesari* Ponniah, the Kurumpasiddy Sanmarga Sabha is the one that touches the community into which he was born and in whose midst he spent his years. This Sabha is in a sense successor to many similar efforts made by the residents of this village to serve their cultural, social and economic needs. First of these was the *'Myliddy South Hindu Young Men's Association'* which came into being in the wake of Swamy Vivekananda's visit to Jaffna. It functioned till 1920 particularly in the field of religion. This was followed by the '*Hindu Youth League*', the '*Benevolent Association*' and finally by the '*Welfare Society*'. It was this last that was transformed on 17-10-1934 into the Sanmarga Sabha. This historic change took place at the Manivasaga Library and Reading Room under the chairmanship of the late Mr. N. Ponniah, J. P. The new Society originally known as the '*Thenmailai Sanmarga Sabha*' was later christened 'The Kurumpasiddy Sanmarga Sabha' by which name it continues to be known to this day.

THIS Sabha is a multipurpose undertaking seeking to make its contribution to the growth of the village in every department of life. It serves the needs of young and old, men and women. It provides rural credit, reading room facilities, playing fields, religious instruction and training and opportunities for acquiring skills that yield economic benefits.

The following eleven (11) units, each responsible for a specialized function carry out the purposes of the Sabha:

1. SANMARGA RURAL DEVELOPMENT SOCIETY.
2. SANMARGA COMMUNITY CENTRE.
3. SANMARGA YOUTH LEAGUE.
4. SANMARGA WOMEN'S SOCIETY.
5. SANMARGA CO-OPERATIVE CREDIT SOCIETY. (MEN)
6. SANMARGA CO-OPERATIVE CREDIT SOCIETY. (WOMEN)
7. MANIVASAGA LIBRARY.
8. SANMARGA SPORTS CLUB.
9. SANMARGA DRAMATIC SOCIETY.
10. HINDU RELIGIOUS AFFAIRS SOCIETY.
11. MILK FEEDING CENTRE.

IT is not possible to give a detailed history of the activities and achievements of the Sabha during

the last thirty years without making the story tedious. We shall therefore draw attention to a few high lights. in our chronicle:

Feeling the need for a **Permanent habitation** for our Sabha, land was acquired for this purpose by deed No. 584 attested by Mr. N. Thambiah, Notary Public of Punnalaikadduvan. The foundation was laid on June 6th 1941. Although various schemes were put forward for raising funds for the building, none of them proved practicable. Finally the entire cost of the building was met by the then President Mr. N. Ponniah.

The concern of our Sabha was all along been not to indulge in spectacular or theatrical performances but rather to improve the living conditions of the community by enhancing existing amenities and providing new ones. The story of the **Eelakesari Ponniah Road** is an illustration of how with perseverence and hard work the Sabha overcame the difficulties which arose one after another and finally achieved its purpose. Land was donated freely to double the width of an existing V. C. lane so that a motorable road 24 feet wide and nearly 2 miles long was constructed and eventually handed over to P. W. D. for maintenance. The labours of the Sabha in this regard is an anticipation of the *Shramadana* movement now becoming popular in our land.

The story of our **Central Dispensary** is equally thrilling. To begin with, there was only a Maternity and Childwelfare Clinic which owed its origin to the efforts of our Sabha. But, not being content with a Clinic alone, we continued our efforts to provide something better for our people. These efforts bore fruit in the establishment of a Visiting Dispensary. But even a Visiting Dispensary was found inadequate for our needs and the determined agitation of our Sabha for the establishment of a Central Dispensary was crowned with success when on 7-8-61 the Government decided to give us a Central Dispensary.

The **Sub-post Office** is also another amenity which the Sanmarga Sabha brought into being for the residents of our village. Yielding to our pressure the Government first gave us a 'C' grade Sub-Post Office which did not meet our needs fully. We did not rest satisfied. We kept exerting pressure on Government to up-grade the Sub-Post Office, until finally the Government saw the reasonableness of our demand and raised the grade of the Sub-Post Office from 'C' to 'B' and finally to 'A'.

The Sabha has never regarded the satisfaction of physical and economic needs alone as a worthy aim for its labours; while not despising roads, dispensaries, postal facilities which are all needful for a civilized living, the Sabha also has devoted its energies to **educational, spiritual and cultural pursuits.** The publication of the '*Ilakkiya Manchari* Series (Book 4 and 5), and '*Saiva Samaya Bodhini*' '*Saiva Natchinthanaikal*' by Panditha-mani S. Kanapathippillai and a host of other publications was sponsored by our Sabha. For a number of years the Sabha maintained classes for the study of Saiva Siddhanta under Mr. M. Gnanapiragasam, B.A., B. SC.

It was a privilege of our Sabha to receive and entertain a host of visitors distinguished in learning, religion and other fields. Among them we record with pride the following:

- Sir W. Duraiswamy, Ex-Speaker, State Council.
- R. R. Nalliah Esq., Proctor and Ex - Chairman, Jaffna Urban Council.
- Dr. S. Natesan, Former Minister of Post and Radio Broadcasting.
- S. Handy Perinbanayagam Esq., B. A., Former Principal, Kokuvil Hindu College
- Pandithamani S. Kanapathipillai.
- T. S. Avinasilingam Chettiar, Esq., M. L. A., Madras.
- Swamy Suddananda Bharatiar.
- His Highness The Kunrakkudi Adikalar Arunasala Thesigar.
- Sir John Kotelawala.
- Elmer C. Bratte, Fulbright Fellow U. S. A. and
- Mrs. Bratte.
- E. W. Ariyanayagam Esq., General Secretary, Wardha Scheme.
- Dr. T. M. Auer, West German Ambassador.
- B. C. Ballard, Esq., High Commissioner for Australia.
- Kalki Krishnamoorthy.
- Periyasamy Thooran.

and other Tamil Authors.

Finally we would like to take this opportunity to render our thanks to these distinguished patronages as well as to our less exalted friends who have helped us in carrying out the day to day work of our Sabha through the last 30 years.

# தமிழர் கண்ட நெறி

[ சைவப் பெருந்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் ]

ஈழநாடு ஈன்றெடுத்துத் தமிழ் உலகுக்கும் சைவ உலகுக்கும் தந்த பெரியோர்கள் பலர். திருவார்திரு ஆறுமுகநாவலர் அவர்கள் இந்த வரிசையில் முதலாவதாக வைத்து எண்ணப்பட வேண்டியவர். ஆறுமுகநாவலர் அவர்களும் அவர்தம் வழியில் வந்த சைவப் பெரியோர்களும் சைவத்தமிழ் உலகிற்கு ஆற்றிய தொண்டுகள் அளப்பில. இந்த வரிசையில் தொல்காப்பியத்தைச் சிறந்த முறையிற் குறிப்புரையுடன் பதிப்பித்துள்ள கணேசையர் அவர்களுடைய தொண்டும் நினைவிற் கொள்ளத்தக்கது. இங்ஙனம் சிவ நெறியையும் செந்தமிழையும் பேணி வளர்த்த—வளர்த்து வருகின்ற தமிழ்ப் பெருமக்களிடையே தமிழர் கண்ட நெறிபற்றி எழுதுவது நமக்கு அளவுகடந்த மகிழ்ச்சியைத் தருகின்றது.

தமிழர்கள் வழிவழியாக வளர்ந்துவரும் வரலாற்றுப் பெருமை உடையவர்கள். அவர்களுடைய மொழி காலத்தால் மூத்தது; கருத்தாலும் மூத்தது. தமிழர்கள் வாழ்க்கையைப் பேணினர்; அன்பு நெறியை வளர்த்தனர்; அறநெறியைப் போற்றினர்; அருள் நெறியில் வாழ்ந்தனர்; சன்மார்க்க நெறியில் திளைத்து இன்பங் கண்டனர். மனித இனத்தைக் கேளிராகக் கண்டு பாடிய முதற் கவிஞன் தமிழ்க் கவிஞனே ஆவான். ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்று புறநானூறு பேசுகிறது. ''ஒன்றே குலம்'' என்று திருமந்திரம் பேசுகிறது. ''எல்லா உலகமும் ஆனாய் நீயே'' என்று திருமுறை பேசுகிறது. தமிழர் நெறி பண்பாட்டு நெறி; நயக்கத்தக்க நாகரிக நெறி.

தமிழரின் நாகரிகத்திற்கு—தமிழர் நாகரிகத்தின் அடித்தளமாகச் சமய நெறியே விளங்குகிறது. உலகத்தில் சமயத் துறையில் தம்முடைய அறிவையும் அனுபவத்தையும் மிகப் பழங்காலத்திலேயே வளர்த்துக்கொண்ட இனம் தமிழினமேயாம். இந்த முறையில் கிரேக்க இனமும் தமிழினத்தோடு ஒத்துவரக்கூடும். மற்றைய மொழி வழிப்பட்ட இனங்கள் எல்லாம் பிற்காலத்திலேயே சமய வாழ்வில் ஈடுபடத் தொடங்கின. தமிழ் எப்படிக் காலத்தால் மூத்ததாக விளங்குகிறதோ — அது போலவே தமிழருடைய அறிவிற் பூத்துக் காய்த்துக் கனிந்து விளங்கும் சித்தாந்தச்சிவநெறியும் காலத்தாலும் மூத்தது; கருத்தாலும் மூத்தது. ஆரியர்களின் தொடர்பு தமிழர்களுக்கு ஏற்படுவதற்கு முன்னலேயே தமிழ்ப் பெருங்குடி மக்கள் சித்தாந்தச் சிவநெறியில் வாழ்ந்து வந்தனர் என்பதைச் சிந்துவெளி நாகரிகம் பேசுகிறது. சிந்துவெளி நாகரிகத்தைப் பற்றி விரிவாக எழுதும் சர் ஜான் மார்ஷல்துரை அவர்கள் ''ஆரியர்களுடைய வருகைக்கு முந்தியது சிந்துவெளி நாகரிகம் என்றும், சிந்துவெளி நாகரிகத்தில் வாழ்ந்த மக்கள் சிவநெறியை மேற்கொண்டிருந்தனர் என்றும் தெளிவாக எழுதுகிறார். வரலாறு அறியாதவர்கள் — அல்லது அறிந்தும் உண்மையை மறைக்க விரும்புகிறவர்கள் ஆரியர்களுடைய வருகையின் மூலமாகவே —அல்லது ஆரியர்களாலேயே சமய

வாழ்வு உருப்பெறத் தொடங்கியது என்று கூறுவர். அக்கூற்று வரலாறுகளுக்கும் உண்மைக்கும் மாறுபட்டதேயாகும்.

தமிழரின் சமய நெறி சித்தாந்த சிவநெறி. மாணிக்கவாசகரின் சிவஞான அனுபவமாகத் திருவாசகத்தை நன்ருக அனுபவித்த பேரறிஞர் டாக்டர் ஜி. யு. போப் ஐயர். அப்பெரியார் திருவாசகத்தை ஆங்கில உலகுக்கு அறிமுகப்படுத்தும்போது ''சைவ சித்தாந்தக் கொள்கையானது தமிழரது பேரறிவின் பயன்'' என்று கூறுகின்ருர். இக் கருத்தையே கனம் கௌடி என்னும் பாதிரியாரும் எடுத்துவிளக்கியுள்ளார். அவர் சொல்லுவதாவது: ''சைவ சித்தாந்தக் கொள்கையானது தொன்மை நலம் பல அமையப் பெற்றதாகும். இந்திய நாட்டில் வழங்குஞ் சமயக் கருத்துக்களில் பழமையானவை யாவும் இச் சமயத்திற்குத்தான் உரிமை உடையனவாகும். இச்சித்தாந்த சிவநெறியே தமிழர்களின் பண்டைய சமய நெறியாகும். மற்றையவை எல்லாம் பின்வந்தனவாகவும் பிறசமயத்திற்கு உரியனவாகவும் காணப்படுகின்றன. முறையாக அமைந்ததாயும் நம்பிக்கைக்கும் நல்வாழ்க்கைக்கும் எடுத்துக்காட்டாகவும் இருப்பதில் இச் சமய நெறி மிகச் சிறந்து விளங்குகிறது. இந்தியா முழுவதிலுங்கூட சைவசித்தாந்தமே இந்திய நினைவின் சீர்மைக்கும் உயர்தர வாழ்க்கைக்கும் எல்லையாகும் பெருமைபடைத்தது என்று கூறுதல் தவருகாது'' என்பதே.

சைவ சிந்தாந்தம் முடிந்த முடிபாகத் திகழ்கிறது; எல்லாவிதமான ஐயங்களையும் தெளிவித்து, விளங்கும் பெருநெறியாக விளங்குகிறது. அறிவுக்கும் அனுபவத்திற்கும் ஒத்து இருக்கும் நெறியும் இந்நெறியேயாகும். சைவ சித்தாந்த முறைப்படி, உள்பொருள் மூன்று எனக்கொண்டு அதாவது இறை—உயிர்—தளை எனப் பகுத்து, அறிகின்றபொழுது கிடைக்கின்ற தத்துவ அறிவு நுணுக்கமானது; அது மட்டுமன்றி அனுபவத்திற்குச் சான்ருகவும் திகழ்கிறது. இந்நேரத்தில் சைவ சித்தாந்தக் கொள்கைகளின் சீர்மைகளைப் பற்றி எல்லாம் முறையாக விளக்க நேரமின்மைக்காக வருந்துகின்றேன்.

ஆரியர்களுடைய உறவும் தொடர்பும் தமிழர்களுக்கு அதிகமாக ஏற்பட ஏற்படச் சைவ சித்தாந்தத்தின் தனித்தன்மை குறைந்து வந்திருக்கிறது. இந்தியாவில் வழங்கும் ''இந்துமதம்'' எனப் பிற்காலத்தில் ஒரு பொதுப்பெயர் ஏற்பட்டது. அப்பெயர் ஏற்பட்ட பிறகு ''இந்துமதம்'' என்ற பேரால் வையில் ''ஏகான்மவாத'' நெறியே அறிமுகப்படுத்தப்பெற்றது. அதாவது இந்துமதம் என்ருல் இன்றைக்கு மேற்றிசை நாட்டவரிற் பெரும்பாலோர் அறிந்துகொண்டிருப்பது, வேதாந்த நெறியை அல்லது கீதை நெறியை அல்லது ஒன்றிலும் பற்றுக்கோடு இல்லாத ஒரு குழப்பமான நெறியையே யாகும். சைவசித்தாந்த நெறியைப் பொறுத்தவரையில் வேதாந்தம் படிமுறையிற் காணப்படுகின்ற ஒரு நெறியே தவிர இரண்டும் ஒன்றல்ல. ''வேதாந்தத்தின் தெளிவாம் சைவ சித்தாந்தத் திறன்'' என்று அருள்நூல் பேசுகிறது. குமரகுருபர அடிகளும் ''ஓரும் வேதாந்தம் என்ற உச்சியிற் பழுத்த ஆரா இன்ப அருங்கனி பிழிந்து சாரங்கொண்ட சைவ சித்தாந்தத் தேனமு தருந்தினர்'' என்று கூறுகின்ருர்.

மாணிக்கவாசகர் ''மிண்டிய மாயாவாதம் எனும் சண்டமாரு

தம்'' என்று குறிப்பிடுகின்றார். தமிழர்களைப் பொறுத்தவரையில் சைவ சித்தாந்த நெறியே உரிமைநெறி— உயிர் நெறியுமாகும். வேதாந்த நெறி நமக்கு உரிமை நெறியாக மாட்டாது. சைவ சித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கையாகிய முப்பொருள் உண்மையை வேதாந்தம் ஏற்றுக்கொள்வது இல்லை. முப்பொருள் உண்மையை ஏற்றுக் கொள்ளாதவரையில் அச் சமயத்தில் தெளிவு இருக்கமுடியாது. இருந்தாலும் அவர்கள் சைவமதத்தைச் சார்ந்தவர்கள்போலக் காட்டிக்கொள்வதினால் நம்மிற் பலர் அறியாது மயங்கி விடுகிறோம். ''சிவன் எனத் தேறினன் காண்க'' என்ற உறுதியுங்கூட அவர்கள் மாட்டு இருப்பது இல்லை. எனவே நம்முடைய சிவநெறியே நமக்கு உரிமைநெறி. இந்நெறியே திருஞானசம்பந்தர் போற்றி வளர்த்த திருநெறி; நாயன்மார்கள் வளர்த்த நன்னெறி; மெய்கண்ட சிவனார் வளர்த்த சன்மார்க்கநெறி; ஆறுமுகநாவலர் போற்றிவளர்த்த அருள்நெறி. இந்நெறிநின்று வாழ்வது நம்முடைய கடமை. அது மட்டுமன்றி இந்நெறியை முறையாகவும் வளர்க்குந் திருப்பணியில் ஈடுபடவேண்டும். சமரசம் என்ற பெயரால் நம்மை இழந்துவிடமுடியாது. நம்மை இழக்கலாம்; நம்முடைய தத்துவத்தை இழக்க முடியாது.

தன்மொழிப் பண்பற்றவனிடம் பிறமொழிப் பண்பு சாராது என்பது பழமொழி. தன்னுடைய சமய நெறியிற் பற்றும் படிப்பும் இல்லாதவர்களிடத்திற் சமரசம் மலர முடியாது. மலர்ந்தாலும் மணம் வீசாது. எனவே நம்முடைய சமய நெறியைப் பேணி வளர்க்கும் திருப்பணியில் ஈடுபடுவீர்களாக.

சிறந்த அச்சு வேலைகளுக்கு

சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்

# புராண மகிமை

**[ பண்டிதமணி, சி. கணபதிப்பிள்ளை அவர்கள் ]**

குற்றியலுகரத்தைச் சொல்லி னிறுதியிலே வல்லினமெய்யின் மேலே வைத்து நுண்செவியா லுணர்வதன்றித் தனித்துக் காண்டலரிது. அது சார்பெழுத்து; மற்றொன்றைச் சார்ந்து தோன்றுவதன்றித் தனித்துத் தோன்ருது.

உயிர் (ஆன்மா) இந்தச் சார்பெழுத்தாகிய குற்றியலுகரம் போன்றது. உடம்பைச் சார்ந்து தோன்றுவதன்றித் தனித்துத் தோன்ருது; புலம் ஆகாது.

உயிருக்குச் சார்ந்ததன் வண்ணமாயிருத்தல் இயல்பான குணம். குணம் குணியினின்றும் என்ருயினும் பிரிவதில்லை. உயிர் குணி. அது தன் குணஇயல்புக்கேற்ப உடம்பைச் சார்ந்து உடம்பே தாஞய் அதன்வண்ணமா யிருக்கின்றது. உயிர் பிறப்புத்தோறும் எண்ணிறந்த உடம்புகளைச் சார்ந்து வந்திருக்கிறது. ஒவ்வொரு பிறப்பிலும் உயிர் எடுத்த உடம்பின் பெயரைச் சொல்லி அழைத்தால் உயிர் ''ஏன்'' என்னும்; உடம்பைச் சார்ந்து உடம்பாய்த் தானிருப்பதை நன்கு நிரூபிக்கும்.

உயிருக்கு இருநிலை உண்டு: ஒன்று பந்தநிலை; மற்றையது முத்திநிலை. பந்தநிலை செயற்கையானது. முத்திநிலை இயற்கையானது. முத்திநிலை எய்திய உயிர் பின் பந்தநிலைக்கு வருவதில்லை. அதனுலேதான் முத்திநிலை இயற்கையானது.

பந்தநிலையிலே உடம்பைச் சார்ந்து உடம்பாய்க் காட்சியளித்த உயிர், முத்திநிலையிலே கடவுளைச் சார்ந்து கடவுள் மயமாயிருக்கும்; கடவுளாய்த் தன்னைக் காணும் என்றுஞ் சொல்லலாம்.

பந்தநிலையில் உயிர் தன்னை எப்படி எடுத்த உடம்பாகக் காணுமோ, அப்படியே முத்திநிலையில் தான் சார்ந்த கடவுளாய்த் தன்னை அது காணும்.

பந்தநிலையில் எப்படி உடம்பிலிருந்து வேருக உயிர் தன்னைக் காணமாட்டாதோ அப்படியே முத்திநிலையிற் கடவுளிலிருந்து தன்னை வேருகக் காணமாட்டாது. உயிர் தன்னைத் தான் சார்ந்த பொருளிலிருந்து வேருகக் காண்டல் எஞ்ஞான்றுமில்லை.

இஃதிவ்வாருக;

ஆரணியங்களிலுள்ள ஆச்சிரமங்களில் முத்தர்களான முனிவர்களிடம் அவர்களின் சீடர்கள் 'தாம் யார்' என்று வினவிச் சந்தேகந் தெளிய முயல்வதுண்டு. முனிவர்கள் சீடர்களின் பக்குவத்துக்குத் தக்கவாறு விடைபகர்வார்கள்.

'நான் யார்' என்று வினவிய சீடனை நோக்கி ''நீதான் வயிறு புடைக்க உண்ணுகின்ற சோறு'' என்று விடை கூறுவதுமுண்டு. சீடன் அந்த விடையை அப்படியே விழுங்கிவிடாது, ஆறியமர்ந்து ஆலோசனை செய்து, விடையிலே ஐயமுற்று, மீண்டும் வினவுவான். ''விடுகிற மூச்சுத்தான் நீ'' என்றும் முனிவர்கள் விடையிறுப்பார்கள். சீடன் மேலும் ஆராய்வான்; முனிவரைவிடாது தொடர்ந்து கொண்டேயிருப்பான்.

"ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து"

என்பது அருமந்த குறள். சீடன் ஆயிரம் முறை வினவிச் சாதகம் முதிர்ந்து மேலும் சென்று வினவுவான். முனிவர், ''அப்பனே வா உண்மையைச் சொல்லி விடுகிறேன். நீ உன்னைக் குறைவுடைப் பொருளென்று கருதாதே. நீ தான் அந்தக்கடவுள்'' என்று உபதேசிக்கின்ருர். சாதகஞன 'சீடன் மேலுந்

தவம் புரிந்து குருவின் உபதேசத்தை ஆராய்கின்றான். அதன்மேல் அவன் குருவிடம் வினவுவதில்லை. கண்மூடி மௌனியாய்ச் சும்மா விருப்பான். தன்னைக் கடவுள் மயமாகவே கண்டுகொண்டிருப்பான்.

பந்தநிலையில் நாம் நம்மை உடலாகக் கண்டபோது, ஆன்மா உடலன்று என்ற உணர்ச்சி யிருக்கின்றது. அவ்வாறே அதனினுங் கோடி மடங்கு தெளிவாக முத்தி நிலையில் கடவுள் மயமாயிருக்கும் ஆன்மாவுக்கு, தான் கடவுளேயன்று என்பதில் ஐயமேயில்லை. அதனால் மேல் வினாவும் இல்லை.

இவ்வாறான ஆச்சிரம வினாவிடைகள் ஆரணியகங்களான வேதப் பகுதிகளில் ஆங்காங்கே வரும். அந்த வினாவிடைகள் பக்குவர்களான சாதகர்களுக்கு ஐயந் தருவதில்லை. சாதகமூலம் அறிவதனைச் சாத்திரமூலம் அறிய முயல்வாருக்கு அந்த வினாவிடைகள் சந்தேக விபரீத சிகரங்களாய்த் தோன்றும். அதனாலே ஆன்மாத்தான் பிரமம் என்று உபநிடதங்களிலே காணப்பட்டால், அதனைக்கண்ட புத்தகப் படிப்பாளிகள், 'ஓகோ, நாம் பிரமம்' என்று அகப்பிரமங் கொள்வதுமுண்டு. தேவர்களுக்குள்ளேயும் இப்படி அகப்பிரமங்கொண்டவர்களுண்டு. பிரம விஷ்ணுக்கள் ஒருமுறை தம்மைக் கடவுளாகவே கண்டார்கள். அவர்கள் சாதகர்களாயிருந்தும், அதனை மேற்கொள்ளாது, வேத வாக்குக்களைத் துணைக்கொண்டு அகப்பிரமங் கொண்டார்கள். அதன் விளைவுதான் புராணத்தில்வரும் அடிமுடிதேடுபடலம்.

கடவுள் மயமானபோதும் ஆன்மா கடவுளேயன்று என்பதனை அடிமுடிதேடு படலம் விளக்குகின்றது. காய்ச்சிய இரும்பு நெருப்பு மயமானபோதும் இரும்பு இரும்பே. கடவுள்மயமாயிருந்து சிருட்டி திதி செய்தபோதும் பிரம விஷ்ணுக்கள் பிரம விஷ்ணுக்களே என்கின்றது புராணம்.

புராணமாவது யாது?

என்று வினவி விடையிறுக்கவந்த 'சைவ வினாவிடை' வேதவாக்கியப் பொருள்களை வலியுறுத்தி விரித்து அறிவிப்பது புராணம் என்கின்றது.

'அன்னதோர் மறையினை அறிந்தும் ஐயமா
உன்னிய திறத்தினர் உள்ளந் தேறவு
மன்னவ ரல்லவர் மரபிற் றேரவு
மின்னமோர் மறையுள திதுவுங் கேண்மதி'

என்பது கந்தபுராணம். வேதத்தைப் படித்து, 'நான் பிரமம் போலும்' என்றிங்ஙனம் இன்னோரன்ன பிரகாரம் ஐயம் உறுவார்க்கு உள்ளத்தெளிவு பிறப்பிப்பது, புராணம் என்பது மேற் செய்யுளிலே முதலிரண்டடியின் பொருள். நாலாம் அடியில் 'இன்னமோர் மறையுளது' என்றது புராணத்தை.

புராணம் வேதத்துக்கு உபாங்கம். புராணந் தெரியாதவர்களைக் கண்டு வேதம் அஞ்சுகின்றது என்று ஒரு வசனமுமுண்டு.

புராணங்களை முறைப்படி கற்றுணர்ந்தவர் வியாசர். வியாசரிடம் புராணம் கேட்டவர் சூதர். வேதப் பொருளில் மலைவின்றித் தெளிவு பிறக்கத்தக்க வகையிற் புராணத்தைச் சொல்லுதலிலே ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர் சூதர். வேத இருடிகள் வேதத்திலே தெளிவு பிறக்கும் பொருட்டுச் சூதரிடம் புராணம் கேட்பார்கள்.

'கேளுங்கள் நைமிசாரணியவாசிகளே' யென்று சூதமகா முனிவர் சொல்லத் தொடங்கினார் என்று புராணந் தொடங்கும்.

இவ்வாற்றால் புராணக் கதைகளின் உயிர்ப்பொருள் வேத உண்மைகள் என்பதை உணர்ந்து புராணத்தின் மகிமையைக் கடைப்பிடிக்க.

# குகன் சொல்நயமும் வெஞ்சினமும்

[ செந்தமிழ்மணி பொ. கிருஷ்ணபிள்ளை அவர்கள் ]

தசரதனுடைய குணாதிசயத்தை விளக்கும் ஓர் அரிய சொற்றொடர் உளது. ''தருகைநீண்ட தசரதன்'' என்பதே அது. இரவலர் தன்னை அணுகுதற்கு முன்னரே தசரதன் அவர் மனநிலையை ஓர்ந்து அவருக்கு அவர் வாய்திறந்து 'ஈ' எனக் கேட்கமுன்னரே அள்ளி வழங்கும் அருமைப்பாடு தோன்ற கொடுப்ப தற்கு நீளும் அவன் கையை நீண்ட கையெனப் புலவர் குறிப்பிடுகிறார். அரசர் கை தாள்அளவும் நீண் டிருத்தல் சிறப்புடையதென்று பல ரும் புகல்வர். கொடும்பகைவரை அடக்கியாளும் கை தாள் தோய் தடக்கையாகத்தானே இருத்தல் வேண்டும்? புரவலன் தசரதன் கை பகைவரை அடக்க நீளுவதனினும் கொடைக்காக நீளுதலையே தன் பண்பாகக் கொண்டுளது.

தந்தை பண்பெல்லாம் மைந்த னிடம் அமைதல் இயல்பன்றோ? ஆகவே, அருமைத் தந்தையின் அரும்பெறல் மைந்தன் சிறப்பைக் குறிப்பிடுமிடத்தும் கம்பன் கரத் தையே குறிப்பிட்டு இராமன் புகழை எடுத்தியம்புகின்றான். ''நின்ற கொடைக்கை என் அன் பன்'' என வேட்டுவக் குருசில் குகன் வாயிலாக இராமனுடைய கொடை எவ்வாற்றானும் தசரதன் கொடைக்குக் குறைந்ததன்று என்று காட்டுகிறான். இக்கொடைத் திறம் இம் மன்னர்களுக்கு வாழை யடி வாழையாக வந்ததாகும். அள்ளி அள்ளி இடையறாது கொடுப்பதால் அக் கை நின்ற கொடைக்கை ஆகின்றது. கொடை காரணமாக உயர்ந்தோங்கி நிற்ப தோடு பயனாலும் நிலைபெற்ற கை ஆதலின் நின்ற என்ற அடை பொருள் சிறந்து நிற்கின்றது. இல் வாழ்வான் இயல்புடைய மூவர்க் கும் நின்ற துணையாகின்றான் என் கின்றான் வள்ளுவன். கம்பன் காட் டும் நின்ற என்ற அடையும் வள்ளு வன் காட்டும் நின்ற அடையே ஆகின்றது. கேவலம் கொடுத்தல் மாத்திரம் சிறப்புடைத்தன்று. கொடைப் பயனும் ஏற்பானுக்கு நின்று பயன்கொடுத்தலால் கொள் வோன் கொடுப்போன் இருசாரா ருக்கும் பல்லாற்றானும் பெரும்பய னைக் கொடுக்கின்றது.

இராமபிரானுடைய மேனிஅழ காற் கவரப்பட்ட குகன், சந்ததி சந் ததியாகக் கொடுத்துவரும் பெருங் குலச்சிறப்புடைய இராமனுடைய குண நலன்களாலும் அன்னவனுக்கு அடிமையாகின்றான். தனக் குரிய பொன்னம் பெரிய அரசையே சின் னஞ்சிறு பொருள்போலச் சிற் றன்னை கேள்விப்படி கொடுத்து மகிழ்ந்த இராமனுடைய நலமெ லாம் அவன் தன்னை விட்டுப் பிரிந்த பின்பும் குகன் மனத்திடை உறைப் போடு தோற்றுதலால் நல்ல கருத் துப் பொதிந்து 'நின்ற கொடைக் கை என் அன்பன்' எனப் பெரு மிதத்தோடு இராமனைப் பற்றிக்

கூறுகிறான். இந்தப் பரம்பரையைச் சேர்ந்த எல்லோருமே வள்ளல்களானமையால் கைகேயியைப் பற்றிக் குறிப்பிடும்போதுகூட அவள் கொடையையும் புகழ்வாள் போல இளிவரலும் நகையும் சேர்த்து அவளுக்குமே ஒரு பெரும் அடை கொடுத்து விடுகின்றான்.

இராமனுடைய கை தந்தையுடையது போலவே கொடுத்துப் பழகியதன்றி இதுவரை எதையும் ஏற்ற இயல்புடையதன்று. கைகேயியின் கொடை ஒன்றனை ஏற்க மாத்திரமே அது ஒருபோது தாழலாயிற்று என்ற குறிப்பை வைத்துக் கைகேயியின் கொடையை வியப்பான் போலக் குகன் பேசுஞ் சிறப்பைக் கம்பன் படிப்போர் மனமும் களிப்புற ''அன்பன் உடுக்க நெடுஞ் சீரை அன்று கொடுத்தவள்'' எனப் பாடுகின்றான். இராமனுக்கு இன்னலை வருவித்த கைகேயியை நினைக்கும் போதெல்லாம் குகனைச் சினமே ஆட்கொண்டு விடுகின்றது. அது அவ்வளவிற் கட்டுப்படாது அவள் மைந்தன் மீதும் மட்டின்றிப் பாய்வதால் கைகேயியைக் குறிப்பிடும் பகுதியை அவள் மைந்தனுக்கே அடையாக்கி விடுகின்றான். தன் கோபத்தைக் கைகேயியின் மீது திருப்பும்போது நாகரிகமற்ற இவ் வேடர் தலைவன் மிக நாகரிகமான முறையில் அவளைப்பற்றி எடுத்தியம்புகின்றான். அன்பன் உடுக்க நெடுஞ்சீரை கொடுத்தவள் என்று தன் வெஞ்சினத்தை யெல்லாம் வஞ்சப் புகழ்ச்சியாக்கி விடுகின்றான்.

உயர்குண வள்ளல் இராமனை அக் கொடியவள் காடேகச் செய்தாளென்று நினைக்கவே அவன் மனம் வருந்துகிறது. அதனை எடுத்தியம்ப வாய் கூசுகின்றது. ஆகவே இராமனைக் காடேகச் செய்தாள் என்றதனை நேரே குறிக்காது 'உடுக்க நெடுஞ்சீரை அன்று கொடுத்தவள்' என்று சீரையின் (சீரை — மரஉரி)கண் ஒட்டி *ஒட்டணியாக்கிக் குறிப்புப் பொருளின் சிறப்பால் நம் சோக உளத்தில் ஓர் இன்பத்தையும் ஏற்படுத்துகிறான்.

மரப்பட்டையாலாய உடை அணிவார், தவநெறி மேற்கொள்ள வனம் ஏகுவது வழக்கமாகையால் சீரை கொடுத்தவளென்ற தொடரினால் இராமனைக் காட்டுக்கோட்டினாள் என்ற கொடுமையைப் புலப்படுத்துகின்றான். குணநலஞ்சிறந்த இராமன் முடிசூடி மக்களை மகிழ்வித்தற்குரிய தினத்திலே அவனுக்கு இவள் விளைத்த கொடுமையை உயர்படியிலே வைத்துக் காட்ட அன்றே என்ற சொல்லையும் இடையே பெய்துள்ளான் கம்பன்.

கட்டுக்கடங்காக் குகனுடைய பெருங் கோபத்தை க, ட, ற என்னும் வல்லின எழுத்துக்களே மிகுதியும் பயின்று வரும் சொற்களை ஆண்டு எமக்கெடுத்துக் கம்பன் காட்டுகின்றான். தன் அண்ணனைக் கண்டு வணங்கி அயோத்திக்கு மீட்டுச்செல்ல சேனை சைனியங்கள் சுற்றத்தார் ஆகியோருடன் வந்த பரதனை, கங்கையாற்றின் எதிர்க்கரையிலே கண்ட குகன், கைகேயியின் மைந்தனாகையால் பரதன் தாயியற்றியதன் மேலும் கொடுமையிழைக்கவே வந்துள்ளான் என நினைத்தே,

---

* ஒட்டணி — எடுத்துக்கொண்ட விடயத்தை நேரே கூறாது வேறொன்றிலே ஏற்றிச் சொல்லுதலாம். இது விடயத்தைச் சொல்லாமலே சொல்லுதலால் நுவலா நுவற்சி பிறிதின் மொழிதல் எனவும் குறிப்பிடப்படும்.

இராமன்மீது கொண்ட ஆழ்ந்த அன்பினுல் கடுகடுப்புடன் இங்ஙனம் கூறுகின்றான். ஒருகாலைக் கொருகால் குகன் கோபம் கூடிக் கூடிச் செல்கின்றது. அதன் காரணமாக அத்துணை பெருந்திரளான மக்களை எல்லாம் தான் கொன்று குவித்து விடுவதாகத் தன் படை வீரர்முன் சபதஞ் செய்கின்றான். அவர்களைக் கொன்ற அளவில் அமைந்துவிடாது மேலும் தான் ஏதேதோ செய்வதாகக் குகன் கூறுகின்றான். இறந்தவரின் சாம்பரை உயர் தீர்த்தத்திற் கரைத்தல் ஒரு வழக்கு. இராமனுடைய சுற்றத்தவரின் சாம்பரைக் கரைப்பதற்குப் பதில் அவர் தம் உடலையே சமுத்திரத்திலிடப் போவதாக அவன் சபதம் கூறுகின்றான். அதுவும் தன் புன்னகையினுலே தான் அதனைச் செய்யாது புண்ணியக் கங்கையின் உயர்திரைக் கரத்திலே அவர் தம் உடலை ஒப்புக் கொடுத்து சமுத்திரத்திற் சேர்ப்பிப்பதாகக் கூறும் குகன் நயவார்த்தையைக் கம்பன் நற்சந்தம் புணர்ந்த அடிகளால் நமக்கு எடுத்துக் காட்டுகின்றான்.

"…………………… மைந்தர்
பலத்தைஎன் அம்பாலே
கொன்று குவித்த நிணங்கொள்
பிணக்குவை கொண்டோடித்
துன்று திரைக்கடல் கங்கை
மடுத்திடை தூராதோ."

இராமன் குணநலமும், கைகேயியின் கொடுமையும், குகனது கட்டுக்கடங்காக் கொடுங்கோபமும், சூளுரையும் ஒருங்கே புலப்படும் கம்பன் நலஞ்சிறந்த பாடலின் முழு உருவமும் வருமாறு:

"நின்ற கொடைக்கை என்அன்பன்
உடுக்க நெடுஞ்சீரை
அன்று கொடுத்தவள் மைந்தர்
பலத்தைஎன் அம்பாலே
கொன்று குவித்த நிணங்கொள்
பிணக்குவை கொண்டோடித்
துன்று திரைக்கடல் கங்கை
மடுத்திடை தூராதோ."

## வாழி விருத்தம்

தென்மயிலைச் சன்மார்க்க சபைவாழி தாபித்த
திறவோர் வாழி!
நன்மனத்தோ டே நாளும் நம்மூர்க்குப் பணிபுரியும்
நல்லோர் வாழி!
சின்மயத்த னடிவாழி தமிழ்த்தாயின் திருவடிகள்
சிறந்து வாழி!
பொன்கொழிக்கும் எம்மீழத் தாய்வாழி அவள்புகழும்
பொலிந்து வாழி!

[6-5-36ல் பாடப்பட்டது]

குரும்பசிட்டி

# சன்மார்க்க சபை

உ

## 30ஆம் ஆண்டு நிறைவும் முத்தமிழ்ப் பெருவிழாவும்

*

அன்புடையீர்,

நிகழும் விசுவாவசு ஆண்டு ஆனித் திங்கள் 25, 26, 27ஆம் நாட்களில் ( 9, 10, 11-7-65 வெள்ளி, சனி, ஞாயிறு ) முத்தமிழ்ப் பெருவிழா சன்மார்க்கசபை மண்டபத்தில் நடைபெறும்.

தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

சன்மார்க்க சபை,
குரும்பசிட்டி,
30-6-65.

ஏ. ரி. பொன்னுத்துரை
த. க. செல்லையா
இணைக்காரியதரிசிகள்

K.K.V.

## 9-7-65 வெள்ளிக்கிழமை

## சைவப்பெரியார் சிவபாதசுந்தரனுர் அரங்கு

மாலை 5-00 மணி

குரும்பசிட்டி அம்பாள் ஆலயத்திலிருந்து சமய – இலக்கியச் சுவடிகள் ஊர்வலம்.

### நிகழ்ச்சிகள்

மாலை 6-30 மணி

தலைவர் : பேரறிஞர் திரு. ச. பேரின்பநாயகம் அவர்கள், பி. ஏ.

1. தேவாரம்.
2. மங்கள தீபமேற்றி விழாவை ஆரம்பித்துவைத்தல் — தலைவர் அவர்கள்
3. சபைக் கீதம்.
4. காட்சி மண்டபந் திறந்துவைத்தல் — திரு. சிவா பசுபதி அவர்கள் [முடிக்குரிய வழக்கறிஞர், அரசாங்க சட்டவல்லுநர் திணைக்களம்]
5. வரவேற்புரை.
6. தலைவர் உரை.
7. விரிவுரைகள் :
   - i. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்.
   - ii. பேராசிரியர் திரு. சு. நேசையா அவர்கள், எம். ஏ.
   - iii. திரு. கி. லக்ஷ்மணன் அவர்கள், எம். ஏ. (அத்தியட்சர், அரசகருமமொழித் திணைக்களம்)
   - iv. சைவப் புலவர் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

★

*** மலர் வெளியீடு :** முதலியார் வை. மகேசன், ஜே. பி. அவர்கள்

இரவு 8–30 மணி கலை நிகழ்ச்சி :

## இலங்கையர்கோன் அரங்கு

தலைவர் : இராஜ. அரியரத்தினம் அவர்கள்

- i. இன்னிசை : செல்விகள் : சாரதாதேவி, பாரதாதேவி.
- ii. நடனம் :
- iii. தாளவாத்தியக் கச்சேரி
- iv. நகைச்சுவை நாடகம்.

தேவாரம்.

* சபையின் வேலைத்திட்ட அபிவிருத்திக்காக மலர்ப் பிரதி ஒன்று ரூபா 5-00 வீதம் சபை மண்டபத்தில் விற்பனை செய்யப்படும்.

10-7-65 சனிக்கிழமை உ

காலை 10-00 மணி

## பொன்னுக்குமாரு அரங்கு

காவிய அரங்கேற்றம்: **நீதிக் கரங்கள்** [சாந்திபர்வக் கதை]

தலைவர்: இரசிகமணி கனக. செந்திநாதன் அவர்கள்

கவிஞர்கள்: இ. நாகராஜன், இ. அம்பிகைபாகன், செ. கதிரேசர்பிள்ளை. நா. ஆறுமுகம், வித்துவான் சி. ஆறுமுகம்

காவிய விமர்சனம் — பண்டிதர் சு. வேலுப்பிள்ளை. ('சு. வே.')

பிற்பகல் 3-00 மணி கிராமியக் கலை: **i. காவடி. ii. கரகம்.**

மாலை 6-30 மணி

★

## கணேசையர் அரங்கு

**நிகழ்ச்சிகள்:**

தலைவர்: திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்கள், C. C. S., M. B. E.
(நிரந்தரக் காரியதரிசி, காணி அபிவிருத்தி மந்திரி காரியாலயம்)

1. தேவாரம்.
2. மங்கள தீபமேற்றி ஆரம்பித்துவைத்தல் — தலைவர் அவர்கள்
3. வரவேற்புரை.
4. தலைவர் உரை.
5. பிரதம விருந்தினர் உரை — சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் (தலைவர், திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபை)
6. விரிவுரைகள்:
   - i. முதலியார் குல. சபாநாதன் அவர்கள் (ஒலிபரப்புத் தகவற் பகுதி 'ஸ்ரீலங்கா' ஆசிரியர்)
   - ii. இரா. சிவலிங்கம் அவர்கள், எம். ஏ. (அதிபர், ஹைலன்ட் கல்லூரி, சுற்றன்)
   - iii. அருள் தியாகராசா அவர்கள், பி. ஏ. (வானொலித் தமிழ் பேச்சுப் பகுதி அதிகாரி)

★

இரவு 8-00 மணி

## அப்பாக்குட்டி அரங்கு

தலைவர்: கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்கள், எம். ஏ.
(இலங்கைப் பல்கலைக் கழக விரிவுரையாளர்)

சிறப்புரை: திரு. தி. முருகேசபிள்ளை அவர்கள்
(காரியாதிகாரி, வலி—வடக்கு)

கலை நிகழ்ச்சி:

1. நடனம்: i. 'வசந்தோற்சவம்'. ii. 'சிவதாண்டவம்'. (30 நிமிடம்)
   — ஆனந்த இராஜமாணிக்கம் (கலைஞர் வேல்ஆனந்தனின் மாணவன்)
2. சரித்திர நாடகம்: '**மதவெறி**' — சன்மார்க்க நாடகமன்றம் (1 மணித்தியாலம்)
3. நடனம்: 'நவரசம்' — கலைஞர் வேல்ஆனந்தன் (30 நிமிடம்)

## 11-7-65 ஞாயிற்றுக்கிழமை

*காலை 9-30 மணி* **காலை நிகழ்ச்சி :**

சன்மார்க்கசபை விசேட பொதுக்கூட்டம் [அங்கத்தவர்கள் மாத்திரம்]

i. தேவாரம். ii. கலந்துரையாடல். iii. தேநீர் விருந்து.

*பிற்பகல் 3-00 மணி*

கிராமியக் கலை : i. காவடி. ii. தீபக்கூடு பறக்கவைத்தல்.
iii. குஸ்தி. iv. பொக்சிங் — அனுமானுஜி கழகம், கரவெட்டி

*மாலை 6-30 மணி* ★

### ஈழகேசரிப் பொன்னையா அரங்கு

**நிகழ்ச்சிகள் :**

தலைவர் : திரு. கே. பி. அரன் அவர்கள், எம். ஏ.
*(ஆசிரியர், 'ஈழநாடு')*

தேவாரம்.

(அ) **பட்டமளிப்பு :** திரு. எஸ். சண்முகநாதன் (சானா) அவர்களுக்கு
*(இலங்கை வானொலித் தமிழ் நாடகப்பகுதித் தலைவர், நாடக இயக்குநர்)*

i. தலைவர் உரை.
ii பட்டமளிப்பு உரை : i. கலைஅரசு க. சொர்ணலிங்கம் அவர்கள்
ii. எம். ஏ. ரகுமான் *('இளம்பிறை' ஆசிரியர்)*
iii தங்கப் பதக்கம் அணிதல் — தலைவர் அவர்கள்
iv. பட்டம் பெறுபவர் உரை

(ஆ) **விரிவுரைகள் :** i. திரு. கா. சிவத்தம்பி அவர்கள், எம். ஏ.
*(மொழிபெயர்ப்பாளர், இலங்கைப் பாராளுமன்றம்)*
ii. திரு. க. செ. நடராசா அவர்கள், பி. ஏ.
*(தமிழ் வானொலி அதிகாரி)*
iii. திரு. எஸ். பொன்னுத்துரை அவர்கள், பி. ஏ.
*(ஆசிரியர், மட்டக்களப்பு)*

★

*இரவு 8-00 மணி* கலை நிகழ்ச்சி :

### கலைப்புலவர் நவரத்தினம் அரங்கு

**தலைவர் : திரு. க. கனகசபை அவர்கள்**
*(தலைவர், மயிலிட்டிக் கிராம சபை)*

1. தலைவர் உரை.
2. வரவேற்புரை.

**நாடகம் : 'ஆராமுது அசடா'** — மறுமலர்ச்சி மன்றம்
*1964ல் கலைக்கழகப் பரிசில்பெற்ற நாடகம். (மூன்று மணித்தியால நாடகம்)*

---

பிரபல ஓவியர்களுடைய ஓவியங்களும், அஜந்தா - சிகிரியா வர்ண ஓவியங்களும், புராதனகாலத் தமிழ் ஓவியங்களும் 3 நாட்களும் காட்சிக்கு வைக்கப்படும்.

விளம்பரங்களுக்கான சகல வேலைகளையும் நாம் ஏற்று
மிகத் திருப்தியான முறையிற் செய்கின்றோம்.

★

**Art Works:**
- Sign Boards
- Labels
- Letter-Heads
- Cover Designs
- Address Papers

**Blocks:**
- Line
- Half-Tone
- Colour

**Colour Printing:**
- Hand Bills
- Wall Posters
- Labels
- Letter Heads
- Calendar Pictures
- Magazine Covers
- Greeting Cards

**சித்திர வேலைகள்:**
- விளம்பரப் பலகைகள்
- லேபல் டிசைன்
- கடிதத் தலைப்புக்கள்
- அட்டைப் படங்கள்
- உபசாரப் பத்திரங்கள்

**புளொக்குகள்:**
- லைன்
- ஆப்-டோன்
- கலர்

**கலர் அச்சுவேலைகள்:**
- துண்டுப் பிரசுரங்கள்
- சுவரொட்டிகள்
- லேபல்
- கடிதத் தலைப்புகள்
- கலண்டர்ப் படங்கள்
- அட்டைப் படங்கள்
- வாழ்த்து இதழ்கள்

★

இன்னும்

ஒலிபெருக்கி அறிவித்தல் முதல் துண்டுப்பிரசுர விநி
யோகம், சினிமா சிலைட், பேசும்பட விளம்பரங்கள் வரை
எதுவானாலும் எம்முடன் கலந்தாலோசியுங்கள்.

**பவன் ஆட்ஸ்**
மொம்ஸாக் பில்டிங்ஸ்
11/I ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

**BHAVAN ARTS**
Momsac Buildings
11/I Stanley Road, JAFFNA

# VINNS Ltd.

CEYLON'S FOREMOST PROCESS BLOCK-MAKERS AND PHOTOGRAPHERS

**MARADANA :: COLOMBO 10**

**EQUIPPED WITH LATEST AND UP-TO-DATE MACHINERIES TO MAKE AND SUPPLY ALL KINDS OF BLOCKS— LINE, HALF-TONE, AND COLOUR BLOCKS—IN SCREENS SUITABLE FOR PRINTING IN ANY QUALITY PAPER.**

*

# வின்ஸ் லிமிடெட்

மருதானை :: கொழும்பு 10

இலங்கையில் முன்னணியில் திகழும்

புளொக் தயாரிப்பாளர்கள் :: புகைப்படப் பிடிப்பாளர்கள்

நவீன, நூதன யந்திரங்கள் அமைக்கப்பட்டுள்ள எமது ஸ்தாபனம் எல்லா விதமான 'புளொக்' குகளையுந் தயாரித்து உதவக் கூடியது.

தெலிபோன் : **3793** தபாற்பெட்டி : **1092**

# BEAUTY HOUSE

8. GREEN ROAD NEGOMBO

*Dealers in All Varieties of Foot-wear, Scents, Face Powder Etc.*

SANDALS & FOOT WEARS
OF
LATEST DESIGN & STYLE

உங்களுக்குத் தேவையான எல்லாவகையான அழகு சாதனப் பொருட்கள்
செருப்பு, சப்பாத்து வகைகள், சூட்கேஸ்,
சுகந்த வாசினைத் திரவியங்கள்
சகாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

# பியூட்டி ஹவுஸ்

8, கிறீன் வீதி :: நீர்கொழும்பு

GERMAN MAKE

# Sonnenschein

## BATTERIES

*Northern Province Agents:*

# THURAI & Co.

23/3 Stanley Road :: JAFFNA

Phone : 5441
Estd : 1925

பு. மு.

# P. M. MOHAMED ABDUL CADER

(Prop. K. SEYADOO ABBAS)

**General Merchant & Commission Agent**

*Dealer in* : Gingelly, Gingelly Oil Poonac, Mustard, Rice, Paddy and CEYLON PRODUCTS.

எங்களிடம் :

உங்கள் தேவைகளுக்குரிய, உள்ளூர் சிறந்த விளை பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

விசேட விற்பனை :

✲ முதல் ரக எள்ளு ✲ சுத்தமான நல்லெண்ணெய்

எங்களிடம் வருவோருக்கு :

தீவிரமான கவனம், திறமான சேவை, நிரந்தரமான விலைகள் என்றும் அளிப்போம்.

## பு. மு. முகமது அப்துல் காதர்

உரிமையாளர் : K. செய்யதப்பாஸ்

No. 85, பழைய சோனக தெரு.

போன் : 5441 :: கொழும்பு : 12




மக்களைக் கவர்ந்த

ஒரே ஸ்தாபனம்

# பிளவ்ஸ்

ஐந்து சந்தி :: யாழ்ப்பாணம்

★ ஐஸ் கிறீம்
★ ஐஸ் சொக்
★ ஐஸ் ஸ்ரே
★ ஐஸ் பழம்

- முற்றிலும் சுகாதார முறைப்படி நவீன யந்திரங்களாற் கை படாது தயாரிக்கப்படுபவை.
- பாடசாலை விளையாட்டு விழாக்கள் மற்றும் விசேஷ வைபவங்களுக்கும் ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

★ பிறந்த தின வைபவங்கள்
★ பள்ளிக்கூட விளையாட்டு விழாக்கள்
★ திருமணக் காட்சிகள் ஆகியவற்றைத்
தத்ரூபமான படங்களாக்கித் தருகின்றோம்

# பிறின்ஸ்

போட்டோகிருபர்ஸ்

( உரிமையாளர் : M. நடராசா )


பிரதான வீதி : : : : : : சுன்னுகம்

PHONE: 7204

# A. S. ARASARATNAM & Co.

GOVT. ELECTRICAL CONTRACTORS

11, STANLEY ROAD, JAFFNA.




ELECTRICAL ACCESSORIES
&
APPLIANCES
MOTORS & PUMPS – ALL TYPES –
ALL SIZES – FOR ALL DUTIES

**DAGENITE BATTERIES.**

ஏ. எஸ். அரசரட்ணம்
அன் கம்பனி
மின்சார ஒப்பந்தகாரர்
11, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# Y. P. M.

# மாணிக்கவாசக நாடார் அன் கோ.

பிரபல கடதாசி வியாபாரிகள்

58, மலிபான் வீதி :: கொழும்பு 11

இப்போதிருக்கும் கடதாசித் தட்டுப்பாடு காரணமாகப் போதிய கடதாசி வகைகள் இல்லாதிருக்கின்றன. எங்கள் வாடிக்கைக் காரர்களுக்குத் தேவையான தொகை கொடுக்க முடியாததற்கு வருந்துகின்றோம். இருந்தும் அவர்களுக்கு இதுகால வரையும் கைவசமுள்ள சொற்ப கடதாசிவகைகளைப் பங்கீடு செய்து உதவி உள்ளோம்.

நிலைமை சீராக வருகின்ற காலத்தில் வழமைபோல நமது வாடிக்கைக்காரர்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கின்றோம்.

# Y. P. M. Manickavasaga Nadar & Co.

PAPER MERCHANTS

58, Maliban Street :: COLOMBO 11

T'Phones: 4414 & 4114 T'Grams: PERINBAM

# ஸ்ரீலங்கா புத்தகசாலை

237, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்

எங்கள் சொந்த வெளியீடுகளும் விற்பனை உரிமை நூல்களும்

ரூ. ச.

தாவரவியல்—கிளேஸ் பதிப்பு 15-00
,, சாதாரண பதிப்பு 10-00
(ஆசிரியர் நா. இராமநாதன்)

இரசாயனம் 8-00
(ஆசிரியர் அ. க. சர்மா B. Sc.)

பௌதிகம் பகுதி I ,, ,, 4-50

இந்து சமய பாடம் — 4-00
(வித்துவான் க. வேந்தனார்)

கம்பராமாயணம அயோத்தியாகாண்டம், மந்தரை சூழ்ச்சிப் படலமும், கைகேயி சூழ்வினைப் படலமும்— 4-00
(வித்துவான் க. வேந்தனார்)

பாரதியார் பாடல் விளக்கவுரை ,, 2-00

பாரதச் சுருக்கம் 3-75
(ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை)

பாஞ்சாலிசபதம் – உரை — 2-75
(வி. சி. கந்தையா)

ஒலிபரப்புக் கலை — 6-00
(சோ. சிவபாதசுந்தரம்)

மனோன்மணியம் வசனம் — 1-25
(வித்துவான் க. சொக்கலிங்கம்)

தமிழ் இலக்கிய வரலாறு — 1-25
(வி. செல்வநாயகம் M. A.)

தமிழ் உரைநடை வரலாறு ,, ,, 2-50

பரீட்சித்தலும் புள்ளியிடுதலும் — 3-00
(ச. சிதம்பரப்பிள்ளை B. A., B. Sc,

கருத்துரைக்கோவை — 2-00
(Dr. K. A. சதாசிவம், ப. க. விரிவுரையாளர்)

தமிழ் அறிவு — (K. P. முத்தையா) 3-50

உளநூலும் கல்வியும — 3-00
(ஆசிரியர் த. இராமநாதபிள்ளை)

அளவை விளக்கம் (ஓர் தர்க்கநூல்) 3-00
(ஆசிரியர் த. இராமநாதபிள்ளை)

பாடி கணிதம் — (ஆ. சோமசுந்தரம்) 4-50

உடனல சாஸ்திரம — 5-00
(சுந்தரமூர்த்தி கந்தப்பு)

உயிரியல் — 12-80
(இராமகிருஷ்ணன் புத்திரசிங்கம்)

குடியியல் பரீட்சை வழிகாட்டி — 2-50
(விசயன் விக்ரோறியா) for G. C. E. Ex.

ரூ. ச.

சரித்திரப் பரீட்சை வழிகாட்டி 2-50
(விசயன் விக்ரோறியா) for G. C. E. Ex.

இலங்கைப் புவியியல் — ,, 3-75
(K. குணராசா)

பரீட்சைச் சித்திக்கேற்ற பாஷைப் பயிற்சி 1-00
for G. C. E. (மு. செல்லையா)

Control of our School 60
(by A. S. Kanagaratnam, B. A.)

Primer of Evolution 1-75
(By V. Ramakrishnan)

Sanskrit Text Book for H. S. C. 10-00
(By Subramaniam ord.)

Sanskrit Text Book for H. S. C. 12-00
(By Subramaniam calico)

Sanskrit Text Book for for G. C. E. (ord. level) Nala and Hetopadesa 4-00

Sanskrit Text Book for G. C. E.Ránditha and Advanced Level Ex. 3-00

G. C. E. Simplified Arithmetic 3-25
,, ,, Trigonometry in Print
,, Model answers to Physics (1956—1962) 4-25
,, ,, ,, to Chemistry (1956—1963) 3-50
,, ,, Pure Mathematics (1957—1963) 3-00
,, ,, ,, Part II (1957—1962) 3-00
,, ,, Biology (1957—1963) 2-75
,, Applied Mathematics in Print
,, Revision Applied Mathematics in Print
,, ,, Chemistry (1953—1963) 1-50
,, ,, Physics (1952—1963) 1-75
,, ,, Mathematics (1953—1962) 3-85

சமவுயரக் கோட்டுப் படவிளக்கம் for G. C. E. (S. குமரையா B. A.)

விபுலானந்தக் கவிதை இன்பம்
(அருள். செல்வநாயகம்)

விஞ்ஞான கணிதம் for G. C. E.
(S. இராசநாயகம் B. A.)

தமிழ்மொழிப் பரீட்சைச் சித்திக்கு இலகுவழி இலக்கணமும் ஆராய்ச்சிக் கட்டுரைகளும் 1-50
G. C. E. முதலிய உயர்தர பரீட்சைக்குரியது
(வித்துவான் பொன். கந்தசாமி)

## SRI LANKA BOOK DEPOT

234, K. K. S. Road JAFFNA

# அலுமினியம் கைத்தொழில் (இலங்கை) லிமிடெட்

போன்: **6910**

14, டாம் ஸ்றீற்,
பெற்ரு,
**கொழும்பு.**

உங்கள் வீட்டுப் பாவனைக்கு நீங்கள்

## டொலர்

அடையாளம் பொறித்த அலுமினியப் பாத்திரங்களைத் தெரிவுசெய்யுங்கள்

★ உறுதிக்கும் ★ உழைப்புக்கும் ★ அழகுக்கும்

உத்தரவாதமுள்ளது. இணையற்ற எம் நாட்டுத்தொழில்.

தொழில் நிலையம் :: *மாவிட்டபுரம்*

# Aluminium Industries (Ceylon) Ltd.

FOR YOUR HOUSE-HOLD USE ALWAYS INSIST ON

# DOLLAR BRAND

## Aluminium Wares

*for Durability, Beauty and Shining*

*Always Depend on* **Dollar Brand**

WORKSHOP :: :: :: MAVIDDAPURAM

14, DAM STREET, PETTAH, COLOMBO.


திருமகள் அழுத்தகம், சுன்னாகம்—இ80—6/65

# சுன்னுகம்: வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகப் பாடசாலைப் பாட புத்தகங்கள்

*வித்தியாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டவை.

## வாசினைப் பாட புத்தகங்கள்

### பாலபோதினி

| | ரு. ச. |
|---|---|
| அரிவரி புத்தகம் (வண்ணப்பதிப்பு) | 50 |
| * முதற் புத்தகம் ,, | 60 |
| * இரண்டாம் புத்தகம் ,, | 70 |
| * மூன்றும் புத்தகம் ,, | 80 |
| * நான்காம் புத்தகம் | 90 |
| * ஐந்தாம் புத்தகம் | 1-00 |
| * ஆறும் புத்தகம் | 1-10 |
| * ஏழாம் புத்தகம் | 1-20 |

## பாலபோதினி உபபாட புத்தகங்கள்

| | |
|---|---|
| * பரதன் | 50 |
| * இராஜா தேசிங்கு | 60 |
| * தமயந்தி | 60 |
| * இராமாயணச் சுருக்கம் | 60 |
| * சந்திரமதி | 75 |
| * மணிமேகலை | 1-00 |
| * குசேலர் சரிதம் | 60 |
| * சாவித்திரி | 75 |
| * குகன் | 1-00 |
| * சகுந்தலை சரிதம் | 1-25 |
| * திருமாவளவன் | 1-25 |

## சமயம்

### சைவசமய போதினி

| | |
|---|---|
| * இரண்டாம் வகுப்பு | 70 |
| * மூன்றும் ,, | 80 |
| * நான்காம் ,, | 90 |
| * ஐந்தாம் ,, | 1-00 |
| * ஆறும் ,, | 1-25 |
| * சைவசமயபாடத் தொகுப்பு (J.S.C.) | 1-60 |
| சைவவினுவிடை | 25 |

## பாஷை

| | |
|---|---|
| †கட்டுரை மஞ்சரி | 3-00 |

## இலக்கியம்

### இலக்கிய மஞ்சரி

| | |
|---|---|
| மூன்றும் புத்தகம் | 70 |
| நான்காம் ,, | 80 |
| ஐந்தாம் ,, | 90 |
| * ஆறும் ,, | 1-10 |
| * ஏழாம் ,, | 1-30 |
| * தமிழ் மஞ்சரி 1ஆம் புத்தகம் | 1-10 |
| * ,, 2ஆம் ,, | 1-20 |
| * ,, 3ஆம் ,, | 1-30 |
| * தமிழ் மலர் மாலை | 1-25 |
| * தமிழ் இலக்கியச் சுடர் | 1 25 |
| உரைநடை விருந்து | 1-50 |

## மொழிப் பயிற்சி

| | ரு. ச. |
|---|---|
| முதற் புத்தகம் IIஆம் வகுப்பு | 60 |
| இரண்டாம் ,, IIIஆம் ,, | 85 |
| மூன்றும் ,, IVஆம் ,, | 1-00 |
| நான்காம் ,, Vஆம் ,, | 1-10 |
| ஐந்தாம் ,, VIஆம் ,, | 1-20 |
| * ஆறும் ,, VII&J. S. C. | 1-75 |
| * உயர்தர வகுப்பு | 2-50 |
| * தமிழ்மொழிப் பயிற்சியுந் தேர்ச்சியும் | 1-60 |
| * பயிற்சிமூலம் பாஷைத் தேர்ச்சி | 1-50 |

## விஞ்ஞானம்

### பொது விஞ்ஞானபோதினி

| | |
|---|---|
| *VIஆம் புத்தகம் | 2-50 |
| *VII ,, | 3-50 |
| *VIII ,, | 4-00 |
| * ஆட்சி இயல் (Government) | 6-00 |
| Chemistry Made Easy (G.C.E.) | 7-50 |
| * A Guide To Translation Parts I & II | 4-00 |

## சுகாதாரம்

### சுகாதார போதினி

| | |
|---|---|
| நான்காம் வகுப்பு | 1-25 |
| ஐந்தாம் வகுப்பு | 1-50 |
| * ஆறும், ஏழாம் வகுப்பு | 2-00 |
| * J S. C. வகுப்பு | 2-50 |
| G. C. E. - I | 3-50 |
| G. C. E. - II | (அச்சில்) |

## கணிதம்

### சிறுவர் கணக்கு

| | |
|---|---|
| * இரண்டாம் வகுப்பு | 1-25 |
| * மூன்றும் ,, மாணவர் பிரதி | 1-50 |
| * நான்காம் ,, மாணவர் பிரதி | 1-50 |
| * ஐந்தாம் ,, மாணவர் பிரதி | 1-50 |
| அக்ஷர கணிதம் | |
| * Iஆம் பாகம் | 3-00 |
| * IIஆம் பாகம் | 3-00 |
| கேத்திர கணிதம் | |
| * Iஆம் பாகம் | 3-00 |
| * II ஆம் பாகம் | 2-50 |
| * எண் கணிதம் | 3-00 |

### வியாபார கணிதங்கள்

| | |
|---|---|
| * கணக்குப் பதிவு நூல் | 4-00 |
| * உயர்தரக் கணக்குப் பதிவு நூல் | 5-50 |
| * இக்கால வாணிப முறை | 6-50 |




திருமகள் அழுத்தகப் ... ளுகைம்—இ80—6/65